# கலைநிலம்

## II

1114



கலாசாரப் பேரவை

வலி தெற்கு பிரதேச செயலகம், உடுவில்

2016/2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

D 1114

# கலைநிலம் -II

D 1114

பிரதேச கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம், உடுவில்.

2016 / 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலர் | - | கலைநிலம் - II |
| வெளியீடு | - | வலி. தெற்குபிரதேச கலாசாரப் பேரவை<br>பிரதேச செயலகம்,<br>உடுவில். |
| பதிப்புரிமை | - | வலி.தெற்கு, கலாசாரப்பேரவை, |
| நிதிஅனுசரணை | - | பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம். |
| பதிப்பு | - | 2016 / 2017 |
| பக்கஅளவு | - | B5 |
| பக்கம் | - | 130 +XIV |
| எண்ணிக்கை | - | 300 |
| கடதாசி | - | 70gsm |
| அட்டைப்பட வடிவமைப்பு | - | திரு.கணேசரத்தினம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி |
| அச்சுப்பதிப்பு | - | முத்து பிறின்டேர்ஸ்,<br>122, கே.கே.எஸ் வீதி,<br>சுன்னாகம். |

| | | |
|---|---|---|
| Name | - | Kalainilam - II |
| Published by | - | Vali.South Cultural Community,<br>Divisional Secretariat,<br>Uduvil. |
| Copy Right | - | Vali.South Cultural Community,<br>Divisional Secretariat,<br>Uduvil. |
| Sponsor | - | Department of Cultural Northern Provincial. |
| Edition | - | 2016/2017 |
| Size | - | B5 |
| Pages | - | 130 +XIV |
| Paper | - | 70 gsm |
| Cover Designing | - | Ganesharatnam Sriskanthamoorthy |
| Number of Copies | - | 300 |
| Printers | - | Muthu Printers,<br>122, K.K.S Road,<br>Chunnakam. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலர் பிரிவு நில வரைபடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

## ஆலோசனையும் வழிகாட்டலும்

**திருமதி மதுமதி வசந்தகுமார்**
(பிரதேசசெயலரும் கலாசாரப்பேரவையின் தலைவரும்)

## மலராக்கக்குழு

**திருமதி மதுமதி வசந்தகுமார்** (தலைவர்)

**திருமதி றஜனி நரேந்திரா** (இதழாசிரியர், கலாசார உத்தியோகத்தர்)

**திருமதி எஸ்.தர்ப்பணா** (உறுப்பினர்)

**திருமதி ஐ.ஐ.அகல்யா** (உறுப்பினர்)

**திரு.ம.ஜெயகாந்தன்** (உறுப்பினர்)

**திருமதி செ.திருஞானகௌரி** (உறுப்பினர்)

## பிரதேச கலாசாரப் பேரவை நிர்வாகசபை 2016 - 2017

| | | |
|---|---|---|
| தலைவர் | : | **திருமதி மதுமதி வசந்தகுமார்** (பிரதேசசெயலாளர்) |
| செயலாளர் | : | **திருமதி றஜனி நரேந்திரா** (கலாசார உத்தியோகத்தர்) |
| உபதலைவர் | : | **திரு.மா.பரமேஸ்வரன்** |
| உபசெயலாளர் | : | **திரு.மா.சீவரத்தினம்** |
| பொருளாளர் | : | **திரு.பொ.பசுபதி** |

நிர்வாக உறுப்பினர்கள்:

**திருமதி மா.உலகநாதன்**
**திரு.வ.மோகநாதன்**
**திருமதி ஞா.சிவனேசன்**
**திரு.உ.துளசிகன்**
**திருமதி கி.இரவீந்திரா**
**திருமதி தே.தியாகச்சந்திரன்**
**திரு.பா.பாலபத்மன்**
**திரு.E.V பிரபாகரன்**
**திரு.ம.இரவிசங்கர்**
**செல்வி ந.சர்மிளா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே (1)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துமே. (2)

மனோன்மணியம்
**பேராசிரியர் பொ.சுந்தரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம், உடுவில்

# பிரதேசகீதம்

**பல்லவி**

வளம்சேரும் வலிகாமம் தென்பகுதி வாழ்கவே
வளர்பயிரும் கால்நடையும் மானிடரும் வாழ்கவே

வளம்சேரும் .....

**அனுபல்லவி**

உளம்மகிழ ஊக்கமுடன் ஒருகுடையில் வாழுவோம்
உத்தமர்கள் காட்டியபண் பாட்டினிலே நாளுமே

வளம்சேரும் .....

**சரணங்கள்**

மரபுதரும் மக்கள்கலைப் பாரம்பரியத்துடன்
மாண்புமிகும் புத்துணர்வுப் பொலிவுதரும் இலக்கியம்
உரம்சேர்க்கும் கைத்தொழில் வாணிப வளங்களும்
உளர்ஆன்ம நலம்சேர்க்கும் தெய்வீக நிலைகளும்

வளம்சேரும் .....

உழவர்களும் தொழிலாளர் உத்தியோகத்தரும்
உயர்வுதரு கல்விகலை பண்பாட்டுச் செல்வரும்
வளம்சேர்க்கும் வணிகரும் சைவமொடு கிறீஸ்தவ
மதநெறியில் நலம்சேர்க்கும் குரவர்களும் வாழ்கவே

வளம்சேரும் .....

ஆணிவே ரெனநிற்கும் பாரம்பரி யத்துடன்
அழகுபொலி மலர்போலும் அறிவார்ந்த செல்வமும்
பேணிவளர் விஞ்ஞானம் தொழில்நுட்பம் தொடர்பாடல்
பெருமையுடன் இவையாவும் ஒருமையுடன் உயர்ந்தோங்க

வளம்சேரும் .....

கவியாக்கம்
**வித்யாபூஷணம், பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா** B.A (Hons)
(கோப்பாய் சிவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகம் மற்றும் கலாசார பேரவையினர் இணைந்து வெளியிடும் 2017ம் ஆண்டிற்கான பிரதேச மலர் "கலைநிலம்" சிறப்புடன் வெளிவர வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

உடுவில் பிரதேச செயலகத்தின் நிர்வாகப் பகுதிகள் விவசாயத்திற்கு சிறப்பான மண்வளம் நிறைந்த பகுதி. அதேபோல் இங்கு வாழும் கலைஞர்களும் கலைக்கென அர்ப்பணிப்போடு வாழும் ஆற்றல் படைத்தவர்கள். இப் பிரதேசத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்தவிளையும் கலைநிலம் பொக்கிஷமாக அமையும். இக் கலைநிலம் இப் பிரதேசத்தின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் எதிர்கால சந்ததியினரும், ஆய்வு முயற்சியுடையோரும் பயன்பெறும் வகையில் மரபுக் கையளித்தலாக தொடரும் என நம்புகின்றேன்.

இக் கலைநலம் செழிக்க உரமூட்டி உழைத்த உயர்ந்தோரை பாராட்டி இக் கலைநிலம் பலருக்கும் பயனுடையதாய் விளைய என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன்**
அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் ஆசிச்செய்தி

உடுவில் பிரதேச செயலக கலாசார பேரவையினரால் வருடந்தோறும் வெளியிடப்படும் "கலைநிலம்" பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இம்மலரானது வலி தெற்கு பிரதேசத்தின் கலை, இலக்கியம், தொல்லியல், புவியியல், வரலாறு, பண்பாடு மற்றும் மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை தாங்கி வெளிவருவதுடன் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி, மருத்துவம், கலைத்துறை சார்ந்த முக்கிய அடைவுகளையும் சாதனைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் முக்கிய வரலாற்றுப் பதிவாக பிரதேச மலர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழர் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**இ.இரவீந்திரன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கலை பண்பாடுகளைப் பேணிப்பாதுகாக்கும் வகையில் உடுவில் பிரதேச செயலகத்தினால் கலாசார மையங்கள் மற்றும் பிரதேசம் சார்ந்த அனைத்து முக்கிய விடயங்களையும் உள்ளடக்கி "கலைநிலம்" என்ற நூலினை வெளியிடுவது பாராட்டத்தக்கதும் இன்றைய காலகட்டத்திற்கு தேவையானதுமான ஒரு விடயம் ஆகும்.

ஒவ்வோர் பிரதேசமும் கலாசார ரீதியில் ஒவ்வொரு தனிச்சிறப்புக்களால் ஒன்றிலிருந் தொன்று வேறுபட்டதாகவும் தனித்துவம் வாய்ந்தனவாகவும் காணப் படுகின்றன.அவ்வாறான விடயங்களைத் தொகுத்து நூலாக ஆவணப்படுத்துவது சிறப்பானதொரு விடயமாகும். ஏனெனில் ஒரு பிரதேசத்தின் சிறப்புக்கள் பற்றி முன்னைய காலத்தில் சமூகத்தில் மக்கள் ஒன்றுகூடிக் கலந்துரையாடும் போது அவற்றைத் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்பட்டன. ஆனால் தற்காலத் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த காலப்பகுதியில் அதற்கான சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. இக்காலகட்டத்தில் இவ்வாறான நூல் வெளியீடுகளே பிரதேசத்தின் சிறப்புக்களை அனைவருக்கும் தெரியப்படுத்துவனவாகவும் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்வனவாகவும் அமைந்துள்ளது.

மேற்படி நூலானது பிரதேசம் சார்ந்த கலாசார விழுமியம் சார்ந்த நூலாக அமையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அந்த வகையில் இந்நூல் வெளியீட்டினை முன்னெடுத்துள்ள பிரதேச செயலாளர் அவர்களுக்கும் அவரோடு இணைந்து செயற்பட்ட அனைத்து ஏற்பாட்டாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையம் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகிறேன். மேலும் இந்நூல் சிறப்புற வெளிவருவதற்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி வனஜா செல்வரட்ணம்**
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பொக்கிஷமாய் கலைநிலம் – II திகழட்டும்

வலிகாமம் தெற்கு கலாசாரப் பேரவையானது வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் கலாசார மேம்பாட்டு திட்டத்திற்கமைவாக வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் முன்னெடுக்கப்படுகின்ற கலாசார விழாவும் அதனோடிணைந்த கலைநிலம் - 2 நூல் வெளியீடும் சிறப்பாக அமைவதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டு மகிழ்வடைகிறேன்.

பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் அதனை அடுத்த சந்ததியினருக்குக் கையளிக்கும் நோக்குடனும் பிரதேச செயலக கலாசாரப்பேரவைகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கலாசார விழாக்களானது தற்காலத்தில் முக்கியத்துவமுடையதொன்றாக அமைந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. காலத்தின் தேவையறிந்து செயற்படுத்தப்பட்டு வரும் இத்தகைய விழாக்கள் மக்கள் எல்லோரையும் வழிப்படுத்தி நிற்பதுடன் உள்ளங்களையும் ஆற்றுப்படுத்துகின்றன. கலைஞர்கள் கௌரவிக்கப்படுதலானது கலைக்காக அவர்கள் ஆற்றிய சேவையினைப் பாராட்டுதல் என்பதற்கப்பால் கலைத்துறையின் மேம்பாட்டிற்கான தூண்டுதலாகவும் அமைந்துள்ளது.

பண்பாட்டு விழாவினை முன்னிட்டு விழா பற்றிய விபரங்கள், கலைஞர் கௌரவம் பற்றிய விபரங்களை உள்ளடக்கி வெளிவரும் கலைநிலம் - 2 என்னும் நூலானது விழாவின் கனதியினை மேலும் மெருகூட்டி நிற்கின்றது எனலாம். இம்மலர் சிறப்பான முறையில் வெளிவருவதற்காக அயராது செயற்பட்டு வரும் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் மலர்க்குழுவினர் அனைவரையும் பாராட்டி நிற்பதுடன் கலைநிலம் -2 வரலாற்றில் தடம் பதிப்பதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி அபிராமி பாலமுரளி**
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி

வலிகாமம் தெற்கு பிரதேசசெயலகத்தினால் வெளியிடப்படுகின்ற கலைநிலம் II எனும் பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உடுவில் பிரதேசமானது உயிரோட்டத்துடன் கலைகள் வாழும் பூமியாகும். ஏழாலை, இணுவில், கந்தரோடை, சுன்னாகம் முதலிய இடங்கள் ஈழத்துக் கலை இலக்கிய வரலாற்றில் பல்வேறு தடயங்களையும் -தனித்துவங்களையும் தம்மகத்தே கொண்டு காணப்படுகின்றன. அவற்றை அழியாது பேணுவதும் எமது அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதும் விழிப்புணர்வுடன் அறிவினைத் தூண்டுவதும் அவசியமாகும்.

அந்த வகையிலே எமது கலைநிலம் II பிரதேச மலரானது பழைமையான விடயங்களை ஆவணப்படுத்துவதோடு வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கு களம் அமைப்பதாகவும், அறிவுசார் பெரியோர்களின் தேடல்களைத் தேக்கி வைப்பதாகவும் தனது தடத்தினை பதித்துள்ளது.

இம்மலரானது வலிகாமம் தெற்கு பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதிஅனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது. இக்கலைநிலம் மலர் மலர முன்னின்று உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்தும் கலைநிலம் தன் பயணத்தினைத் தொடர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி மதுமதி வசந்தகுமார்**
பிரதேச செயலரும்,
பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவரும்,
வலி.தெற்கு, உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து....

வலிகாமம் தெற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வெளியீடாகிய "கலைநிலம் II"-ற்கான எனது மனப்பதிவுகளை இவ்விடத்தில் பகிர்கிறேன்.

உடுவில் பிரதேசத்தின் பிரதேச மலர் கலைநிலம் II ற்குரிய வேலைத்திட்டம் 2016 ம் ஆண்டு பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் மலருக்குரிய ஒதுக்கீட்டு நிதி போதாமையால் 2017 ம் ஆண்டு மலருக்கான நிதியினையும் இணைத்து வெளியீடு செய்யப்படுகின்றது.

உடுவில் பிரதேசத்தின் தொன்மையான விடயங்களை இம்மலரிலே ஆவணப்படுத்துவதுடன், பல்வேறு அறிவியல்சார் பெரியோர்களின் கருத்துக்களை தொகுப்பதாகவும்; வளர்ந்துவரும் எழுத்தாளருக்கு களம் அமைத்துக் கொடுப்பதாகவும், எமது எதிர்காலச் சந்ததியினருக்கு தெரியாத விடயங்களை பேணுதல் - ஆவணப்படுத்துதல் - கையளித்தல் - செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் என்ற பல்பரிமாண நோக்கிலே ஆக்கப்பட்டுள்ளது எனலாம்.

ஒரு மலரிலே அனைத்து விடயங்களையும் அடக்குவது சாத்தியமாகாது. எனவே தொகுதி தொகுதியாக விடயங்களை சேகரித்து அதற்கேற்ப மலரின் இதழ்களாக ஆக்கங்கள் கோர்க்கப்பட்டுள்ளன. சரியான எழுத்து நிலைப்பட்ட ஆவணப்பேணுகை இன்மையாலேயே எமது வரலாற்றின் ஆரம்பங்கள் தளம்பல் நிலையில் இருக்கின்றன. எனவே ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் பிரதேச மலர் வெளிவர வேண்டும் என்ற சிந்தனையுடன் நிதி ஒதுக்கீடு வழங்கிய எமது வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு கலாசாரப் பேரவையின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மலர் வெளியீட்டிற்கு வழிகாட்டியாய் அமைந்த முன்னை நாள் பிரதேச செயலர் திரு.மு.நந்தகோபாலன் அவர்களுக்கும், தற்போதைய பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய திருமதி. மதுமதி வசந்தகுமார் அவர்களுக்கும் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் ஆக்கங்களை சேகரித்துதவிய மலர்க்குழுவினருக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். மலரின் அட்டைப்படத்தினை வடிவமைத்துதவிய திரு.கணேசரத்தினம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆசிரியர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மலரினை சிறப்பாக வடிவமைத்து அச்சிட்டுதவிய சுன்னாகம் முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், மற்றும் நன்றி கூறத்தவறிய அனைத்துள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றியைக் கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

மலர்க்குழு சார்பாக...

**திருமதி றஜனி நரேந்திரா** B.A.Hons, M.phil (Tamil)
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், வலி தெற்கு.

இம்மலரில் உள்ள கட்டுரைகளின் கருத்துக்களுக்கு குறித்த கட்டுரையாசிரியர்களே பொறுப்பாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
வலி தெற்கு பிரதேச சபை
உடுவில்.

# பொருளடக்கம்

பக்கங்கள்

**01. கட்டுரைகள்**

01. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் இலக்கியவாதத்தின் போக்கு 01 - 07
02. உடல், உள ஆரோக்கியத்தைப் பேணஉதவும் இந்துசமய நடைமுறைகள் 08 - 16
03. பண்டைய தமிழர்களின் பண்பாடு 17 - 23
04. மறைந்துபோகும் மரபுவழி மரணச்சடங்கு 24 - 27
05. திருவாசகம் சுட்டும் இறை - ஆடல் சிறப்பு 28 - 36
06. பிடல் காஸ்ரோ எனும் மாமனிதன் வரலாறு பற்றிய பார்வை 37- 41
07. சைவசமய வழிபாட்டுடன் இணைந்து கைக்கொள்ளப்படும் சம்பிரதாயங்களில் பிரதேச ரீதியாக மாறுபடும் சில நடைமுறைகள் ஓர் அவதானிப்பு 42 - 45
08. வலிகாமம் தெற்குப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள இடப்பெயர்கள் 46 - 56
09. நற்றமிழ் நண்ணிய நயத்தகு நக்கீரன் 57 - 60
10. இணுவில் பொதுநூலகம் -இணுவிலின் கல்வி அபிவிருத்திக்கான அடித்தளம் 61- 65
11. மேலைத்தேய அறிஞர்களின் தமிழ்ப்பணிகள் 66 - 70
12. ஓம் விழித்திடு,செயற்படு, வழிபடு 71 - 72
13. தரைக்கீழ் நீரும், நீர் மாசாக்கமும் 73 - 78
14. இணுவில் கிராமத்தின் நாடக வளர்ச்சி 79 - 82
15. பெண்விடுதலை நோக்கி 83 - 86
16. இந்துக்களது வாழ்வில் புருடார்த்தங்கள் செலுத்திய செல்வாக்கு 87 - 90
18. பாரம்பரியத்தில் சில பதிவு 91 - 95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. கனிகொடுக்கும் தேசத்தை உருவாக்குவோம் 96 - 97

20. உயிருக்கு ஆக்கம் அளிப்பது சமயம் 98 - 99

21. ஆரோக்கிய ஆயுளுடன் வாழுவோம் வாரீர் 100 - 103

22. வாழ்வின் வெற்றிப்படி 104 - 105

23. திருமணப்பொருத்தத்தில் செவ்வாய் தோஷம் 106- 109

24. கோபுரதரிசனம் கோடி புண்ணியம் 110 - 114

**25. சிறுகதைகள்**

01. வித்தை விதைத்தவன் 116 - 119

02. பொழுதொன்று புலராதோ 120 - 123

**26. கவிதைகள்**

01. எங்கே செல்கிறோம் 125 - 126

02. களைகள்களைக 127

03. நுளம்பால் குழம்பும்வாழ்வு 128

04. கனவொரு பாடம் 129 - 130




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Mrs. Mathumathy Vasanthakumar**

Divisional Secretary

Vali South - Uduvil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2016 கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்



2016 மலர்க்குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் இலட்சியவாதத்தின் போக்கு

S.V.**பிரதீபன்**
B.A.(Hons),PGDE,MA (Eco),MED(Re)

## அறிமுகம்

இலட்சியவாதம் அல்லது சிந்தனை வாதம் எனப்படும் தத்துவம் குறித்த பல தவறான கருத்துக்கள் காணப்படுகின்றன. கருத்தியல்வாதம் என்ற சொல்லில் இருந்தே சிந்தனாவாதம் என்ற சொல் உதயமாகியுள்ளது. ஆங்கிலத்தில் Idealism என்ற சொல்லானது Idea + ISM என்று பிரிந்து கருத்துக்கள் உண்மை வாய்ந்தவை என்ற விளக்கத்தை எமக்குத் தருகின்றது.

மனிதன் வாழ்வதற்காகவே பிறக்கின்றான் எப்படியும் வாழலாம் என்பதன்றி இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழும் போது தான் வாழ்வாங்கு வாழ்தல் அமைகின்றது. வாழ்வாங்கு வாழ்வதற்கு இலட்சியம் அவசியம். மனம் போல் வாழ்வு என்பர். எண்ணம் போல் செயல் அமைகின்றது. எனவே மனம் ஆன்மா தூய்மையாய் இருக்கும் போதுதான் இலட்சிய வாழ்வு அமைகின்றது. இந்த வகையில் இலட்சியக் கருத்துக்களைஅடிப்படையாகக் கொண்டது இலட்சியவாதம் எனலாம். சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, டெஸ்காட்ஸ், பேக்கலி, பிற்சி, ஹேகல், ஹியூம், கான்ற், செல்லிங், சோபன்ஹோவர், ஸ்பினோசா போன்றோர் தத்துவத்தில் இலட்சியவாதம் இடம்பெற பங்களிப்பு செய்தவர்களாவர்.

இலட்சியமானது மனம், ஆன்மா என்பவற்றின் தூய்மை பற்றி அழுத்தமாகக் குறிப்பிடுகின்றது. உலகை இயற்கையான தோற்றப்பாடு என இலட்சியவாதம் கருதுவதில்லை. அது மனத்தால் தோற்றுவிக்கப் பட்ட ஒன்றாகவே கருதுகின்றது. எனவே இலட்சியவாதத்தின் படி இயற்கைத் தோற்றப் பாடு உண்மையானதன்று. உண்மையானது ஆன்மாவும், எண்ணமுமேயாகும்.அதாவது உலகைப் பற்றிய மனத்தின் வெளிப்பாடே உண்மையானதாகும்.

இவ் இலட்சியவாதமானது மூன்று ஆன்மீகப் பெறுமானங்களை உடையது. உண்மை, அழகு, நன்மை என்று இவை வகுக்கப்பட்டுள்ளன. இதில் உண்மை என்பது புத்திக்கூர்மைக்குரிய பெறுமானம். நன்மை என்பது ஒழுக்கத்தின் பெறுமானம். அழகு என்பது கவின் கலைக்குரிய பெறுமானம். பிளேட்டோவின் சிந்தனைப் படி இம்மூன்று பெறுமானங்களும் ஒரு நாட்டின் அரசுடன் இணைந்து கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

## கல்வியில் இலட்சியவாதம்

இலட்சியவாதம் மனிதனை ஒரு சுதந்திர ஆளுமையுள்ளவனாகக் கருதுகின்றது. ஆகவே கல்வியின் செயற்பாடு சுதந்திர ஆளுமையாகவுள்ளவர்களை உருவாக்கு

வதேயாகும். மனிதனின் ஆற்றலுக்கு எல்லையில்லை. ஆகவே கல்வியென்பது எப்போதுமே முடிவடைவதில்லை. எவ்வா றாயினும் இலட்சியவாதி கல்வியானது நிலையான இலக்கைக் கொண்டிருக்க வேண்டும் எனக் கருதுகின்றான். இவ் விலக்கு முடிவுற்றதை நோக்கிச் செல்லும் ஒரு வளர்ச்சியாகும். கல்வித் துறையில் இலட்சியவாதமானது கல்வியின் நோக்கங் கள், குறிக்கோள்கள் பற்றி அதிகமாகப் பேசுகிறது. ஆனால் அதற்கான வழிகள் , முறைகள், ஒழுங்கமைப்புகள் பற்றிக் குறைவாகவே கூறுகிறது.

இலட்சியவாதிகளினது கருத்துப்படி ஒரு பிள்ளைக்கு ஆன்மீகத்தேவை, சமூகத் தேவை ஆகிய இரண்டுக்கும் கல்வி அவசியம் எனக் குறிப்பிடுகின்றது. கல்வி யானது ஆன்மீக அகக் காட்சியையும் உயர்ந்த அறநெறி சார்ந்த நடத்தைகளையும் நோக்கி ஒருவனை வழிப்படுத்த வேண்டும். உண்மைத்தன்மை, அழகு, நன்மை என்ற மூன்று விடயத்தையும் வளர்த்து வளர்த்து விடல் கல்வியின் இலட்சியமாக இருத்தல் வேண்டும்.

Ross என்பவர் குறிப்பிடுவது போல அடிப்படைப்பிரபஞ்சப் பெறுமானங் களை ஆய்வு செய்கின்ற எம்முடைய முயற்சிக்கு கல்வியே உறுதுணையாகின்றது என்கின்றார். எனவே தான் பிரபஞ்ச உண்மைகள் எம்முடைய உண்மைகளாக மாறுவதுடன் எமது வாழ்க்கைக்கான சக்தியையும் வழங்குகின்றது. மனிதப் பிறவியானது நிறைந்த எதிர்பார்ப்புக்களை உடையது. ஆனால் அவற்றிற்கெல்லாம் மனிதன் சரணாகதியடையக் கூடாது அவற்றை ஒடுக்கிக் கொள்ள நாம் முயல வேண்டும். இதற்கான மனவலிமை எம்மிடம் இருக்க வேண்டும். இந்த மன வலிமையை விருத்தி செய்து மெருகூட்டு வதாகக் கல்வி அமைகின்றது என்பது இலட்சியவாதிகளது கருத்தாகும்.

## இலட்சியவாதமும் கலைத்திட்டமும்

இலட்சியவாதம் கல்வியினைச் சுய அபிவிருத்தியாகக் கொள்கிறது.பேக்கலி என்பவர் கல்வியின் முக்கிய நோக்கம் நடுநிலையாகச்செயற்படக்கூடியதாக இலட்சியங்களை மனதில் பதித்தல், போதிக் கும் பாடப்பொருள் முழுமையாக நோக்கத் துக்கு அனுகூலமாயிருத்தல், மாணவரின் பாடம் சார்பான உளச்சார்பு முக்கியமானது எனக் குறிப்பிடுகிறார். அதாவது கலைத் திட்டத்தின் பிரச்சினை கருத்துக்களினதும் இலட்சியங்களினதும் நிலையிலிருந்து எட்டக்கூடியதாக இருத்தலாகும்.

தனியாளுக்குப் பெருமை தரக் கூடிய பாடங்களுக்கு இலட்சிவாதம் அழுத்தம் தருகிறது. எடுத்துக் காட்டாக ஓர் இலட்சியவாதி தரக்குறைவான நூல்களைப் படிப்பதை விட தாகூரைக் கற்பது தனித்துவ மான திறனை வளர்க்கக் கூடியது எனக் கருதுகிறார்கள். எங்கு உயர்ந்த பெருந் தன்மை இருக்கிறதோ அங்கு வளர்ச்சிக் கான விசேட சாத்தியப்பாடும் உண்டு என இலட்சியவாதம் கூறுகின்றது. ஓர் இலட்சிய வாதி சுயவளர்ச்சியில் விசேட நாட்டம் கொண்டுள்ளான் பாடவிடயத் தெரிவிலும் இலட்சியவாதி ஆளுமையின் அழுத்தத்தை விரும்புகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திட்டமானது ஓர் இனத்தின் அனுபவங்களைப் பிரதிபலிக்கும் வகையில் நன்கு ஒழுங்குபடுத்தப்படவேண்டும். இனத்தின் அனுபவங்களை இரு பிரதான பிரிவுகளாகப் பாகுபடுத்தலாம்.

(1) பௌதீகச் சுற்றாடல்

(2) தோழமையாளன்

இவையிரண்டும் கலைத்திட்டத்தின் விரிவான இரு பிரிவுகளக் குறிப்பிடுகின்றன. விஞ்ஞானம், மானுடவியல் இவ்விரு பெரிய தலைப்புக்களும் எவ்வகையான கற்கை நெறிகளையும் உள்ளடக்கலாம். ஆனால் பாடநெறிகளின் தெரிவானது ஆளுமை விருத்தி நோக்கத்தை மட்டுமே கொண்டதாக அல்லாது மாணவன் தன்னை உணர்தலுக்கான நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். பாடசாலையானது மிக உயரியதும் பரந்த உலக நோக்கில் நிரந்தர முக்கியத்துவம் வாய்ந்ததுமான மனித செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்க வேண்டுமெனவும் 'நன்' கூறுகின்றார். இச் செயற்பாடுகள் மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையின் தரத்தைப் பேணக்கூடியதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக சுகாதார விடயங்களில் கவனம், ஒழுக்கம், சமயம், சமூக ஒழுங்கமைப்புப் போன்றன. இரண்டாவதாகப் பயனுள்ள நாகரிகத்தை அடைவதற்கான செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். இதற்காக இலக்கியம், கலை, கைப்பணி, விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல் போன்றவற்றை இடம்பெறச் செய்யலாம். இவை ஓர் இலட்சியவாதி கலைத்திட்டத்தில் உள்ளடங்கச் செய்யும் பாடங்களாகும்.

## இலட்சியவாதம் கூறும் கற்பித்தல் முறை

கல்வியளிக்கும் செயல்முறையில் இலட்சியவாதி இயற்கையை விட அனுபவங்களுக்கே அழுத்தம் கொடுக்கின்றான். கருத்துக்கள் விடயங்களிலும் பார்க்க மாணவனுக்கே முக்கியத்துவமளிக்கின்றான். இலட்சியவாதியைப் பொறுத்து அபிவிருத்தியானது எப்பொழுதும் உள்ளிருந்து ஏற்படுத்துவதேயாகும். வகுப்பறையை அவன் ஆளுமையைக் காட்டுகின்ற ஒரு களமாகக் கருதுகின்றான். வகுப்பறை இடைவினைகளால் குறை விருத்தியுள்ள மாணவன் கூடிய முதிர்ச்சியுள்ள நிலையில் பங்கு கொள்ளத் தூண்டுதல் பெறுகின்றான்.

இலட்சியவாதியான ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் கற்பித்தல் முறைகள் தத்துவ உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவையல்ல. பிரதான நோக்கம் மாணவன் ஏற்கனவே பெற்றிருந்ததை விட ஆழமான உள்ளுணர்வை பெறுதலாகும்.

இந்த அடிப்படையில் அவன் விரிவுரை முறையில் தங்கியிருப்பதில்லை. மாணவரிடமிருந்து பல்வகைக் கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடியதான கலந்துரையாடல் முறையிலே அவன் பெருமளவு தங்கியிருக்கின்றான்.

இலட்சியவாதியின் கற்பித்தல் முறையின் செயற்பாடு ஆசிரியனையும் மாணவனையும் அதிகமான படைப்பாற்றல் மிக்க நுண்ணறிவிற்கு இட்டுச் சென்று எல்லாவற்றிற்கும் மேலான நிலையை அடையச் செய்தலாகும். ஆசிரியரினாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனாலும் அந்த முறையால் கருணையுள்ள லௌகீக உலகிலிருந்து நிரந்தரமான இராச்சியத்துக்குச் செல்லமுடியும். அங்கிருந்து லௌகீக உலகின் மீது விழுமியங்களால் ஒளி பரவச் செய்யலாம்.

## இலட்சியவாதம் கூறும் ஒழுக்கம்

இலட்சியவாதம் கடுமையான கட்டுப்பாடுகளை விரும்புவதில்லை. மாணவர்கள் தாமாகவே தொடங்குதல், தமக்குத் தாமே நெறிப்படுத்திக் கொள்ளுதல் போன்றவற்றில் ஆர்வம் காட்டுகிறது. மாணவன் தனக்குத்தானே கட்டுப் பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு நெறிப்படுத்திக் கொள்வதை இலட்சியவாதம் விரும்புகிறது. மாணவர் சுயமாக வெளிப்படுத்தும் அக்கறை அவர்களைத் தூண்டுவதோடு அவர்களது பூரண முதிர்ச்சிக்கும் உதவுகிறது. ஏனெனில் சுயமாகவே உள்ளிருந்து உருவாகும் அக்கறை சுயநம்பிக்கையை ஏற்படுத்தி ஒரு மேம்பாடான உள்ளுணர்வையும் உன்னதமான சக்தியையும் பெற்றுத் தருகின்றது. ஆகவே ஒழுக்கமானது மாணவர்கள் மீது திணிக்கப் படுவதல்ல. அது சுயமாக ஏற்பட வேண்டியதாகும்.

இலட்சியவாதம் முதலிடத்தை அழுத்தமாக மனத்துக்கும் சுயநிலைக்கும் அளிக்கிறது. உலகம் மனத்தின் ஒரு படைப்பு ஆகும். மனம் அதில் தங்கியிருப்பதில்லை. மனிதனைப் பற்றிய கற்கையே அதி முக்கியமானது. இலட்சியவாதக் கல்வியின் நோக்கம் ஒருவன் உன்னத நிலையடைதலும் உண்மையான தன்னை அறிதலுமாகும். கலைத்திட்டம் ஆளுமைக்கே அழுத்தம் தருகின்றது. மாணவனின் சுயவுணர்வை மேலோங்கச் செய்ய உதவுபவரே ஆசிரியராவார். வகுப்பறையில் கலந்துரையாடலை ஊக்குவித்தல் வேண்டும். இயற்கையான ஒழுக்க முறையே மாணவனைச் சொந்த உயிர்ப்பின் தலைவனாக்கும்.

## இலட்சியவாதமும் ஆசிரியர்களும்

இலட்சியவாதத்தைத் பொறுத்த வரையில் கல்வித்திட்டமிடலில் ஆசிரியர் உறுதியுள்ளவராக விளங்குகின்றார். கல்வி செயற்பாடுகளுக்கான திறவுகோல் அவராவார். பிள்ளைகள் கற்பதோடு சிறந்த வளர்ச்சி காண்பதற்கும் பல்வேறு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். அதற்குப் பொருத்தமான சுற்றாடலை ஒழுங்குபடுத்தி பாட விடயத்தையும் சரிவர அமைத்துக் கொடுக்கின்றார். கற்பிக்கின்ற விடயத்தில் தன்னை ஒரு வித்துவானாகவே அவர் கருதி மாணவருடன் அறிவுச்சமர் புரிகின்றனர். அத்துடன் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அவர் விளங்குகின்றார்.

ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. மாணவர்களை புகழ்தல், தண்டனை கொடுத்தல் என்பவற்றிற்குப் பதிலாக மாணவர்களின் அகக்கட்டுப்பாட்டினை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதை இலட்சியவாதம் வலியுறுத்துகின்றது. ஆன்மீக வரலாற்றின் போதகர் என்றும் ஜனநாயகத்தை உருவாக்குகின்றவர் என்றும் அறநெறி ஆசிரியர்கள் போற்றப்படுகின்றனர். இந்த வகையில் ஆசிரியர்கள் தொடர்பான ஒரு உயர்ந்த எண்ணம் இலட்சியவாதிகள் மத்தியில் இருந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சியவாதமும் மாணவனும்

இலட்சியவாதமானது மாணவர்களை ஆன்மீகவளமுள்ள ஒரு ஜீவராசியாகவே கருதுகின்றது. மாணவர்கள் ஆன்மீக அலகு எனப்படுகின்றனர். மாறிக் கொண்டிருக்கின்ற செயற்பாட்டில் மாணவன் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின் றான். சமூகத்திலே வாழ்கின்ற மாணவன் தன்னுடைய ஆன்மாவை அறிந்து ஏனையோரையும் ஏற்றுக் கொள்பவனாக மாற்றமடைகின்றான். ஆசிரியருக்கு அவன் கொடுக்கின்ற தொடர்பு சிறப்பானதாக அமைய வேண்டும்.

அவன் சரியான முறையில் வழி நடத்தப்பட்டால் நிச்சயமாக நல்ல நிலையை அடைய முடியும். ஏனெனில் அவ னிடம் எல்லையற்ற திறமைகள் மறைந்திருக்கின்றன. அவனுடைய இயல்பான சுதந்திரம் தடைப்படக்கூடாது தன்னு டைய வாழ்க்கையை உண்மையாக்கிக் கொள்ள வேண்டும். உலகிலே மிகச்சிறந்த நல்ல ஒரு ஆன்மாவாக அவன் உருவெடுக்க வேண்டும் என்பது இலட்சியவாத சிந்தனையாகும்.

## இலட்சியவாதக் கருத்துக்களின் இன்றைய பயன்படுதன்மை

இலட்சியவாதிகள் கல்வி தொடர்பாக முன்வைத்த கருத்துக்கள் இன்றைய கல்விநிலையில் பெரும் பயன்படுதன்மையினை கொண்டிருப்பதனை நாம் பின்வருமாறு பகுத்து நோக்குவோம்

## ஆசிரியர் வகிபங்கு பற்றி இலட்சிய வாத கருத்துக்களும் இன்றைய பயன்படுதன்மையும்

★ இலட்சியவாத மாணவர்களை உருவாக்குபவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்ற கருத்து இன்றைய சூழலுக்குப் பொருந்துவதாக அமைகின்றது. ஏனெனில் சமூகத்திற்கும், நாட்டிற்கும் உகந்த நற்பிரஜையை உருவாக்குவதே கல்வியின் இலக்காக இருப்பதால் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியரது பணியின் இலக்காக இதுவே அமைகின்றது.

★ ஆன்மீக விழுமியங்களை மாணவர் மத்தியில் மேம்படுத்துபவராக ஆசிரியர் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுவது கூட இன்றைய நடைமுறையோடு ஒத்திசைகின்றது. இன்று காலை ஒன்றுகூடல், பிரார்த்தனைக் கூட்டம், வாணி விழா, சமய நெறிப் பாடம், குரு பூசைத் தினங்கள் என்பன ஆசிரியரோடு இணைந்து மாணவர்கள் செயற் படுவதால் இவ் விழுமியங்கள் மாணவருக்கு ஊட்டப் படுகின் றன.

★ ஆசிரியர்கள் தொடர்ச்சியாகக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் என இலட்சியவாதம் கூறும் கருத்து இன்றைய கல்விக்கருத்துக்களுடன் உடன்படுவதாக அமைகின்றது. இன்று ஆசிரியர்களுக்கான தடை தாண்டல் பரீட்சைகள், தொழில் தகைமைகளுக்கான கற்கை நெறிகள் போன்றவற்றிற்கு இது வித்திட்டுள்ளது.

★ மனவலிமை, சொல்வல்லமை, கற்பனைசெய்யும் ஆற்றல், ஞாபக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி, தர்க்கிக்கும் திறனுடை யவராக ஆசிரியர் இருக்க வேண்டும் என்ற கருத்து இன்றைய ஆசிரியரது திறன்களாக முன்மொழியப் படு கிறது.

★ வெவ்வேறுபட்ட கற்பித்தல் முறை கள் பற்றிய பயிற்சி பெற்றவராக ஆசிரியர் இருக்க வேண்டும் என்ற இலட்சியவாதக் கருத்து இன்றும் வலுப்பெற்றேயுள்ளது. ஆசிரியர்கள் பல்வகையான தேர்ச்சிகள் மூல மும், கற்கை நெறிகள் மூலமும், பயிற்சிகள் மூலமும், கற்பித்தல் முறைகள் பற்றியும் அவற்றின் பயன்பாடு பற்றியும் அறிவதோடு வகுப்பறைகளில் இவ் அணுகு முறைகளைக் கையாள்வதை இன்றும் காணலாம்.

★ உடலியல் ரீதியான தண்டனைகளை வழங்கக்கூடாது என்ற இலட்சிய வாத கருத்து இன்றும் கூட அழுத்தம் பெறுவதை அவதானிக்கலாம். உடல் ரீதியான தண்டனைகள் சட்ட ரீதியாகவே மறுக்கப்பட்டுள்ள நிலையைக் குறிப்பிடலாம்

ஆகவே ஆசிரியர் பற்றிய இலட்சியவாதக் கருத்துக்கள் இன்றைய கல்விச்சூழலுக்குப் பொருத்தப்பாடு உடையதாகவே அமைந்து காணப்படுகின்றது.

## இலட்சியவாதம் கூறும் கலைத்திட்டமும் இன்றைய பயன்படுதன்மையும்

கலைத்திட்டம் என்பது பரந்த கல்விப் பண்பினுள் பலமை பெற வேண்டப் படுகின்ற தொகுதிப் பாடங்களும் செயன் முறைகளும் கலைத்திட்டம் எனலாம். கலைத்திட்டத்தின் நோக்கம் பாட அமைப்பி னூடாக தனியான விருத்தியை வளர வைப்பதும் சமுதாய கண்ணோட்டத்தினை வளர்ப்பதுமாகும். இவ்வகையில் இலட்சிய வாதம் கூறும் கலைத்திட்டமானது சமகால கல்விச் சிந்தனையைக் கொண்டும் சமூக தேவைப்பாடறிந்தும் காணப்படுகின்றது.

★ இலட்சியவாத கலைத்திட்டமானது தனிமனித ஆளுமையை வளர்ப்ப தாக அமைந்துள்ளமை இன்றைய கலைத்திட்டத்தின் நோக்கமும் தனியாள் விருத்திக்கு அவசியமா னதும் ஏற்கக் கூடியதுமானதாகும். இலட்சியவாதம் கூறிய பாடங்களை விஞ்ஞானம், மானுடவியல், கணி தம், வரலாறு, புவியியல், கலை முத லான பாடங்கள் இன்றும் காணப் படுகின்றமை கவனிக்கத்தக்க தாகும்.

★ கலைத்திட்டத்தினூடாக ஆன்மீகக் கருத்துக்கள் சேர்க்கப்பட வேண்டு மென இலட்சியவாதம் கூறியமை சமயப் பாடமும், அறநெறிக் கொள் கைகளும் இன்றும் காணப்படு கின் றன. இவ்வாறே உடல், உள வளர்ச் சிக்கு உதவக் கூடிய உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் பாடப் பரப்பி னுள் காணப்படு வதுடன் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி மட்டங்களாக தேசிய மட்டம் வரை உயர்ந்து செல்கின்றது.

இவ்வாறு இலட்சியவாதம் கூறும் கலைத் திட்டம் சமகாலத்திற்கு பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுவது கவனிக்கத்தக்கதாகும்.

## இலட்சியவாதம் கூறும் கற்பித்தல் முறையும் இன்றைய பயன்படுதன்மையும்

- ★ இலட்சியவாதம் கூறும் கற்பித்தல் முறையானது விரிவுரைமுறையில் தங்கியிருப்ப தில்லை. மாணவரிடம் இருந்து பல்வகைக் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடியதா கலந்துரையாடல் முறையை வலியுறுத்துகின்றது. இன்றைய கல்வியுலகில் மாணவர் மையக்கல்வியில் கலந்துரையாடல் முறை பிரதான இடத்தை வகிக்கின்றது.

- ★ இவ்வாறு இலட்சியவாதக் கருத்துக்கள் இன்றைய கல்விச் சிந்தனைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றமை பிளேட்டோ ஓர் ஆதார மனிதராகவே மேலெழுந்து நிற்கின்றார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. எனினும் திறனாய்வு நோக்கில் பிளேட்டோவின் கல்விச் சிந்தனைகளை நோக்கும் பொழுது பின்வரும் மட்டுப்பாடுகளைக் குறிப்பிடலாம்.

- ★ தொழிலாளி வர்க்கத்தினருக்கு சிறிதளவு கல்வியே போதும் என்று விதந்துரைத்தமை சமூகநீதியாக கொள்ளப்படத்தக்கதன்று.

- ★ ஒவ்வொரு பிரிவினருக்குமுரிய பொதுவான கல்வியை வலியுறுத்தினாரேயன்றி பன்முகப்பாங்கான கல்விச் செயற்பாடுகள் பற்றி சிந்திக்கவில்லை.

- ★ இலக்கியக்கல்வி பற்றிய எதிர் மறையான நோக்குகளே அவரிடம் மேலோங்கி இருந்தது.

- ★ ஆசிரியரை நடுநாயகப்படுத்தும் கல்வியே அவரால் முன்மொழியப் பட்டுள்ளது.

- ★ விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் இவரது கல்வித்திட்டத்திலே புறக்கணிப்புக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது.

- ★ கல்வியிலே சிறப்புத் தேர்ச்சிக்குப் போதுமான இடமளிக்கப்படவில்லை.

உசாத்துணை நூல்கள்


1) செல்வராஜா.மா(2009) கல்வியில் அடிப்படை எண்ணக்கருக்கள் மட்டக்களப்பு - எவர்கிறீன் அச்சகம்
2) ஜெயராசா.ச(2010) கல்விக் கோட்பாடுகளும் மற்றும் சிந்தனைகளும் கொழும்பு - சேமமடு பதிப்பகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல், உள ஆரோக்கியத்தைப் பேண உதவும் இந்து சமய நடைமுறைகள்

**சைவப்புலவர்** N.P.**ஸ்ரீந்திரன்** B.A.(Hons),M.A
**ஆசிரிய ஆலோசகர்,**
**வலிகாமம் கல்வி வலயம்.**

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்பது வள்ளுவரின் வாய்மொழி யாகும். வாய்மை மொழியாகும். இந்துக்க ளின் வாழ்வியல் இலட்சியமும், இறுதி இலக்கும் எது? என்பதனை வள்ளுவனின் இந்த வைர வரிகள் விளக்கி நிற்கின்றன.

இந்து ஒருவன் இப்பூவுலகில் செம்மையாக வாழ்ந்து தெய்வீக நிலை அடைவதே! அவனது இறுதி இலக்காகும். செம்மையான வாழ்விற்கும், இறுதி இலக்கை அடைவதற்கும் உடல், உள, ஆரோக்கியம் இன்றியமையாதனவாகும்.

உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான வாழ்வியல் நடைமுறை கள் பலவற்றை இந்து சமயத்திருநூல்கள் கூறுகின்றன. எமது சமயத்தின் மூல நூலான வேதங்களும், சிறப்பு நூல்களான ஆகமங்க ளும், இதிகாச புராணங்களும், பன்னிரு திருமுறைகளும், 14 சைவசித்தாந்த சாஸ் திர நூல்களும் இந்து சமய நடைமுறைகள் பற்றிக் காலங் காலமாகக் கூறிவந்துள்ளன.

**"மனிதனும் தெய்வமாகலாம்"** என்பது இத்திரு நூல்களின் அருள் வாக்காகும். இவ்வகையில் இந்து ஒருவ னது உடல், உள ஆரோக்கியத்தைப் பேண உதவும் இந்து சமய நடைமுறைகளாக, சமய ஒழுக்கங்களான இறை நம்பிக்கை, ஆலய வழிபாடு, செபம், தவம், தியானம், ஆலயத் தில் நடைபெறும் நித்திய, நைமித்திய கிரியை கள், விரதங்கள், கலைநிகழ்ச்சிகள், நித்திய கர்ம விதிகள், தீட்சைகள், அணிகலன்கள் அணிதல், சடங்குகள், சம்பிரதாயங்கள், உணவுப்பழக்கவழக்கங்கள் முதலானவற் றைக் கூறிக் கொள்ளலாம்.

இந்துக்களின் வாழ்வியல் நடை முறைகளும், பண்பாடும் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று", "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் இல்லாவூர் அடவி காடே !"** முதலான மூத்தோர் வாக்குகள் இந்துக்களின் வாழ்வில் இறைநம்பிக்கை யும், ஆலய வழிபாடும் பெறும் முக்கியத்து வத்தினை விளக்கி நிற்கின்றன.

ஒரு மனிதனது உடலும், உளமும் அவனது ஆரோக்கியத்தோடு மிக நெருங் கிய தொடர்புடையனவாக உள்ளன. உளம் என்பது எமது எண்ணங்கள், சிந்தனை களின் வடிவமாகும். உடலினால் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும், உள்ளத்தினால் உடலும் ஆரோக்கியம டைகின்றன. நல்ல எண்ணங்கள் ஒருவரது சிந்தனையில் எழும்போதும், அந்தச் சிந்தனை செயல்வடிவம் பெற்றுத் தானும் தன்னைச் சூழவுள்ளோரும் நன்மை பெறும் போது அவரது உள்ளம் மகிழ்ச்சியடைந்து, அது உடல் ஆரோக்கியத்தை ஏற்படுத்து வதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். எனவே உள்ளத்தை அப்பழுக்கற்றதாகவும், மாசுமறு அற்றதாகவும் எப்போதும் வைத்தி ருப்பது உடல் ஆரோக்கியத்தின் திறவுகோல் எனலாம். இதனாலேயே பாரதியார் **"நினைவு நல்லன வேண்டும், நெருங்கிய பொருள் கைபட வேண்டும்"** என்றார்.

உடல், உளத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு நல்ல எண்ணங்கள் எண் ணுவதும், செயற்படுத்துவதும் அவசியம் என்பதனாலேயே!. நல்ல எண்ணங்களை வளர்க்கும் பொருட்டுத் தினமும் ஆலயத்திற் குச் சென்று வழிபாடு செய்கின்றனர், இறைநம்பிக்கையை வளர்த்துக் கொள்கின் றனர்.

உள்ளத்தில் தீய எண்ணங்கள் குடி கொண்டால் அவை உள்ளத்தையும் பாதித்து, உடலையும் பாதித்து, நோயை ஏற்படுத்தி துன்பத்தை விளைவித்துவிடும். தீய எண்ணங்களில் இருந்து விடுபடுவ தற்கும் மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்து வதற்குமே! பிரதானமாக இந்துக்கள் ஆலய வழிபாட்டைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். **"ஆலயம்"** என்ற சொல்லின் கருத்தும் இதனையே விளக்கி நிற்கின்றது. ஆன்மாக்கள் இறைவனுடன் லயப்படும்/ ஐக்கியப்படும் இடமே ஆலயமாகும். இறை வனும், ஆன்மாவும் ஐக்கியப்படும் போது, உள்ளத்தில் தீய எண்ணங்கள் எழாது. உள்ளம் தூய்மையடைந்து, உடலும், உள்ள மும் ஆரோக்கியமடைகின்றன. நோய் நொடிகள் உடலை அணுகாமலும் பேணிக் கொள்ள முடிகின்றது.

ஆலய வழிபாட்டிலும், பணியிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருபவர்கள் நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வருவ தைக் காணலாம். குறிப்பாக ஆலயக் குருமார்களின் ஆயுள் அதிகரித்துக் காணப் படுவதை நடைமுறையில் நாம் காணலாம்.

ஆலயக்கருவறை அபரீதமான காந்த சக்தியையும், பொஸிட்டிவ் சக்தியை யும் கொண்டிருக்கிறது. கருவறையில் விக்கிரகத்தின் கீழிருக்கும் செப்புத்தகடு, பன்மடங்கு சக்தியை உருவாக்கி வெளிக் கொண்டு வருகிறது. கருவறையில் இடம் பெறும் அபிஷேகம், மந்திர ஒலி, மணிஒலி என்பன இச்சக்தியை மென்மேலும் அதிகரிக் கச் செய்கிறது. இந்தச் சக்தி ஆலயத்தில் வழிபடச் செல்வோரது உடம்பில் வந்து சேருகிறது. இந்த அபரீதமான சக்தியே நமது உடம்பிற்கும், உள்ளத்திற்கும், மூளைக்கும் தேவையான பொஸிட்டிவ் சக்தியைக் கொடுக்கிறது.

மேலும் ஆலயத்தின் நைமித்திய கிரியைகளின் போது வழங்கப்படும் தீர்த்த மானது பல நோய்கள் தீர்க்கும் அருமருந் தாகக் காணப்படுகிறது. வாய்நாற்றம், பல்சுத்தம், இரத்த சுத்தம் என்பவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேண உதவுகின்றது. இந்தத் தீர்த்தத்தை ஒழுங்காக அருந்தி வருபவர்களிடத்தில் நோய்பிணி அணுகாது என்பது ஆகமவிதி. இதற்குக் காரணம் இத்தீர்த்தம் கராம்பு, துளசி, வேம்பு, கற்பூரம், குங்குமப்பூ முதலிய மூலிகைகளின் கலவையினால் தயாரிக்கப் பட்டு பித்தளைச் செம்பில்/ கெண்டியில் வைத்து வழங்கப் படுவதாகும்.

இந்துக்களின் உடல், உள ஆரோக் கியத்தைப் பேணும் நடைமுறையாக விநாயகர் வழிபாடு சிறப்பாக அமைந்து காணப்படுகிறது. விநாயகரை வழிபடும் போது தலையில் 3,5 தடவைகள் குட்டிக் கும்பிட்டு 3 தடவைகள் தோப்புக்கரணம் போட வேண்டும் என்ற நியதி காணப் படுகிறது.

இந்த வழிபாட்டு முறையானது , ஒரு வித உடற்பயிற்சியாகவும், அதேநேரம் அறிவியல் நோக்கில் பார்க்கும் போது, மூளையின் செயற்திறனை அதிகரித்து ஞாபகசக்தியை வளர்க்கும் ஒரு முறையா கவும் இருந்து வருவதைக் காணலாம். இந்த வழிபாட்டை தொடர்ச்சியாக மேற்கொள் வோரிடத்தில் நோய்நொடிகள் அணுகுவ தில்லை எனவும், அவர்களது உடல், உளம் ஆரோக்கியமாக அமையும் எனவும் நடை முறையில் உணரப்பட்டுள்ளது. இதனை யறிந்து கொண்ட அமெரிக்க அரசு **"யோக"** என்ற வகையில் இந்த வழிபாட்டினைப் பாடசாலை மாணவர்களிடையே பயிற்று வித்து வருகின்றது.

இந்துக்கள் ஆலய வழிபாட்டின் போது பின்பற்றப்பட்டு வரும் பஞ்சாங்க, அட்டாங்க, திரியாங்க, நமஸ்காரங்களும் ஆலயத்தை வலம் வந்து வழிபடும் வழிபாட்டு முறைகளும் எமது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணும் நடைமுறை களாகவே உள்ளன. மேற்கூறப் பட்ட வழி பாட்டு முறைகளைப் பின்பற்றி இறைவனை வழிபடும் போது மன ஒருமைப்பாடு ஏற்படு வதுடன், எமது உடலினுள்ளே செயற் பாட்டுத்தன்மைக் குறைபாட்டுடன் இருக் கும் உறுப்புக்கள் செயற்படத் தொடங்கு கின்றன. இதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வளர்க்கப்படுகின்றது. உடல், உளம், ஆரோக்கியத்தை அடைவதாகவும் கூறப்படுகின்றது.

தற்கால மருத்துவ முறையில் நீரிழிவு நோயாளிகளை வைத்தியர்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ளுமாறு ஆலோசனை கூறுவதை நாமறிவோம். எமது சமய நடைமுறையில் ஆலயத்தை 3,5,7,9 தடவைகள் வலம் வந்து வழிபட வேண்டுமென்ற விதி ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. எனவே எமது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணும் நடைமுறைக ளாகவே இவை காணப்படுவதை அவதானிக்கலாம்.

எமது சமயத்தில் காணப்படும் செபம், தவம், தியானம் முதலான வழி பாட்டு நடை முறைகளும் எமது உடல், உள ஆரோக்கியத்தைப் பேண உதவுகின்றன. **"புறத்தூய்மை நீரால் அமையும், அகத் தூய்மை வாய்மையினால் காணப்படும்".** என்பதற்கேற்ப உள்ளத்தைத் தூய்மைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த இந்த வழிபாட்டு முறைகள் எமக்கு உதவுகின்றன. எம்மிடத்தில் மன ஒருமைப் பாட்டை ஏற்படுத்த உதவுகின்றன. ஒருவரது நற்சிந்தனைகளின் ஊற்றுக்களனாக உளம் இருப்பதற்கு உள ஒருமைப்பாடு அவசியம். அது மட்டுமன்றி இந்த வழிபாடுகளின் மூலம் ஒருவர் தன்னிடத்தில் மறைந்தி ருக்கும் அபார சக்தியினை வளர்த்துக் கொள்ள முடியும். நினைத்த காரியத்தைச் சாதிக்க முடியும். எமதி சமய ரிஷிகளும், முனிவர்களும் இத்தகைய பயிற்சியின் மூலமே நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து அளப்பரிய பணிகளை ஆற்றியுள் ளனர். வான்மீகி, திருமூலர், அருணகிரிநாதர் ஆகியோர் இத்தகையவர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்து ஆலயங்களில் நடைபெறும் நித்திய , நைமித்திய கிரியைகளும் எமது உடல் உள ஆரோக்கியத்தைப் பேண உதவும் நடைமுறைகளாக இருப்பதை அவதானிக்கலாம். சிறப்பாக நைமித்திய கிரியைகளில் ஒன்றான மகாகும்பாபிசேகக் கிரியையும் , அதனை முன்னிட்டு நடை பெறும் ஏனைய கிரியைகளும் குறிப்பிடத் >ツ・ k . **"அண்டத்தினுள்ளவை பிண்டத் தில் உண்டு"** என்பது போல ஐம்பூதங்களி னால் ஆக்கப்பட்ட எமது உடம்பிற்கும், ஐம்பூதங்களின் அம்சமாக இடம்பெறும் கும்பாபிசேகக் கிரியைகளும் உடல், உள ஆரோக்கியத்தைப் பேண உதவி வருகின் றன.

இத்தகைய நைமித்திய கிரியை களின் போது ஆலயத்தில் வளர்க்கப்படும் அக்கினி வழிபாடும், யாகமுறையும் அங்கு வழிபடச் செல்வோரது மனச் சுமைகளை நீக்கி உடல், உள ஆரோக்கியத்தைப் பேண உதவுகிறது. யாககுண்டத்தில் இடப்படும் பல்வேறு மூலிகைகளடங்கிய சமித்துக்கள், திரவியங்கள் புகையாக எழுந்து ஆலயச் சுற்றுப்பிரகாரம் எங்கும் காற்றுடன் கலக்கப் படுகின்றது. ஆலய வழிபாட்டில் ஈடுபடு வோர் இதனைச் சுவாசிக்கும் போது மன ஒருமைப்பாடும், தெய்வ தெய்வ அருளும் கிடைக்கப் பெறுகின்றன. மறுபுறம் உடம்பி லுள்ள, மனத்திலுள்ள நோய்கள் சில அகன்று விடுவதாகவும் நம்பப்படுகிறது.

ஆலயக்கிரியைகளின் போது ஓதப் படும் மந்திர ஒலிகளும், இசைவாத்திய ங்களின் ஒலிகளும் வழிபடுவோரது உடலிலே பட்டுத் தெறிப்பதன் மூலம் அவர் களது உடல், உள ஆரோக்கியம் பேணப் படுவதாக நம்பப் படுகிறது. எனவே தான் ஆலயத்திற்குச் செல்லும் ஆண்கள் மேலாடையின்றிச் செல்ல வேண்டும் என்ற விதி ஆலயங்களில் பேணப்பட்டு வருகின் றது. மந்திர ஒலிகளிற்கும், இசைக்கும் மனதை வசப்படுத்துகின்ற, ஒருநிலைப்படுத் துகின்ற சக்தி இருப்பதாக இந்துமதம் கூறுகின்றது.

மருத்துவ நோக்கில் பார்க்கும் போது மந்திர ஒலிகளும், இசைவாத்திய ஒலிகளும் வழிபடுவோரது உடம்பில் படுவதன் மூலம் அவர்களது உடலினுள் அக்குபங்சர் புள்ளிகளைத் தூண்டி நரம்பு மண்டலங்களை முறையாகச் செயற்பட வைப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பியல் சம்பந்தமான நோய்கள் உடலில் அணுகாமல் பேண உதவுகிறது.

இந்து சமயத்தவர்களது விரத அனுஷ்டான நடைமுறைகளும் அவர்களது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணப் பெரிதும் உதவி வந்துள்ளன. விரத காலத்தில் உணவைச் சுருக்குதலும், விடுதலும், இறை வழிபாடும் முக்கியமான வையாகும். இன்று பெரும்பாலானவர்களில் மிக இளவயதிலேயே பல்வேறு நோய் நொடிகள் தொற்றிக் கொள்கின்றன. இதற்குப் பிரதானமான காரணம் நமது உணவுப்பழக்கம் என்பது மருத்துவ விளக்கமாகும். அதிக கொழுப்பு, அதிக சீனி,அதிக உப்பு, சுவையூட்டிகள் போன்றவற்றால் நீரிழிவு, மாரடைப்பு, குருதியமுக்கம், முதலான நோய்கள் ஏற்படுகின்றன. இந்துக்கள் நாள் விரதம், கிழமை விரதம், மாத விரதம், வருட விரதம் எனப் பல விரதங்களை அனுஷ்டித்து வருவதால் உடலில் தேக்கி வைக்கப்பட்டுள்ள கொழுப்புக்கள் தேவையற்ற பிற பொருள்களும் இல்லாமல் செய்யப்படுகின்றன. இதனால் உரிய முறையில் விரதமிருப்போர் பெரும் பாலும் நோய் நொடி அணுகாமல் தங்கள் உடலைப் பேணிக் கொள்கின்றனர்.

மறுபுறம் விரதகாலத்தில் இறை நாமத்தை உச்சரிப்பதன் மூலமும், இறை வழிபாட்டில் ஈடுபடுவதன் மூலமும், மனத் தூய்மை, உடல் தூய்மை ஏற்படுகின்றது. மனத் தூய்மை, உடல் தூய்மை உள்ளவரிடத்தில் தான் நல்ல எண்ணங்கள் எப்பொழுதும் உருவாகுவதைக் காணலாம். நல்ல எண்ணங்களையுடையவரது உடல், உளம் எப்போதும் ஆரோக்கியமாகவே அமையும். எனவே தான் மகாத்மாகாந்தி தீயவற்றைப் பார்க்காதே தீயவற்றைப் பேசாதே! தீயவற்றைக் கேளாதே! எனக் கூறியிருந்தார்.

ஆலயத்தில் வழங்கப்படுகின்ற பிரசாதங்களும் எமது உடல், உள ஆரோக்கியத்தைப் பேண உதவும் நடை முறைகளாகவே காணப்படுகின்றன. பிரசாதங்களில் ஒன்றாகப் பஞ்சாமிர்தம் வழங்கப்படுகின்றது. இது இறைவனின் திருவருள் பதிந்தது மட்டுமன்றி, மனித வாழ்வில் உடல், உள ஆரோக்கியத்திற்குத் தேன், பால், பழங்கள் இன்றியமையாதது என்ற தத்துவத்தையும் எமக்குப் போதித்து நிற்கிறது. இத்தகைய உணவுகளைத் தேவையான பொழுது எடுப்பவரது உடல் ஆரோக்கியமாக அமையும். காரணம் உடல் ஆரோக்கியத்திற்கு வேண்டிய விற்றமின்களும், ஏனைய கனியுப்புக்களும் அதில் நிறையவே உண்டு. எனவே தான் நோய் நொடி தொற்றிக் கொள்ளும் நோயாளிக்கு வைத்தியர், பால், பழங்களை உணவாகக் கொடுக்கும் படி பரிந்துரைப்பதைக் காணலாம்.

ஆலயங்களில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளும் இந்து ஒருவரது உடல், உள ஆராக்கியத்தைப் பேணும் சமய நடைமுறைகளாகவே இருந்து வருகின்றன. மஹோற்சவ காலங்களில் நடைபெறும் பரத நாட்டியம், இசை நாடகங்கள், பண்ணிசைக் கச்சேரிகள் முதலான கலை நிகழ்ச்சிகள், இறை நம்பிக்கையினையும், இதயத்திற்கு மகிழ்வையும் தருகின்றன. இதிகாச புராண இறை செய்திகளே இசை, நடனம் நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகக் காட்டப்படுவதால் இறைநம்பிக்கை வளர்த்தெடுக்கப் படுகின் றது.

கலைகளை ரசிப்பதனூடாக உடல், உள ஆரோக்கியம் ஏற்படுத்தப்படுகின்றது. **"வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்"** என்பதற்கேற்ப உடல் பூரிப்பு மனித உடலில் உள்ள பல்வேறு நோய் நொடி யினை அகற்ற உதவுகிறது. மனநலம் பாதிக்கப்படுபவர்கள் வைத்திய ஆலோ சனையின் படி கலைநிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்வதும், இயற்கையை ரசிப்பதும் இங்கு நோக்கத்தக்கது. மருத்துவத்தில் இசை மருத்துவம் என்ற ஒரு பிரிவு இருப்பதை நாம் அறிவோம். இசையால் பல நோய்கள் குணப்படுத்தப்பட்டதை எமது சமயத் திரு நூல்கள்கூறுகின்றன. **"இசையால் வசமாகா இதயமெது"** என்பது இதனையே விளக்கும்.

இந்துக்களது நித்தியகரும விதிக ளும் கூட மனிதனின் உடல், உள ஆரோக்கி யத்தைப் பேண உதவும் நடவடிக்கை களாகக் காணப்படுகின்றன. சமய ஒழுக்கம் என்ற வகையில் அதிகாலை எழுந்திருத்தல், நீராடல், சூரியநமஸ்காரம் செய்தல், விபூதி தரித்தல், காலை, மாலை இறைவழிபாடு செய்தல், கூட்டு வழிபாடு செய்தல், உணவு உண்ணும்போது இறைவனை நினைத்தல், பிற உயிர்களிற்கு உணவு கொடுத்தல், உறங்கும் போதும், எழும் போதும் சிவ சிவ எனக் கூறுதல், பெற்றோர், பெரியோரிடத் தில் ஆசீர்வாதம் பெறுதல் முதலான நித்திய கரும விதிகளும் இந்து ஒருவனது வாழ்வில் இன்றியமையாத கருமங்களாகும். இத்த கைய் நித்திய கருமங்களைத் தவறாது மேற் கொண்டு வந்தால் உடல், உளம் மிகுந்த ஆரோக்கியம் உடையதாக அமையும்.

அதிகாலையில் (பிரம்ம உற்சவ காலத்தில்) எழுந்திருப்பது குளிர்ந்த நீரில் நீராடுவது உடல் சுறுசுறுப்பையும், ஞாபக சக்தியையும் ஏற்படுத்த வல்லன. எனவே தான் ஆச்சிரமவாசிகளான முனிவர்கள், ரிஷிகள் அதிகாலை எழுந்து நீராடி, சந்தியா வந்தனம் செய்து செபம், தவம், தியானங்க ளில் ஈடுபட்டு மகாஞானிகளாக நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வந்துள் ளனர்.

சூரிய உதயத்தின் போது சூரிய நமஸ்காரம் செய்வது, உடல், உள ஆரோக்கி யத்தைத் தர வல்லது. இதனை இன்றைய மருத்துவ உலகம் ஏற்றுக் கொண் டுள்ளது. எமது உடம்புக்குத் தேவையான விற்றமின் D கிடைப்பதாகக் கூறுகிறது. இளங்கதிர்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத் துவதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர். இதனாலேயே இன்று மேற்கு நாடுகளில் சூரியக் குளியல், மண்குளியல் எனப்பல குழியல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்து சமயத்தில் விபூதி தரித்தல் மிகப் பிரதானமான நடைமுறையாக இருந்து வருகின்றது. உடல், உளப் பிணி களை அகற்ற வல்லது. சம்பந்தர் பாண்டிய மன்னனின் வெப்பு நோயைப் போக்கவும், நாவுக்கரசரது சூலைநோயைப் போக்கவும் பயன்படுத்தப்பட்டதும் இந்த விபூதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் கண்கொண்டு நோக்கும் போது சுத்தமான பசும் சாணியால் தயாரிக்கப் பட்ட விபூதிக்கு எமது உடம்பிலுள்ள நெற்றி, கைமூட்டுக்கள், மணிக் கட்டுக்கள் முதலிய இடங்களில் காணப்படும் நச்சுநீர் களை உறிஞ்சியகற்றும் சக்தியுண்டு. மண்டை ஓட்டினுள்ளும், எலும்பு மூட்டுக்களிலும் நச்சுநீர் தொடர்ந்து தேங்கி நிற்பதால் சளி, சுரம் முதலான நோய்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. விபூதி அணிவதால் இவை உறிஞ்சப்பட்டு உடல், உள ஆரோக்கியம் பேணப்பட வழியேற்படுகிறது.

மாணவர்கள் நெற்றியில் விபூதியினைத் தரிக்கும் போது ஞாபக சக்தி அதிகரிக்கின்றது. மூளை நரம்புகள் தூண்டப்பட்டு, படிப்பில் அதிக கவனம் செலுத்த உதவுகிறது. இது ஆன்மீக உண்மை மட்டுமல்ல, அறிவியல் உண்மையும் கூட. மேலும் திருநீறு அணிபவரது உடலிலுள்ள துர் வாடைகள் நீங்குகின்றன. காற்றிலிருக்கும் தொற்று நோய்கள் எம்மை நெருங்காது எமது உடல் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது. உடல் ஆரோக்கியம் பெறும் போது உள்ளமும் ஆரோக்கியம் அடைகிறது.

ஆண்கள் நெற்றியில் குளிர் சந்தனப் பொட்டு வைப்பதும், பெண்கள் திலகமிட்டுக் கொள்வதும், உடல், உள ஆரோக்கியத்தைப் பேணும் நடைமுறைகளாகவே உள்ளன. மனிதனின் நெற்றிப் புருவ மத்தியிலே தான் மூளையின் நரம்பு மண்டலங்களின் முடிச்சுகள் காணப்படுகின்றன. அதிக வெப்பம், அதிக குளிரிலிருந்து நரம்பு மண்டலங்களையும், மூளையினையும் பாதுகாத்துக் கொள்ள இந்த நடைமுறை உதவுகிறது.

எமது சமயத்திலுள்ள பல்வேறு தீட்சை நடைமுறைகளும் எமது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுவதை அடிப்படை BV • ӥ • • ˆ 晳 . **"தீட்சை"** என்பதன் கருத்து மலங்களைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்பதாகும். ஒருவனது உள்ளத்திலிருக்கும் மலங்களாகிய தீய எண்ணங்கள் செயல்கள் எல்லாம் குருவாகிய ஞானியின் பார்வையினாலும், தொடுகையினாலும், மந்திரத்தாலும் இல்லாமல் செய்யப்படுகின்றன. இவற்றை முறையே நயனதீட்சை, பரிசதீட்சை, ஔத்திரிதீட்சை என அழைப்பர். மலம் நீக்கப்பட்ட உளம் தூய்மைபெறும்.

இந்துக்களது வாழ்வியல் முறையில் அணிகலன்கள் அணிவது முக்கியமான பண்பாடாக இருந்து வருகிறது. இவையும் இந்துக்களது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுவதில் உதவி வருகின்றன. பெரும்பாலும் ஒருவரது உள்ளத்தை பாதிப்பவற்றுள் அவர்களிற்கு ஏற்படும் நோய்களே பிரதான காரணமாக அமைந்து விடுகிறது. பொன், வெள்ளி, ஐம்பொன் முதலான உலோகங்களினால் ஆன அணிகலன்களை அணிவதன் மூலம் பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என இந்து சமய சாஸ்திரங்கள் கூறுகின்றன.

எல்லா உலோகங்களிற்கும் காந்த சக்தி இருப்பதாக அறிவியல் உலகம் கூறுகிறது. பொன்னாலான அணிகலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அணிபவர்களிடத்தில் உடல்பூரிப்பும், அழகும் பிரகாசிப்பதாகக் கூறப்படுகின்றது.

மூக்குக்குத்துவதும், காதுகுத்து வதும், அதில் அணிகலன்களை அணிவதும் இந்து சமயப் பண்பாடுகளாகவும், நடை முறைகளாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு செய்வதன் மூலம் உடலிலுள்ள வாயுவை வெளியேற்ற உதவும் என முன்னோர் கண்டுணர்ந்து கூறியுள்ளனர். மேலும் தங்க மூக்குத்தி அணிவதால் உடலிலுள்ள வெப்பத்தைத் தன்னுள் ஈர்த்து வைத்துக்க கொள்ள உதவுகிறது.

எமது மூளையிலுள்ள "ஹப்போத லாமஸ்" என்ற பகுதி எமது நரம்பு மண்டலங் களைக் கட்டுப்படுத்துவதாகவும், செயற் படுத்த உதவி செய்வதாகவும் கூறப்படுகிறது. இப்பகுதியை அதிகம் செயற்படுத்துவதற்கே பெண்கள் இடது பக்க மூக்கில் துளையிட்டு மூக்குத்தி அணிவர். இது வலது பக்க மூளையை நன்றாகச் செயற்பட வைக்கிறது. வலது பக்க மூக்குத்தி அணிந்தால் இடது பக்க மூளை நன்றாக வேலை செய்யும். இத்தகைய மருத்துவ காரணங்களினால் தான் இந்துக்கள் அணிகலன்கள் அணியும் நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றனர்.

பெண்களின் காலில் அணியும் மெட்டியினால் ஒரு வித காந்த சக்தி கால் நரம்புகளிலிருந்து உடலில் ஊடுருவி நோய்களை நிவர்த்தி செய்கிறது. பெண்கள் கர்ப்பம் அடையும்போது ஏற்படும் மயக்கம், வாந்தி, சோர்வு, பசியின்மை முதலான உடலியல் பிரச்சினைகளை மெட்டி அணிவ தன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். கருப்பை பாதிப்புறுவதையும் தடுத்துக் கொள்ளலாம்.

ஆண்களைப் போல் பெண்களின் இதய நோய் அதிகம் வருவதில்லை. இதற்குப் பிரதான காரணம் அவர்கள் தங்கத் தால் அணியும் தாலி எனக் கூறப் படுகின்றது. தாலியுடன் ஆலய வழிபாட்டில் ஈடுபடும் பெண்களிற்கு மூலஸ்தானத் லிருந்து வரும் காந்தசக்தி தாலியூடாக இதயத்திற்குச் சென்று அவர்களிடமுள்ள கொழுப்பைக் கரைப்பதாகக் கூறப்படு கின்றது. எனவே தான் அணிகலன்கள் யாவும் உடல், உள ஆரோக்கியத்தைப் பேண உதவி வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்துக்களிடத்தே காணப்படும் சடங்கு சம்பிரதாய நடைமுறைகளும் உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுவதாகவே காணப்படுகின்றன. பலவித காவடிகள் எடுத்தல், அங்கப் பிரதிஷ்டை செய்தல், அடியளித்தல், முள்ளு மிதியடியில் நடத்தல், வளைகாப்பிடுதல், கர்ணவேதனச் சடங்கு, பூப்புனித நீராட்டுச் சடங்கு முதலானவை உடல், உள ஆரோக்கியத்தைப் பேணும் நடைமுறைகளாகவே உள்ளன.

வைத்தியமுறையில் அக்குபஞ்சர் முறையும் ஒன்றாகும். எமது உடலிலுள்ள அக்குபஞ்சர் புள்ளிகளைக் கண்டு பிடித்து அதில் ஊசிமுனையால் குத்துவதன் மூலம் நரம்பு மண்டலங்கள் தூண்டப் பெற்று சிகிச்சையளிக்கப்படுகிறது. எமது சமயத்தில் காணப்படும் தூக்குக் காவடி, பறவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடி, செடில் காவடி முதலான காவடிகளை எடுத்தலும், முள்ளுமிதியடியினை அணிந்து ஆலயத்தை வலம் வந்து வழிபடுவதும், அங்கப்பிரதிஷ்டை செய்தல், அடியளித்தல் என்பனவும் மேற்படி வைத்திய முறையினை ஒத்ததாகவே காணப்படுகின்றன.

இந்துக்களது சைவ உணவுப் பழக்கங்களும் அவர்களது உடல், உள ஆரோக்கியத்தைப் பேண உதவுகிறது. **"கொல்லான் புலானை மறுத்தானை, எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்"** என்ற ஜீவ காருண்யத்தின் அடிப்படையிலும், நோய் நொடியற்ற நீண்ட ஆயுளிற்கும் சைவ போசனமே சிறந்த உணவுப்பழக்கம் என்பதை இன்றைய விஞ்ஞான உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஒருவரது குண இயல்புகளைத் தீர்மானிப்பதில் அவர் உட் கொள்ளும் உணவு முக்கிய பங்கு வகிக் கின்றது. மாமிசபோசனம் உடையவர்க ளிடத்தில் விலங்குக் குணங்களும், தாவர போசனம் உட்கொள்பவர்களிடத்தில் நோய் கள் விரைவில் தொற்றிக் கொள்வதாகவும், சைவபோசனம் செய்பவர்களிடத்தில் நோய்கள் இலகுவில் தொற்றிக் கொள்வ தில்லை எனவும் கூறப்படுகின்றது.

மேலும் நாம் உண்ணும் அறுசுவை உணவு, உடல் சமநிலையைப் பேணவும், உணவின் ஜீரணத்தைச் சமப்படுத்தவும், உடலில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தவும், உடலையும், உள்ளத்தையும் ஒன்றிணைக் கவும் உதவுகிறது. விலங்கினங்களைப் பார்க்கும் போது சைவ உணவு உண்ணும் விலங்குகளே மிக அழகாகவும், நீண்ட ஆயுளையும்கொண்டிருப்பதைக் காண லாம். எனவே உடல், உள ஆரோக்கி யத்தைப் பேண சைவ உணவுகளே பெரிதும் உதவுகின்றன எனலாம்.

எனவே, மேற்கூறியவற்றினைத் தொகுத்து நோக்கிப் பகுத்துப் பார்க்கின் இந்துசமயத்தில் உடல், உள ஆரோக்கியத் தைப் பேணப் பல்வேறு சமய நடைமுறை கள் காணப்படுகின்றன என்பதனையும், அதனை எமது சமய ரிஷிகளும், முனிவர் களும் பின்பற்றி உடல், உள ஆரோக்கியத் தைப் பெற்றுப் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர் என்ற உண்மையினையும், குறிப்பாக இந்து ஆலயமும், அங்கு இடம் பெறும் கிரியை வழிபாடுகளும் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ வகை செய்வன என்ற உண்மையினையும் அறிந்து கொள்ள லாம். அது மட்டுமன்றி மிகத்தொன்மைக் காலத்திலிருந்து பின்பற்றப்பட்டு வரும் இந்து சமய நடைமுறைகள் பல நவீன விஞ்ஞான முறைகளுடனும், மருத்துவத்து டனும் ஒத்துப்போவதையும் கண்டு கொள் ளலாம்.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழர்களின் பண்பாடு

**திருமதி ஈஸ்வரி செல்வம்**
B.A.Dip.inEducation, M.A(Tamil)
**யா/இராமநாதன்கல்லூரி (ஆசிரியை)**

---

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்"

"தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு"

என மறைவாக நமக்குள்ளே பண்பாட்டுப் பழம்பெருமைகளைப் பேசுவதில் ஒரு மகிமை இல்லை என்றாலும் பழமையைச் சிந்திப்பதன் வாயிலாகப் பழம் பண்பாட்டைத்தழுவிய புதிய சமுதாயத்தைப் படைக்க வழிவகை காண முடியும். ஆதலின் " **எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**" இருந்த இந்நாட்டின் அருமை பெருமைகளைச் சாற்றி நிற்கும் பண்பாட்டைக் காணுதல் இக் காலத்திற்கேற் றதேயாகும்.

**பண்பாடு :**

பண்பு, பாடு எனப்பிரிக்கும் வகையில் அமையும் இச்சொற்கூட்டில் சான்றுண்மை அல்லது உயர்ந்த–செம்மையான–உள்ளம் என்பது முதற் சொல்லின் பொருளாக அமைய, படுதல் என்பது "படு" என்பதன் முதல் நீட்சியாகிய "பாடு" என்பதற்கு ஒழுக்கம் என்பது பொருளாகச் சேர சான்றுண் மையாகிய ஒழுக்கம் அல்லது உயர்ந்த வழிச் சொல்லுதல் எனும் பொருள் விரிவைத் தன்னகத்தே கொண்டு நிற்கும்.

அன்றியும் பண்பு என்னும் சொல்லை சிதைத்துப் "**பண்**" என்பதை அடிச்சொல்லாகிப் பொருள் காண்பாரும் உளர். பண் எனின் இசையாகும்.இசை–இசைவ–இசைதல் என விரியின் இசைந்த வாழ்வு அல்லது பொருந்திய வாழ்வு எனப் பொருள் தந்து நிற்கும் .

"**பண்எனப்படுவதுபாடறிந்தொழுகல்**"(நெய்தற்கலி)

"**பண்புடையார் பட்டுண்டு உலகம்**" (குறள்996)

"**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு**" (குறள்783)

மேற்கண்ட வரிகளின் வாயிலாகப் பண்பின் தெளிந்த பொருளைத் தெளியலாம். திருவள்ளுவர் நாகரீகம் என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றார்.

"**பெயக்கண்டும் நஞ்சுண்ட மைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்**" (குறள் 580)

நற்றிணையிலும் மேற்கண்ட குறள் கருத்தோடு இணைந்த கருத்து என்று காணக் கிடைக்கின்றது. "**முந்தியிருந்து/ முந்தைய நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நா கரிகர்**" என வரும் அவ்விரு வரிகளின் பொருளாக உள்ளே பொதிந்திருக்கும் கருத்துக்களை ஆழ்ந்து நோக்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட் டைக் குறிக்கும் வேற்றுச்சொல் வடிவமே இந்நாகரிகம் என்பது விளங்கும்.

ஆனால் இன்றைய சூழலில் பண்பாடு என்பது உள்ளத்தின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்றும் நாக ரிகம் என்பது நடையுடை முதலிய புறத் தோற்றத்தை அடிப்படையாகக் கொண் டது என்றும் கருதி வருகின்றோம்.

இவ்விரண்டு சொற்களும் தெளிந்த உள்ளத்தின் விழுமிய ஒழுக்கத்தை உணர்த் தும் வேற்றுச்சொல் வடிவங்கள் என முடிபு கூறிப் பண்டைத் தமிழர் தம் பண்பாட்டை காண்போம்.

**அகமும், புறமும் :**

பண்டைத்தமிழர் தம் வாழ்க்கைப் பண்பாடு அகம், புறம் எனும் இரு பிரிவினுள் அடங்கும். அகம் என்பது ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்த வாழ்வையும் புறம் என்பது வாழ்வின் பிறகூறுபாட்டையும் உணர்த்தும். பாட்டும் தொகையுமே, பண்டைத்தமிழர் தம் பண்பாட்டுச் சான்று பகர்வனவாக விளங்கும். அவர் தம் வாழ்விலே புறத்திணையைக் காட்டிலும் அகத்திலே அதிகம் ஈடுபாடு கொண்டிருந்த னர் என்பதற்கு அந்நூல்களில் அகம் பற்றிய மித்திருப்பது துணை நிற்கும். **"வீட்டுக்குப் பின்னரே நாடு"** அல்லது வீடு செம்மையுறின் நாடு செம்மையுறும் எனும் எண்ணம் கொண்டிருந்தனர் என விளக்கம் கூறுவர் சிலர்.

களவு, கற்பு, மக்கட்பேறு, விருந் தோம்பல் முதலியன அகத்தின் கூறுகளாக விளங்க அரசியல், வாணிகம், தொழில், கலை, சமயம், தத்துவம் முதலியன புறத்தின் கூறுகளாக விளங்கும்.

**அகம் :**

பண்டைத்தமிழ் மக்கள் தம் அக வாழ்வு களவு வாழ்க்கையில் தொடங்கி கற்பு வாழ்க்கையில் தொடரும் தன்மை யானது வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை தென்கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற் போலவும் வெங்கதிர்க் கனலியும், தண்கதிர் மதியமும் தம்கதி வழுவித் தலைப் பெய்தாற் போல் தலைப் பெய்த தலைவனும் தலைவி யும் களவுக்குப் பின் பிறர் பழித்தலில்லாத அறன் எனப்படும் இல் வாழ்க்கையை மேற்கொள்வார்.

தெய்வம் தொழாது கொழுநனைத் தொழுது எழும் தற்காத்து தற்கொண்டா னைப் பேணி தகைசான்ற சொற்காத்து சோர்வில்லாப் பெண்ணாக தலைவியும் பிறன்மனை நோக்காப் பேராண்மையோடு நல்லறம் பேணும் நற்றுணை நாயகத் தலைவனும் வாழ்ந்த கற்பு வாழ்வின் இணைந்த அன்பின் சான்றுகள். யாழினிமை யும் சூழல் இனிமையும் வெல்லும் மழலை பேசும் அறிவறிந்த மக்கட் பேற்றோடு வாழ்ந்த சிறப்பினைக் கூறாத அகநூல்கள் உண்டோ?

களவு கண்டு, கற்பு கண்டு கற்பு வாழ்வின் பயன்கண்டு வினையே ஆடவர் க்கு உயிரே, வாணுதல் மனையுறை மகளிர் க்கு ஆடவர் உயிரென வாழ்ந்த இல் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டி ருந்தது. பிறிது ஒன்று இருந்தது என்றால் அது விருந்தோம்பல் ஆகும். தாளாற்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு எனக் கூறும் வள்ளுவர் பெருமான் **"இருந்தோம்பி இல்வாழ் வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"** (குறள்81)

எனதெளிவுபடுத்துவதோடல்லாமல்,
**"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்ற ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"** (குறள் 43)

என விருந்தோம்பல் இல்வாழ்வானின் கடமைகளில் ஒன்றாகவே வலியுறுத்திக் கூறுகின்றார். வள்ளுவரின் கருத்துக்களின் சாயலாக விளங்கும் சேரன் தம்பி இசைத்த சிலம்பின்வரிகளும்இங்கு காணுதற்கேற்றது.

அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கெதிர்தலும் தொல்வோர் சிறப்பின் என்பன அவ்வரிகள்.

குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை என நிலத்தை இயற்கையின் சூழலுக்கேற்ப பாகுபாடு செய்து அந்தந்த நிலத்தின் தட்ப வெப்ப நிலைகளுக்குச் சுற்றுச் சூழலுக்கு இயைந்த வண்ணம் தம்முடைய வாழ்வை அமைத்து வாழ்ந்தனர் ஆதலின் அவர்தம் அகவாழ்வு, அன்பும், அறனும் இணைந்து அவற்றின் பண்பும், பயனும் பெற்று இல்லறமாக விளங்கியது. தனித் தனிக் கற்களின் கூட்டே இனிய மாளிகை வடிவு பெறுமாறு போல பண்டைத்தமிழரின் தனித்த வீட்டு வாழ்க்கை இனிதே நாட்டு வாழ்க்கைக்கு அடி கோலியது.

**புறம் :**
**"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"** ஆதலின் புறத்துறையில் முதலிடத்தைப் பெறுவது அரசியலாகும் மக்களினால் மக்களுக்காக மக்களில் ஒருவரை தேர்ந்தெடுக்கும் குடியாட்சினுள் சிறந்த முடியாட்சி அமைந்திருந்தற்கு **"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை ஒன்று வைக்கப்படும்"** (குறள்388)

என வரும் அடிகளே சான்றாக அமையும்.

கோண் நிலை திரியின் கோள்நிலை திரியும்! கோள் நிலை திரியின் மாரி பொய்க்கும் மாரி பொய்ப்பின் வளன் குன்றும். வளன் குன்றின் வறுமையுறும் வறுமையுறின் மக்கள் இடம்பெயர்வார். இடம் பெயரத்தக்க ஆட்சி செங்கோண்மை அன்று? எனும் இவ்வுண்மை உணர்ந்து ஆண்டதால் பதியெழு அறியாப் பழங்குடி முதூராகத் தமிழகம் பண்டு விளங்கியதாகும் என்பதற்குச் சான்று பாட்டும் தொகையுமேயாகும்.

**"முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் வேண்டுப வேண்டினர் கருளி"** (பெரும்பரண்) ஆகும்.

இயல்பினால் மன்னனை காத்தற் கடவுளாகிய திருமாலின் மாற்றுருவாகக் கொண்டனர்.

திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன் எனும் இடைக்கால இலக்கிய வரி அக்கருத்து துணை நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளில் தப்பார்."** (புற74)

எனச் சாதாரண குடி மகனின் வீர உணர்வைக் காட்டும் புறநானூற்றின் வாயிலாகவே வேந்தரின் வஞ்சின உரையையும் கண்டு அவர் தம் தோள்வலிமையைக் கணக்கெடுக்க முடிகிறது.

**"சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாங்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேனாயின் பொருந்திய
என்நிழல் வாழ்நாள் செல்நிழல் காணாது
கொடியன் எம்மிறை எனக் கண்ணீர் பரப்பிக்
குடிப்பழி தூற்றும் கோலேனாகுக"** (புறம்72)

**"திறனில் ஒருவனை நாட்டி முறை திரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக"** (புறம் 71)

**"நாடெனும் பேர் காடாக
ஆசேர்ந்தவழி மாசேர்ப்ப
ஊர் இருந்த வழி பாழாக"**

இங்ஙன் எத்தனை எத்தனை வரிகள்! அறிவோடு ஆற்றல் நிறைந்த அரசர்கள், இங்ஙனம் வீரத்தின் விளைவைக் காட்டும் இலக்கியங்களே நிலையின் திரியாது அடங்கிய அறிவின் விளைவையும் காட்டும்.

**"காடு கொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி
பிறங்கு நிலை மடத்து உறந்தை போக்கிக்
கோயிலோடு குடிநிற்க"** (பட்டினப்பாலை)

**"வசைநீங்கு சிறப்பின் அல்லது கடிந்து
அறம்புரி செங்கோல் பல்வேல் திரையன்"**
(பெரும்பாண்) என வரும் அடிகள் சாலவும் சான்றாக நிற்கும்.

புதியவரை ஓம்புதல் (விருந்தே புதுமை) இல் வாழ்வின் கடனாக அமைய இல்லையென வந்தோர்க்கும், வறியவர்க்கும் வழங்கும் வள்ளண்மை மன்னனின் மாட்சியாக விளங்கியது. பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்பழுமரம் தேரும் பறவை போல வருவோர்க்கெல்லாம் பாண்பசி, பகைஞன் இன்மைதீர வேண்டின் எம்மோடு நீயும் வம்மோ முதுவாய் இரவலர் எனப் பெற்ற பெருவளன் பெறார் க்கு உணர்த்தும் வகையில் விளங்கிய காட்சியை இலக்கியங்கள் காட்டும். விளங்கு பொற்காலத்தில் விரும்புவன பேணி ஆனால் விரும்பின் தானின்று ஊட்டும் ஊக்கமும், உள்ளமும் உடைய வேந்தருள் ஒருவன் பூத்தலை அறாப்புனை கொடி முல்லை நாத்தழும்பு இருப்பப் பாடாதா யினும் கறங்கு மணி நெடுந்தேர் கொள்க எனக் கொடுத்த சேதியையும் அறிகிறேம். இங்ஙனம் கொடைமடம் படுவது தமிழ ருக்கே உரிய பழம்பாட்டின் தனிச் சிறப்பில் என்று.

அரசியல் ஆட்சியில் அரசனுக்குத் துணையாகச் சிறந்த கொள்கை அறங்கூறு அவயமும் செம்மைச்சான்ற காவிதி மாக்களும் நாற்பெருங்குழுவும் குறை கண்ட வழி எடுத்துக் காட்டி இடித்துக்கூறி செம்மையாக ஆட்சி அமைய வழி வகுத்தனர்.

**வாணிகம் :**

சமுதாயத்தில் இன்றியமையா இடம்பெறுவனவற்றுள் ஒன்று வாணிபம்.

**"நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதும் குறை கெடாது
பல்பண்டம்பகிர்ந்துவீசும்"** (பட்டினப்பாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பட்டினப்பாலை சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்தொரு பால் கோடா வாணிக முறையினைக் காட்டுகின்றது. இருக்கும் பொருளைத் தந்து இல்லாத பொருளைப் பெறுகின்ற பண்ட மாற்று முறையும் இருந்தது. வீட்டுக்கு வீடு மட்டுமல்லாமல் நாட்டுக்கு நாடு இவ்விதப் பண்டமாற்றுமுறையைக் கொண்டிருந்தது என்பதை நீரினின்று நிலத்தேற்றவும் நிலத்தினின்று நீர்பரப்பவும் என வரும் பட்டினப்பாலை அடியினால் அறியலாம். நீரின் வந்த திமிர் பரிப்புநவியும் காலின் வந்த கருங்கறி மூடையும், வடமலைப் பிறந்த மணியும், பொன்னும் குட மலைப்பிறந்த ஆரமும், அகிலும் தென் கடல் முத்தும், குணகடல் துகிலும், கங்கை வாரியமும், காவிரிப்பயனும், கீழகத்து ணவும், காழகத் தாக்கமும், அரியவும் பெரியவும், நெளிய வந்தீண்டி வாணிகத் துறையும் நாலங்காடி அங்காடி என இரண்டு பற்றி தெளிவான விளக்கத்தை சிலம்பு காட்டுகிறது. கிரேக்கம், சீனம் என தொன் மையான நாகரிகத்தையுடைய நாடுகளு டன் வணிகத் தொடர்பு கொண்டு சிறப்புற்று இருந்ததற்கு பல்வகைச் சான்றுகளுடன் பெருமை கொள்ளும் உரிமை உடையவன் தமிழன்.

**சமயம் :**

அடுத்து சமுதாயத்தின் சிறந்த கூறாகக் கருதப்படும் இயற்கை வழிபாட்டுச் சமயத்தைப் போற்றிய பெருமை தமிழ னுக்கு உண்டு. **"மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மை வரை உலகமும், வேந்தன் மேய தீம்புனல் உலகமும், வருணன் மேய பெரும் மணல் உலகமும்"** தமிழனுக்குச் சொந்தம். பண்டைத் தமிழர் தம் சமயக் கோட்பாட்டில் காழ்ப்பு இல்லை, கசப்பு இல்லை சமணர், பௌத்தர் முதலான வேற்று சமயத்தார் இடையீட்டால் அமைதியான இயற்கை வழிபாடு சிதைந்து சைவம், வைணவம் என்னும் சமயநிலை உருவாகியது. காழ்ப் பிலா சமயக் கொள்கையில் பண்டைத் தமிழரின் பண்பாடு வரலாற்றில் ஓர் இன்றி யமையாத இடத்தைப் பெறுவது.

**சாதி :**

**"யாதும் ஊரே யாவரும் கேளீர்"** எனக் கூறிய கணியன் பூங்குன்றனாரின் பழம் பாட்டிம் பண்டைத்தமிழரின் வாழ்வியலைக் காட்டும் நிலத்தின் அடிப்படையில் அமைந்த ஒன்றே மக்கட்பிரிவு. குறவர், ஆயர், உழவர், பரதவர், கள்வர் முதலிய பெயரில் அந் நிலங்களின் அடிப்படையில் தமிழன் தன்னைப் பகுத்துக் கொண்டான். பிறப்பெடுக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுண்மையான் என வள்ளுவன் வகுத்த இலக்கணமும் பண்டைத் தமிழனின் வாழ்வியலினின்று பிறந்ததேயாகும். ஆதலின் சாதியில்லாத சமயம் இல்லாத ஓர் உயர்ந்த பண்பாட்டோடு வாழ்ந்தவன் பண்டைத்தமிழன் என்பது போதரும்.

**மக்கள் :**

**ஒல்குபசி உழந்த ஒடுகுநண் மருங்குல்**
**வளைக்கை திணைமகள் வல்லுதிர் குறைந்த**
**குப்பைவேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து**
**இரும்பே நொக்கலோடு ஒருங்குடன் மியையும்**

என வருவன போன்ற அடிகள் வறுமையுற்ற தமிழனைக் காட்டிலும் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சமுதாயத்தினை அப்படியே எடுத்துக் காட்டா என்பதை

**"அரவுரியன்ன அறுவை - (பெருநர்)**
**ஆவியனை அவிர் நூல் கலிங்கம் - (பெரும்பான்)**
**சோறுவாக்கிய கொழுங்கஞ்சி**
**ஆறுபோலப் பரந்தொழுகி "** (பட்டினப்பாலை)

எனவரும் அடிகள் நன்கு விளக்கும்

இங்ஙனம் வளமைக்கிடையே வறுமையும் குடி கொண்ட நாட்டின் ஆடல், பாடல், கூத்து, முதலிய கவின்கலைகளும் ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகளுக்கும் குறைவில்லை. சங்க இலக்கியத்தில் நிறைந்துள் கூத்தர், விறலியர், பாடினி முதலியோர் பற்றிய பாடல்கள் இதற்கு தக்க சான்று பகரும்

இவற்றோடு மட்டுமல்லாமல் கட்டடக்கலையிலும் தமிழர் சிறந்து விளங்கினர் என்பதற்கு ஒரு சான்றாக சேரன் தம்பி தந்த சிலப்பதிகாரத்தை அரங்கேற்றும் காதையில் வரும் விளக்கத்தை காட்டலாம்.

**"விழவின் கோடியர் நீர்மை போல முறை முறை ஆடுநர் கழியும் இவ்வுலகத்து"**

என உலகை நாடக அரங்காகக் கூறும் அரிய தத்துவக் கலையிலும் பண்டே சிறந்து விளங்கினர் தமிழர்.

**"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பில்**
**வலவன் ஏவா வான ஊர்தியைப்**
**படைக்கும் அளவிற்கு அறிவியல் கலையில்**
**ஆழ்ந்த புலமை பெற்றிருந்தனர்**
**"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்**
**பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**
**வளிதிரி தருதிசையும்**
**வறிது நிலை இய காயமும் என்றிவை**
**சென்றாந் தறிந்தோர் போல"**

விண்வெளியைப் பற்றிய விரிந்த அறிவு கொண்டிருந்தனர் என்பது அறிவர் தம் விண்ணியல் கலை (வானசாஸ்திரம்) அறிவைக் காட்டும்.

இவ்வண்ணம் அனைத்துத் திறமையும் பெற்றுத் தமிழன் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னர் மிக உயர்ந்த பண்பாட்டோடு வாழ்ந்தான் என்னும் உண்மையை ஏறக்குறைய அதே காலத்தில் உலகின் வேறு பகுதியில் வாழ்ந்த மனிதரின் நாகரிகம் முதலியவற்றில் பெற்றிருந்த வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பண்டைத்தமிழரின் பண்பாட்டு அருமையும் பெருமையும் தெற்றென விளங்கும். இன்று எம் தமிழர் பண்பாடு பற்றி நோக்கின் வெறும் மண்மேடாகப் போய் விட்டதே என அச்சம் கொள்ள வைக்கின்றது எனக் கூறலாம். ஏனெனில் எமது மக்களிடையே இருந்த ஒற்றுமை, கூட்டுறவு வாழ்வு, விட்டுக் கொடுப்பு, சகிப்புத்தன்மை, முதியோரைப், பெரியோரை மதிக்கும் தன்மை, தானதர்மம் செய்தல் போன்ற பண்புகள் சிதைந்து போய் விட்டது. இதற்குக் காரணம் இன்றைய மக்களினதும், இளைஞர், யுவதிகளதும் தவறான பழக்க வழக்கமும், வெளிநாட்டு மோகமும் அவர்கள் வாழும் சூழலும், தமிழர் பண்பாடு என்ற சொல்லையே தலைகீழாகப் புரட்டி விட்டது.

எமது இன்றைய யுவதி, இளைஞர்கள், சிறுவர்களின் வாழ்க்கையின் நோக்கமின்றி எங்கு பயணிக்கிறோம் என்று தெரியாமல் இருக்கிறோம். இதற்கு விடையு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை, விளக்கமுமில்லையென்று தவிக்கி றோம். தமிழர்கள் நாம் எமது பண்பாடு பற்றி எள்ளளவும் சிந்திக்காது இருக்கின் றோம் என்றே கூற வேண்டும்.

"பண்பாட்டையன்றோ
பாடையிலேற்றி
மண்மேட்டில் எரித்த
மாபெரும் மனிதர்கள் - இன்று
மண்ணுலகில் வாழ்கிறோம்
மனிதர் என்ற பெயரோடு"

எனவே இன்றைய காலத்தின் தேவையும், சமூகத்தின் தேவையும், ஒவ்வொரு தமிழனது கடமையும் முன்னோர் வாழ்ந்து காட்டிய பண்பாடு, கலாசாரம், விழுமியம் என அனைத்தையும் பின்பற்றவும், பேணிப் பாதுகாக்கவும் அடுத்த சந்ததியினருக்குக் கையளிக்க வேண்டிய கடமையும் எமக்கு உண்டு எனக் கூறலாம். மேலும் எமது வாழ்வு ஒளிமயமாக அமையவும், எமது சந்ததி ஆரோக்கியமாக வளரவும் எமது பண்பாட்டை நாம் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறின் மிகையாகாது.

உசாத்துணை நூல்கள்

1) சங்க இலக்கியங்கள்
(எட்டுத்தொகை ,பத்துப் பாட்டு)
2) திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்து போகும் மரபுவழி மரணச் சடங்கு

**கலாபூஷணம் மா.சீவரத்தினம்**
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

மனிதன் பிறந்து வாழ்ந்து இறப்பது நியதி. வாழும்போது; நான் சமூகத்திற்கு எதை செய்தேன்? செய்கிறேன் என்ற கேள்வியோடு தான் வாழ்வது முறை. மனிதன் இறந்த பின் நாம் அவனது உடலுக்கு என்ன செய்கிறோம் என்பது கேள்வி. மனிதன் இறக்கும் போது உயிர் அவனை விட்டுப் பிரியப் போகிறது என்கி றநிலை வரும்போது உற்றார், உறவினர் கூட இருந்து அவனது ஜீவன் (ஆத்மா) நல்ல நிலையில் போய் இறைவனடி சேரவேண்டும் என்ற தியானத்தில் (சிந்தனையில்) இருப்போரும், இறைநாமத்தை உச்சரித்தும் (தேவாரம் முதலியவற்றை) சிலர் கவலையில் கண்ணீர் சிந்தியும் அவர் இறக்கும் நேரத்தில் மனிதராகிய நாம் இருப்பது இயல்பு. இறந்த பின்பு அவரது உடலைத் தூய்மைப்படுத்தி நல்ல ஆடை அணிவித்து அவரை ஒரு கட்டிலில் தெற்கு புறமாக தலை வைத்துக் கிடத்தி விட்டி, தலைமாட்டில் குத்துவிளக்கை எரிய விட்டு, நீர் நிறைந்த வாளியைக் கட்டிலின் கீழ் வைத்து உற்றார், உறவினருக்குச் செய்தி சொல்லியனுப்பி இழவு வீட்டை நடத்துவார் கள். இழவு வீட்டிற்கு வருபவர்கள் அவ்வீட்டுப் படலைக்குள் வரும்போதே கூக்குரலிட்டு, கதறியழுது கவலையைப் தீர்ப்பவர்களும், இறந்த மனிதனின் உடலைப் பார்வையிட்டு பெண்கள் கூடியி ருந்து வட்டமாகத் தம் அருகில் இருப்பவரது தோளில் இரு கைகளையும் போட்டு எல்லோரும் ஒருமித்துக் கூடி அழுது கவலையைப் போக்குவார்கள். அப்படித் தோளில் கைபோட்டுக் கட்டியணைத்து அழவில்லையாகில் அவ்வீட்டாரிடம் தமக்குத் தரவேண்டிய கௌரவத்தைத் தரவில்லை தம்மை மதிக்கவில்லையெனக் கூறியது கூட அன்றைய கால கட்டத்தில் இருந்தது.

ஒரு சிலர் ஒப்பாரி வைப்பார்கள். சிலர் ஒப்பாரி வைக்கும் போது இழவு வீட்டிற்கு வந்து இருப்பவர்களது இதயமே கலங்கும் அளவிற்கு அவரது ஒப்பாரி கண் கலங்க வைக்கும். ஒப்பாரியில் இறந்தவர் உயிருடன் இருந்த காலத்தில் அவர் செய்த நல்ல காரியங்கள், அவரால் சாதிக்கப்பட்ட சாதனைகள் போன்றவற்றைச் சொல்லி ஒப்பாரி வைப்பார்கள்.

சிலர் தமது குடும்பத்தில் கடந்த காலங்களில் நிகழ்ந்த இழப்புக்களை நினைத்துத் தனிமையில் ஒப்புச் சொல்லி அழுவார்கள்.(அதாவது இந்த இழப்பிற்கு எனது வீட்டில் நடந்த இழப்பு சமனானது) இதன் போது இழவு வீட்டிற்கு வந்தவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பேருக்கு ஒப்புச் சொல்லி அழுதவரது வீட்டில் நடந்த இழப்பு அன்று தான் தெரியவருகின்றது. அதன்போது இழப்பு வீட்டிற்கு வந்தவர்களும், ஒப்புச் சொல்லி அழுபவரது வீட்டில் நடந்த இழப்பை கவலையோடு பரிமாறுவதை கடந்த காலங்களில் காணக்கூடியதாக இருந்தது.

இழவு வீட்டில் கிரியைகள் நடக்கும் போது, கணவன் இறந்தால் மனைவி கிரியைகளின் போது தாலியைக் கழற்றி கணவன்(இறந்த) நெஞ்சில் வைப்பார். அப் போது உறவினர்கள் தாரமும் தவறியதடி, உன் தாலியும் தவறுதடி தரணியில் நீ என்ன செய்வாய்? என ஒப்பாரி சொல்லி அழும் போது சமூகம் கொடுத்தவர்களது இதயமே கரைந்து போகும் அப்போது.

குளிப்பாட்டும் போது எண்ணெய், அரப்பு, எலுமிச்சம் காய் இறந்தவரது தலையில் வைத்து நீரூற்றி உற்றார், உறவினர் தம் கடமையை செலுத்துவார். இறந்த கணவனின் மனைவி அதைத்தாம் ŋ ŀF · D ヅテVm **“என்னவரே நீர் எண்ணெய் தேய்த்து அரப்பு எலுமிச்சங்காய் வைத்து நீராடி வந்து நிற்கும் போது உன்னைப் பார்க்க என் விழிகளும் போதாதே என்று ஏங்கிய நான் இன்று உமக்கு எண்ணெய் தடவி அரப்பு, எலுமிச்சங்காய் தேய்த்துக் குளிப்பாட்டி வழியனுப்புகிறேன்”** என வாய்விட்டுக் கதறும் காட்சியும் என் தலையில் பூவைத்து அழகு பார்த்த உனக்கு உன் காலடியில் பூ வைத்து உன்னை வழியனுப்புகிறேன். என கதறியழுது கலங்கும் காட்சியும்(கடந்த காலங்களில்) கண்ணெதிரே தோன்றுகிறது.

பெட்டியில் உடலை வைத்து மூடிப் பாடையில் வைத்துத் தூக்கி வாசலில் உற்றார், உறவினர் (பெண்கள்) பாடையை 3 முறை சுற்றி வந்து நெஞ்சினிலே (தமது மார்பில்) இரு கைகளாலும் அடித்து (மாரடித்து) ஒப்பாரி வைத்து வழியனுப்பும் காட்சி இன்றும் எம் கண்முன்னே நிற்கிறது. ஆனால் இன்று அவற்றைக் காண்பது அரிதிலும் அரிது.

இன்றைய விஞ்ஞான உலகில் மார்பில் அடித்து அழுவது சிறந்தது என்று கூறுகிறார்கள். ஏனெனில் கவலையில் இதயம் உறைந்து இருக்கும் போது மார்பில் அடித்து அழும் போது இதயம் மீண்டும் துடிக்க ஆரம்பித்து உடலை இயங்க வைக்கிறது. ஆனால் அன்றைய மனிதன் இதை சம்பிரதாய பூர்வமாகக் கருதினான். துக்கம் தொண்டையை அடைக்கிறது என்கிறபோது வாய்விட்டு அழுவதால் மனதில் உள்ள கவலை சிறிது சிறிதாக விலகுகிறது. ஆனால் இன்றைய காலத்தில் இவை நடைமுறையில் இருக்கிறதா?

அன்று பாடை என்பது இல்லை. பன்னாங்கில் தான் உடலைக் கிடத்துவார்கள். பன்னாங்கு என்பது தென்னை ஓலையில் (பச்சை) பின்னி கமுகமரம் தறித்து அதை சிலாகைகள் ஆக்கி அதில் பாடை கட்டி மேற்பகுதியை சிறு சிலாகைகள் கொண்டு வளைத்து (வில்போல்) அதற்கு பூக்களால் சோடித்து அதில் பிரேதத்தை வைத்துத் தூக்கிச் செல்வார்கள். கூடுதலாக வயது வந்த பேரப்பிள்ளைகள் தவறாது பாடையைத் தூக்குவார்கள். அவர்களோடு உறவினர்களும் சேர்ந்து தூக்குவார்கள். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடை மருவிப்போய் செயற்கைப் பாடை வந்து அதன் பின்பு தற்போது வாகனத்தில் (அமரர் ஊர்த்தி) கொண்டு செல்லும் நவநாகரிக முறை வந்துள்ளது. இது உற்றார், உறவினர் போதாமையும் வருபவர்களது வேலைப்பழு காரணமாக வும் நடைபெறுகிறது. இறந்தவரது உடலில் நெஞ்சாங்கட்டை வைத்துத்தான் பிரேதத் திற்குத் தீயிடுவார்கள். இந்த நெஞ்சாங் கட்டை அவரது வளவில் அவரால் நாட்டப் பட்ட மரம் ஒன்றைத் தறித்து அம் மரக் குத்தியையே நெஞ்சாங்கட்டையாக அன்று வைத்தவர்கள் இன்று விறகு காலையில் வாங்கி மரக்குத்திகளையே நெஞ்சில் வைக்கிறார்கள். பிரேதம் தூக்கியவுடன் வழமையாகப் போன பாதையிலிருந்து வேறு பாதையூடாக (வேலியை வெட்டி) பிரேதத்தை வெளியே கொண்டு போவார்கள். இன்று அவை நாகரிகத்தால் மருவிப் போகிறது.

அன்று பிரேதம் வெளியே போனவு டன் வீடுகள் யாவும் கழுவித் துப்பரவு செய்து முற்றமெல்லாம் கூட்டி யாவும் அப்புறப்படுத்துவார்கள். ஆனால் இன்று வீடு கழுவுவது குறைந்து போய் விட்டது. அதற்குப் பதிலாக வீட்டை மொப் பண்ணு கிறார்கள்.

சுடலைக்குச் சென்று பிரேதத்திற்குத் தீமூட்டியதும் சென்றவர்களுக்கு வீட்டில் உரிமைக் கஞ்சியை வந்து குடிக்கும்படியும் இந்நாள் செலவு செய்யப்படும் அன்றைய தினம் வந்து செலவுச் சாப்பாட்டில் கலந்து கொள்ளும் படியும் சுடலையில் வைத்து இறந்தவரது இரத்த உறவினரால் கூறப் பட்டது. அன்றைய காலத்தில் பிரேதம் சுடலைக்குப் புறப்பட்டதும் உரிமைக் கஞ்சி வீட்டைக் கழுவித் துப்பரவு செய்ததும் வீட்டின் அடுக்களையில் சமைக்கப்படும் முதல் சாப்பாடு இது தான். கஞ்சி காய்ச்சும் போது ஏற்படும் புகை வீட்டின் நாலாபுறமும் போகும் போது இறந்தவரது உடலில் இருந்த கிருமிகளும் இந்த புகையால் வெளியேறி விடும். இறந்தவரது வீட்டில் செலவு செய்வது வழக்கம். ஆனால் இச்செலவு என்பது இறந்தவர் உயிரோடு இருக்கும்போது அவர் உண்ட உணவுகளை அவருக்காகப் படைப்பது போன்றதொரு இதிகாசம். இச்செலவுப் படையல் அன்று மாலைப் பொழுதில் தான் செய்தார்கள். கிட்டத்தட்ட ஊர் அமைதியடையும் நேரம். ஆனால் இன்று அது மதியமே செய்யப்படுகின்றது. ஏனெனில் அன்று செலவுச் சாப்பாடு இறந்தவரது துடக்கு(31நாள்) காப்பவர்கள் தான் இந்தச் செலவுச் சாப்பாட்டினைச் சாப்பிடுவார்கள். தற்போது அது சகல சுவையையும் கொண்ட சாப்பாடு அதைச் சாப்பிடுவதால் என்ன ஒரு மூன்று நாள் கழிந்தால் எல்லாம் சரியாகிவிடும் எனக் கூறி இப்போ எல்லோரும் மதிய நேர உணவாகவே அதை உண்ணுகிறார்கள்.

உறவினர்கள், தெரிந்தவர்களினால் பட்டினிச் சாப்பாடு என்று சொல்லும் பெட்டிச் சாப்பாடு காலை,மதியம், மாலை என ஒவ்வொருவரும் கொண்டு வந்து இறந்தவரது வீட்டில் உள்ளோரிடம் கொடுத்து தைப் படைத்தபின் எல்லோரும் அதை உண்பார்கள். ஆனால் அன்று அவர்க ளால் கொண்டு வந்த பெட்டி (ஓலைப் பெட்டி) திருப்பிக் கொடுக்கமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கொண்டு வந்தவர்களும் பெட்டியை வாங்க மாட்டார்கள்). இப் பெட்டி இறந்தவரது அந்தியேட்டி அன்று தான் உரியவரிடம் போய்ச்சேரும். அதாவது அப்பெட்டியில் அந்தியேட்டிச் சாப்பாட்டை அப்பெட்டியில் கட்டி அவர்களிடம் இருகரத்தாலும் தூக்கிக் முகமலர்வோடு கொடுப்பார்கள். அவர்களும் இன்முகத்தோடு அதை வாங்கிச் செல்வார்கள். அந்தக் காலகட்டத்தில் நடந்த உறவுப் பிணைப்பு. ஆனால் இவை இன்று நடக்கிறதா??!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம் சுட்டும் இறை - ஆடல் சிறப்பு

**கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா**
**இயக்குனர், 'நாட்டிய கலாகேந்திரம்',**
**உடுவில்.**

**திருவாசகம் எனும் தேன்:-** பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளதும், 51 பாடல் தலைப்புகளில் அமைந்த 658 பாடல்களைக் கொண்டதும், பக்திச் சுவை சொட்டும் தேனினும் இனிய பாடல்களைக் கொண்டதும் ஆகிய பக்தி இலக்கியம் மாணிக்க வாசகர் அருளிய திருவாசகமாகும். இத்தகைய திருவாசகத்தை இராமலிங்க சுவாமிகள் **"நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"** என்கிறார். தாயுமானவர் சுவாமிகள். திருவாசகத்தை **"வேத பாராயணப் பனுவல்"** எனப் போற்றுகின்றார்.இப்பாடல்களில் புறச்சுவையும், அகச்சுவையும் கலந்துள்ளது. மணிவாசகரின் பாடல்களைப் பாடும்போது கருப்பஞ்சாற்றிலே தேனையும் பாலையும் பழங்களின் சுவையையும் கலந்தது போல் இருப்பது நாவின் புறச்சுவை. ஊனும் உயிரும் கலத்தல் அகச்சுவை. அகச்சுவையால் ஆன்மா மேன்மையுறும். **"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்"** என்ற பழமொழி பக்திநெறி இலக்கியத்தில் திருவாசகத்தின் சிறப்பைப் புடம் போட்டுக் காட்டுகின்றது.

இத்துணை சிறப்பு வாய்ந்த திருவாசகத்தில் ஆடல் பற்றிய பல குறிப்புக்கள் பரக்கக் காணப்படுகின்றன. இங்கு ஆடல் நட்டம், நடம், கூத்து, நிருத்தம் எனப் பலவாறு சுட்டப்படுகிறது. திருவாசகத்தில் ஆடல் பற்றிய செய்திகளைத் தொகுத்து இறை–ஆடல்–இறையாடல் பிணைப்பினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சிவபுராணம்:-** திருவாசகத்தில் இறைவனது ஆடல் பற்றிய செய்திகள் விதந்தோதப் படுகின்றன. இதனுள் முதலாவதாக அமையும். சிவபுராணத்திலே சிவனைப் பற்றிய பழைய வரலாறு செப்பிடுங்கால் இறைவனது ஆடல் செய்திகளையும் மாணிக்கவாசகர் உரைக்கிறார்.

**"நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே........"**

பதி.பா.அ.89,90 – பக் 623

என இறைவன் நள்ளிருளில் நடனம் ஆடுவதையும் அதனைப் பயின்று ஆடுவதையும் குறிப்பிடுவதன் மூலம் ஆடலானது பயிற்சியின் அடிப்படையிலேயே முழுமை அடைவதையும் குறிப்பதாகக் கருத முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீர்த்தித் திருவகவல்:-** அடியரைக் குடியாய் ஆண்டருளும் சிவனின் திருவருட் புகழ்ச்சி இரண்டாவது பகுதியாகிய கீர்த்தித் திருவகவலில் சொல்லப்படுகின்றது. இங்கு இறைவனின் ஐந்தொழில் நடனத்தை

**"தில்லை மூதூர் ஆடிய திருவடி**
**பல்லுயிரெல்லாம் பயின்றன னாகி**
**எண்ணில் பல் கணும் எழில் பெற விளங்கி**
**மண்ணும் விண்ணும் வானோருலகும்**
**துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்**
**என்னுடை இருளை ஏறத்துரந்தும்"**

ப.தி.பா.01-06.பக்23

என்றவாறு குறித்துக் காட்டுதல் காண்க

**"மன்னுமாமலை மகேந்திர மதனிற்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித் தரளியும்"**

ப.தி.பா.அ09.10பக்623

என்று ஆகமங்களைத் தோற்றுவித்துக் காத்தருளிய கீர்த்தி பற்றியும் குறிப்பிடப் படுகின்றது. ஆதியில் இருந்த ஆகமத்தினை உமையம்மையாருக்கு உபதேசிக்கும் பான்மையாக உலகோருக்கு வெளிப்படுத்தி அருளியுள்ளதாகவும், இவ்வாகம வெளிப் பாடு இதனைக் கேட்போர் யாவரேயெ னினும் ஆர்வமாகக் கேட்க வேண்டும் என்னும் உண்மையுணர்த்தும் ஓர் அழகிய ஆடலாக நிகழ்ந்தது என அறியக் கிடக்கின்றது மேலும்

**"பாதச்சிலம்பொலி காட்டிய பண்பும்"**

ப.தி.-பா.அ.053-பக்.622

**"பாவகம் பல பல காட்டிய பரிசும்"**

ப.தி.-பா.அ.082-பக்.624

**"பாதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்று"**

ப.தி.-பா.அ.0138-பக்.624

**"பொலிதரு புலியூர் பொதுவினில் நடம் நவில்**
**கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு**
**அருளிய திருமுகத்தழகுறு சிறுநகை"**

ப.தி.-பா.அ.141-143-பக்.622

என்ற பாடலடிகள் கூத்தற்பிரான் ஆடற் சிறப்பினை இயம்புகின்றன.

**போற்றித் திருவகவல்:-** இப்பகுதியில் இறைவனுடைய பலதரப்பட்ட புகழ்க ளையும் எடுத்தோதிப் போற்றி செய்த வேளையில்,

**"தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி"**

ப.தி.-பா.அ.092-பக்.627

**"குற்றாலத் தெங்கூத்தா போற்றி"**

ப.தி.-பா.அ.156-பக்.628

**"நீளொளி ஆகிய நிருத்தா போற்றி"**

ப.தி.-பா.அ.202-பக்.629

என வரும் அடிகள் இறை-ஆடல் பிணைப்பினை எடுத்தியம்புகின்றன. தில்லையம்பலத்தில் நடம் பயிலுகின்றவனே குற்றாலத்திலே கூத்தையர்பவனே எனப் போற்றிசெய்து நீளொளியாகிய நிருத்தா எனவும் போற்றி செய்வதனை சற்று ஊன்றிக் கவனத்தில் கொள்க. இதற்கு விரிவுரை செய்கையில் நிருத்தத்தினால் உலகின் நீங்கி நின்ற பேரறிஞர்களுக்கு உலக வேறுபாடுகள் தோன்றாவாய் ஒளியே தோன்றும் என்க. அஃது வேறு வேறு சமயங்களில் எடுக்கப்பட்ட நிழலுரு வப் படங்கள் சுற்றுப் படுகையிலே திரையில் ஒவ்வொன்றின் செயலையும் தொடர்பாகக் காட்டுதல்போல அணுக்களும் முக்குணங் களும் செறிந்து உலகமும், உலகத்துத் தலங்களும், ஒழுக்க முறைகளும், பிறவும் இறைவன் நடனத்தினால் தொடர்புற்று நிகழ்ந்து வருகின்றன. (திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை - பக்.238)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கழுதொடு காட்டிடை நாடகமாடிக் கதியிலியாய"**

ப.தி.-பா.அ.11-பக்.630

**"நாடகத்தா லுன்னடியார் போல்நடித்து நானடுவே"**

ப.தி.-பா.அ.15-பக்.630

**"கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு வானாகி"**

ப.தி.-பா.அ.19-பக்.630

**"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை"**

ப.தி.-பா.அ.035-பக்.631

**"கோல மேயனை ஆட்கொண்ட கூத்தனே"**

ப.தி.-பா.அ.47-பக்.632

**"தம்பிரான் போற்றி தில்லை நிருத்தனே போற்றி"**

ப.தி.-பா.அ.65-பக்.634

இங்கு இறைவனை கூத்தனே, கூத்தாட்டு பவனே, நிருத்தனே, நாடகமாடி என்றவா றெல்லாம் விழித்து சிவனை ஆடல் வல்லவ னாகச் சிறப்பித்து அவனது நாட்டியத்தை விதந்தருளியுள்ளார். இவ்வாறு குறிப்பிடும் மாணிக்கவாசகர் இறைவன் ஞானநடனம் ஆடுகின்ற திறத்தை செப்புகின்றார்.

**"ஊனை நாடகம் ஆடுவித்தவா**
**உருகி நான் உனைப் பருக வைத்தவா**
**ஞான நாடகம் ஆடுவித்தவா**
**நைய வையகத்துடைய விச்சையே"**

ப.தி.-பா.அ.99-பக்.637

இங்கு மாணிக்கவாசகர் இறைவன் தன்னைக் கொண்டு உடலின் கண் ஒரு கூத்தும் அறிவின் கண் ஒரு கூத்துமாக செய்வித்து கூத்தாட்டுவிப்பதனால் பற்றுக் கெடுவித்து அருளுக என்கிறார். இங்ஙன மாக உடம்பினைப் புளகங் கொண்டு கூத்தா டுதல் -ஊனைக் கொண்டு கூத்தியற்றி உருக்கி நின்னைப் பருகச் செய்தல் ஒன்று உள்ளமுருகி இறைவனை நுகரும் படி ஆடுதல்-அறிவினைக் கொண்டு ஞானக் கூத்தியற்றி பற்றறுத்தல் மற்றையது என்க. பரதநாட்டியத்தின் மிகமுக்கிய இறையின்ப அனுபவ நுகர்வு பற்றிய கருத்தாக இதனைக் கொள்ளலாமல்லவா. நிருத்தமும், நிருத்திய மும் என்பன இணைந்த வர்ணப் பகுதியில் இவ் உன்னத நிலைநோக்கி ஆடல் புரிபவர் திளைக்கலாம் என்பதனை இத்திருச்சதகத் தில் உயிர் அனுபவிக்கும் ஆனந்தத்தைக் கூறும் 8ம்,9ம், 10ம் பதிகங்கட்கு முறையே ஆனந்தத்து அழுந்தல், ஆனந்தாதீதம் என உரைத்த வகையில் ஒப்பு நோக்கலாம்.

பாடுதலும், ஆடுதலும், கூடுதலும், வீடுதலும் ஆகிய இவை இறைவன் அருளினால் தான் முயன்று பெறுதல் வேண்டும் என்பதனை 104வது இறுதிப் பாடலிலே.... திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை – பக்.393

**"பாட வேண்டும்நான் போற்றி நின்னையே**
**பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்கு**
**ஆடவேண்டும்நான் போற்றி அம்பலத்து**
**ஆடும் நின்கழற் போது நாயினேன்**
**கூட வேண்டும் நான் போற்றி இப்புழுக்**
**கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்**
**வீடவேண்டும் நான் போற்றி வீடு தந்து**
**அருளு போற்றி நின் மெய்யர் மெய்யனே"**

ப.தி.-பா.அ.053-பக்.622

**திருவெம்பாவை:-** கன்னிப் பெண்கள் தம் வாழ்வு சிறக்கவும், உத்தம நாயகர்களை யடைந்து இம்மை மறுமை நலன் எய்தவும், மழைபொழிந்து நாடு நலம் பெறவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிப் பாவை நோன்பியற்றிடும் (பண்டைய மார்கழி மாதத்துக் கார்த்தியாயினி தேவி நோன்பு) வழக்கத்தையொற்றி, அடிகளார் திருவருள் மழை பொழியவும் சிவனடியார் உறவு பெருகவும் சிவபதமலர் அருள் வேண்டிப் பாடும் பாடல்களாக திருவெம்பாவை அருளியுள்ளார். இங்கு இறைவனாகிய கூத்தன் தனது தொழில் தனை நிகழ்த்தி சிற்றம்பலத்தே கூத்தாடுகின்றான் என்றவாறு கூத்தின் திறத்தினை எடுத்தியம்பியுள்ளார்.

**"ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்**
**தீர்த்தன் நற் றில்லைச்சிற் றம்பலத்தே**
**தீயாடும் கூத்தனிவ் வானும் குவலயமும்**
**எல்லோமும் காத்தும் படைத்தும் கரந்தும்**
**விளையாடி"** பதி.பா.166பக் 644

என்று இறைவன் ஆற்றும் தொழிலினை அவரது விளையாட்டு என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அவர் சிற்றம்பலத்தே கூத்தினை நிகழ்த்தும் போது எவையெவை அவருடன் இயைந்து ஆடின என்பதனை அழகாக

**"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்**
**கோதை குழலாட வண்டின் குழாமாடச்**
**சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி"**
பதி.பா.168.பக்644

என்றவாறு சித்தரிக்கின்றார்

**திருவம்மானை:- "அம்மானை"** என்பது இசைப்பாட்டோடு அம்மானையாடுதல், மகளிர் பாடியாடும் இவ்வம்மானையை அடிப்படையாகக் கொண்டு பாடிய திருவம்மானையில் **"அனலேந்தி ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்"** பதி.பா.191.பக்646 என இறைவன் தீக்கனலை ஏந்தி ஆடுவதைக் குறிப்பிடுகின்றார். இது ஆனந்தக் களிப்பு என முன்னோர் குறித்தனர்.

**திருப்பொற்சுண்ணம்:-** வாசனைப்பொடி இடிக்கும் பொழுது பாடும் வள்ளைப் பாட்டை அடிப்படையாகக் கொண்டு சித்தம் சிவனோடு ஆடும் வண்ணம் பாடிய இப் பாடல்களை ஆனந்த மனோலயம் என முன்னோர் குறிப்புரைத்தனர். இப்பாடல்கள் மூலம் கருணைக்கடலாகிய இறைவன் கருணையோடு ஆடலை நிகழ்த்துகிறார் என்ற கருத்துப்பட

**"முத்தணி கொங்கைகள் ஆட ஆட**
**மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்**
**சித்தஞ் சிவனோடும் ஆட ஆடச்செங்கயற்**
**கண்பனி ஆட ஆடப்**
**பித்தெம் பிரானோடும் ஆட ஆடப்பிறவி**
**பிறரோடும் ஆட ஆட**
**அத்தன் கருணையொ டாடஆட ஆடற்பொற்**
**சுண்ணம் இடித்து நாமே"** பதி.பா.204பக் 647 என்றும்

**"சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி**
**ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு"**
பதி.பா.205பக் 647

**"மையமர் கண்டனை வானநாடர்**
**மருந்தினை மாணிக்க கூத்தன் தன்னை"**
பதி.பா.206பக் 647

**"பிறப்பறுத்து ஆண்டு கொண்ட கூத்தனை"**
பதி.பா.209பக் 647 என்றும் இறைவனை வியந்து அவனால் ஆட்கொள்ளப்பட்ட பக்குவர் பரவசத்துடன் அவனுக்கு திக்குழுக்காடும் பொருட்டு பொற்சுண்ணம் இடிப்போமாக என்றழைப்பதாக பாடிப் பரவுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருத்தெள்ளேணம்:-** தென்னாதெனா எனும் தாளத்துக்கிசைய ஓசையெழுப்பும் முறத்திலே தெள்ளேணங்கொட்டுதல் துணைக்கொண்டு தன்னை ஆண்டு கொண்ட சிவனைப் பாடிப் பரவுகின்ற வகையில் சிவனோடு அடைவு என முன்னோர் குறிப்புரைத்தனர்.

**"நாள்தோறும் அலம்பார் புனல்தில்லை அம்பலத்தேயாடுகின்ற சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணம்கொட்டாமோ"** பதி.பா.254.பக்650

என்று எல்லா உயிர்களையும் ஐந்தொழிற் படுத்தற்கு நிகழ்த்தும் **"அம்பலத்தாடுதல்"** போது சிலம்பும் சேர்ந்தாடுதலையும் பாடுகின்றார்.

**திருச்சாழல்:-** தடைவிடை முறையில் மகளிர் பாடியாடி விளையாடுதல் சாழல் என்பர். தோழியும் தலைமகளும் தம்முள் விளையாட்டாகக் கைகொட்டி நகைத்துப் பேசுதல் மூலம் சிவனின் காருண்யத்தை வெளிப்படுத்தும் பாங்கில் திருச்சாழல் அமைகின்றது. இச் **"சாழலை"** ப் பல்வரிக் கூத்துள் ஒன்றெனக் கொள்வாரும் உளர் என்பர் அடியார்க்கு நல்லார். (சிலப். அரங். 12.25உரை)

இறைவனது ஆடல் நிகழாது விட்டால் தரணியெல்லாம் யாது நிகழும்? ஆலங்காட்டுள்ளே புகுந்து காளியுடனே ஒரு கால் தூக்கி கூத்து அயர்ந்திலனேல், அசுரனுடைய ஊனகத்துட் புக்க வேலேந்திய காளி தேவிக்கு இவ்வுலகமெல்லாம் உணவாகும் காண் என்றவாறு சிவனுடைய காருண்யம் கீழ்வரும் பாடல் மூலம் சித்தரிக்கப் படுவதனைக் காண்க.

**"தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன் தான் புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம் ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ"**

பதி.பா.268–பக்.651

இப்பாடலின் மூலம் கூத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது.

**"அம்பலத்தே கூத்தாடி அமுது செயப் பலிதிரியும்**
**நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ**
**நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா**
**எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ"** பதி.பா.271–பக்651 என்கிறார்.

**திருப்பூவல்லி:-** பூக்களைக் கொய்வோமெனத் தலைவி தோழியோடு பூக்கொய்து விளையாடும் பூவல்லிப் பாட்டிற்கு ஒப்பானதாகப் பெருமான் பாசமகற்றி ஆட்கொள்ளும் திறத்தைப் பாடுகையில் தில்லையம்பலத்தே ஆடுகின்ற தன்மையே பெரிதும் பேசப்படுகின்றதனையும், சிலம்பு ஒலிக்க ஆடுகின்ற கூத்தைக் காண்பது பேரானந்தம் என்பதனையும் கீழ்வரும் பாடல்வரிகள் புலப்படுத்துகின்றது.

..... **"அணையார் புனல்தில்லை அம்பலத்தே யாடுகின்ற புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ"** பதி.பா.275–பக்.652

.....**"நான்நாடி ஆடி நின்று ஓலமிட நடம்பயிலும் வான்நாடார் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ"** பதி.பா.279–பக்.652

.....**"அணங்கொடு அணி தில்லை அம்பலத்தேயாடுகின்ற குணாங்கூரப் பாடிநாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூவல்லி கொய்யாமோ"** பதி.பா.281– பக்.652

..... **"தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ"** பதி.பா.2885–பக்.652

..... **"தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய் பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ"** பதி.பா.292–பக்.653

**திருவுந்தியார்:-** உந்தி என்பது பல்வரிக் கூத்துக்களுள்ளே ஒன்றென்பது அரங் கேற்று காதையிலே அடியார்க்கு நல்லார் காட்டிய **"சித்துப் பிழுக்கை"** என்னும் மேற் கோட் சூத்திரத்தாலும், இது மகளிர் ஆடற் குரியதென்பது பிங்கலந்தையாலும், பெரியாழ்வார் அருளிச்செய்த **"நந்தன் மதலையைக் காகுத்தனை நவின்று, உந்திபறந்த ஒள்ளிழையார் சொல்"** (3ஆம் பத்து9ம் திருமொழி) என்னுந் திருப்பாசுரத் தாலும்,

**"கொங்கை குலுங்க உந்தீபற"** (பதி.பா.30 5பக்:653) என இந் நூற்பகுதிக்கண் அமைந்த திருப்பாட்டாலும் அறியக்கிடக் கின்றன (திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை – பக்668)

அதாவது, இது மகளிர் விளையாடும் உந்திப்பறத்தல் என்ற வெற்றிச்செயல்களை எடுத்துரைத்தற்கேற்ற ஓர் ஆடல் வடிவத்தின் துணைக்கொண்டு பாடப்பெற்றது என்பர். இங்கும், உந்திப்பறத்தல் என்ற ஆடல்வகை இறைபக்தி வெளிப்பாடாக இறைவனின் வீரவெற்றிச் செயல்களின் குறியீட்டு வடிவ மாக ஞானவெற்றி அடைதல் என்ற தத்துவக் கருத்தினை செப்பும் கண்ணாடிபோல் அமைந்துள்ளதனை திருவுந்தியாரில் காண லாம்.

**திருத்தோணாக்கம்:-(திருத்தோள் நோக்கம்)** இது இழிந்த மகளிராய், கூத்தியர், தம் வேந்தன் அடைந்த வெற்றித்திறனை அவன் முன்னர் நகைச்சுவை தோன்றக் கை வீசித் தமது காதலைப் புலப்படுத்தியாடும் ஆட்ட மாகும். பல்வகைக் கூத்தினுள் ஒன்றாகிய விநோதக் கூத்தின் பகுதிகளில் **"நோக்கு"** என்பதும் ஒன்று. எனவே மகளிர் தோள் நோக்கிப் பொத்திய கையினைக் கொட்டி வீசி ஆடும் கூத்து தோள் நோக்கம் எனலாம். **"எழு வகைக் கூத்தும் இழிகுலத்தோரை ஆட வகுத்தனன் அகத்தியன் றானே"** (சிலப். 3.12 மேற்) என்பதனால் அறிக.

விநோதக் கூத்தானது பல்வகைக் கூத்தி னுள்ளே ஒன்றாதலை **"பல்வகைக் கூத்தி னைப் பகருங்காலை வென்றிலசையே விநோதமும் ஆகும்"** (சிலப்.3.12மேற்) என்பதனால் அறிக. விநோதக் கூத்துள் இதுவுமொன்றாதலை,

**"பரவிய சாந்தி அன்றியும் பரதம்**
**விரவிய விநோதம் விரிக்குங்காலை**
**குரவை கலிநடங் குடக் கூத்து ஒன்றிய**
**கரணம் நோக்குத் தோற்பாவைக் கூத்து**
**என்றிவை ஆறும் நகைத்திறச் சுவையும்**
**வென்றிசையும் விநோதக்கூத்து என இசைப்ப"** (சிலப்.6:54,55 மேற்கோள்)

என்பதனால் அறிந்து கொள்க (திருவாசகம் ஆராய்ச்சிப்பேருரை பக்–696–697)

இஃது தலைவியர் தலைவரைக் கூடும் வண்ணம் ஆடும் ஆடல் போல்வதால் இதனைத் துணைக் கொண்டு மாணிக்க வாசகர் அம்பலக்கூத்தனின் சேவடி கூடும் வண்ணம் பாடினார் என்க.

...... **"தீர்த்தாய் திகழ் தில்லை அம்பலத்தே திருநடஞ் செய் கூத்தா உன் சேவடி கூடும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வண்ணம் தோணோக்கம்"**
-பதி.பா.315-பக்654
**"ஆனந்தக் கூத்தன் அருள்பெறில் நாம் அவ்வணமே ஆனந்தமாகி நின் றாடாமோ தோணோக்கம்"** பதி.பா.322 பக்.654

**திருப்பொன்னூசல்:-** இளமகளிர் ஊசலில் (ஊஞ்சல்) பாடியாடும் வகை துணைக் கொண்டு தெய்வச் சிறப்பைக் கொண்ட பொன்னாலாகிய ஊசல்வரியைப் பொரு ளாகக் கொண்டு பாடியாடுதலாக அடிகளார்,
**"கோணார் பிறைச்சென்னிக்கூத்தன் குணம் பரவிப் பூண் ஆர் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ"** பதி.பா.334 பக்.655 என்றும்,
அவன் ஆடும் சிறப்பினை,
**"மாது ஆடு பாகத்தன்உத்தர கோசமங்கைத் தாதுஆடு கொன்றைச் சடையான் அடியாருள் கோதாட்டி நாயேனை ஆட்கொண்டுஎன் தொல்பிறவித்தீதுஓடாவண்ணம் திகழப் பிறப்பு அறுப்பான் காதுஆடு குண்டலங்கள் பாடிக் கசிந்து அன்பால் போது ஆடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ"**
பதி.பா.334 பக்.655 என்றும் வர்ணிக் கிறார்.

**திருப்பள்ளியெழுச்சி:-** திருப்பெருந்துறையில் அருளிய இத்திருப்பதிகம் திரோதானசுத்தி என்ற வகையில் திருவருட்சக்தியாய் குருபர னென்று வெளிப்பட்டு அருள் செய்த திறம் உயிரோசையாய் இசைக்கப்படுகின்றது. பள்ளியெழுந்தருள்வாய் என்று புலவர்கள் கீழ்க் குறிப்பிட்டவாறு கீதங்கள் பாடுதலும் ஆடுதலும் செய்வதனைக் குறிப்பிடுவதிலி ருந்து அன்றைய காலப்பகுதியில் இறை பக்தி வெளிப்பாட்டில் ஆடல் வகித்த முக்கிய வகிபாகம் புலப்படுகிறது எனலாம்.

**"போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர் கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்"** பதி.பா.372-பக்.658

**கோயில் மூத்த திருப்பதிகம்:-** தில்லையில் அருளிய இத்திருப்பதிகங்கள் பொன்னம் பலத்தில் ஆடும் கூத்தினை விதந்து போற்று மாற்றை அதன் கீழ்வரும் ஒவ்வொரு பாடல் வரிகளிலும் காணக் கூடியதாகவுள் ளது. அவை வருமாறு - பொன்னம் பலத்தெம் முடியா முதலே பொன்னம்பலக் கூத்து கந்தானே பொன்னம்பலத்தெம் முழு முதலே பொன்னம்பலத்தரசே பொன்னம் பலத்தாடும் அமுதே பொன்னம்பலத்தாடும் எந்தாய், அம்பலக்கூத்தன் என்றென்று பொன்னே பொன்னம்பலக்கூத்தா, பொன் னம்பலத்தாடும் தலைவா, பொன்னம்பல மென்றே ஒல்கா நிற்கும் என்பதாகும்.
(பன் திரு-பக் 658-659)

பின்னர் வருகின்ற ஆசைப்பத்து, அதிசயப் பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, அச்சப்பத்து, திருப்பலம்பல், குலாப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, திருப்படையாட்சி என்ற சாத்விக பாவத்திற் குரிய பாடல்களாக அமைந்த பதிகங்களில் சிவனை விளித்தும் அவன் கூத்தினை வியந்தும் ஆடல் சார்ந்த பாடல்வரிகள் காணப்படுகின்றன. அவை கீழ்வருமாறு
**"கோவே கூத்தா இரவு நின்றெரி யாடிய எம்மிறை எரிசடை நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச் தில்லைவாழ் கூத்தா. நிருத்தனே. நிமலா. நீற்றனே. பொலிந்த அம்பலத் துளாடும். குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா உன் குரை கழற்கே. ஆடுங் குலாத்தில்லை ஆண்டானை. தில்லை மூதூர் நடஞ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்வான், ஆனந்தக் கூத்தன், பண்களி கூர்தரு பாடலொடாடல் பயின்றிடு மாகாதே, தேவே தில்லை நடமாடீ எனப் பலவாறாகச் சிறப்பிக்கப்படுகின்றது. "**

–பன்திரு.பா.420, 432, 445, 451, 459, 522, 558, 559, 582,591, 635, 648 பக்.663,664,665,666,667,673,676,678, 679, 682, 684

இறுதியாக வரும் அச்சோப்பதிகத்தில்,

**"குறியொன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தையெனக் கறியும் வண்ணம் அருளிய வா றார் பெறுவார் அச்சோவே"**

பதி.பா.651–பக்684

என இறைகூத்தின் தத்துவத்தையும் பக்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்து சிவமாக்கி ஆண்டருளிய பேற்றையும் மாணிக்க வாசகர் திருவாசகத்தின் மூலம் உணர்த்து கிறார்.

நிறைவுரை: மாணிக்கவாசகர் அருளிய திருவாசகப் பாடல்களை ஆய்ந்து தொகுத்தறிந்த ஆடல் பற்றிய தகவல்களாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

★ அவர் காலத்தில், தென்நாட்டிலே குறிப் பாக பாண்டிநாட்டிலே ஆடற்கலை சைவர்களின் சிவதத்துவ விளக்கமா கவும், கூத்து என்ற பெயரினையே பெரிதும் தாங்கி இறை கூத்தினை அனுபவித்தறிந்து சிவமாகும் பேற் றினை அடையவல்ல தெய்வீக ஆடலா கவும் விளங்கியது.

★ இக்கூத்து சிறப்பாக தில்லையம்பலத்தில் தான் பேசப்படுகின்றது. குற்றாலம், பெருந்துறைக் கூத்துக்களும் குறிப்பிடப் படுகின் றன.

★ கூத்து, நடம், நட்டம், நிருத்தம், நாடகம் என்ற சொற்கள் ஆடலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொற்களாகும்.

★ ஆடல் புரிவதனை கூத்தயர்தல், நடஞ் செய்தல், நடம் நவில்தல், நட்டம் பயின் றாடுதல், கூத்தாட்டுதல், நாடகம் ஆடுதல், நடித்தல் எனக் குறித்துள்ளார்.

★ கூத்தன், நிருத்தன், நாடகமாடீ, கூத்தாட் டுவான் என்றெல்லாம் சிவன் ஆடல் வல்லவனாகப் போற்றப்படுகின் றான்.

★ திருவாசக இசைப்பா நாடகப்பாணியில் அமைந்த பாடல்கள், மகளிர் விளையாட் டுடன் இணைந்த கூத்துகளிற்கான பாடல்கள், என்ற வகையில் அமைந்தி ருக்கிறது. இவை அக்காலத்தில் ஆடல் சிறப்புற்று உன்னத நிலையில் இருந்த மைக்கான சான்றுகள் எனலாம்.

★ திருவாசகப் பாடல்கள் நாயக நாயகி பாவம் கொண்டமைந்த நடன வடிவங்க ளுக்கு மிகவும் பொருத்தமானவை.

★ அன்றைய காலத்து நாட்டுப்புற கூத்து வகைகளும் செம்மைப்படுத்தப் பெற்ற நடனமும் பக்தி இயக்கம் என்ற சைவ மீட்டுருவாக்க முயற்சியில் இறைஆடல் என்ற உயர் பண்பினில் ஒன்றிணைந் தன.

★ இறை–சிவன் சைவர்களின் முழுமுதற் கடவுள் கூத்து என்ற ஆடற்கலையின் பிரானாக ஆடல் வல்லானாக விதந்து ரைக்கப் பட்டான். சைவர்களின் சித்தாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமான சைவசித்தாந்தக் கருத்துக்களை இறை–ஆடல்–இறையாடல் என்ற வகையில் ஒன்றிணைத்து பேரானந்தக் கூத்தாக அநுபூதிமான்கள் அனுபவித்தார்கள். மாணிக்கவாசகர் காலத்தில் ஆடற்கலையும் பக்திநெறியும் ஒன்றினுள் ஒன்று இணைந்தும் பிணைந்தும் சிவ சிந்தனை வயப்பட்டு செழித்துச் செம்மையுற்றன.


உசாத்துணை நூல்கள்

1) பன்னிருதிருமுறை, பதிப்பாசிரியர்: முனைவர் ச.வே.சுப்பிரமணியன்

2) திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை, உரையாசிரியர்: க.சு.நவநீத கிருஸ்ணபாரதி

3) மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகம், வெளியீடு: சிவதொண்டன்சபை, யாழ்ப்பாணம் 2006





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடல் காஸ்ரோ எனும் மாமனிதன் வரலாறு பற்றிய பார்வை

**கார்த்திகேசன் சசிகரன்** MA.in Develepment Studies,
அபிவிருத்தி உதவியாளர், பிரதேச செயலகம்,
வலி.தெற்கு, உடுவில்.

## அறிமுகம்

சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் ஆத்மீக சிந்தனைகள் மனிதனது இயங்கியல் வாழ்க்கையில் பல்வேறுபட்ட மாற்றங்களினை ஏற்படுத்துகின்றன. அடிமட்டத்தில் தனது அன்றாட வாழ்வியலுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து அவர்களை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்பவர்கள் மனித குலத்தில் என்றென்றும் மறக்கப்படாதவர்களாக வாழ்ந்து வருகின்றனர். தூரநோக்குடைய கொள்கைகள் இலட்சியங்களைக் கொண்ட உத்வேக மனிதன் தலைவனாக மதிக்கப்படுகிறான். அவனது வாழ்க்கை அனைவருக்கும் படிப்பினையாக விளங்குகின்றது. அந்நோக்கில் 21ம் நூற்றாண்டில் காஸ்ரோ எனும் மாமனிதனது வாழ்க்கையும் நாமனைவரும் திரும்பிப் பார்க்க வேண்டியதொன்றாகக் காணப்படுகின்றது.

## காஸ்ரோவின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்

கியூபாவின் பிரான் கொல்குயின் மாகாணத்திற்கு அருகில் உள்ள கரும்புத் தோட்டத்தில் 13.08.1926ம் ஆண்டு காஸ்ரோ பிறந்தார். இவரது தந்தை ஏஞ்சல் ரஸ் காஸ்ரோ, தாயார் லினா ரூஸ் கொன்ஸ்குலிஸ். இளமையில் தாய் தந்தையர் இட்ட பெயர் பிடல் அய்ஜாந்திரோ காஸ்ரோ என்பதாகும். தந்தை ஒரு செல்வந்த ஸ்பானிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். தாய் ஹவனா வினைச் சேர்ந்த ஏழைக் குடும்பத்தவர். குடும்பத்தில் மூத்த பிள்ளை காஸ்ரோ அத்துடன் ரவுஸ், ரமென்,யுனிரா ஆகியோர் உடன் பிறந்தவர்களாவர்.

1930களில் கியூப பொருளாதார நெருக்கடி காரணமாக ஐந்து வயதில் காஸ்ரோ, ஏஞ்சலின் குடும்ப நண்பரான ஆசிரியர் ஒருவரிடம் கல்வி பயின்றார். 1941ல் பெலர் கல்லூரியில் கற்றார். 1945ல் ஹவானா பல்கலைக் கழகத்தில் சட்டப் படிப்பை முடித்து சட்டத்தரணியாக பணியாற்றி வந்தார். பிர்த்தா டயசுபாலர்ட் (1948–1955) என்பவர் இவரது மூத்த மனைவியாவார். அவர் இறந்தபின் 1980ல் தனிலியா சொட்டோ டெல்வால் என்பவரை மணந்தார். இவருக்கு 7 ஆண்பிள்ளைகள், 2பெண் பிள்ளைகள் உட்பட 9 பிள்ளைகள். காஸ்ரோவினது குடும்பம் ஹவானாவிலுள்ள சந்தியா கோடேயில் வசித்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹவானாவிலுள்ள பல்கலைக் கழகத்தில் கற்கும்போது கஸ்ரோவிற்கு பொதுவுடமைக் கொள்கை மீது பற்று ஏற்பட்டது. அந்தப் பற்றே பிற்காலத்தில் அவரை விடிவெள்ளியாக மாற்றிற்று. கியூபாவின் 16வது ஜனாதிபதியான புல்ஜென்சியோ–பாட்டிஸ்டாவின் ஆட்சிக்கு எதிராக காஸ்ரோ புரட்சி செய்தான். அமெரிக்க ஸ்பானிய யுத்தம் முடிவுக்கு வந்ததும் அமெரிக்காவின் கைப்பொம்மை ஆட்சியில் கியூபா வளங்கள் சுரண்டப் பட்டன. அதனைப் பொறுக்க முடியாத காஸ்ரோவும் அவனது தோழர்களும் 1953 யூலை 26 அன்று முதன்முதலாக மென் காடத் இராணுவ முகாமைத் தாக்க முற் பட்டனர். இரவு நேர சமரில் வண்டிக் கோளாறு காரணமாகவும் இருட்டில் வழி தவறியதாலும் காஸ்ரோ இராணுவத்திடம் மாட்டிக் கொண்டான். நீதிமன்ற விசாரணை யில் **"வரலாறு என்னை விடுதலை செய்யும்"** எனத் தனக்காக வாதாடிய காஸ்ரோ 1959ல் புல் ஜென்சியோ – பாட்டிஸ்டாவின் ஆட்சியை வீழ்த்தி தனது தலைமையில் ஆட்சியினை ஏற்படுத்திக் கொண்டார். 1959–1976 வரை பிரதமராக வும், 1976–2008 வரை ஜனாதிபதியாகவும் பதவி வகித்து 49 ஆண்டுகள் கியூபாவை ஆட்சி செய்து வந்தார். உலக சமத்துவத் தினைத் தனது இறுதி மூச்சாகக் கொண்டு வாழ்ந்து தனது 90வது வயதில் 25.11.2016 அன்று இவ்வுலகை விட்டு அவரது உயிர் பிரிந்தது.

**கியூபாவும், காஸ்ரோவும்**

வட அத்லாந்திக் சமுத்திரத்திலே அமெரிக்காவிக்கு நெருக்கமாக உள்ள கரிப்பியன் தீவுகளில் மிகப் பெரிய தீவாக கியூபா விளங்குகிறது. இதனது விஸ்தீரணம் 110860 சதுர கீலோ மீட்டர்களாகும்.

ஸ்பானிய அமெரிக்க யுத்தத்தின் பின்னர் 1868ஒக்டோபர் 10ல் கியூபா அமெரிக்காவில் கைப்பற்றப்பட்டது. 1902 மே10ல் சுதந்திரப்பிரகடனத்தை செய்த போதும் 1959களில் கியூபா குடியரசாக சர்வதேசத்தில் அங்கீகரிக்கப் பட்டது.

அமெரிக்காவிலிருந்து கிடைக்கப் பெற்ற சுதந்திரமாகவே காஸ்ரோ தனது ஆட்சியைக் கருதினார். கியூபா மக்களு க்கான அடிப்படை வசதிகளை முற்றாக வழங்குவதில் காஸ்ரோ பெரிதும் அக்கறை கொண்டார்.

கியூபாவைக் கட்டியெழுப்பி கல்வி யறிவுடைய கியூபா சமூகமே அவசியமா னது என்பதனை வலியுறுத்தினார். இலவசக் கல்வியினை அறிமுகப்படுத்தினார். மேலும் எழுத்தறிவு இயக்கத்தை ஆரம்பித்தார். **"தெரியாதவர்கள் கற்றுக் கொள்ளுங்கள் தெரிந்தவர்கள் கற்றுக் கொடுங்கள்"** என்பதை மகுட வாக்கியமாகக் கொண்டு கல்வியறிவு இயக்கம் செயற்பட்டது. அதற்கமைய மரம் அறுப்பவர்கள், விவசாயிகள், கம்மாளர் கள், தமது வேலை நேரத்திற்கு அப்பால் கல்வியைப் பயின்றனர். பிள்ளைகள் பெற்றோருக்குப் பாடம் கற்பித்தனர். இதனால் 1959களில் 30% மாகக் காணப் பட்ட எழுத்தறிவு 2015களில் 98%க்கு மேல் அதிகரித்தது. குறைந்த செலவில் தரமான சேவை என்பது தாரக மந்திரமாக காஸ்ரோ ஆட்சியில் கொள்ளப் பட்டது. அதற்கமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, மருத்துவ வசதிகள், அடிப்படை வீட்டு வசதிகள் யாவும் கியூபா மக்களுக்கு வழங் கப்பட்டது.

சுகாதார வசதிகள் தொடர்பில் வைத்தியர்களின் சேவை உள்நாட்டில் கட்டாயமாக்கப் பட்டது. வைத்தியசாலை கள் அரசுடமையாக்கப்பட்டது. இதனால் சிசு மரணம் குறைந்த நாடாக கியூபா மாற்றம் பெற்றதுடன் மக்களது சராசரி ஆயுட் காலமும் அதிகரித்தது. மேலும் ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படலாயிற்று.

அமெரிக்க தனியார் கம்பனிகளிட மிருந்த உற்பத்தித் தொழிற்சாலைகள் அரசுடமையாக்கப்பட்டன. மொத்த உள் நாட்டு உற்பத்தி மற்றும் தேசிய வருமானத் தின் பெரும்பங்கு மக்களுக்கான நலனோம்பு திட்டங்களுக்காக அரசு செலவு செய்தது. இதனால் கியூபா மக்கள் காஸ்ரோவை தொடர்ச்சியாக ஜனாதிபதி யாக்கினர்.

## காஸ்ரோ உலகிற்கு வெளிப்படுத்திய உண்மைகள்

அமெரிக்காவிலிருந்து 93 மைல் கள் தொலைவில் அமைந்திருந்த கியூபா விற்கு அமெரிக்காவின் அச்சுறுத்தல்கள் பல மடங்கு காணப்பட்டது. கியூபாவில் காஸ்ரோவின் ஆட்சியை அகற்ற 1959 களில் இருந்து அமெரிக்கா முயற்சி செய்து வந்தது. 1961ல் பன்றிக்குடாவிற்குள் அமெரிக்கா நேரடியாகப் படையெடுப்பை மேற் கொண்டு தோல்வியைத் தழுவியது. அக்காலத்தில் சோவியத் யூனியனின் முழுமையான ஆதரவு காஸ்ரோவிற்குக் கிடைத்திருந்தது. பொருளாதார ரீதியாக கியூபாவை அச்சுறுத்த அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை பல்வேறு வழிகளில் கியூபா மீது மேற் கொண்டது. எந்த ஒரு ஒரு நாட்டிலும் உற்பத்தி செய்யப் பட்ட பொருள் 10% அமெரிக்க உள்ளீட் டைக் கொண்டிருக்குமானால் அப் பொருளை கியூபாவிற்கு அனுப்பக் கூடாது. அமெரிக்க டொலரை கியூபா பயன்படுத்தக் கூடாது. சுவிஸ் மற்றும் இங்கிலாந்து மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் கியூபா வுடன் இணைந்து செயற்பட்ட போது அந்நாட்டு நிறுவனங்களை அமெரிக்கா விலைக்கு வாங்கியதன் மூலம் கியூபாவின் சுகாதார வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்படுத்த முற்பட்டது. மேலும் சிரான் என்னும் நிறுவனம் குழந்தைகளுக்கான மருந்து வர்த்தகத்தை கியூபாவுடன் மேற் கொண்டபோது அந்நிறுவனத்திற்கு அபரா தம் விதித்ததன் மூலம் வர்த்தகத்தை இடை நிறுத்தச் செய்தது. இவ்வாறான பொருளா தாரத் தடைகள் கியூபாவின் வளர்ச்சியினை மட்டுப் படுத்தாததால் அமெரிக்க புலனாய் வுப் பிரிவானது 638 தடவைகள் காஸ்ரோ வை கொலை செய்ய மேற் கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தது.

சமத்துவம் அல்லது மரணம் என்ற தொனிப் பொருளில் கியூப மக்கள் செயற் பட்டனர். இதனால் காஸ்ரோ எல்லை கடந்த மனிதப் போராளியாகத் திகழ்ந்தான். இரட்டைக் கோபுரத் தாக்குதல், கதறினா சூறாவளி போன்ற அனர்த்தங்களின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க மக்களுக்கான மனிதாபிமான உதவிகளினை கியூபா அரசு வழங்கியது. பொதுவாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 20% மான தேசிய வருமானம் 80% மான மக்களுக்கும், 80% மான தேசிய வருமானம்20% மான மக்களுக்கும் சென்றடையும் நிலை கியூபாவில் இல்லா தொழிந்தது. உற்பத்திகள் மூலமான சமூக உறவை உலகிற்கு வெளிப்படுத்தியது கியூபா. மேலும் தொழிநுட்பத்துறையில் தற்போது 60% மான பெண்கள் பணிபுரியும் நாடாக உள்ளது. தனது ஆட்சிக் காலத்தில் காஸ்ரோ அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அத்துடன் நாட்டின் ஆட்சி அலுவலகங்களில் தனது புகைப்படத்தை வைப்பதனையோ, தனது சிலையை நிறுவுவதனையோ காஸ்ரோ என்றும் விரும்பவில்லை.

'வரலாறு என்னை விடுதலை செய்யும்' என்ற காஸ்ரோவினது நூல் உலகப் பிரசித்தி பெற்றது. சேகுவராவுடன் காஸ்ரோ இணைந்து இலத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலைக்காகப் பாடுபட்டார்.

★ விதைத்தவன் உறங்கலாம் நல் விதைகள் ஒரு போதும் உறங்குவதில்லை.

★ கஸ்டங்கள் மட்டும் இல்லையென்றால் போராடும் எண்ணமே நமக்கு இல்லாது போய் விடும்.

★ தடம் பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன் மா மனிதன்.

★ அமைதி நீதி சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் மாத்திரமே புதிய உலக ஒழுங்கை நாம் உருவாக்க வேண்டும்.

★ ஆயுதங்கள் ஒரு போதும் சிந்திப்பதில்லை.

★ நல்ல தடகள வீரன் ஒருவன் களைப்பையோ, சோர்வையோ அறிய மாட்டான் அவன் எப்போதும் வெற்றிப் பாதையினையே சிந்திப்பான்.

போன்ற காஸ்ரோவினது சிந்தனைத் துளிகள் பல மனித குலத்திற்கும் நல்லாட்சிக்கும் அடிப்படையாக விளங்குகின்றன.

கியூபாவின் குறைந்த செலவிலான மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்ள வெளிநாட்டவர்கள் பலர் வருவதாக கியூபா அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. கியூபாவினது சுகாதார வசதிகள் மேம்பாட்டால் அந்நாட்டு மக்களின் ஆயுட்காலம் 2015ல் 78-22 வருடங்களாக விளங்குகின்றது. இவ்வகையில் மத்திய திட்டமிடல் பொருளாதார வளர்ச்சியினை உலகிற்கு வெளிக்காட்டினர் கியூபர்கள்

## முடிவுரை

மனித உரிமைகளை மதிக்கத் தவறியவர், இரும்புப் பிடியுடன் கியூபாவை ஆட்சி செய்தவர் போன்ற பல்வேறு பட்ட விமர்சனங்கள் அவருக்கு எதிராக முன் வைக்கப்பட்டது. ஆனாலும் கெடுபிடி யுத்தம் அல்லது பனிப்போர் காலத்தில் இருந்து ஆராய்ந்து நோக்கும் வேளையில் வர்க்க ரீதியாக உலகத் தொழிலாளர்களது தன்னிகரில்லா தோழன் ஒருவனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடல்காஸ்ரோ தனது ஆயுட்காலம் முழுவதும் வாழ்ந்து வந்தார் என்பதனை யாராலும் முற்றுமுழுதாக புறந்தள்ளிட முடியாது.

உசாத்துணை நூல்கள்

1) வரலாறு என்னை விடுதலை செய்யும்- பிடல்காஸ்ரோ - தமிழ்பதிப்பு
2) இணையம்
3) யூனியர்விகடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய வழிபாட்டுடன் இணைந்து கைக்கொள்ளப்படும் சம்பிரதாயங்களில் பிரதேச ரீதியாக மாறுபடும் சில நடைமுறைகள் ஓர் அவதானிப்பு

**கலாபூஷணம், பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா**
**(கோப்பாய் சிவம்)**

மக்களின் கலாசாரம், பண்பாடு என்பவற்றை நெறிப்படுத்துவதில் சமயம் முக்கிய பங்காற்றுகிறது. சமயம் சார் நடைமுறைகள் ஆகம நெறிமுறை சார்ந்த கிரியைகளோடிணைந்த வகையில் பல சம்பிரதாயபூர்வமான சடங்காசாரங்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றில் காலத்திற்குக் காலம் மாற்றம் பெறுபவை சில, பிரதேசங்களுக்கிடையே மாறுபட்ட வகையில் கைக்கொள்ளப்படுபவை சில, இவற்றுட் சில நல்ல உட்கருத்துக்களையோ, தத்துவார்த்த அடிப்படைகளையோ கொண்டிருக்கும். வேறு சில எவ்வாறு தொடங்கப் பட்டன என்பது தெரியாமலே தவறான சில வழக்கங்களாக ஒருவரையொருவர் பார்த்துப் பின்பற்று கின்ற நடைமுறைகளாக உள்ளன. அவ்வகையில் அவதானிக்கப்பட்ட சிலவற்றைப் பெரியோர்களின் சிந்தனைக்கு முன் வைக்கிறேன்.

## கன்னி வாழை வெட்டுதல் (மானம்பூ)

நவராத்திரி விரத முடிவில் வரும் மானம்பூ (மா நோன்பு) உற்சவத்தில் வாழை வெட்டுதல் மிக முக்கியமான ஒன்று. மங்கல வாத்தியங்களுடன் புறப்பட்டு வருகின்ற சுவாமிஆலயத்தின் முன்னே அமைக்கப்பட்டுள்ள பந்தலின் நடுவே உள்ள வாழை மரத்தை அசுர சம்ஹாரம் செய்யும் பாவனையில் வெட்டி வீழ்த்துவது இந்த விழாவின் முக்கிய செயற்பாடு. இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பந்தல் நடுவே நடப்படும் வாழை குலை ஈனாத வாழையாக இருப்பதும், அந்த வாழைமரத்தில் வன்னிக்கிளை ஒன்று செருகப்பட்டிருப்பதும் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் அவதானிக்கப் படலாம்.

இதனால் வன்னி வாழையென அழைக்கப்பட்டமை பின் மருவியதோ என்னவோ கன்னி வாழை வெட்டுதல் என்ற சொற்பதம் இப்பிரதேசத்தில் முன்பு வழங்கப் பட்டுள்ளது. ஆனால் வலிகாமம் தெற்கு பகுதிகளில் இத்தேவைக்குக் குலை தள்ளிய வாழையையே பொத்தியுடன் சேர்த்து தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம்பூவில் வெட்டப்படும் வாழைக்குக் குலை அவசியமா? குலை போட்ட வாழையை அநியாயமாகத் தேவா ரியத்திற்காக வெட்டித் தள்ளலாமா? என்பது கேள்விக்குறியாக நிற்கிறது.

### சொக்கப்பானை

கார்த்திகை விளக்கீட்டு நாளில் ஆலய வாசலில் மிகப்பெரிய சொக்கப் பானையை அமைத்து (காய்ந்த ஓலைகள், சருகுகளால் உயரமாக அமைக்கப்படுவது) சுவாமி புறப்பட்டு வந்ததும் அதைக் கொழுத்தி அந்தப் பேரொளி எங்கும் பரவுவதைக் கண்டு மகிழ்வது இந்த நிகழ்வின் முக்கிய செயற்பாடு. இதில் வலிகாமம் கிழக்குப் பகுதியில் காணப் படும் மிக முக்கிய அம்சம் மாவிளக்கையும் இதனோடு இணைத்தல். அதாவது சொக்கப்பானை அமைக்கும் போது நடுவில் ஒரு குகை போன்ற அமைப்பில் உருவாக்கி அதன் நடுவே வாழைக்குற்றி ஒன்றை நட்டு அதன் மேல் மா விளக்கு ஒன்றை ஏற்றி வைப்பார்கள். சுற்றி வர எரியும் அக்கினி யின் வெப்பத்தில் விரைவாகவே நன்கு வெந்திருக்கும் அந்த மாவிளக்கை நெருப்பு எரிந்து முடிந்ததும் எடுத்து வந்து சுவாமிக்கு நிவேதனம் செய்வார்கள். வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் பிள்ளையார் கோவில்களில் கூட வேறு விசேட நாட்களி லும் மாவிளக்கு ஏற்றும் வழக்கம் இருந்தும் கூட இந்தக் கார்த்திகை விளக்கீட்டு உற்சவத் தில் சொக்கப்பானை எரிக்கப்படும் போது மாவிளக்கு ஏற்றும் நடைமுறையைக் காண முடியாது.

### நிறைகுடம் சரித்தல்

சுவாமி எழுந்தருளி வீதி வலம் வரும்போது அல்லது கிராம வலம் வரும் போது நிறைகுடம் பந்தல் வைத்து வரவேற்று வழிபடுவது எங்குமுள்ள வழக்கம். இந்த நிறைகுடத்தை வழிபாடு முடிந்ததும் சுவாமிக்கு முன்னே கொண்டு போய் சரித்து ஊற்றுவதை இப்போது பல ஆலயங்களில் காணலாம். இது அவசியமா னதா? என்பது கேள்விக்குரியது. சுமார் மூன்று தசாப்த காலத்திற்கு முன்னர் இது நடைபெற வில்லை என்பதோ அல்லது மிகச் சில இடங்களில் மட்டுமே நடைபெற்ற இத் தவறான வழக்கம் இப்போது அதிகமான இடங்களில் பரவி விட்டதென்பதே இக்கட்டுரையாளரின் அவதானிப்பு.

இவ்வாறு மங்கலமான நிறை குடத்தை உடனேயே கலைக்கலாமா? சுவாமி முன்னே அதனை ஊற்றலாமா? என்பது பற்றிப் பல விவாதங்கள் நடை பெற்று வருகின்றன. நிறைகுடம் நிறைவா னது. மங்கலமாக வைக்கப்படுவது. அது உடனே கலைக்கப்படலாகாது. தொடர்ந்து நடைபெறும் மஹோற்சவ காலங்களில் ஒரே நிறைகுடம் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் பயன் படுத்தப்படுவதும் (மாவிலைகள் காய்ந்து விடும் போது அவற்றை மட்டும் மாற்றுவார்கள்) வழக்கலி ருந்தது. மேலும் ஆலயம் வலம் வந்த பின் சுவாமி உள்ளே மீண்டும் நுழையும் போது மட்டும் பாத தீர்த்தம் (கால் கழுவுதல்) என்ற வகையில் சிவாசாரியாரால் ஒரு கும்பம் ஊற்றப்படுவது மரபு. அதே போல அடியவர் கள் யாவரும் தத்தமது வீட்டு வாசலில் ஊற்றுவது பொருத்தமானதா? அப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்கள் வழங்கும் பாத தீர்த்தத்தை சுவாமி ஏற்பதாயின் உடனே சுவாமி அவர்களது வீட்டிற்குள் எழுந்தருள வேண்டுமல்லவா?

## சுவாமி காவும்போது புறம் காட்டுதல்

வலிகாமம் தெற்கு பிரதேசத்தி லுள்ள சில ஆலயங்களில் சுவாமி வீதி வலம் வரும்போது காவுகின்ற அடியவர்க ளின் முற்கொம்பில் நிற்பவர்கள் சுவாமிக் குப் புறம் காட்டலாகாது என்ற எண்ணத்து டன் சுவாமியைப் பார்த்தவாறு திரும்பி நின்று பின்புறமாக நடக்கின்றனர். இவ்வாறு அவர்கள் காவும் போது அடியவர்களின் பந்தங்களில் தீபம் காட்டும் போதும், யாக வாசலில் தீபாராதனைப் பூஜை நடை பெறும் போதும் அவர்கள் தமது பின்புறத் தைக் காட்டி நிற்கிறார்கள். அர்ச்சகரும் அடியவர்களும் அவர்களின் பின்புறத்தைத் தரிசிக்க நேர்கிறது. இது சரியா?

சுவாமி இவர்களின் தோளின் மீது தான் இருக்கின்றார். இவர்கள் கீழேயும், சுவாமி மேலே உயரத்திலேயும் தான் உள்ளமை கவனிக்கத்தக்கது . அதனால் பின்புறம் காட்டுதல் என்ற தோஷம் நேராது என உணர்ந்து முன்பக்கமாக முகம் காட்டி யவாறே காவுவதே பொருத்தம் என்பது இக்கட்டுரையாளர் கருத்து. அவ்வாறே ஏனைய பல பிரதேசங்களில் நடைபெறுகி றது. சுவாமியைத் தாங்கும் வாகனங்கள் முன்புறமாக அல்லது பக்க வாட்டில் அமைக்கப்படுகின்றன. அல்லாமல் சுவாமி யைப் பார்த்தவாறு பின்புறத்தை முன்னே வைத்துத் தூக்கப்படுவதில்லை என்பதையும் அவதானிக்க வேண்டும்.

## புரட்டாதிச்சனியும், முருங்கைக்காயும்

புரட்டாதிச்சனி விரத நாளில் முருங்கைக்காய் தேடி வாங்கிச் சமைப்ப தைக் குறிப்பிட்ட சில பிரதேச மக்கள் நடைமுறையில் கொண்டிருப்பதை மிக வியப்புடன் இக்கட்டுரையாளர் அவதானிக் கின்றார். ஆடிஅமாவாசை விரதத்திற்கு காத்த வெட்டிக்காய் சமைத்து உண்ணுதல் என்பது நீண்ட கால மரபு. இது எங்கும் உள்ள வழக்கம். இதற்கு மருத்துவ ரீதியான காரண ங்களும் காலநிலையோடு இணைத் துக் கூறப்படுவது வழக்கம். ஆனால் புரட்டாதிச் சனிக்கும், முருங்கைக்காய்க்கும் உள்ள தொடர்பு ஆராயப்பட வேண்டிய ஒன்று. இது சில பிரதேசங்களில் மட்டும் இடையிட்டு வந்த தவறான வழக்கம்.

முருங்கைக்காய் சாதாரணமா கவே விரத நாட்களில் விலக்கப்பட வேண்டிய ஒன்று. இது விரத நூல்களிலேயே குறிப்பிடப்பட்டிருப்பது. அப்படி விலக்கப்பட வேண்டிய ஒன்றைக் குறிப்பிட்ட ஒரு விரதத்திற்கு அவசியமானது எனக் கருதப் படுவது ஏன் என்பது கேள்வி.

## தைப்பொங்கல் நாளில் பிதிரர் வழிபாடு

தைப்பொங்கல் நாளில் மறுநாள் இந்தப் பிரதேசத்தில் எல்லா வீட்டு வாசல்க ளிலும் இளநீர்க் கோம்பை இடறுப்பட்டுக் கொண்டிருப்பதை வியப்போடு அவதா னித்த கட்டுரையாளருக்கு இப் பிரதேச அறிஞர் சொன்ன காரணம் பிதிரர்களுக் கான படையல் என சூரியனுக் குப் பொங்கிப் படைத்த பின்னர் தமது முன்னோரைக் கருதிச் சிறிது படையல் இளநீர் என்பவற்றை வாசல் படலையுடன் வைத்து விடுவதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாகக் கொண்டுள்ளனர். அது பிதிரர் படையல் என்பதனால் அதனைக் கையால் தொடப் பயந்தோ என்னவோ அதனைத் தொட்டுத் தூக்கித் துப்புரவு செய்யவும் பின்னிற்பதால் பல நாட்களுக்கு அந்த இளநீர்க் கோம்பை அங்கு போவோர் வருவோருக்கு இடையூறாகக் காணப் படுவது வழக்கம்.

தைப்பொங்கல் நாள் முதல் ஆரம்பமாகும் உத்தராயண காலம் தேவ வழிபாட்டிற்குரிய பகற்பொழுது எனவும், ஆடிப்பிறப்பில் ஆரம்பிக்கும் தட்சிணாயன காலம் பிதிரர்களை உத்தேசித்துப் படையல் செய்து வழிபடுவதும் நமது மரபு. ஆனால் உத்தராயண கால ஆரம்பத்தில் தைப் பொங்கல் நாளில் பிதிரர் வழிபாடு எவ்வாறு இணைந்து கொண்டது என்பது வியப்புக் குரியது.

இவ்வாறு எமது சமய வழிபாட்டு முறைகளும், சடங்காசாரங்களும் இடத்தி ற்கு இடம் சில நுணுக்கமான வேறுபாடு களைக் கொண்டிருக்கின்றன என்பது அவதானிக்கப்படலாம். அவற்றுள் சரியான நடைமுறைகளை அவற்றுக்குரிய சிறப்புக் காரணங்களைக் கண்டறிந்து தொடர்ந்து கடைப்பிடிப்பதோடு தவறாக நுழைந்து கொண்ட வழக்கங்களை களைவதும் நமது கடமை. சமய அறிஞர்கள் இம் முயற்சியில் ஈடுபட வேண்டுமென வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்குப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள இடப்பெயர்கள் - ஓர் ஆய்வு

**சித்த மருத்துவ கலாநிதி சே.சிவசண்முகராஜா** M.D(S)(India)
சிரேஷ்ட விரிவுரையாளர் , சித்தமருத்துவப்பிரிவு,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 15 பிரதேசசெயலர் பிரிவுகளில் வலிகாமம் தெற்குப் பிரதேசசெயலர் பிரிவானது முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக விளங்குகிறது. வடஇலங்கையின் தொன்மை வாய்ந்ததும் முதலாவது இராசதானியாக விளங்கியதுமான கந்தரோடை யாழ். மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரமாகக் கருதப்படும் சுன்னாகம் என்பன இப்பிரிவிலேயே அமைந்துள்ளன. யாழ்.நகரிலிருந்து வடக்கே சுமார் 10கி.மீ தொலைவில் அமைந்துள்ள இப்பிரதேச செயலர் பிரிவின் வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்கு எல்லைகளாக முறையே வலிகாமம் வடக்கு, வலிகாமம் தென்மேற்கு, நல்லூர், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகள் அமைந்துள்ளன. இதன் பரப்பளவு 30 சதுரகிலோமீற்றர். 29 கிராமசேவகர் பிரிவுகளையும், 50,000 ற்கும் மேற்பட்ட மக்கள் தொகையையும் கொண்டுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவில் சுன்னாகம், கந்தரோடை, உடுவில், இணுவில், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, தாவடி முதலான தொன்மை வாய்ந்த பேரூர்களும் பல சிற்றூர்களும் பல குறிச்சிகளும் அமைந்து உள்ளன. இவை இப்பிரதேசத்தில் அமைந்துள்ளன. தமிழரின் வரலாற்றுப் பாரம்பரியங்களை எடுத்துக் காட்டும் அடையாளச் சின்னங்களாகவும் விளங்குகின்றன. இவ் விடப்பெயர்கள் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இடப் பெயரா ய்வு இலகுவானதொன்றல்ல. இடப் பெயரா ய்வில் ஈடுபடுவோர் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். பல இடங் கள் இன்றும் புளியடி, வேம்படி, நாவலடி.... என்று அழைக்கப்படுகின்றபோதிலும் அப் பெயர்களுக்குக் காரணமாக அமைந்த மரங்கள் பல வருடங்களுக்கு முன்னரோ அல்லது பல நூற்றாண்டுகளுக்கு முன்னரோ அழிந்து போயிருக்கலாம். பெயர்கள் மட்டும் நிலைத்திருக்கின்றன என்று இடப் பெயராய்வில் எழக்கூடிய ஒரு சிக்கலை கதிர் தணிகாசலம் அவர்கள் எடுத்தியம்பியுள்ளார். ஓர் இடத்தின் பெயர் தோன்றிய மைக்கு மூல காரணம் ஒன்றாக இருக்கலாம். ஆரம்பத்தில் வழங்கப்பட்ட பெயரே தொடர்ந்து நிலைத்திருக்கலாம். அல்லது காலநீரோட்டத்தில் அப்பெயர் சிதைவடைந்தோ, திரிபடைந்தோ, முற்றாக மாற்றமடைந்தோ அல்லது மாற்றப்பட்டோ இருப்பதற்கும் சந்தர்ப்பங்களுண்டு. அத்தகைய ஊர்ப் பெயர் மூலங்களைக் கண்டறிவது பிரம்ம பிரயத்தனமே என்ற இடப் பெயராய்வுச் சிக்கல்கள் குறித்த திலகநாயகம்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் கருத்தும் ஈண்டு கவனிக்கற் பாலது. எனவே இடப்பெயராய்வுகள் தொடர்ந்து நடாத்தப்படும்போது அவை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட இடப்பெய ராய்வு முடிவுகளை உறுதிப்படுத்துவன வாகவோ அல்லது புதிய கண்டுபிடிப்புகளை வெளிப் படுத்துவனவாகவோ அமையலாம். அந்த வகையில் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முக்கிய இடப்பெயர் பற்றி இக்கட்டுரையில் எடுத்துக் கூறுப்பட வுள்ளது. இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்துக் குறிச்சிப் பெயர்க ளும் இக்கட்டுரையில் ஆராயப்படவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டி யுள்ளது.

**சுன்னாகம் - சுண்ணாகம்**

யாழ்.நகருக்கும் காங்கேசந் துறைக்கும் மைய ஸ்தானத்தில் அமைந்து ள்ளது சுன்னாகம். இது பேரூர் அல்லது சிறு நகரமாக எண்ணத்தக்கது. சுன்னாகத்தை ஆரம்பமாகக் கொண்டு சுன்னாகம் முத்துக் குமார கவிராயரால் பாடப்பட்ட பின்வரும் சிலேடைப் பாடல் யாழ்ப்பாணத்திலுள்ள பழம்பெரும் ஊர்களைக் குறிப்பிட்டுள் ளதுடன் சுன்னாகம் என்ற இடப்பெயருக் கும் ஒரு காரணத்தைக் கூறி நிற்கிறது.

**முடிவிலா துறை சுன்னாகத்தான் வழி**
**முந்தித் தாவடி கொக்குவின் மீதுவந்**
**தடைய வோர் பெண் கொடிகாமத் தாளசைத்**
**தானைக்கோட்டை வெளிகட்டுடைவிட்டாள்**
**உடுவிலான் வரப் பன்னாலையான் மிக**
**உருத்தனன் கடம்புற்ற மல்லாகத்தில்**
**தடைவிடாதணை யென்று பலாலி கண்**
**சார வந்தன ளோரிளவாலையே**

இப்பாடலின் படி சுன்னாகம் என்பதற்குச் சுல்(வெள்ளி)+நாகம்(மலை) என்ற பொருளில் வெள்ளிமலை என்று பொருள் கூறப்படுகிறது. அதனையே வெள்ளியங்கிரி, வெள்ளியம்பதி என்றும் எடுத்துரைப்பர். சுன்னாகம் மலைப் பிரதேச மாக இல்லாதபோது கதிரமலை எனப்படும் மேட்டுப் பிரதேசந் தவிர இது அவ்வளவு தூரம் பொருந்தும் என்பது ஆய்விற்குரி யதே. ஆயினும் வெள்ளியம்பதி சுன்னாக மாக மாறியிருக்கலாம் என்பதற்குப் பின் வரும் கருத்தைக் கவனத்திற் கொள்ளலாம். வெள்ளி என்பது வெள்ளில் என்பதன் திரி பாகக் கொள்ளின் **'வெள்ளில் விளாவாம்'** என்கிறது சேந்தன்றிவாகரம். வெள்ளியம் என்பது விளாமரம் அந்த வகையில் முற் காலத்தில் இவ்விடத்தில் விளாமரங்கள் மிகுதியாக விளாம் பற்றையாக வெள்ளி லம்பத்தை அல்லது வெள்ளியம்பத்தை என்று அழைக்கப்பட்டிருக்கலாம். வெள்ளி யம்பத்தை காலப்போக்கில் வெள்ளியம்பதி யாகியிருக்கலாம். (வெள்ளியம்பத்தை என்பது திரிபடைந்து வெள்ளியம்பதியான ஓரிடம் அளவெட்டியிலுமுள்ளது. எனவே விளாமரங்கள் காரணமாக ஏற்பட்ட வெள்ளியம்பதி என்னும் பெயர் அறிஞர் களால் சுன்னாகம் ( இங்கு சுல் என்பதன் கருத்தாயமைந்த வெள்ளி என்பது விளா மரம்) என்று அழைக்கப்பட்டிருக் கலாம். நெடியவிளானை என்ற குறிச்சி சுன்னா கத்தில் இருப்பதும் குறிப்பிடத் தக்கது. நெடிய என்பதற்கு நீண்ட என்றும் பொருள். அந்த வகையில் அவ்விடம் நெடுகலும் விளாமரங்கள் ஒரு காலத்தில் இருந்திருத் தல் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் என்பது சுண்ணாகம் என்றே சாதாரண மக்களால் அழைக்கப் படுகிறது. சுண்ணர் (சுண்ணாம்பு நீற்றுந் தொழிலுடையோர்)+அகம்(வாழிடம்) அதாவது சுண்ணாம்பு நீற்றும் தொழிலுடை யோர் வாழ்ந்த இடம் சுண்ணாகமாகும். சுண்ணாம்பு காரணமாகவே சுண்ணாகம் என்ற பெயர் ஏற்பட்டுத் தற்போது சுன்னாகம் என்று அழைக்கப்படுவதாக இ.பாலசுந்தரம் அவர்களும் எடுத்துக்கூறி யுள்ளார்.

சுன்னாகத்தின் புராதனபெயர் மயிலணி என்று ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை யவர்கள் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் அவர் எந்த அடிப்படையில் அவ்விதம் குறிப்பிட்டுள்ளார் என்று தெரியவில்லை. ஒருவேளை முற்காலத்தில் மயிலணி பேரூராகவும் சுன்னாகம் அதன் ஒரு குறிச்சியாகவும் விளங்கியிருத்தல் கூடும்.

**மயிலணி** - இது சுன்னாகத்தின் ஒரு குறிச்சியாகவோ அல்லது ஒரு சிற்றூராகவோ விளங்குகிறது. மயில்+ அணி அதாவது மயில்கள் அதிகள வில் காணப்பட்ட இடம் என்ற பொருளில் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப் படுகிறது. குருந்தமர வகையில் சாதாரண குருந்து, மயிலடிக்குருந்து என்ற பேதங்களுண்டு. அதில் மயிலடிக்குருந்து என்பதற்கு மயிலை, மயிலடி, மயிலாடுங் குருந்து என்னும் வேறுபெயர்களுள. அவ்விதம் நோக்குமி டத்து மயிலணி என்பது மயிலடி என்னும் மயிலடிக் குருந்தமரங்கள் பரவலாகக் காணப் படுவதும் குறிப்பிடத்தக்கது. மயிலங்காடு என்னுங் குறிச்சி மயிலணிக்கு அண்மை யில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**சுன்னாகத்திலுள்ள குறிச்சிகள் சில**

கச்சன்வடலி(ஆட்பெயர்+பனையின் இளசு தினைக்கலட்டி(தினை காரணமாக) நெடும் புலம் (நீண்ட நிலம்) விளானை (விளா மரங்கள் காரணமாக) கள்ளிக்கட்டுவன் (கள்ளிச் செடி காரணமாக) கல்லாக் கட்டு வன் கற்களைப் பொழிந்து கட்டுபவர்கள் வாழ்ந்த காரணமாக) கதிரமலை (சுன்னா கம் சந்திக்கு அருகிலுள்ள மேட்டுப் பிரதே சம் இதனைக் கதிரவலை என்று முத்துக் குமாரசுவாமி அவர்கள் குறிப்பிட் டுள்ளார். கதிர என்றால் கருங்காலி. எனவே கருங் காலி மரங்கள் மிகுதியாக இருந்த காரணத் தால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்). மலைப்பை (கதிரமலைக்கு அருகில் உள்ள இடம் என்பதால் மலையுடன் தொடர்புறுத்தி மலைப்பை என்று ஏற்பட்டிருக்கலாம். மலைப்பை என்பதை மலைக்குகை என்றுங் கருதலாம்) கப்பம்புலம் (கம்பு பயிரிடப்பட்ட இடம் பற்றியதாக), தில்லைகட்டி (தில்லை மரம் காரணமாக), கட்டவைப்புலம், முட வேம்படி(வேம்பு காரணமாக), செல்லா வளவு (தனிநபர் பெயர் காரணமாக), பருத்திக்கலட்டி(பருத்திப்பயிர்ச் செய்கை காரணமாக), சூளானை (கூழானை என்பதன் திரிபாக ஏற்பட்டிருக்கலாம். கூழா மரம் பரவலாகக் காணப்படும் ஒன்று) மூர்த்தன் கூடல் (தனிநபர் காரணமாக) கொற்றியாவத்தை( கொத்தியாவத்தை என்றும் அழைக்கப்படுகிறது.) கொற்றி என்பதற்கு துர்க்கை, ஒருபேய், வடுகி என்ற பொருட்களுமுள. அந்தவகையில் கொற்றவை என்னும் துர்க்கை காரணமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவே வடுகி (வடுகன்) என்பதன் பெண்பால் என்னும் சாதிப்பெயர் காரணமாகவோ கொற்றி என்ற பேய் காரணமாகவோ இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். சிலர் வத்தை என்பதற்கு வயல் என்று பொருள் கொள்வர். அந்த வகையில் பயிர்ச்செய்கைக்காக நன்கு கொத்திப் பண்படுத்தப்பட்ட வயல்களுள்ள இடம் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். இப்பிரதேசத்தில் செழிப்பான வயல் வெளிகளிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது. வடமராட்சி தென்மேற்கில் கொற்றாவத்தை என்று எதிரிடையான பெயரில் ஓரிடம் இருப்பதும் நோக்கற்குரியது. )அம்பனை (பனை காரணமாக), வடுவாவத்தை(வடுகர் என்னுஞ் சாதியினர் காரணமாக– வடுகர்–தெலுங்கர்) நிச்சயிட்டி, அக்கலாக்கலட்டி, சத்திரந்தை, கதிப்புல்லை, உரலைப்புலம், தொறணாக்கடவை, வதிரிக் கடவை(வதிரி–இலந்தையைக் குறிக்கும் இரத்தி வதிரியிலந்தையாகும் என்கிறது சேந்தன்றிவாகரம்), பரிசைப்புலம், செங்கராயன்தோட்டம் (தனிநபர் காரணமாக ஏற்பட்ட பெயர்)

### புன்னாலைக்கட்டுவன்

புன்மை என்பது சிறுமையைக் குறிக்கும். அதாவது சிறிய எனப் பொருள். ஆடை என்பது ஆலைமரத்தைக் குறிக்கலாம் என்று பாலசுந்தரம் அவர்களும் திலகநாயகம் அவர்களும் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளனர். அந்த வகையில் புன்னால் அதாவது சிறிய ஆலமரங் காரணமாகவும் அதனுடன் இணைந்த கட்டு காரணமாகவும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். ஆயினும் ஆலை என்பது ஆலயம் என்பதன் திரிபாகவும் சிலர் கருதுகின்றனர். அவ்விதமாயின் சிற்றாலயம் ஒன்றைப் பற்றியதாக இவ்விடப்பெயர் எழுந்ததாகக் கருத வேண்டியுமுள்ளது. ஆனால் புன்னாலை என்பது பொன்னாலை என்பதன் திரிபாக –பொன்+ஆலை+ கட்டுவன் என்று மருவி வழங்கியிருக்கலாம் என்றும் பாலசுந்தரம் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார். அந்த வகையில் பொன்னாலயம் என்ற பெயருடன் தொடர்புபடுத்தியும் இவ்விடப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். ஆலை என்பது கரும்பாட்டுங் செக்கு(கரும்பாலை) என்றுங் கூறப்படும். எனவே ஆலை என்று வரும் இடப்பெயர்கள் பற்றி மேலும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

ஒரு சிறப்பான விடயம் என்வென்றால் சுன்னாகத்தை வெள்ளியுடனும், அதனருகேயுள்ள புன்னாலைக்கட்டுவனைப் பொன் அதாவது தங்கத்துடனும் தொடர்புபடுத்தப்படும் நிலையாகும். இவ்விடங்களில் அவற்றுடன் தொடர்பான தொழில்புரிவோர் முற்காலத்தில் அதிகம் இருந்தனரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

### புன்னாலைக்கட்டுவனில் உள்ள குறிச்சிகளிற் சில

திடற்புலம்(திடர் என்பது மேட்டுப் பாங்கான நிலம்), கப்பப்புலம்(கப்பம்புலம்– கம்பு காரணமாக), ஈவினை, மதவோடை, தெவிரியவத்தை, மூர்க்கனொல்லை (ஓல்லை–சோலை), அற்பை (அப்பை என்பது கொன்றையைக் குறிக்கும். அப்பை என்பது அற்பையாயிருத்தல் கூடும்), சுளிக்கம்புரை(சுளி என்பது முருங்கை சுளிக்கம்புரை என்பது முருங்கைத்தடியாக இருக்கலாம்) ஆலங்கட்டை (ஆலமரங் காரணமாக), ஆயாக்கடவை (ஆயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஆயில்மரம் கடவை என்றால் கடத்தல் உ+ம்:இலுப்பைக்கடவை என்பது போல)

## கந்தரோடை

கந்தரோடை என்ற பெயர் ஏற்பட்டமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. கந்தர் என்பவருக்குச் சொந்தமான ஓடை போன்ற அதாவது ஒடுக்கமான நிலப் பரப்பாக இருந்தயைால் கந்தர் + ஓடை கந்தரோடை என்பதாயிற்று என்பது சிலரின் கருத்து. கந்தகொடை – அதாவது கந்தனுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலம் கந்த கொடை. மாருதப்புரவீகவல்லி மாவிட்ட புரத்தில் தான் அமைத்த சுப்பிரமணியால யப் பூசைக்கும், அர்ச்சகர்களுக்கும் இவ் விடத்தைப் பிரமதாயமாகக் (இறையிலி) கொடுத்தாள் என்று யாழ்ப்பாணச் சரித் திரம் கூறுகிறது.

சிங்களத்திலுள்ள கதிறுகொட என்பதன் திரிபே கந்தரோடை என்று கூறும் இராசநாயகம் அவர்கள் கதிறு என்றால் எட்டிமரம் என்றும் கொட என்றால் பிட்டி என்பதை உணர்த்துஞ் சொல்லாகிய மலையுடன் சேர்ந்து கதிரமலையானது என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது கந்த ரோடை என்பதே கதிரமலை இதன் கருத்து. ஆனால் இது சம்பந்தமாக வரலாற்றாசிரி யர்களிடையே கருத்து முரண்பாடுகளுள. கிடைத்திருக்கும் ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது கதிரமலையும், கந்தரோ டையும் ஒன்றெனக் கூறுவது பொருந்து மாறில்லை என்று ப.புஷ்பரட்ணம் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளமை ஈண்டு நோக்கற் குரியது.

கந்தரோடையமைந்துள்ள இடமா னது பறங்கியர் காலத்தில் கந்தர் குடை (கந்தர்குட்டை) என்றும் ஒல்லாந்தர் காலத்தில் ஓடைக்குறிச்சி என்றும் கந்த ரோடை என்றும் அழைக்கப்பட்டது என்றும் இராசநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை யும் கருத்திற் கொள்ளத்தக்கது. ஒல்லாந்தர் காலத் தோம்புகளில் கந்தரோடை என்ற பெயர் வழக்கிலிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## கந்தரோடையிலுள்ள குறிச்சிகள் சில

கந்தரோடையிலுள்ள குறிச்சிப் பெயர்கள் பற்றி அழகான பாடல்கள் சிலவுள. அவற்றுள் ஒன்று வருமாறு–

**வற்றாக்கை யர்வாழ் மடத்தடி விளாங்கனி**
**வளரிக்கிரானை யுண்ண**
**வளர்சங்கா வத்தை செல் திசை மாற்ற**
**உச்சாப் பனைமருங் கோடி மலிநீர்**
**முற்றா இயங்கம் புலந்தாண்டி மெய்ந்நூல்**
**முழுதுணர் கணக்கர் வளவின்**
**முடுகுநீர் வருட உறு தோப்பாம் பள்ளம்**
**சேர்ந்து**
**மொழிபாடல் பிழை கண்டதும்**
**கற்றார்தம் அவையிலே கையிற்**
**குடாரையால்**
**கழுத்தற்றுமறுக வெட்டும்**
**கவிஒட்டன் கட்டுவளர் இனியா இலந்தைக்**
**கனிவேண்டி அமைந்தர் மகளிர்**
**முற்றாரும் செந்நெல் நிறையும்**
**கந்தரோடைநகர்**
**முன் பொருக்கன் புலமுறும்**
**முற்றிய பருத்தியோலைக் கின்னருளானந்த**
**மும்மதக் கரி வருகவே**

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் பிள்ளைத்தமிழில் வருகைப் பருவத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியதாக இயற்றப்பட்டுள்ள இப்பாடலில் கந்தரோடையிலுள்ள பின்வரும் பதினைந்து குறிச்சிப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

வற்றாக்கை(வட்டாக்கை)(வட்டம் என்பது ஆலமரம்கை என்றால் இடம்), மடத்தடி (மடம் காரணமாக), விளாங் கணை(விளாமரங் காரணாக),இக்கிரானை (இக்கிரிமுள் காரணமாக), சங்கவத்தை (சங்கடம் என்ற தோணிகள் நிறுத்தப்பட்ட இடம்), உச்சாப்பனை (பனை காரணமாக), இயங்கம்புலம் (இயங்கஞ்செடி காரண மாக) கணக்கர்வளவு(தனிநபர் காரணமாக) தோப்பாம்பள்ளம் (தோப்பு காரணமாக ), குடாரை(குடாக்கரை என்பதன் திரிபு), ஒட்டன் கட்டு (குரக்கன் ஒட்டு காரணமாக), அல்லது ஒட்டரர் என்னும் மண்வேலை செய்வோர் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். சிலர் இவ்விடத்திற்கு அருகிலிருக்கும் குளத்தையும், குளக்கோட்டனையும் தொடர்புபடுத்திக் குளக்கோட்டன் கட்டு என்பதே ஒட்டன் கட்டாக மருவியிருக் கலாம் என்று கூறுவர். இனியா இலந்தை (இலந்தை காரணமாக), கந்தரோடை (ஊர்ப்பெயரே குறிச்சிப் பெயராகவும் உள்ளது.) பொருக்கன்புலம் (பொருக்க மான மண் காரணமாக), பருத்தியோலை (பருத்தி காரணமாக), இவற்றை விடத் தம்மளை (தம்பலம் என்றால் இலந்தை), கயல்கண்ணி அல்லது கயற்கேணி(கயம் என்பது ஓர் ஆழமான நீர்நிலை), இலந்தை யடைப்பு, கனவட்டாங்கரை, (கனவட்டம் என்பது பாண்டியன் பருதி), சந்திரங் கடவை (சத்திரங்கடவை) போன்ற குறிச்சிகளும் உள. காலிங்கராயன் கட்டு (தமிழரசர் காலத்தில் திருக்கோவிலூரிலிருந்து வருவிக்கப்பட்ட பேராயிரமடையான் என்னும் வேளாளனும் அவனது பரிவாரங்க ளும் இணுவிலிற் குடியமர்த்தப் பட்டனர். பேராயிரவருக்குப் பின் காலிங்கராயன் இங்கு தலைமைப்பதவி பெற்றிருந்தான் என்கிறது யாழ்ப்பாண வைபவமாலை. எனவே அக்காலிங்கராயன் காரணமாக இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்) இவை பற்றி இக்கட்டுரையாசிரியரால் எழுதப்பட்டுள்ள காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை என்னும் நூலில் விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

குறிப்பு:கிராம எல்லை மீள் நிர்ணயம், கிராமசேவகர் பிரிவுகள் அதிகரிப்பு போன்ற காரணங்களால் சில குறிச்சிகள் வேறு கிராமங்களுடன் இணைக்கப்பட்டுமுள்ளன. உதாரணமாகக் கணக்கர் வளவு சுன்னா கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக் கிரானை வலி.வடக்குப் பிரதேசசெயலர் பிரிவில் அடக்கப்பட்டுள்ளது.

## உடுவில்

உடு+வில் உடு என்பதற்கு நட்சத் திரம், ஓடக்கோல், அம்பின் அடிப்பாகம், உடுமரம் என்று பொருள்களுள. வில் என்பது குளம் அல்லது நீர்த்தேக்கம், உடுமரம் என்பதன் வேறுபெயர்கள் – உசிலைமரம், ஊஞ்சல்மரம், சீகிரிமரம், சீக்கிமரம் தமிழ்நாட்டில் உடுமரப்பேட்டை என்னும் ஓரூர் உள்ளது. சீகியம்புலம் என்னும் குறிச்சி ஊர்காவற்றுறையில் உள்ளது. பொதுவாக நீர்நிலை சார்ந்த இடங் கள் அந்த நீர் நிலைகளுக்கருகாமையி லுள்ள மரங்களுடன் சேர்ந்து அழைக்கப் படுவதும் வழக்கம். அந்த வகையில் உடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தையும்(உசிலை) குளத்தையும் தொடர்புபடுத்தி உடுவில் என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் எண்ணத்தகும்.

## உடுவிலுள்ள குறிச்சிகள் சில

பட்டையோலை(பட்டை+ஓலை), சத்தியபுரம், புதுமடம், (மடங்காரணமாக), யாமா(ராமா என்பதன் திரிபாக இருக்கலாம்) (யாமா என்றழைக்கப்படும் வற்றாத நீரூற்றொன்று ஊரெழுவில் உள்ளதாக பாலசுந்தரம் அவர்களும் குறிப்பிட்டுள்ளார். ) பாலவோடை, மட்டக்கச்சி, , சந்திரபுரம், மருதனார்மடம் (மருதையினார்+மடம்) மல்வம் (மல்லம் என்பது மற்போர்) எனவே மற்போர் புரியும் மல்லர் வாழ்ந்த இடமாகவிருந்து மல்லம் என்பது மல்வமாக மாறியிருக்கலாம். மல்லாகம் என்பதும் மல்லர் அகம் என்று பொருள் கொள்ளப்படுதல் காண்க. கற்பொக்குணை (கல்+பொக்குணை),பொக்கணை (பொக்கை) என்பது ஆழமான நீர்நிலையைக் குறிக்கும்), கீனிசந்தையடி, கூரம்பன் (கூரம்பு–வெண்மணல்), வீரன்தோட்டம் (தனிநபர் காரணமாக), பெரிய மதவடி (மதவு காரணமாக), அந்திரான் (தனிநபர் காரணமாக) வடமராட்சி தென்மேற்கிலும் இதே பெயரில் ஓரிடம் உள்ளது. ஆலடி(ஆலமரங் காரணமாக), சங்குவேலி (இது ஒரு சிற்றூராகும். சங்கு+வேலி, சங்கு என்பது இசங்கு. அதாவது இசங்கஞ் செடி. வேலி என்றால் காவலரண் அல்லது ஊர். எனவே சங்கஞ்செடிகள் மிகுந்த ஊர் காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இவ்வூருக்கு மிக அருகாமையில் கந்தரோடையின் குறிச்சிகளான சங்கம்புலம், இயங்கம்புலம் என்பன அமைந்திருத்தலும் இதை உறுதிப்படுத்துகிறது. எனினும் சங்குவேலி என்பது சங்கவேலி என்பதன் திரிபாகக் கருதுவோரும் உளர். சங்கம்+வேலி மூன்றாம் செகராசசேகர மன்னனால் புலவர்களுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட ஊரே சங்கவேலியாகும். அதுவே தற்போது சங்குவேலி என்று வழங்கப்படுகிறது என்பது அவர்கள் கருத்தாகும்.

குறிப்பு– சில குறிச்சிகள் நிர்வாக வசதிக்காக வடக்கு, தெற்கு...... என்று பிரிக்கப்பட்டு வெவ்வேறு கிராமசேவகர் பிரிவுகளில் அடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, மருதனார்மடம் இணுவிலுக்குரிய குறிச்சியாக உள்ள போதிலும் அதன் ஒருபகுதி உடுவில் (ஜே/183) கிராமசேவகர் பிரிவில் அடக்கப்பட்டுள்ளது.

## இணுவில்

இணு+வில் இணு என்பது மூங்கில் வில்–குளம். எனவே மூங்கிலையும் குளத்தையும் தொடர்புபடுத்தி இணுவில் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். இணையிலி என்றழைக்கப்பட்ட நிலப் பரப்பே இணுவில் என்றானதாகச் சிலர் கருதுகின்றனர். இப்பிரதேசத்தில் தற்போதுள்ள கந்தசுவாமி கோவிலையண்டி ஒரு குளமும், அதற்குத் தென்கிழக்குப் பபகுதியில் மற்றொரு குளமுமாக இரண்டு வில்கள் இணையாக இருந்த காரணத்தால் இணைவில் என்று அழைக்கப்பட்டுப் பின்னர் இணுவில் ஆகியிருக்கலாம் என்பது வேறு சிலரின் கருத்தாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இணுவிலுள்ள குறிச்சிகள் சில

கமத்தான் குறிச்சி(கமக்காரர் காரணமாக), இது கமட்டான் என்றும் அழைக்கப் படுகிறது. மஞ்சத்தடி (இவ்விடத்தில் கந்தசுவாமி கோயிலுக்குரிய பிரசித்தி பெற்ற மஞ்சம் செய்யப்பட்டது, இளந்தாரி கோவிலடி(கோவில் காரணமாக), பாலவோடை, பூவோடை, பருத்தியடைப்பு (பருத்தி காரணமாக), மடத்துவாசல் (மடங் காரணமாக), கொட்டையடி, பின்னல், தம்புளான்வத்தை (தம்பலம் என்பது இலந்தை), மன்னன் தோட்டம், அங்கலப்பை(அங்கதம் என்றால் யானையுணவு, அங்கதப்பை என்பது அங்கலப்பையாயிருக்கலாம். பாலசுந்தரம் அவர்கள் அங்கலப்பாய் அதாவது அங்கலா+ பாய் என்று அங்கலா பரமேஸ்வரி தேவியுடன் தொடர்பாக இப்பெயர் ஏற்பட்டிருத்தல் கூடும் என்றொரு கருத்தையும் வெளியிட்டுள்ளார். வேம்போலை (வேம்பு காரணமாக), வட்டுவினி (வட்டு– வட்டுக்கத்தரி), பானையிட்டி, தேனாளொல்லை, சாரகீரி, கத்தலானை, அரசோனை, கொட்டம்பனை (பனை காரணமாக), பல்லப்பை(பல்லியாப்புலம் என்பதன் திரிபே பல்லப்பை என்று கூறப்படுகிறது. பல்லியம் என்பதற்குப் பல்வகை வாத்தியங்கள், குதிரைப்பந்தி என்னும் பொருள்களுள. இணுவையூர் இசைத்தமிழ் வளர்ச்சியுடன் பெருந்தொடர்புள்ளது. எனவே பல்வகை வாத்தியக் கலைஞர்கள் காரணமாக இப்பெயர் ஏற்பட்டிருத்தல் கூடும். குதிரைப் பந்தி காரணமாகவும் ஏற்பட்டிருக்கலாம்.

### தாவடி

தாவடி என்ற சொல்லுக்கு போர், பயணம் என்ற கருத்துக்களும், தாவடி போடுதல் என்பதற்குப் படையெடுத்தல் என்ற கருத்துக்களும் உள. எனவே முற்காலத்தில் போருக்கான பயண ஏற்பாடுகள் (போர்ப்படை புறப்பட்ட இடம்) செய்யப்பட்ட இடமாக இருந்த காரணத்தால் இவ்விடத்திற்குத் தாவடி என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் கூடும். யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் ஆனைப்பந்தி, ஆனைக்கோட்டை போன்ற இடங்களில் யானைப்படை நிறுத்தப்பட்டிருந்ததாகக் கருதப்படும் அதே வேளை கொக்குவில் (கொக்கு–குதிரை) குதிரைப் படையுடன் தொடர்புடையதாக இருந்திருக்கலாம் என்ற கருத்தை பாலசுந்தரம் அவர்கள் வெளியிட்டுள்ளார். இக்கட்டுரையில் ஏற்கனவே இணுவிலிலுள்ள பல்லியாப் புலம் குதிரைப் பந்தி காரணமாக ஏற்பட்ட ஓரிடமாக இருக்கலாம் என்பதும், அங்கலப்பை என்பது யானைகளுக்குரிய உணவு பெறுமிடமாக இருந்திருக்கலாம் என்பதும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. அந்த வகையில் இவ்விடங்களுக்கு மிக அருகில் அவற்றிற்கு மையஸ்தானமாக விளங்கும் தாவடி யுத்தசன்னத்தங்களின் ஆரம்ப இடமாக இருந்திருத்தல் மிகவும் சாத்தியமானதே.

### தாவடியிலுள்ள குறிச்சிகள் சில

பத்தனை (புல்வெளி காரணமாக), நுங்கியப்புலம்(நுங்கு–பனை காரணமாக), ஊமையன்சீமா(சீமா என்பது இடத்தைக் குறிக்கும்), நெல்லுப்பொரி, கலட்டி(கற்கள் நிறைந்த வளம் குன்றிய நிலம்), வண்ணான் காடு (சாதி காரணமாக), மரித்தோட்டம், பகதேவன்புலம்(தனிநபர் காரணமாக), மரியாபுலம், புலித்திட்டி (திட்டி–உயரமான திடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாலை

ஏழு+ஆலை ஏழுஆலயங்கள் அமைந்துள்ள காரணத்தால் ஏழாலையூர் என்ற பெயர் ஏற்பட்டு ஏழாலையாகி விட்ட தாக நா.முத்தையா அவர்களும், தி.க. முத்துச்சாமி அவர்களும், எடுத்துக் கூறியுள் ளனர். அவர்கள் அதற்குக் காரணமாக அமைந்துள்ள ஏழு ஆலயங்களையும் பட்டியலிட்டும் காட்டியுள்ளனர். அதே வேளை ஆலை என்பது ஆலமரத்தைக் குறிப்பதாகக் கொண்டு ஏழு ஆலமரங்கள் இருந்த காரணத்தால் ஏழாலை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்ற கருத்தையும் புறந்தள்ளி விட முடியாது. இவ்வூரிலுள்ள ஒரு குறிச்சிக்கு மர எண்ணிக்கையடிப் படையில் மூன்றிலுப்பை என்று அழைக்கப் படுவதும் குறிப்பிடத்தக்கது. (குமரிக் கண்டத் தில் ஏழு பனை காரணமாக ஏழ்பனைத்தீவு என்ற இடம் இருந்ததாக வரலாறு கூறுவதும் கவனிக்கத்தக்கது.)

## ஏழாலையிலுள்ள குறிச்சிகள் சில

கயட்டை (கயிட்டி) (கயட்டை மரங்காரணமாக), மாதிரை, தம்புவத்தை (தனிநபர் காரணமாக), துவரைக்கலட்டி (துவரஞ்செடி காரணமாக), மடத்துவாசல் (மடம் காரணமாக), கொல்லகடவை (சாதி காரணமாக), தச்சகடவை (சாதி காரண மாக), வண்ணாகடவை(சாதி காரணமாக), மாரியோடை (மாரிகாலத்தில் நீரோடுவது காரணமாக), கலட்டி (வளமற்ற நிலம் காரணமாக), புதுக்கிணத்தடி(புதிதாகக் கட்டப் பட்ட கிணறு காரணமாக, கிணறு அதிகம் இல்லாத காலத்தில் கட்டப் படும் போது அது புதுக்கிணறு. தற்போது அது பழையதாகி விட்டாலும் பெயர் மாற்ற மில்லை), இலந்தைகட்டி (இலந்தை காரண மாக), பட்டைமூலை, மஞ்சாடிக்கரை (மஞ்சாடி காரணமாக), நாவல் கிணத்தடி (நாவல்+கிணறு காரணமாக), சாடியடி (சாடி காரணமாக), வள்ளுவர்சேரி (வள்ளுவர் என்ற மக்கள் காரணமாக), நாவலடி(நாவல் மரங் காரணமாக), குறும்பன் வளவு (குரும்பர் இனம் காரணமாக), களபா வோடை, மயிலங்காடு(மயிலடிக் குருந்து காரணமாக), விழிசிட்டி(வீழி என்ற மரங் காரணமாக), சூராவத்தை(சூரன்+வத்தை என்று சிலர் பொருள் கொள்ள முற்பட்டா லும் சூரைச்செடி காரணமாக இவ்விடப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பது மிகவும் ஏற்புடையதாகப் படுகிறது. சூரல் என்பது பிரம்பைக் குறிக்கும். எனவே, சூரல்வத்தை என்பது சூராவத்தையாகியிருக்கலாம். பள்ளஞ்சீமா (சீமா என்பது இடத்தைக் குறிக்கும்), மாகியம்புலம்(மாசி என்றால் புதுவரம்பு. மாசியப்புலம் என்பது மாகியப் புலம் ஆகியிருக்கலாம். அளவெட்டிக்கு அருகியலும் மாகியப்புலம் என்று ஓரிடம் உள்ளது.), நாக்கியம்புலம், சிலும்பலாட்டி, கோட்டைக்காடு (முன்பு கோட்டையிருந்து காடானது பற்றி), பிலாப்பனை (பலா+ பனை), வடுகாம்பத்தனை (வடுகர்+ பத்தனை), மதியான் பத்தனை, கடவைத் தோட்டம், ஐம்மூலை, மாங்கொட்டை வயிரவர், குயத்திஓடை(சாதி காரணமாக), தொந்தனை, பெரியவிளான் (விளாமரங் காரணமாக), ஆலமடை (ஆலமரங் காரண மாக), உந்துடுவை (உந்துரு என்றால் பெருச்சாளி, எலி உந்துருவை என்பது உந்துடுவையாகியிருக்கலாம்), அயினா வடை, கச்சனாவட்டி, சவரோடை, (நீரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை காரணமாக), துன்னந்தை, மாலோடை, வேலவளவு, (வேலமரம் அல்லது வேலன் என்ற பெயர் காணமாக), உந்துவத்தை(பெருச்சாளிஅல்லது எலி காரணமாக), தேத்தாவோடை(தேத்தா- தேற்றாமரம்), பழவளவு(பழமை காரண மாக), புதுவளவு(புதியது காரணமாக), கட்டுடை, கேசாவத்தை, கட்டுவிளானை, ஞாயிற்றிக்காடு, புத்தாப்புலம், உயரிய நாவல்,புளியங்கிணத்தடி(புளி காரணமாக), மூன்றிலுப்பை, (மூன்று +இலுப்பை மரங் காரணமாக), உயிலுங்கை, சேங்காலை, ஊரியாட்டி, குப்பிழான் (தற்போது சிற்றூ ராக உள்ள இவ்விடத்தில் முற்காலத்தில் குப்பிளாய் செடிகள் மிகுதியாக இருந்ததா கக் கூறப்படுகிறது.), கற்கரை, பத்தகல், கோட்டார்வளவு, பள்ளிமால், தேராப்புலம், கழிமலை, வீரமனை, தைலங்கடவை, குயாம்புலம், எட்டுத்திட்டி, தலைப்பை, ஊரங்குணை(ஊரங்குணி கிணறு காரண மாக), எழுதலக்கலட்டி, குருக்கள்கேணி, கேணியடி, தோப்பு, மூட்டோலைவளவு.

## முடிவுரை

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று இடப் யெராய்வானது ஒரு வரையறையுள் முற்றுப் பெற்று விடும் ஒன்றல்ல. வலி.தெற்குப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள இடப்பெயர்கள் அனைத்தும் இக்கட்டுரையில் முழுமையாக ஆராயப்பட வில்லை. பல குறிச்சிகள் தற்போது தனியூர் களாக வளர்ச்சியடைந்துள்ளன. ஊர்களின் எல்லைகள் மறுசீரமைக்கப் பட்டதால் குறிச்சிகளும் வேறு ஊர்களுடன் பிரிந்தும் போயுள்ளன. ஒவ்வொரு ஊரும் அதில் அடங்கியுள்ள குறிச்சிகளும் தனித்தனி விரிவாக ஆராயப்படல் வேண்டும். அது மட்டுமன்றி அவ்விடப் பெயர்களுடன் தொடர்பாகக் காணப்படும் பிற இடங்களி லுள்ள இடப்பெயர்களுடன் அவை ஒப்பு நோக்கி ஆராயப்படுதலும் அவசியம். அப்போது தான் இடப்பெயர்களின் மூலங் களை ஒருவாறு உறுதியாகக் கூற முடியும். அதற்கு இக்கட்டுரை ஒரு தூண்டுதலாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### உசாவிய நூல்கள்


1) **திலகநாயகம் ப.ஊரும்பேரும் வலிகாமம் வடக்கில் ஓர் ஆய்வு-வலிகாமம் வடக்கு பிரதேசமலரில் இடம்பெற்ற கட்டுரை**

2) **பாலசுந்தரம் இ.இடப்பெயராய்வு- காங்கேசன் கல்வி வட்டாரம்-பண்டிதர் சி. அப்புத்துரை மணிவிழா வெளியீடு 1988**

3) **குமாரசுவாமி எஸ்.டபிள்யூ வடமாகாணத் துச் சில ஊர்ப்பெயர்கள் - யாழ்ப்பாணம் 1918 (யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலின் பின்னிணைப்பாக இது உள்ளது)**

4) **கதிர் தணிகாசலம்**-தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயராய்வும்-சரவணா பதிப்பகம்,127, மேற்குத்தெரு, இராகவ ரெட்டி காலனி, சென்னை-600095, முதல் பதிப்பு சூன் 1992

5) **கழகத்தமிழ் அகராதி** - திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், லிமிட்டெட், 79, பிரகாசம்சாலை, சென்னை 600 001, 1980.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) தமிழ் லெக்சிக்கன் - சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு

7) சாம்பசிவம்பிள்ளை T.V தமிழ் ஆங்கில அகராதி - தமிழ்நாடு அரசு வெளியீடு, 1994

8) பாலசுந்தரம் இ.ஈழத்து இடப்பெயர் ஆய்வு - றொறன்ரோ, கனடா 2002

9) வைத்திய மலையகராதி - பூமகள் அச்சுக்கூடம், சென்னை 1903

10) முருகேசமுதலியார் க.ச - குணபாடம் மூலிகைவகுப்பு - தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம், சென்னை 1988

11) சேந்தன்றிவாகரம் பதிப்பு 1897

12) சிவசண்முகராஜா சே. - கந்தரோடையிலுள்ள இடப்பெயர்களில் மூலிகைகள் - ஓர் ஆய்வு தமிழ்க்கந்தம் - கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை வெளியீடு.

13) ஞானப்பிரகாசர் சுவாமி யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (1928), Reprint-Asian Educational Services, New Delhi:Chennai (2003)

14) முத்துத்தம்பிப்பிள்ளை ஆ. - யாழ்ப்பாணச் சரித்திரம்,(1915) Reprint-Asian Educational Services, New Delhi:Chennai (2003)

15) இராசநாயகம் செ. - யாழ்ப்பாணச் சரித்திரம் - (1933), Reprint-Asian Educational Services, New Delhi:Chennai (2003)

16) சிவசண்முகராஜா சே. காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை முதல் பதிப்பு 2013

17) சிவசண்முகராஜா சே. யாழ்பாண மாவட்டத்தில் மூலிகைப் பெயர்களில மைந்த இடப்பெயர்கள் - ஓர் ஆய்வு 2014 (unblished)

18) சிவலிங்கம் J.சீர் இணுவைத் திருவூர் - அசைவத்திருநெறிக் கழகம், இணுவில் முதல் பதிப்பு 2004

19) முத்துச்சாமி தி.க.எங்களூர் ஏழாலையவூர் - குறிஞ்சி பதிப்பகம், 21/17, பீட்டர்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை-600014 முதற்பதிப்பு, 2004

20)முத்தையா நா.ஏழாலை - ஆத்மஜோதி பிரசுரம், நாவலப்பிட்டி, இரண்டாம் பதிப்பு 2003

21) கணபதிப்பிள்ளை சி.இருகவிராயர் விமரிசனக் கட்டுரை - தமிழ் மலர் ஒன்பதாம் வகுப்பு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1971 நூலில் இடம் பெற்ற கட்டுரை

22) புஷ்பரட்ணம் ப. தொல்லியல் நோக்கில் கந்தரோடையும் கதிரமலையும் - யாழ் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியா சாலை நிறுவுனர் அம்பலவாணர் கந்தையா நினைவுப் பேருரை

23) மணி பி.எஸ்.வளம் தரும் மரங்கள் - நியூ செஞ்சுரி புக்கவுஸ் பிரைவேட் லிமிட்டெட் சென்னை - 98, 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்றமிழ் நண்ணிய நயத்தகு நக்கீரன்

**தீர்த்தனா உமையவேள்**
ஆசிரியர் B.A (Hons),
தாவடி வடக்கு.

உலக மொழிகளுள் செம்மொழி எனும் புகழ் பெற்ற நம் தமிழ்மொழி நீண்ட இலக்கியப் பாரம்பரியம் கொண்டது. இப் பாரம்பரியத்தைப் பேணித் தந்த பெருமை சங்க காலப் புலவரையே சாரும். கடல் கொண்ட மதுரையிலும், கபாடபுரத்திலும் இருந்து தமிழை வளர்த்த புலவர் பெரு மக்கள் பலர். அவர்களுள் கபிலர், பரணர், நக்கீரர் மூவரும் குறிப்பிடத் தக்கவர்கள். இம் மூவருள்ளும் முதற்கண் வைத்துப் போற்றப்படும் பெருமையையும் தமிழ்ச் சங்கத்தலைவர் என்ற தகுதிப்பாட்டினையும் பெற்ற புலவர் நக்கீரர். கீரன் என்னும் இயற் பெயரைக் கொண்ட இவரது பெயருக்கு "ந" என்னும் சிறப்புப் பொருள்தரும் இடைச் சொல் வந்துள்ளது. சாத்தன், தத்தன், உதடன் முதலான பெயர்கள் புலவர்களது இயற் பெயராக வழங்கி வந்துள்ளமை போல இவரும் கீரன் என்னும் பிள்ளைப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டிருக்கலாம்.

பாலப்பன் என்பது இவரது பிள்ளைப் பெயர் எனச் சிலர் வாதிடுகின் றனர். பாலுக்கு க்ஷீரம் என்று வட மொழியில் கூறுவர். க்ஷீரம் என்ற வட மொழிச் சொல்லின் சிதைவாகிய கீரம் என்பது பாலுக்கு வழங்கி வந்திருக்க வேண்டும். ஆகவே பாலப்பனே கீரனாயிற்று என ஊகிக்க முடிகின்றது. சங்க இலக்கியங்களில் **அந்தில் இளங்கீரனார், அல்லங்கீரனார், புல்லங்கீரனார், இம்மென்கீரனார், காசிபன் கீரன்** அடங்கலாக இருபத்து மூன்று கீரனார் கள் உள்ளனர். இவற்றை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும் போது அக்காலத்தில் மக்கள் மத்தியில் பெரிதும் வழக்கிலிருந்த பிள்ளைப் பெயராக கீரன் இருந்துள்ளது. ஆகவே நக்கீரனாருடைய இயற்பெயர் கூடக் கீரனாக இருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வர முடிகின்றது.

நக்கீரர் என்பார் யார்? என ஆராய்ந்து பார்க்கின் இவர் சங்க காலத்தின் கடைச்சங்க முதற் புலவராய் இருந்து தமிழை வளர்த்த ஒருவர். அக்கால சமூகத் தில் இவருக்கு இருந்த மதிப்பும் சிறப்பும் காரணமாக பின்னாளில் வாழ்ந்த பலர் தமது சிறப்புக் கருதி இவரது பெயரை தமது பெயராகக் கொண்டிருந்துள்ளனர். சங்க கால ஔவையின் சிறப்புக் கருதி அவர் பெயர் கொண்ட புலவர் பலர் எவ்வாறு வாழ்ந்துள்ளனரோ அது போல்த்தான் நக்கீரர் என்னும் பெயர் கொண்ட புலவர் பெருமக்கள் பலர் வாழ்ந்துள்ளனர். நாம் நக்கீரரால் இயற்றப்பட்டதாகக் கருதப் படும் இலக்கிய வடிவங்களில் சில உண்மை யில் சில சங்ககாலத்தில் வாழ்ந்த நக்கீரரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றப்படாதிருக்கலாம். அவை சங்க நக்கீரரின் பெயர் வழித்தோன்றல்களால் இயற்றப் பட்டிருக்கலாம். இலக்கிய ஆதாரங்களின் படி சங்ககால நக்கீரரால் இறையனார் அகப்பொருள் உரை, நெடுநல் வாடை, திருமுருகாற்றுப்படை மற்றும் சங்கச் செய்யுள்கள் சிலவும் இயற்றப் பட்டுள்ளன. ஆகவே நக்கீரர் என்பார் ஒருவன் அல்ல பலர் என் றமுடிவுக்கு வரலாம்.

## இலக்கிய முயற்சிகள்

நக்கீரர் பாடியனவாகக் கருதப் படும் செய்யுட்கள் முப்பத்தேழு கிடைக்கப் பெற்றுள்ளன. இவை அகம், புறம் எனும் இரு பிரிவிலும் உள்ளடங்குகின்றன. அகம் பற்றியனவாக அகநானூற்றில் பதினேழு பாடல்களும், குறுந்தொகையுள் எட்டும் நற்றிணையுள் ஏழுமாக முப்பத்திரண்டு பாடல்கள் உள்ளன. புறம் பற்றியன மூன்று பாடல்களே யாகும். இவை தவிர குமரவேள் மீது பாடியனவாக பத்து வெண்பாக்கள் உள்ளன. இவையனைத்துமாகச் சங்ககால நக்கீரர் செய்த பாடல்களின் எண்ணிக்கை நாற்பத்தியேழு. இவர் இயற்றியதாகக் கருதப் படும் இலக்கிய வடிவங்கள் பதின் மூன்று ஆய்வாளர்களால் இனங் காணப் பட்டுள்ளது. அவை வருமாறு,

01) இறையனார் அகப்பொருள் உரை
02) திருமுருகாற்றுப்படை
03) நெடுநல்வாடை
04) கைகலைபாதிகாளத்திபாதியந்தாதி
05) திருவீங்கோய் மலை எழுபது
06) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை
07) திருவெழுக்கூற்றிருக்கை
08) பெருந்தேவபாணி
09)கோபப்பிரசாதம்
10) காரெட்டு
11) போற்றித்திருக்கலிவெண்பா
12) திருக்கண்ணப்பதேவர் திருமறம்
13) நக்கீரர் நாலடி நாற்பது

## நக்கீரரும் கர்ணபரம்பரைக் கதைகளும்

நக்கீரர் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளை தமிழில் நம்பி திருவிளையாடல், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல், கடம்பவனபுராணம் என்பன கூறுகின்றன. அதே போல் வட மொழியில் ஆலாஸ்ய மான்மியமும் கூறுகின்றது. இவையின்றி திருப்பரங்கிரிப் புராணத்திலும், காளத்தி புராணத்திலும் இவர் வரலாறு தொடர்பான குறிப்புக்கள் உள.

### அ) கொங்குதேர் வாழ்க்கை

தருமி என்பவன் ஆதி சைவ அந்தணன். மிகவும் ஏழ்மையானவன் அவனிடம் பொருள் இல்லை. அரச சபையில் சிறந்த பாடலுக்குப் பரிசு கிடைக்கும் என்ற அறிவிப்பைக் கேள்வியுற்றான். எப்படியாயினும் அதனைப் பெற்று விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு கடவுளிடம் இறைஞ்சினான். கடவுள் **கொங்குதேர் வாழ்க்கை** என்னும் பாடலைப் பாடிக் கொடுத்தார். தருமி செண்பகமாறனது அவைக்குச் சென்று புலவர் பெருமக்கள் முன்னர் பாடலை அரங்கேற்றினான். கடவுள் கீழ் வரும் பாடலைப் பாடிக் கொடுத்தார்.

**கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத்தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழிஇயநட்பின் மயிரியற் அரிவை**
**கூந்தலின் நறியவும் உளதே நீயறியும் பூவே**

தருமியின் பாடலின் பொருள் சிறப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த மாறன் பொற்கிளியை வழங்க எண்ணினான். ஆனால் அவைப்புலவரான நக்கீரரோ இப்பாடலில் பொருள் குற்றம் இருக்கின்றது என்றார். அதாவது பெண்களின் கூந்தலுக்கு மணம் செயற்கையானதேயன்றி இயற்கையல்ல. ஆனால் இப்பாடல் இயற்கை என்கின்றது. இது தவறு என வாதிட்டார்.

தருமி கவலையுற்று மீண்டும் கோயிலுக்குச் சென்று தமிழ் அருளிய பெருமானிடம் முறையிட்டார். அப்பெருமானே நன் பாட்டுப் புலவனாகி சங்கமேறி வாதிட்டார். நெற்றிக் கண்ணையும் காட்டினார். நக்கீரரோ **நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே** என வாதிட்டார். பெருமான் நீ வழிபடும் ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்குமா? என்றார். அதுவும் அப்படியே என்றார் நக்கீரர். அதனால் சினங் கொண்டார் நம் சிவனார். நக்கீரர் தீக் கொளுத்தப்பட்டு பொய்கையில் வீழ்ந்து ஈற்றில் இறைவனிடம் மன்னிப்புக் கோரினார் என்பது வரலாறு. இவ்வரலாற்றுக் குறிப்பை அப்பர் சுவாமிகள் தனது பாடலில் பின்வருமாறு கூறுகிறார்.

**நன்பாட்டுப் புலவனாய் சங்கமேறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்"**

**கல்லாடத்தில் பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக் கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறி பொற்குவை தருமிக்கு அற்புடனுதவி என்னுளங் குடி கொண்டிரும் பயனளிக்கும் கள்ளவிழி குழல் சேர் கருணையென்பெருமான்** எனக் கூறப்பட்டுள்ளது. கொங்குதேர் வாழ்க்கை எனும் பாடல் குறுந்தொகையுள் உள்ளடக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆ) பேராலவாயர் வாதம்

ஒரு நாள் புலவர்கள் பொருள் இலக்கணப்பொருள் அறியமுடியாது மயங்கியிருந்தனர். ஒரு புதுப்புலவன் **அன்பின் ஐந்திணை** என்று தொடங்கி அறுபது சூத்திரங்கள் கொண்ட அகப்பொருள் நூலை அவர்களிடம் கொடுத்தான் புலவர்கள் அப்பொருள் இலக்கணத்தோடு தமது செய்யுள்கள் பொருந்தி நிற்பதனைக் கண்டு மகிழ்ந்து அந்த நூலைப் போற்றினார். ஆனால் நக்கீரர் **"என் பாடல்களுள் ஐந்தாம் பாட்டுக்கு ஒப்பான பாடல் உங்கள் பாடல்களுள் ஒன்றுமேயில்லை** என்று கூறினார்.

நக்கீரரது செருக்கையழிக்க எண்ணிய அப்புலவன் அதற்கு நிகரான பிறிதொரு பாடலைப் பாடிக்காட்டி **"புலவர்களே இதற்குப் பொருள் கூறுங்கள்"** எனக் கூறினார். புலவர்கள் எவரும் எதுவும் கூறாது இருக்க நக்கீரரோ **"பாட்டுப் பிழையுடையது "** என்றார். ஆனால் புலவனோ **"இவன் பொறாமையுடையவன் யாரேனும் கூறுங் கள் என் கவி குற்றம் உடையதா"** என்று கேட்டு நின்றார். புலவர்கள் மௌனமாக இருந்தனர்.

அந்நிலையில் **'உங்கள் வழக்கைத் தீர்க்க இறைவனே புதுப் புலவனாய் உங்கள் முன் வந்துள்ளான்'** என்ற அசரீரி கேட்டது. அதனைக் கேட்ட நக்கீரர் தன் பிழை பொறுக்க இறைவனை வணங்கினார். இறைவன் தன் பெயர் மதுரைப் பேராலவாயர் எனக்கூறி மறைந்தார். அவர் செய்த பொருள் நூல் **இறையனார் பொருள்** என வழங்கலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ) ஆற்றுப்படை அருளியோன்**

ஒரு நாள் நக்கீரர் வடதிசையிலே இமயமலைக்கு அருகில் உள்ள ஒரு பெருங் காட்டினுள்ளே போகும் போது அங்கே ஒரு தடாகத்தைக் கண்டு நீராடி சிவபூசை செய்து கொண்டிருக்கையில் அத்தடாகக் கரையிலுள்ள தெய்வத்தன்மை பொருந்திய ஓர் ஆலமரத்திலிருந்து ஒரு பழுப்பு அவருக்கு முன்னே பாதி நீரிலும் பாதி நீர்ப்புறத்திலுமாக விழுந்தது. நீரிலே விழுந்த பாதி மீன் வடிவமும், மற்றையது பறவை வடிவமும் அடைந்து இரு பக்கத் திலும் இழுக்க நக்கீரர் அக் காரியத்திலே கருத்துச் செலுத்தினார் அதனால் சிவபூசைக் குத் தவறு உண்டாயிற்று.

அதன் முன்பு அவ்விடத்தே இதே போல் சிவபூசையில் வழுவிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேரை ஒரு மலைக்குகையில் அடைத்து இன்னும் ஒருவனுக்காகக் காத்திருந்த ஒரு கொடிய பூதம் நக்கீரரை எடுத்துக் கொண்டு போய் அக்குகையில் அடைத்து ஆயிரவராக்கி அவர்களை உண்ணுவதற்கு நீராடப் போயிற்று.

முன்அடைபட்டிருந்தவர்கள் நக்கீரரைப் பார்த்து **நாங்களெல்லாம் நெடுங் காலமாக இப்பூதத்தின் சிறையில் அகப் பட்டிருந்தும் இப்பூதத்தாலே உணவு முதலியவைகளைப் பெற்று பிழைத்திருந்தோம். இன்று உம்மாலே இப்பூதத்திற்கு இரையாகுங் காலம் சமீபித்தது** என்று அழுதார்கள். நக்கீரர் அது கண்டு மனமிரங்கி முருகக் கடவுளை எண்ணி திருமுருகாற்றுப்படை எனும் பிரபந்தத்தைப் பாடினார். உடனே முருகப் பெருமான் அவ் ஆபத்தை நீக்கி அவர்களை காப்பாற்றியருளி நக்கீரரைப் பார்த்து **இப்பிரபந்தத்தைத் தினந்தோறும் ஓதுபவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து வருவோம்** என்று வாக்குறுதி யளித்து மறைந்தார். இவ்வாறாக நக்கீரரின் வாழ்வியலோடு தொடர்புபட்ட கர்ணபரம் பரைக் கதைகள் சில செவிவழி மரபாகப் பேணப் பட்டு வந்தமைக்கு இலக்கிய ஆதாரங்கள் காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக் கது.

அமிழ்தினும் இனிய தமிழ் மொழியின் மீது பக்திமை கொண்ட நக்கீரன் தனது படைப்புக்களில் ஏதோவொரு வகையில் புதிது புனையும் புதுமைக் கவிஞனாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளதைக் காணலாம். நிறைந்த புலமையும், மெய்ஞ் ஞான வேட்கையும், வாதத்திறனும் வற்றாத ஊற்றுப்போல் அவரிடம் பெருக்கெடுத் தோடியுள்ளது. தமிழின் இனிமை, செழுமை, வழமை அறிந்து கவி புனைந்த மகாபுலவன் மிகத்தொன்மைக் காலத்தி லேயே நிறுவன ரீதியான சங்கம் எனும் அமைப்பை நிறுவி அதில் தலைமைத்துவப் பொறுப்பையும் ஏற்று தமிழை நலிவுறாது காக்கத் தலைப் பட்டான். மங்காப் புகழ் மிகு செம்மொழியாகத் தரணியில் தமிழ்மொழி தழைத் தோங்க அன்று விதைகளை வீசிச் சென்ற நக்கீரன் என்னும் நயத்தகு புலவன் புகழ் தரணியில் தழைத்தோங்கட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் பொது நூலகம் - இணுவிலின் கல்வி அபிவிருத்திக்கான அடித்தளம்

**பேராசிரியர் க.தேவராஜா**

**போஷகர்,**

**இணுவில் பொதுநூலகம்.**

## 1.0 அறிமுகம்

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெருமை மிக்க ஊர்களில் இணுவிலும் ஒன்றாகும். பெருமளவான மக்களைக் கொண்டுள்ள இவ்வூர் மண்வளம் நிறையப் பெற்ற ஒரு விவசாயக் கிராமமாகும். சைவத்தமிழ்ப்பண்பாட்டில் ஊறித் திழைத்த இக்கிராமம் பல அறிஞர்களையும் ஆற்றல் மிக்க கலைஞர்களையும் தன்னகத்தே கொண்ட பெருமைக்குரிய இடமாகும். கவி மாமணி வீரமணிஐயா, நாதஸ்வர வித்துவான் கோவிந்தசாமி, தவில் வித்துவான் என்.ஆர் சின்னராசா, வயலின் வித்துவான் இராதாகிருஷ்ணன் போன்ற மேதைகளை கொண்டதாக இணுவில் கிராமம் பரிணமித்தது. இணுவில் கிராமத்திலும், அயற் கிராமங்களிலும் வாழ்ந்து வரும் பொது மக்களினதும், மாணவர்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு உருவாக்கப் பட்டதே இணுவில் பொதுநூலகமாகும். **"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்"** என்ற முதுமொழிக்கிணங்க வாசிப்புப் பழக்கத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தும் நோக்குடன் இணுவில் பொதுநூலகம் உருவாக்கப் பட்டது.

## 2.0 இணுவில் பொதுநூலகத்தின் வளர்ச்சி

இணுவில் பொதுநூலகம் ஒரு நீண்டகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும். 1930ம் ஆண்டில் கணேசா வாசிகசாலை என்ற பெயருடன் நிறுவப்பட்ட இணுவில் பொதுநூலகம் நிரந்தரமான கட்டிட வசதியைக் கொண்டிராத காரணத்தால் இணுவில் தெற்கில் ஒரு நடமாடும் நூல் நிலையமாக இயங்கி வந்தது. பின்னர் 1986ம் ஆண்டில் இணுவில் பரராஜப் பிள்ளையார் கோவில் முற்புறத்தில் தற்காலிகமாக நிறுவப்பட்டது. ஆனால் 2002ம் ஆண்டில் இப்பொது நூலகம் அமைந்திருக்கும் காணியும் கட்டிடமும் நிரந்தரமாகக் கொள்வனவு செய்யப்பட்டு இணுவில் பொதுநூலகம் அங்கு அமைக்கப் பட்டது. இன்று பெருமளவான அதாவது 27,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வாசிக்கும் திறனை அதிகரிப்பதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால் இணுவில் பொது நூலகத்தின் வளர்ச்சி இன்று எல்லோரும் பிரமிக்கத் தக்க முறையில் நோக்கப்படுவதனைக் காணலாம்.

## 3.0இணுவில் பொதுநூலகத்தின் செயற்பாடுகள்

இணுவில் பொதுநூலகமானது மக்களுக்குத் தேவைப்படும் பல்வேறுபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளையும் ஆற்றும் நிறுவனமாக விருத்தி செய்யப்பட்டுள்ளது. இந்நூலகத்தின் மூலம் கல்வி, கலை,கலாசாரம், சமயம், இலக்கிய, அறிவியலுடன் தகவல்தொழில் நுட்பம் விளையாட்டுத்துறையிலும் ஈடுபாடு கொண்டதாக மாற்றம் பெற்றுள்ளது. இப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களை ஒரு உன்னதமான நிலைக்கு இட்டுச் செல்வதே இணுவில் பொதுநூலகத்தின் தொலை நோக்காகும்.

### 3.1 சனசமூகப்பணி

இணுவில் பொதுநூலகம் சன சமூகப் பணியை நிறைவேற்றும் வகையில் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் மக்கள் வாசிக்க வசதி செய்துள்ளது. வாரத்தில் ஏழுநாட்களுமே காலை 7மணி முதல் இரவு 9மணி வரை நூலகம் திறந்திருப்பதுடன் உள்ளூர்ப் பத்திரிகைகளும் தேசிய பத்திரிகைகளும் பெறப்பட்டு வாசிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்கின்றது. அதேநேரம் இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவருகின்ற எல்லாச் சஞ்சிகைகளும் இங்கு வாசிப்பதற்கான வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதன் காரணமாக முழுப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் வாசிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் ஒரே இடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2 நூல் இரவல் பெறுதல்

இணுவில் பொதுநூலகத்தில் இரவல் வழங்கும் பகுதியில் பெருமளவான நூல்கள் இருப்பதனால் அதனை வீடுகளுக்கு எடுத்துச் சென்று வாசிக்கும் வழக்கத்தைப் பெருமளவான மாணவர்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். அத்துடன் வாசிப்புப் பகுதியில் முக்கியமான புத்தகங்கள் பேணப்படுவதுடன் அவை ஒரு நாளுக்கு மட்டும் இரவலாக வழங்கப்பட முடியும். அத்துடன் பரீட்சை தொடர்பான வினா விடைப் புத்தகங்களும் வாசிப்புப் பகுதியிலேயே பேணப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக சிறுவர் நூலகம் என்ற ஒன்றும் உருவாக்கப்பட்டு அதில் சிறுவர்களுக்கான குட்டிக் கதைப் புத்தகங்கள் சிறுவர் பயிற்சிப் புத்தகங்கள் பாடநூல்கள் என்பன அங்கு இணைக்கப்பட்டுள்ளன.

### 3.3 கணனிப் பயிற்சி

இணுவில் பொதுநூலகம் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்றையும் நடாத்தி வருகின்றது. சிறுவர்கள் தொடங்கிப் பெரியோர்கள் வரை இங்கு பயிற்சி பெற முடிவதுடன் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு அரசின் **"நெலசல"** திட்டத்தின் கீழ் பெறுமதி கொண்ட சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இதனுடன் இணைந்ததாக இணையத்தள வசதிகளைப் பயன்படுத்துவதற்கும் வசதிகள் செய்யப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எமது நூலகத்தின் கணனிப் பயிற்சிப் பிரிவின் பயிற்றுனர் ஒருவர் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருவதுடன் இப்பகுதியில் மூன்று மாதங்கள் ஆறுமாதங்கள் கொண்ட டிப்ளோமாப் பயிற்சி நெறி நடாத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.4 படிப்பக வசதி

எமது பொதுநூலகத்தில் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக படிப்பகம் ஒன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் நிறுவப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் பகலிலும், இரவிலும் கற்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் அவர்களுக்கு கற்றலில் சந்தேகம் ஏற்படும்பொழுது அவற்றைத் தீர்த்து வைப்பதற்கென நூலகத் தின் அங்கத்தவர்களான ஆசிரியர்கள் உதவி யைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்று வதற்கு முன்பதாக க.பொ.த (சா.த) கருத் தரங்குகளும் க.பொ.த (உயர்தர) கருத்தரங் குகளும் ஒழுங்கு செய்யப் பட்டு நடாத்தப் படுவதுடன் அங்கு கற்பித்தலில் முன்னணி வகிக்கும் ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இதன் மூலமாக மாணவர்கள் பயனுள்ள கருத்தரங்குகளில் பங்குபற்றக்கூடிய வாய்ப்புக்களை வழங்க முடிகின்றது.

### 3.5 முன்பள்ளி வசதி

இணுவில் பொது நூலகத்தினால் நவீன வசதிகளுடன் கூடிய முன்பள்ளி யொன்று நடாத்தப் படுகின்றது. மூன்று வயதிற்கு மேல் ஐந்து வயது வரையுள்ள சிறார்கள் இங்கிணைந்து இரு வருடங்க ளுக்கு கற்பிக்கப்படுகின்றார்கள். இவர்க ளைக் கற்பிப்பதற்கென சிறப்பாகப் பயிற் றப் பட்ட ஆசிரியர்களாய் அமர்த்தப் பட்டி ருப்பதுடன் அவர்களுக்கென வருடாந்த விளையாட்டுவிழாவும், கலை விழாவும் நடாத்தப்பட்டு வருகின்றன. இவ் விழாக் களில் பங்குபற்றி சாதனை புரியும் மாண வர்களுக்கு பரிசளிக்கும் வழக்கமும் பின்பற்றப்பட்டு வருகின்றது. இவ்விழாக்க ளுக்கென கனடா அமைப்பு கிளையினர் நிதியுதவி வழங்கி வருவது குறிப்பிடத்தக்க தாகும். அத்துடன் சிறார்களின் விளையாட் டுக்கும் பொழுது போக்குக்குமாக சிறுவர் பூங்கா ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இச் சிறுவர் பூங்காவை மாலை நேரத்தில் ஏனைய சிறுவர்களும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்து.

### 3.6 விளையாட்டு அபிவிருத்தி

இணுவில் பொதுநூலகத்தினால் ஆண்டுதோறும் மார்ச்மாதம் 31ம் திகதி ஆண்டுவிழா நடாத்தப்படுகின்றது. இந்த விழாவை மையமாகக் கொண்டு பொது நூலகமானது விளையாட்டுப் போட்டி, பொது அறிவுப்போட்டி ஆகியவற்றை நடாத்தி அதில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதி மிக்க பரிசுகளை வழங்கி வருகின்றது. அது மட்டுமன்றி துடுப்பாட்ட சுற்றுப் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஆகியவற்றை யாழ்.மாவட்டத்தில் நடாத்திப் பொது மக்களிடம் விழிப்பு ணர்வை ஏற்படுத்தி வருகின்றது. இவற்றின் அடிப்படையிலேயே வலி.தெற்குப் பிரதேச சபையின் சிறந்த பொதுநூலகத்திற்கான விருதை இருமுறை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இணுவில் பொதுநூலகத்திற்குக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

### 3.7 எழுத்தாளர்களை ஊக்குவித்தல்

இணுவில் பொது நூலகமானது வெளிநாட்டிலிருந்து வரும் கல்வியாளர் களை வரவழைத்து சொற்பொழிவுகளை நடாத்தி வருகின்றது. இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்துவரும் அறிஞர்கள் இங்கி லாந்து, கனடா போன்ற பாகங்களிலிருந்து வரும் அறிஞர்களும் இதில் அடங்குவர். இது மட்டுமன்றிப் பல எழுத்தாளர்களால் ஆக்கித் தரப்படும் நுல்களின் வெளியீட்டு விழாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி எமது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டு வருகின்றன. இது நூலாக்கப்பணியில் ஈடுபட்டிருக்கும் எழுத்தாளர்களுக்கான ஊக்குவிப்பாக அமைவதுடன் மேலும் மேலும் அவர்களின் நூலாக்கப் பணியில் ஈடுபட எமது பங்களிப்பையும் வழங்கிவிட முடிகிறது.

### 4.0 நூலக அங்கத்துவமும் நிர்வாகமும்

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எவ்வாறு மண்ணைத் தோண்டும் பொழுது நீர் சுரந்து வருமோ அதேபோல் வாசிப்பதனால் அறிவு மேம்பட்டு வரும் என்பதற்கிணங்க வாசிப்பைத் தூண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாகவே எமது கிராமத்தில் வாழுகின்ற இளைஞர் யுவதிகளில் 160 பேர் ஆயுட்கால அங்கத்தவர்களாக இருப்பதுடன் அவர்களில் இருந்து ஆண்டு தோறும் புதிய நிர்வாகசபை தேர்ந்தெடுக்கப் பட்டு நிர்வாகம் ஒப்படைக்கப்படுகிறது. இவர்களே அவ் வருட நிர்வாகத்திற்குப் பொறுப்பாக உள்ளதுடன் சுதந்திரமாகத் தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துவர்.

### 5.0 எதிர்கால நூலக அபிவிருத்தி

இணுவில் பொதுநூலகம் உருவாக்கப்பட்டதிலிருந்து ஆண்டு தோறும் வளர்ச்சியடைந்தே வந்துள்ளது. செயற்பாடுகளிலும் சரி, அங்கத்தவர் எண்ணிக்கையிலும் சரி அதன் வளர்ச்சியைக் கண்டு கொள்ள முடிகின்றது. அண்மைக்காலத்தில் ஆங்கில வகுப்புக்களை நடாத்துதல், சிங்கள வகுப்புக்களை நடாத்துதல், நூல்கள் வெளியீடு செய்தல், இரத்ததான நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல், மருத்துவ முகாம் நடாத்துதல் என்ற வகையிலே பழைய செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மேற்கூறிய ஐந்து செயற்பாடுகளையும் புதிதாக ஆரம்பித்துள்ளது. இதற்கு மேலதிகமாக நவீன முன்பள்ளியொன்றினை நிறுவப் பல மில்லியன் ரூபா செலவில் காணியைக் கொள்வனவு செய்து கட்டிடமொன்றை நிறுவுவதற்கான அத்திபாரம் இடப்பட்டு கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் ஆங்கிலத்திலும், தமிழிலுமாக நவீன கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் முன்பள்ளி விரைவில் ஆரம்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையிலேயே முதலிடம் வகிக்கக் கூடிய ஒரு பொதுநூலகமாக இணுவில் பொதுநூலகத்தை மாற்றம் பெற வைப்பது எமது கடமையாகும்.

### முடிவுரை

சமுதாய வளர்ச்சிக்காக சேவையாற்றிவரும் இணுவில் பொதுநூலகமானது இன்று இலங்கையில் இயங்கிவரும் நூலகங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக இயங்கி வருவது கண்டு நாம் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கிடைக்கின்ற மக்களின் ஆதரவே இதன் வளர்ச்சிக்கான தூண்டு கோல் எனக் கொள்ள முடியும். பல்வேறு துறைசார்ந்த நிபுணர்களிடமிருந்து பெறப்படும் ஆலோசனைகளும், வழிகாட்டல்களுமே எமது இணுவில்பொது நூலகத்தை வெற்றிப்பாதையில் வழிநடத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இணுவில் பொதுநூலகமானது தனது சேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவு படுத்துவதன் மூலம் மேலும் சமுதாய அபிவிருத்திக்கு உதவலாம் என்ற உயர் சிந்தனையைக் கொண்டதாக மாற்றம் பெற்றுள்ளதுடன் அதுவே உன்னதமான வாழ்வுக்குவகை செய்யும் என்ற நம்பிக் கையுடன் எமது அங்கத்தவர்களைச் செயற் படவைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலைத்தேய அறிஞர்களின் தமிழ்ப்பணிகள்

**ம.பா.மகாலிங்கசிவம்**
**ஆசிரிய ஆலோசகர்**
**வலிகாமம் கல்வி வலயம்.**

தமிழகத்தையும், ஈழத்தையும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலியோர் வெவ்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு காலப்பகுதிகளிலும் ஆட்சி செய்தனர். தாம் கைப்பற்றிய நாடுகளிலே தமது ஆட்சியை நிலைபேறுடையதாக்கு வதற்கு அந்நாட்டு மக்களைத் தமது சமயத்திற்கு மாற்றுவதே சிறந்த வழியென இவர்கள் அறிந்து கொண்டனர். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மிஷனரிமார் களைச் சேர்ந்தவர்களை அழைத்து வந்தனர்.

இவ்வாறு மதம் பரப்புவதற்காக வருகை தந்த மேலைத்தேய மத போதகர்கள் மதம் பரப்புவதுடன் மட்டும் நின்று விடாமல் தாமும் தமிழைக் கற்றுத் தமிழ் பண்பாட்டுடன் வாழ்ந்து பல்வேறு வகையான தமிழ்ப்பணிகளையும் செய்துள்ளனர். இவ்வகையில் தமிழகத்திற்கும், ஈழத்திற்கும் வந்து தமிழ் கற்றுத் தமிழ்ப்பணியாற்றி மேலைத்தேய அறிஞர்களுள் முக்கியமானவர்களின் பணிகளை எடுத்துக் கூறுவதாக இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

### 1. வீரமாமுனிவர்

தமிழ்ப்பணியாற்றிய மேலைத் தேயத்தறிஞர்களுட் பல்பரிமாண ஆளுமையுடன் பரந்த வகையிலே தமிழ்ப்பணியாற்றியவராக வீரமாமுனிவர் விளங்குகின்றார். இத்தாலியில் 04.11.1742இல் பிறந்த இவரது இயற்பெயர் கொன்ஸ்டன்ரைன் ஜோசப்பெஸ்கி என்பதாகும். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் 1709ஆம் ஆண்டு இயேசுசபையின் ஒருவரான பின்னர் 1710ஆம் ஆண்டு தமிழகம் வந்து மதுரையிலே தங்கியிருந்து சமயப்பணியுடன் தமிழ்ப்பணியும் ஆற்றினார். சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ்கற்றுத் தமிழிலும்பிற மொழிகளிலுமாக 23நூல்களை இயற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

#### 1) கவிதைத்துறை

தமிழைக்கற்றது மட்டுமல்லாமல் தமிழிலுள்ள யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பவற்றையும் நன்கு கற்றுத் தேர்ந்து காப்பியம் ஒன்றையே இயற்றும் அளவிற்குச் சிறந்த கவித்துவம் மிக்கவரானார். முதல் கிறிஸ்தவ தமிழ்க்காப்பியமான தேம்பாவணியை 3கண்டங்கள், 36 படலங்கள், 3615 பாடல்களைக் கொண்டதாக விருத்தப்பாவில் இயற்றினார். இயேசு நாதரின் வரலாற்றை எடுத்துக் கூறுவதாக இக்காவியம் உள்ளது. தமிழ்க் காப்பிய வரலாற்றிலேயே தமிழைத்தாய் மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்ட காவியம் என்றும் பெருமை தேம்பாவணிக்கேயுள்ளது.கித்தேரி அம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாள் அம்மானை, அடைக்கல நாயகி வெண்பா, அன்னை அழுங்கல் அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்களையும் அவர் இயற்றியுள்ளார்.

### 2. அங்கத இலக்கியப்பணி

செய்யுள் நடையில் தமிழ் இலக்கியங்கள் இயற்றப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் உரைநடையில் பரமார்த்தகுரு கதை, பாமனன் கதை என்றும் இரு அங்கத இலக்கியங்களை வீரமாமுனிவர் இயற்றினார். சுவிசேஷக பூரண குருவான பரமார்த்த குருவையும் மடையன், மட்டி, மிலேச்சன் முதலிய மாணவர்களையும் அடிப்படையாகக் கொண்டு மிகுந்த நகைச் சுவைத் தன்மை பொருந்திய கதையாகப் பரமார்த்த குரு கதை உள்ளது.

### 3. அகராதி முயற்சிகள்

மேலைத்தேயத்தோர் வருகைக்கு முன்னர் ஒரு சொல்லின் பொருளை அறிந்து கொள்ளச் செய்யுள் வடிவில் அமைந்த நிகண்டுகள் தமிழின் பயன்பாட்டில் இருந்தன. இவற்றின்மூலம் பொருளைத் தேடியறிவது சிரமமான விடயமாகும். இந்நிலையில் வீரமாமுனிவர் 1732ம் ஆண்டு சதுரகராதியை வெளியிட்டார். ஆங்கில Dictionary முறையைப் பின்பற்றி அகர வரிசையில் சொல்லின் பொருளை எடுத்துக் கூறுவதாகச் சதுராகராதி அமைந்தது. தமிழ் – லத்தீன், தமிழ் – பிரெஞ், லத்தீன் – தமிழ், பிரெஞ் – தமிழ், போர்த்துகீசம் –தமிழ் என மேலும் 5 அகராதிகளையும் வெளியிட்டு குறித்த மொழிச்சொற்களின் பொருளைத் தமிழர்களும், தமிழ் மொழிச் சொற்களின் பொருளை மற்றவர்களும் அறிந்து கொள்ள உதவினார்.

### 4. மொழிபெயர்ப்புத்துறை

தமிழ்மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களை மேலைத்தேயர் அறிந்து கொள்வதற்காகத் திருக்குறள், தேவாரங்கள், திருப்புகழ், ஆத்திசூடி முதலியவற்றின் சில பகுதிகளையும் ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்த்தார். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தமை குறிப்பிடத்தக்க தாகும்.

### 5. உரைநடை நூல்கள்

கிறிஸ்தவசமயக் கருத்துக்களைத் தமிழில் எடுத்துக்கூறுவதாக வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக்கண்ணாடி முதலிய நூல்களை உரை நடையில் எழுதி வெளியிட்டார்.

### 6. எழுத்துச்சீர்திருத்தம்

ஆரம்பகாலத்தில் குறில் எழுத்துக்களையும், நெடில் எழுத்துக்களையும் வேறுபடுத்தப் புள்ளியிட்டு எழுதவேண்டும் என்ற விதி இருந்தது. உதாரணம் எ(குறில்), ஏ(நெடில்), ஒ(குறில்), ஓ(நெடில்) இதே வேளை ஏடுகளில் எழுத்தாணிகளால் எழுதும் போது புள்ளியிட்டால் ஏடு கிழிந்து விடும். எனவே புள்ளியிடாமலே எழுதினார்கள். உதாரணம் மனனன(மன்னன்) இதனால் எழு என்ற சொல் எழு(ஏழு) என்பவற்றுள் எது என்பதைக் கண்டறிவது கடினமாக இருந்தது. இந்நிலையை மாற்றி வீரமாமுனிவர் எ(குறில்), ஏ(நெடில்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒ(குறில்), ஓ(நெடில்), கெ(குறில்), கே (நெடில்)என எழுதும் வழக்கத்தைக் கொண்டு வந்தார்.

**7. இலக்கணத்துறை**

பல்பரிமாண ஆளுமை மிக்கவரான வீரமாமுனிவர் இலக்கணத்துறையிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். இவரது இலக்கண நூல்களுட் சிறந்ததாக அமைவது தொன்னூல் விளக்கம் ஆகும். இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் எடுத்துக்கூறும் ஒரு நூலாகும். எழுத்து வழக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேச்சு வழக்கைத் தமிழ் இலக்கணநூல்கள் புறக்கணித்து விட்ட நிலையில் பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் கூறுவதாகக் கொடுந் தமிழ் இலக்கணம்என்னும் நூலை வீரமாமுனிவர் எழுதினார்.

**2.றொபேட் கால்டுவெல்**

அயர்லாந்தில் 07.05.1814இற் பிறந்தவர் கால்டுவெல். திராவிட மொழியியலின் தந்தை என்று போற்றப்படுபவர். கிளாஸ்கோ பல்கலைக்கழகத்திற் கல்வி பயின்ற இவர் இலண்டன் மிஷனரி கெரசைட்டி என்னும் கிறிஸ்தவ மதக் குழுவுடன் சேர்ந்து மதத்தைப் பரப்புவதற்காக 1838ல் சென்னைக்கு வந்து மதப் பணியை ஆரம் பித்தார்.

இவரது தமிழ்ப் பணிகளுள் முதன்மையானது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலாகும். ஆரம்ப காலத்தில் தமிழ்மொழி சமஸ்கிருத மொழியிலிருந்தே கிளைத்து வந்தது. என்ற கருத்து நிலவியது. சமஸ்கிருதத்தைத் தேவ பாஷையாகவும், தமிழை நீசபாஷையாக வும் வடமொழி அறிஞர்கள் கருதினர். தமிழர்களும் கூட அதீத வடமொழி ஆர்வத் தால் தமிழை இழிவு படுத்தவே முயன்றனர். வடமொழியில் இல்லாத தமிழுக்கேயிரிய சிறப்பு எழுத்துக்கள் எ, ஒ, ழ், ன், ற் என்னும் ஐந்தும் ஆகும். இதனைக் கருத்திற் கொண்ட நாயக்கர்கால இலக்கண நூற் புலவர் ஒருவர்

**"ஐந்தெழுத்தால் ஒருபாஷையென்று அறையவும் நாணுவர் அறிவுடையோர்"**

என்று ஐந்தேஐந்து சிறப்பெழுத்துக்களை மட்டும் கொண்ட தமிழை அறிவுடையோர் ஒரு மொழி என்று கூறவே வெட்கப் படுவார்கள் என்றார்.

இந்நிலையில் கால்டுவெல் தமிழ், மலையாளம், தெலுங்கு முதலிய 12 மொழிகளை ஆராய்ந்து அவையனைத்தும் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சமஸ்கிருத மொழியிலிருந்தும் வேறுபட்டவை என்றும் தனது திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் (Acomparative Grammar of the Dravidian Languages) நூலின் மூலம் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவினார். திராவிட மொழிகளில் தமிழே தொன்மையானதும் இலக்கிய, இலக்கண வளமுடையதும் ஆகும் என்ற கருத்தை வலியுறுத்திய கால்டுவெல் திராவிட மொழிகளின் பண்புகளை விளக்குவதற்கான பெரும்பாலான உதாரணங்களைத் தமிழிலிருந்தே எடுத்துக்காட்டினார். இந்த நூல் வெளியீட்டின் பின் (1856) திராவிட மொழியியல் பற்றிய ஆய்வுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலராலும் பெருவீச்சுடன் முன்னெடுக்கப் பட்டுதமிழ்மொழியின் சிறப்பு உலகெங்கும் உணரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

தமிழ்மொழிக்குடும்பம் ஒன்று இருப்பது கண்டு பிடித்தது இவரல்லர் எனினும் அதற்கான சான்றுகளை ஒருங்கிணைத்து உறுதியப்படுத்தியவர் இவரே என தோமஸ் ட்ரோட்மன் கூறுவதும் (Inventing the History of South India ) நினைவிற்கொள்ளத்தக்கதாகும். நற்கருணைத்தியான மாலை, தாமரைத்தடாகம், பரத கண்ட புராதனம் முதலிய தமிழ் நூல்களை யும் (A Political and General History of Timnevely ) என்ற ஆங்கில நூலையும் வெளியிட்டார்.

**3. டாக்டர் கிறீன்**

தமிழ்ப்பணியாற்றிய மேலைத் தேயத்தவருள் முக்கியமான இன்னொருவர் டாக்டர் கிறீன் ஆவார். சாமுவேல் பிஸ்க்கிறீன் 10.10.1822இல் அமெரிக்காவிற் பிறந்தவர். கிறிஸ்தவ சமய ஊழியராகவும் தன்னை ஆக்கிக் கொண்டவர். 1847இல் யாழ்ப்பாணம் வந்தடைந்து வட்டுக் கோட்டையிலே தனது மருத்துவத்துறையிற் கற்பித்தற் பணியை ஆரம்பித்தவர் 1848இல் மானிப்பாய்க்கு மாற்றம் பெற்று வந்து மானிப்பாயில் மருத்துவநிலையம் ஒன்றைத் தொடங்கினார். இன்று இவ்வைத்திய சாலையே மானிப்பாய் கிறீன் நினைவு மருத்துவமனை என அழைக்கப் படுகிறது.

மருத்துவக் கல்வியைத் தமிழிலேயே கற்பிக்க விரும்பிய கிறீன் அதற்குரிய நூல்கள் தமிழில் இல்லாத குறையை உணர்ந்து கொண்டார். ஆங்கிலத்திலுள்ள நூல்களைத் தழுவியும், மொழிபெயர்த்தும் 24 நூல்களை எழுதியதாக அறிய முடிகின்றது. மனுஷகரணம், கெமிஸ்தம், கட்டரின் அங்காதிபாதம், சுகரணம், மோன்கெல்ஸ், மாதர் மருத்துவம் முதலிய நூல்கள் அவற்றுட் குறிப்பிடத்தக்கவை. இவ்வகையில் மருத்துவக்கல்வியைத் தமிழ் மூலம் வழங்க முடியும் என்பதை 19ஆம் நூற்றாண்டிலேயே எடுத்துக்காட்டிய ஒருவராக டாக்டர் கிறீன் உள்ளார்.

பிறமொழிநூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது அவர் பயன் படுத்திய விதிமுறைகள் பிற்காலத்தில் தமிழ்க் கலைச்சொல்லாக்க முயற்சிகளுக்குத் துணை நின்றமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

**4. ஜீ.யு.போப்**

24.04.1820ல் கனடாவிற் பிறந்தவர். ஜீ.யு.போப் கிறிஸ்தவசமயப் போதகராக வந்து தமிழகத்தில் தங்கியிருந்து ஏறத்தாழ 40 வருடங்கள் தமிழுக்குப் பணியாற்றியவர். இராமானுஜக்கவிராயர் முதலியவர்களிடம் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுக்கொண்டார். புறநானூறு, நன்நூல், திருவாசகம், நாலடியார் போன்ற நூல்களையும் நன்கு கற்றார். ஆங்கிலச் சஞ்சிகைகளில் தமிழ் மொழி தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார். 1886ம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதனைத் தொடர்ந்து நாலடியார், திருவாசகம் என்பனவும் அவரால் மொழிபெயர்க்கப் பட்டன. புறப் பொருள் வெண்பா மாலை புறநானூறு, திரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட்பயன் முதலிய நூல்களைப் பதிப்பிக்கும் பணியையும் மேற்கொண்டார்.

முதுமை அடைந்திருந்த வேளையில் அவர் தனது நண்பர் ஒருவரிடம் தெரிவித்த இறுதி ஆசைகள் மூன்றும் அவரது தமிழ்ப்பற்றை எடுத்துக் காட்டுகின்றன.

1) இறப்புக்குப் பின் தனது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என எழுத வேண்டும்.

2) தனது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறு பகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையாக அமைய வேண்டும்.

3) கல்லறையில் தன்னை அடக்கம் செய்யும் போது தான் மொழி பெயர்த்து வெளியிட்ட திருவாசகம், திருக்குறள் என்பவற்றையும் வைக்க வேண்டும் என்பனவே அவரது விருப்பங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௐ விழித்திடு, செயற்படு, வழிபடு

**கலாபூஷணம் சக்தி தியாகராசா**
51/43 சேச்லேன்,
உடுவில், சுன்னாகம்.

மனிதம் பல கூறுகளைத் தன்னகத்தே கொண்ட உன்னத தொகுப்பு ஆகும். மனிதனை உடல், உள்ளம், அறிவு, ஆன்மா என்னும் பகுதிகள் சிறப்போடு ஆட்சி செய்கின்றது. இவை யாவும் ஒருமைப் பட்டிருக்கும்போதே மனிதன் தனக்குள் மகிழ்ச்சியை, ஆரோக்கிய சுகவாழ்வை நிறைவை காண்கின்றான். கிடைத்தற்கரிய மனிதப்பிறவி எமக்குக் கிடைத்துள்ளது. ஆகையால் இந்தப் பிறவியிலே நாம் இறையருளைத் தேடிக் கொள்ள வேண்டும். இதனாலன்றோ சித்தர்கள், ஞானிகள் கடவுளையடைய கடும் தவம் செய்தார்கள். அவர்கள் வாழ்ந்து காட்டி பல பாடல்கள் தந்துள்ளார்கள். அப்பாடல்களே ஆன்மீக விழிப்புக்குத் துணையாக உள்ளன.

அகத்தியர் தொடங்கி பதினெட்டு சித்தர்களின் ஞானஅறிவின் வாயிலாக உடல், உள்ளம், ஞானச்செய்திகள் எங்களுக்கு வழிகாட்டுகின்றன. உடல் ஆரோக்கியம் பெற மூலிகை சார்ந்த வைத்திய முறைகளைத் தந்துள்ளார்கள். உடல் ஆரோக்கியம் இருந்தால் தான் இறைவனை வழிபட ஊக்கம் கிடைக்கும்.

எம்மையெல்லாம் படைத்துக் காக்கும் கடவுள் படைக்குமுன் அனைத்தும் உருவமற்று சுத்த வெளியாய், நீர்க் குணமாய், உயிரற்று இருந்தது. படைப்பின் மூலப் பிரகிருதி தோன்றும் போது வெண்மை, சிவப்பு, கறுப்பு ஆகிய மூன்று வித நிறங்களோடு மூன்று வித சக்திகளாயிற்று. இவை முறையே மாயை, அறியாமை, அகங்காரம் ஆகும். இந்த சக்தியில் இருந்தே சுவை, ஒளி, ஊறு, ஓசை , நாற்றம் ஆகியன தோன்றின. இந்தப் பஞ்ச தன்மாத்திரையிலிருந்தே நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் பஞ்ச பூதங்கள் உருவாகின. இந்த மாயை உலகமானது தோன்றி மறைந்து உயிர்களை பிறப்பு, இறப்புக்கு மீண்டும் மீண்டும் ஆளாக்கிக் கொண்டேயிருக்கிறது.

எமது உடலானது அவரவர் கையால் எட்டு சாண் அளவு நீளமும், நாலு சாண் அளவு பருமனும், தொண்ணூற்று ஆறுவிரல் கட்டைப் பிரமாணமும் உள்ளதாகும். இந்த உடலில் தொண்ணூற்று ஆறு தத்துவங்கள் உள்ளன. இவை யாவும் பூரண நிலையில் ஒரு மனிதனால் ஆளப்படும் பொழுது ஆரோக்கிய சுக வாழ்வையும், ஆன்மீக விருத்தியையும் பெற்றிடலாம் என மகான்கள் கூறியுள்ளார்கள்.

எமது உடல், கண்கள் இரண்டு, செவிகள் இரண்டு, மூக்கு துவாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு, வாய் ஒன்று, கும்பம் ஒன்று, குதம் ஒன்று ஆகிய ஒன்பது வாசல்களைக் கொண்டது. ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கு. அவை பஞ்சபூதங்கள் ஐந்து, பொறிகள் ஐந்து அவை உடல், வாய், கண், மூக்கு, செவி, இயந்திரங்கள் ஐந்து அவை வாய், கை, கால், குதம், கருவாய். பஞ்ச தன்மாத்திரைகள் அவையாவன சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் அதாவது நீர், நெருப்பு, காற்று, மண், ஆகாயம். ஆன்ம தத்துவங்களில் நான்கு அவை மனம், அறிவு, நிறைவு, முனைப்பு என்பன. இவற்றின் இயல்புகள் மனம் நினைக்கும், அறிவு நிச்சயிக்கும், முனைப்பு மூண்டெழும்பும், நினைவு மூன்றிற்கும் காரணமாய் இருக்கும்.

உடல் தத்துவங்கள் தொண்ணூற்று ஆறில் தாதுக்களின் தாக்கம், தாதுக்கள் ஏழு அவையாவன சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, எலும்பு, மூளை, வெந்நீர் (சுக்கிலம் அல்லது சுரோனிதம்)

உடல் தத்துவங்கள் தொண்ணூற்று ஆறில் ஐவுடம்புகள் அவை உணவுடம்பு, 2காற்றுடம்பு, 3மனவுடம்பு, 4அறிவுடம்பு, 5இன்பவுடம்பு அடுத்ததாக திரிகுணங்கள் மனவெழுச்சி, 2 மயக்கம், 3 அமைதி, மனவெழுச்சிகள் களிப்பு, அகங்காரம், கோபம், இடும்பை, புகழ், ஈகை மயக்க குணத்தின் தன்மைகள்: தூக்கம், சோம்பல், அலட்சியம், மோகம், சம்போகம், திருட்டுத் தனம், கள்உண்ணல் என்பன. அமைதியின் குணங்கள்: வாய்மை, கருணை , பொய் யாமை, சொல்லாமை, களவின்மை, கோப மின்மை, பொறுமை, உயிர்களிடம் அன்பு, அடக்கம், விரதம், ஆனந்தம் ஆகிய குணங் கள் ஆகும். உடல் தத்துவங்களில் 1 ஆணவமலம், 2 மாயை மலம், 3 வினை மலம் ஆகிய திரிமலங்கள் ஆகும். உடல் தத்துவத்தில் முப்பிணிகள் அவை வாதப் பிணி , பித்தப்பிணி, சிலேத்தும பிணி உள் ளன. விகாரங்கள்எட்டு அவை ஆசை, சினம், கருமித்தனம், மருள், செருக்கு, பொறாமை, இடபம், அகங்காரம் உடல் தத்துவத்தில் ஆறு ஆதாரங்கள் அவை மூலாதாரம், சுவாஷடா னம், மணிபூரகம், அனாதகம், விசுத்தி, ஆக்கினை தொண் ணூற்று உடல்தத்துவத் தில் மண்டலங்கள் மூன்று, நாடிகள் பத்து, அவத்தைகள் ஐந்து, நனவு, கனவு, உறக்கம், நிட்டை, உயிர்ப்ப டக்கம் என்பன.

ஐம்பொறிகள் ஐந்தும் கர்மேந்தி ரியங்கள் ஐந்தும் தன்மாத்திரைகள் ஐந்தும், பிராணங்கள் ஐந்தும், அகக்கருவிகள் நான்கும் இவற்றுடன் உயிரும், இறைவனும் இரண்டறக் கலந்து ஐக்கியமாவதே மோட் சம் அல்லது வீடாகும். நாம் மன இருளை நீக்கி அங்கு அருள் ஒளியை எமது தினசரி வழிபாட்டால் ஏற்ற வேண்டும். நால்வர் பாடிய தேவார, திருவாசகங்களை பாடிவழி படல் வேண்டும் இயமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்டாங்க யோக வழியில் எம்மைப் புனித ராக்க வேண்டும். இறை நாமங்களைத் தின மும் சொல்லிப் பத்மாசனம், சுகாசனத்தில் இருந்து தியா னிக்க வேண்டும். சகல உயிர் களையும் எம்முயிர் போல அன்பு, கருணை காட்ட வேண்டும். அவர்களிடத்தில் இறைவ னைக் காணும் பக்குவநிலை நாளடைவில் எமக் குக் கிடைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரைக்கீழ் நீரும், நீர் மாசாக்கமும்

**Dr.ரு.வேலாயுதமூர்த்தி**

**சிரேஷ்ட விரிவுரையாளர்,**

**இரசாயனவியல்துறை,**

**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**

01) யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலத்தடி நீர் மிகவும் அதிகமாக காணப்படுகின்ற பிரதேசங்களாக வலிகாமம் தெற்கு, தென்மராட்சி, வடமராட்சி மற்றும் ஊர்காவற்றுறை போன்றவற்றைக் குறிப்பிடலாம். நிலத்தடி நீரை எமது அன்றாடத் தேவைகளுக்கும், நீர்ப்பாசனத் தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றோம். வலிகாமம் பிரதேசத்தில் அதிகளவு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படுகின்றது. சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்றவாறு பயிர்ச்செய்கையினையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. பயிர்ச்செய்கையின் போது நீர்ப்பாசனத் தேவைக்கான அதிகளவான நீரைப் பயன்படுத்துவதனால் நீரின் அளவில் குறை வு ஏற்படுவதுடன் அளவுக்கதிகமான அசேதன வளமாக்கியின் பாவனையினால் நீரின் தரமும் பாதிக்கப் படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் நீரின் தரத்திலோ, அளவிலோ ஏற்படுகின்ற மாற்றத்தினை நீண்ட கால நோக்கில் கண்காணிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை.

குறித்த நீரானது குடிப்பதற்கு உகந்ததா? இல்லையா? எனத் தீர்மானிப் பது அந்நீரில் அடங்கியுள்ள கனியுப்பின் அளவிலும் வகையிலும் தங்கியுள்ளது. நீரின் தரம் பாவனைக்குகந்த தன்மையானது அந்நீரை நீண்டகாலம் பாவிப்பதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை மதிப்பிடுவதன் அடிப்படையில் தங்கியுள்ளது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை நீரின் தரத்தை மதிப்பிடுவதற்குரிய பல்வேறு வகையான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு முறையான ஆய்வும் மேற்கொள்ளப் படவில்லை.

**02) பெற்றோலியத்தின் இரசாயனவியல்பு**

பெற்றோலியமானது இயற்கையில் திரவ நிலையில் காணப்படுகின்ற பல்வேறு சேதன பதார்த்தங்களிலான ஓர் சிக்கலான கட்டமைப்பாகும். இது பிரதானமாக ஐதரோகாபன் மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது. அத்துடன் சிறிதளவு ஒட்சிசன், நைதரசன், மற்றும் சல்பர் போன்ற மூலகங்களும் காணப்படுகின்றன. பெற்றோலியம் மற்றும் நிலக்கரி ஒரே மாதிரியான மூலகங்களைக் கொண்டிருப்பதும் பெற்றோலியத்தில் ஐதரசனின் சதவீதமானது நிலக்கரியில் உள்ள ஐதரசனின் சதவீதத்திலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

Kerogen இலுமிருந்து ஆரம்ப நிலையில் உருவாக்கப்படுகின்ற காணப் படுகின்ற நீண்ட சங்கிலி உடைக்கப்படுவதில்லை. ஏனெனில் Kerogen புவிமேற்பரப்பிலிருந்து ஆழம் குறைந்த பகுதியில் காணப்படுவதால் அதிக வெப்ப நிலை கொண்ட சூழலில் காணப்படாததாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். இதனால் இது நீண்ட சங்கிலியாகக் காணப்படுகிறது. இந்நீண்ட சங்கிலி காரண மாக பெற்றோலிய அடர்த்தி மற்றும் பாகு நிலை அதிகமான பாய்மமாக உள்ளது.

பெற்றோலியச் சேர்வையானது பின்வரு மாறு வகைப்படுத்தலாம்.

1) ஐதரோ காபன்கள்

2) Hetero Compound

பெற்றோலிய ஐதரோகாபன்கள் சூழல் மாசடைதலில் பெரும் பங்கினை வகிக்கின்றது. இது வெவ்வேறுபட்ட வகை யில் சூழலை மாசுபடுத்துகின்றது. பெற்றோ லியம் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஆக்க கூறுக ளினால் ஆனவை. மூலக் கூற்றுத் திணி வானது 16(மெதேன்)இல் இருந்து 1000 வரை காணப்படுகின்றது. ஆக்ககூறுகளின் நச்சுத் தன்மையானது பல்வகைமையான தாகக் காணப்படுகிறது. கலவையில் காணப் படுகின்ற ஆக்க கூறுகளின் பொது இயல்பு களாவன பெற்றோலியத்தில் இருந்து derive ஆகியது மற்றும் ஐதரோ காபன் இனை தொழிற்படுகூட்டமாகக் காணப்படுகிறது.

பெற்றோலிய உற்பத்திப் பொரு ளில் பொதுவாகக் காணப்படுகின்ற தொழிற் படு கூட்டங்களாவன n–அல்கேன், கிளை அல்கேன், (cylic alkane) மற்றும் அரோ மற்றிக் சேர்வைகள் சிலவற்றில் வேறு வகையான (அல்கீன்) தொழிற்படு கூட்டங்க ளும் காணப்படுகின்றது.

சுற்றுச்சூழலில் காணப்படுகின்ற பெற்றோலியமானது வானிலை மாற்ற மான ஆவியாதல், உயிர் பிரிகையாக்கம், நீரில் கலத்தல், ஒட்சியேற்றும் மற்றும் சூரிய ஒளியினால் பிரிகையாக்கத்திற்கு உட்படு கிறது.

**2.1) சுற்றுச்சூழல் சீரழிவின் வகைகள்**

சூழலில் ஆவியாதல், உயிர் பிரிகை யாக்கம், நீருடன் கலத்தல், மற்றும் சூரிய ஒளியின் மூலமான பிரிகையாக்கம் காரண மாக டீசல் எரிபொருள் ஆக்க கூறுகளின் அமைப்பில் மாற்றம் ஏற்படு கின்றது. n-அல்கேன் ஆனது கிளை அல்கேன் மற்றும் அல்கைல் அரோமற்றிக் உடன் ஒப்பிடுகை யில் மிகத் துரிதமான உயிர் பிரிகையாக் கத்திற்கு உட்படுகின்றது. உயிர் மூலக்கூற்று நிறையைக் கொண்ட சேர்வைகளுடன் தாழ் கொதிநிலையை கொண்ட சேர்வைகள் இலகுவாக உயிர்பிரிகை ஆக்கத்திற்குட் படுகின்றது. மற்றும் நீரில் அதிகளவு கூடி கரையக் கூடியதுமாக இருப்பதுடன் ஆவிப் பறப்பு கூடியதாகவும் இருப்பதனால் இவற்றினை கலவையில் இருந்து இலகுவாக அகற்ற முடிகின்றது.

Weathering செயன்முறை மூலம் ஆக்க கூறுகளின் அமைப்பில் மாற்றம் ஏற்படுவதன் காரணமாக உயர் கொதிநிலை யைக் கொண்டனவாக மாற்றப்படுகிறது. சுழலில் உள்ள அனைத்து பெற்றோலிய காபன் சேர்வைகள் ஒரே வகையான பிரித்தழிகைக்கு உட்படுகின்றன weathering செயன்முறை மூலம் உருவாகும் விளை பொருளானது அதன் ஆரம்ப பெற்றோலி யத்தின் தனித்துவமான இயல்புகளை கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலக்கும் தன்மையுள்ள எண்ணெய்**

அலிபற்றிக் (Aliphatic), அரோமற்றிக் ஐதரோகாபன்களைக் கொண்ட எண்ணெய் துளிகள் நிலத்தடி நீரில் பரம்பிக் காணப்படுகின்றது.

**கரையும் தன்மையுள்ள எண்ணெய்**

Aliphatic ஐதரோகாபன்களைக் கொண்ட எண்ணெய் ஆனது நீரில் கரைதிறன் குறைவாகக் காணப்படுகிறது. ஐதரோகாபன்கள் சேதன அமிலத்துடன் இருக்கும் போது நீரில் கரையும் தன்மை கூடியதாக இருக்கும்.

**2.2) நிலத்தின் கீழ் நீர் மாசாக்கம்**

மேற்பரப்பு நீரில் காணப்படுகின்ற மாசுக்கள்மேற்பரப்பில் இருந்து ஊடுருவல், படிதல் மற்றும் வெளியேற்றுவதன் காரணமாக நிலத்தடி நீரைச் சென்றடைகிறது. தொழிற்சாலைக்கழிவு மற்றும் வீட்டுக் கழிவுகள் போன்றவற்றினால் நீர் மாசடைதலுக்கு உட்படாவிடிலும் மனித தேவைக்கு பயன்படுத்த முன்னர் நீர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

**2.3) பயன்படுத்திய கழிவு எண்ணெயில் காணப்படுகின்ற மூலக்கூறுகள்**

சுத்திகரிக்கப்பட்ட கழிவு எண்ணெயினை வாகனங்களை மசகிடுவதற்கு பயன் படுத்திய எண்ணெய், தொழிற்சாலைகளில் பயன்படுத்திய எண்ணெய் மற்றும் தொழில்துறை செய்னமுறைகளுக்குப் பயன்படுத்திய எண்ணெய்யானது பௌதீக மற்றும் இரசாயனங்களினால் மாசாக்கப் படுகின்றது. அலசன்களான குளோரின், புளோரின், அயடின் மற்றும் புரோமின் என்பவற்றை கொண்ட சேதனச் சேர்வைகள் சேதன அயடீன்கள் என அழைக்கப் படுகின்றது. காபன் அணுவைக் கொண்ட இரசாயனங்கள் அசேதன அலசன்கள் என அழைக்கப்படும் சோடியம் குளோரைட்டு, தலியம் குளோரைட்டு ஆகியன இவ்வகை அலசன்களாகும்.

மசகு எண்ணெய்யானது ஏனைய பெற்றோலிய உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் பாரமானதாகும். ஆவிப் பறப்பின் அடிப்படையில் பின்வருவன பெற்றோலியம் ஈதர், பெற்றோல், இரச கற்பூரத்தைலம், மண்ணெய், எரிபொருள் எண்ணெய், மசகு எண்ணெய், கனிய எண்ணெய், பரபின் மெழுகுதார் பிரித்தெடுக்கப்படுகின்றது.

**2.4) கழிவு எண்ணெயினால் சூழலிற்கும் மனித ஆரோக்கியத்திற்கும் ஏற்படும் பாதிப்புக்கள்**

கழிவு எரிபொருளும், பாவனைக் குட்படுத்திய எண்ணெயும், தகனம், எரிதல், நிலத்தில் நிரப்புதல், புதைத்தல், எதேட்சையாகப் பரவுதல், போன்றவற்றின் மூலமும் பாதையிலுள்ள தூசுகளை கட்டுப்படுத்தும் பெருளாக உபயோகிப்பதன் மூலமும் சூழலுக்கு வெளிவிடப்படுகின்றன. தகனமடையாத ஐதரோகாபன்கள், அமில வாயுக்கள், உலோகங்கள் அரிப்பதன் மூலம் வளியுடன் கலப்பதுடன் நிலம், தாவரங்கள் மற்றும் நீருடன் சேர்கின்றன. நீருடன் கலக்கும் போது ஆரம்பத்தில் நீர் மேற்பரப்பில் மாசுக்கள் வெளியேறக்கூடிய இடங்களில் எண்ணெய்ப்படை உருவாக்கப் படுவதுடன் நீர் நிரலுடனும் படிவுகளுடனும் கலக்கின்றன. இவ்வகை எண்ணெய்யானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோலின் மேற்பரப்பினூடாக ஊடுருவுவதன் மூலமும், மேற்தோலினூடாக சுவாசத்தை மேற்கொள்ளும் பூச்சிகள், மீன், இறால் போன்ற அங்கிகளின் அகத்துறிஞ்சல் போன்ற முறைகளினூடாக நீர் வாழ் அங்கி களைப் பாதிக்கின்றது.

மண்ணில் வெளிவிடப்படும் கழிவு எரிபொருள், பாவனைக்குட்படுத்திய எண்ணெய் ஆகியவற்றின் மாசுக்கள் ஆவி யாதல், திண்ம சேதன பொருட்களினால் புறத்துறிஞ்சல் நிலத்தடி நீரைஅடைதல், சமுத்திரம், ஆறு, குளம் போன்ற நீர்நிலை களுடன் கலத்தல் போன்றவற்றினால் நேரடியாகச் சூழலையடைகின்றது.

எண்ணெயினுடைய நச்சுத்தன்மை யினால் பல்வேறு வகையான தாவர இனங்கள் பாதிக்கப்படுவதுடன் சில வகை யான தாவர இனங்கள் பாதிக்கப்படுவதுடன் சில வயையான தாவரங்கள் இசைவாக்கம் அடைந்தும் காணப்படும். மனித ஆரோக்கி யத்தில் இவற்றின் பாதிப்பானது பௌதீக இயல்பு மற்றும் மாசுக்களின் வகை அளவுகளில் நேரடியாகத் தொடர்பு பட்டுள்ளது. உயர் ஆவிப்பறப்புள்ள ஐதரோ காபன்கள் எரியும் தன்மை, வெடிக்கும் தன்மை கொண்டவை. அத்துடன் இவை மனித சுவாசத்தினூடாகவும் உள்ளெடுக்கப் படுகின்றன. இதனால் வீக்க நோய் மற்றும் குருதிப்பெருக்கு ஏற்படுவதுடன் ஒட்சிசன் கடத்தப்படுதலும் பாதிக்கப்படுகின்றது.

இவை அதிகமாக உள்ளெடுக்கப்படு வதனால் மையநரம்புத் தொகுதி பாதிப்ப டைவதன் காரணமாக சோம்பல், தலைவலி, கோமா ஆகியன ஏற்படுகின்றன. ஐதரோ காபன்களளை உள்ளெடுக்கப்படுவ தனால் உணவுக்கால்வாய் தொகுதியில் எரிச்சல், வயிற்றுவலி, வாந்தி மற்றும் குமட்டல் ஏற்படுகின்றது. கழிவு எரிபொருள், பயன் படுத்திய எண்ணெய் ஆகியவற்றின் தொடுகை காரணமாக அதிகளவிலான எரிச்சல் மற்றும் ஒவ்வாமை ஏற்படுகின்றது ஆகவே இவ்வாறான செயற்பாடுகள் தவிர்க் கப்பட வேண்டும். மசகு எண்ணெயில் காணப்படும் பார உலோகங்கள் வேறு மாசுக்கள் தோலினூடாகவும் அகத்துறிஞ் சப்படலாம். cr, cu, pb, mn, ni மற்றும் zn ஆகியவை பொதுவாகக் காணப்படும் பார உலோகங்கள் ஆகும். இவை இயந்திர பாகங்களில் உராய்வு நீக்கியாகவும் பயன் படுத்தப்படும் மசகு எண்ணெயில் காணப் படுகின்றன. இவை மனித ஆரோக்கியத்தை பல்வேறு வகைகளில் பாதிக்கின்றது. மனித உடலில் இவை செறிவு படுத்தப்படினும் இவற்றின் அறிகுறிகள் குறிப்பிட்ட பார உலோகங்களுக்கு வேறுபடுகின்றது.

தரை, தசை, நார் வேறு மென்மை யான இழையங்களில் ஏற்படுகின்ற வலி, பெதுவாக ஏற்படும் அசௌகரியம், களைப்பு, சுகயீனம், ஞாபகமறதி, குழப்பம், உணவுக்கால்வாயில் ஏற்படுகின்ற பிரச் சனைகளான வயிற்றோட்டம், மலச்சிக்கல், வீக்கம், நெஞ்செரிச்சல், அஜீரணம், தலைச் சுற்று, ஒற்றைத்தலைவலி, தலைவலி, பார்வைக்குழப்பம், நரம்புத்தொகுதியில் பாதிப்பு போன்ற அறிகுறிகளின் மூலம் உலோகத் தன்மையானது வெளிக்காட்டப் படலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கழிவு எண்ணெயை அகற்றல்**

எரிபொருளை உற்பத்தி செய்யப் பயன்படும் ஐதரோகாபன்கள் சூழலுக்கு வெளிவிடப்படுவதனால் மண், நீர், தாவரம், மீன் காட்டுவளங்கள் ஆகியவற்றின் தரம் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக பாவனைக்குட்படுத்திய எண்ணெய் மற்றும் கழிவு எரிபொருள் ஆகியன தூசுநீக்கியாகப் பாதையில் பயன்படுத்தல், நேரடியாக தரை, ஏரி, நீரோடை போன்றவற்றிற்கு வெளியேற்றப்படல் திறந்த முறையில் எரித்தல், தரையில் நிரப்புதல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும். ஆனால் கழிவு எரிபொருளை பயிற்றுவிக்கப் பட்ட தீயணைக்கும் வீரரின் நேரடி மேற்பார்வையின் கீழ் உபயோகிக்கு முடியும்.

மீள் உற்பத்தி, வெப்ப மீட்டிற்கான எரித்தல் போன்ற குறிப்பிட்ட முறைகள பாதுகாப்பான, சூழலுக்குப் பாதிப்பற்ற, செலவு குறைவான பயன்படுத்தப்பட்ட எண்ணெயை முகாமைத்துவம் செய்யும் முறைகளாக அமைகின்றன. வியாபார நிறுவனங்கள், கைத்தொழிற்சாலைகள் என்பன அதிகளவில் பயன்படுத்திய எண்ணெயை வெளிவிடுகின்றன. இங்கு உருவாகும் கழிவுகளை உள்ளூர் சேகரிப்பு நிலையம், மீள்பாவனை நிலையம், பதிவு செய்யப் பட்ட பயன்படுத்திய எண்ணெய் அல்லது கழிவு எரிபொருள் பயன்பாட்டாளர்களுக்குக் கொண்டு செல்வதற்கான நடவ டிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும்.

சிறிய உற்பத்தியாளர்கள், வீட்டில் சுயதொழிலாக மேற்கொள்பவர்கள் பயன் படுத்திய எண்ணெயை மீள்பாவனை நிலையம் அல்லது பதிவு செய்யப்பட்ட எரித்தல் உபகரணங்கள் உள்ள உள்ளூர் வணிக நிலையத்திற்கு அவர்களின் அனுமதியுடன் வழங்க வேண்டும்.

கைத்தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், அல்லது அரசாங்க செயற்பாட்டு நிலையங்கள் பயன்படுத்திய எண்ணெய், கழிவு எரிபொருளை வர்த்தக மீள் உற்பத்தியகம் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆபத்தான கழிவு கொள்வனவு செய்யும் நிலையத்திற்குக் கொண்டு செல்லும் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

2.6 நிலத்தடி நீரில் உள்ள **எண்ணெய்யின்** அளவை அளவிடுதல்

1. Gravimetic Method
2. Infrared absorption method
3. Gas chrommatography

1. Gravimetic Method

நீரில் கரைந்துள்ள எண்ணெய்யை பொருத்தமான கரைப்பானைப் பயன் படுத்தி பிரித்தெடுக்க முடியும். நீர்ப்படையையும், கரைப்பான் படையையும் வேறாக்கிய பின்னர் கரைப்பான் ஆனது ஆரம்பநிறை நிறுக்கப்பட்ட ஒரு குடுவையில் இடப்படும். காய்ச்சி வடித்தல் செயன்முறை மூலம் எண்ணெய் வேறாக்கப்பட்டு குடுவையின் இறுதி நிறை அளக்கப்படும். குடுவையின் ஆரம்ப, இறுதி நிறையைப் பயன்படுத்தி நீரில் காணப்படும் எண்ணெய்யின் அளவை துணிய முடியும்

2. Infrared absorption Method

குளோரோ புளோரோ காபனை கரைப்பானாக பயன்படுத்தி அமிலம் கலந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரைப் பிரித்தெடுக்கலாம் . இதன் போது கரைப்பானானது உலர்த்தப்பட்டு எண் ணெய் சுத்திகரிக்கப்படும் **IR absorption** முறையினால் மிகக் குறைந்த அளவிலான எண்ணெய் பாவிக்கப்பட்டு அதன் செறிவு **Beer-Lambert** விதியினால் கணிக்கப்படும்.

**Gas chromatography**

எண்ணெயில் காணப்படும் ஐதரோ காபன்களைக் கண்டறிவதற்கு பயன்படும் மிகச் சிறிதளவான குறிப்பிட்ட எண்ணெய் **GC** இயந்திரத்தில் உட்செலுத்தப்படும் **cloumn** ந்திலிருந்து ஒவ்வொரு வகையான ஐதரோகாபன்கள் அதற்குரிய தனித்துவ மான நேரத்தில் வெளியேற்றப்படும் இத் தனித்துவமான நேரத்தை பயன்படுத்தி வெளியேற்றப்படும் இத்தனித்துவமான நேரத்தைப் பயன்படுத்தி வெளியேற்றப் படும் ஐதரோகாபன்களை இனம் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கிராமத்தின் நாடக வளர்ச்சி

**திருமதி ருஷானி சதீஸ்**
**இணுவில்மேற்கு,**
**வரலாற்றுத்துறை 4ம் வருடம்,**
**யாழ். பல்கலைக் கழகம்**

**"அன்பே சிவம்"** என்னும் தத்துவத்தை நன்குணர்த்தும் சிவநெறியும், இன்பத் தமிழும், இனிய பல்கலைகளும் மலிந்த கிராமமாக இணுவில் விளங்குகிறது. யாழ்ப்பாண இராச்சிய காலம் தொட்டே இணுவில் பகுதியில் சைவமும் தமிழும் இணையாக வளரத் தொடங்கின. ஆலயங்களும் பண்பாடும் ஆழம் பெற்றமையால் இங்கு கலை வளர்ச்சி மிகுதியாகவே காணப்பட்டது. ஆலயங்கள் தோன்றவும் சமயப் பக்திக்கமைவான இசையின் அங்கமான பண்ணிசை வளரவும், கலையார்வத்துடன் மக்கள் தமது வாழ்வியலை ஈடுபடுத்திக் கொண்டனர். இக்கிராமத்தில் இசை, நடனம் வளர்ச்சி பெற்றுக் கொண்டதைப் போலவே நாடகமும் தனியானதொரு இடத்தினைப் பெற்றுக் கொண்டது. அந்த வகையில் இணுவில் கிராமத்தின் நாடக வரலாறு ஆரம்பம் முதல் இன்று வரை எவ்வாறு வளர்ச்சி பெற்றுக்கொண்டது என்பது தொடர்பாக நோக்குவோம்.

ஆரம்பகாலத்தில் மக்கள் தமது அறிவுக்கேற்ப நாட்டுப் பாடல்களைப் பாடியும் தமது விவசாய வேலைகளின் போது அலுப்பின்றி தமது கருமத்தைச் செய்ய எண்ணி ஆடிப்பாடியும் மகிழ்ந்தனர். ஓய்வு நேரங்களிலும் நிலாக்காலங்களிலும் தமது நாட்டுப்புறப்பாடல்களை பாடியும் களைப்பு மேலிடக் கூத்தாடியும் மகிழ்ந்தனர். இவை இக்கிராம மக்களின் வாழ்வியலில் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து காணப்பட்டது. நாட்கள் செல்லவும் அக்காலத்தில் எரிபொருள் வசதி இல்லாததுடன் வாழ்க்கைக்கான போதயளவு வசதியும் காணப்படவில்லை. இருப்பினும் அந்த நேரத்தில் மக்கள் தமது வாழ்வை மகிழ்வுடனும், மனநிம்மதியுடனும் வாழ்ந்த பின்னணியில் கலையார்வத்தை வளர்த்துக் கொண்டனர்.

ஏறத்தாழ நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த சிலர் தமக்கு தெரிந்த புராணக் கதைகளைக் கற்றுணர்ந்து அக்கால நிலைக்கு ஏற்றவாறு நிலாக்காலங்களில் தமது அன்றாடப் பணி முடிவடைந்ததும் நிலா பிரகாசிக்கும் சமயத்தில் நாடகங்களைக் கூத்தாக நிகழ்த்தினர். கம்பீரமான தோற்றமும் அழகும் உச்ச தொனியில் பாடும் திறமையானவர்கள் நடிகர்களாக புராண நாடகங்களை நிகழ்த்தியதுடன் அயலூர் மக்களையும் கவர்ந்த பெருமையும் உற்சாகமும் கொண்டவர்களாக விளங்கினர்.

அக்காலத்தில் மேடையோ, ஆடை அலங்காரமோ, ஒலி, ஒளி, பாவனையோ காணப்படவில்லை. நடிகர்கள் நிகழ்ச்சியைத் தொடர பார்வையாளர்கள் நாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறமும் சூழ நின்று இரசிப்பர். நிலா வெளிச் சம் குன்றும் சமயம் ஓலைகளைக் கொழுத்தி வெளிச்சமேற்றித் தமது கலை யை வளர்த்தனர். இவ்வரிசையில் இணு வில் மேற்கைச் சேர்ந்த பெரியதம்பி என்பவர் **நந்தனார்** எனும் கூத்தை தனது செலவில் நடத்தும் பொருட்டுத் தனது சொந்த நிலத்தை விற்றிருந்தார். இதில் பெரியதம்பி பிராமண வேடம் தாங்கி ஏனைய சில நடிகர்களுடன் ஆரம்பித்தி ருந்தார். அக்காலத்தில் பிராமணனின் பூ நூலாக பனை நார்க்கயிறும் பகட்டான ஆடைகளும் அணிவிக்கப்படும். அதே போல நந்தனாராக வருபவர்கள் கூலியாள் போல கந்தல் ஆடைகள் அணிந்திருப்பர். இக்கூத்தின் பயனாக பெரியதம்பி என்பவர் பிராமண பெரியதம்பி என அழைக்கப் பட்டார் என முன்னோர்கள் கூறுவர்.

இதனைத் தொடர்ந்து பிற்காலத்தில் இணுவில் கிழக்கில் ஏரம்பு என்பவர் கூத்துக் கலையிலே சிறந்தவராகக் காணப்பட்டார். இவர் கூத்துக்களை நடித்தும் நெறிப்படுத்தி யும் இருந்தமையினால் **அண்ணாவியார்** என அழைக்கப்பட்டார். நடிப்பில் புதிய முறைகளைக் கையாண்டும் தேவையேற்ற காலத்தில் தக்க பாடல்களைக் கவிபோல இசையமைத்து பாடுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் தனது காலத்தில் பல நாடகங்களை நடித்தும், அதனை பயிற்று வித்ததுடன் பலரை நடிகர்களாக்கியும் இருந் தார். இவரது பணியில் இக்காலகட்டத்தில் பல நடிகர்கள் வளர்ச்சி பெற்றிருந்தனர்.

ஏரம்பரைப் போல சுப்பர், நாகலிங் கம் ஆகியோர் நடிகர்களாக, பயிற்றுனராக, மேடையேற்றும் அண்ணாவியாராக புகழ் பெற்றனர். இவர்கள் அக்காலத்து சின்னத் தம்பிப் புலவர் மற்றும் சின்னத்தம்பி சட்டம்பியார் ஆகியோரின் நாடகங்களை அடியொட்டி சிறப்படைந்தனர். சுப்பர் சீதையாக நடித்தும், சுயமாகப் பாடியும் புகழ் பெற்றார். நாகலிங்கம் இந்தியாவிலி ருந்து நாடக சேவையாற்ற வருகை தரும் நடிகர்களுடன் ஒரே மேடையில் தோன்றி அவர்களுக்கு சரிநிகராக நடித்துப் பல பட்டங்களை வென்றார். இவரின் திறமைக்கு எடுத்துக் காட்டாக இவர் பெற்ற பட்டங்க ளான ராசபாட், நடிகவேள், இலங்கை இராசசிம்மன் என்பன குறிப்பிடத்தக்கன. இவர் இந்தியக் கலைஞர் குழுவில் இணைந்து இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல்வேறு இடங்களுக்கும் சென்று நடித்துவரும் இணுவில் நாடக வரலாற்றிற் குப் பெருமை தேடிக் கொடுத்தார்.

நாடக கலைக்கு வேலாயுதர் சந்நியாசியாரும் ஆதரவு வழங்கி மஞ்சத்தடி முருகன் ஆலயச் சூழலில் வேறு நாட்டுக் கலைஞர்களை தருவித்து நாடக வளர்ச் சிக்கு உதவினார். காலங்கள் செல்லச் செல்ல சின்னதம்பி சட்டம்பியார் மற்றும் இந்திய சங்கரதாஸ் சுவாமிகளின் ஆக்க மான நாடகங்கள் இசை நாடகமாக முதன் முதலில் இணுவில் சிவகாமி அம்மன் கோயில் சூழலில் நடைபெற்றது. இதில் நடிகர்களுக்கான ஆடை அலங்காரங்கள், மரத்தினாலான கிரீடம், பூசகிரி, வாள் என்பன பெரும் செலவில் உருவாக்கி நடிகர்களை சிறப்பித்தனர். இந்நாடகத்தை காண அயலூர்களிலிருந்து பலர் வந்து பார்த்து பாராட்டியிருந்தனர். நாரதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலித்தம்பி போன்ற இணுவில் நாடகக் கலைஞர்கள் தமது பெயரைநடித்த பாத்தி ரங்களுக்கமைய அலங்கரித்தனர்.

இக்காலத்தில் மேலைநாடுகளின் பாவனையைத் தழுவிய மேடை சீன்களும், காஸ் விளக்குகளும், மேடைகளும் பாவ னைக்கு வந்ததைத் தொடர்ந்து ஹார் மோனியம், மேளங்கள் போன்றவை அணி செய்யவும் பிற்காலம் நாடக வளர்ச்சி ஏற்பட்டது. இக்காலத்தில் புராண நாடகங் களுடன் வேறு நாடகங்களையும் இணுவில் சண்முகானந்த சபா என்னும் நாடக அமைப்பு மூலம் பல நாடகங்களை மேடை யேற்றினர்.

பிற்காலத்தில் இணுவில் கிழக்கை சேர்ந்த தம்பையா சிதம்பரநாதன் என்பவர் சிறந்த பயிற்சி பெற்ற நடிகரானார். இவர் **மன்னவன் பிரமராயன்** என்றும் புராண நாடகத்தில் பிரதம பாகமேற்று நடித்தவர். இவர் பல நாடகங்களை நடித்துப் பெருமை சேர்த்தவர். இக்கால கட்டத்தில் திரைப் படங்களின் குத்தாட்டங்களும், டப்பா சங் கீதமும் மேலோங்கியதனால் நாடக வளர்ச்சி குன்றத் தொடங்கியது. ஒரு சில காலத்தில் எமது பாரம்பரிய நாடக வளர்ச்சி நலிவடைந்தது.

இணுவில் மேற்கினைச் சேர்ந்த கலைஞர் 1974இல் தமது கலை ஆர்வத்தி னால் நாடகக் கலையை வளர்க்குமாறு மக்களைத் தட்டியெழுப்பினார். இதன் பயனாக இணுவில் இணுவில் மேற்கில் செகராசசேகரன் நாடக மன்றத்தின் மூலம் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. முதலில் கர்ணன் எனும் நாடகம் மேடையேற்றப் பட்டது. இந்நாடகம் மிகவும் பிரபலமடைந் தது. இக்குழுவினர் இசை நாடகங்களை வளர்த்தமையால் முன்னர் டப்பாசெற்றில் நடித்து இது பிற்காலம் நலிவுற்றதால் ஓய்ந்திருந்த நடிகர்கள் செகராசாசேகரன் நாடகக் குழுவில் இணைந்து பல நாடக ஆக்கத்திற்கு அடிகோலினார். இதன் பின்ண ணியில் இக்குழு பிரபலம் அடைந்தது.

இதன் பயனாக இணுவில் கந்த சுவாமி ஊஞ்சல் மண்டபத்தை மையமாகக் கொண்டு சத்தியவான் சாவித்திரி, அரிச் சந்திர மயானகாண்டம் போன்ற பல துடிப் புள்ள நாடகங்களை மேடையேற்றி னர். இந்த நாடகங்களில் மூத்த நாடகக் கலை ஞர்களுடன் இளந்தலைமுறையின ரும் பங்கேற்றனர். வே.சரவணமுத்துவின் ஹார் மோனிய இசை இவர்களின் நாடகத் திற்கு மெருகூட்டியது. இதனால் கர்ணன் நாடகம் இணுவில் கிராமத்தில் மட்டுமல் லாது பல அயலூர்களிலும் மேடையேற்றப் பட்டு இணுவில் மண்ணிற்குப் பெருமை தேடிக் கொடுத்தது.

பிற்காலப்பகுதியில் உருவான நாடக கலைஞர்களுள் ந.சிதம்பரேஷ்வரன், ந.பரமேஸ்வரன்,நா.கிருபாகரன், ந.தவ சோதிநாதன் போன்ற பலரின் நடிப் புத்தி றன் இக்கிராம நாடக வளர்ச்சியைத் தொடர வைத்தது. இளந்தொண்டர் சபை மூலம் வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி, நந்தனார் போன்ற நாடகங்கள் மாணவர் மட்டத்தில் உருவானது. ந.பரமேஸ்வரன் அவர்களின் நெறிப்படுத்த லில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் பெருமையையும், முதன்மை பரிசில் களையும் தனதாக்கின. இந்த நாடகங்கள் பல அயலூர்களும் மேடை யேற்றப்பட்டு பெருமை சேர்த்தன.

வள்ளி திருமணம் (நாட்டிய நாடகம்), குட்டி அனுபவம்(சிறுவர்) என்னும் இரு நாடகங்கள் அகில இலங்கை நாடக விழாவில் விருதுகளைப் பெற்றதுடன் துணை நடிகர், இயக்குநர், நெறியாளர், அனைவருக்கும் விருதுகளையும் பணப் பரிசில்களையும் பெருமையையும் தேடிக் கொடுத்தது. இளந்தொண்டர் சபையின் சங்கிலியன் நாடகும் தென்மோடிக் கூத்து போன்ற பாரம்பரிய நாடகமும் மாவட்ட மட்டத்தில் பிரபலமடைந்ததைக் காணலாம்.

இவ்வாறாக இணுவில் கிராமத்தின் கலை வரலாற்றில் நாடகக் கலை வளர்ச்சி பெற்று வந்தமையைக் காணலாம். முற்காலத்தில் மட்டுமன்றி இன்றும் அவை வழக்கில் நிலைபெற்றிருப்பதனைக் காணலாம். இருப்பினும் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக நாடகத் துறைக்கு மட்டுமல்லாது கலைத் துறையில் ஆர்வம் செலுத்த மக்களுக்கும் இளம் தலைமுறையினருக்கும் ஆர்வம் குறைவடைந்து வருகின்றது. இருந்தபோதும் இணுவில் கிராமத்தைப் பொறுத்தவரை நாடக கலை சற்று தளர்வடைந்திருந்தாலும் இங்கு கலைகள் மேன்மேலும் வளர்ச்சி பெறுவதற்கான சூழலைப் பல நிலையங்கள் ஏற்படுத்தி வருவதனை அவதானிக்கலாம். அந்த வகையில் கலைகள், நாடகங்கள் வளர இணுவில் இளந்தொண்டர் சபை ஆர்வம் காட்டி வருகின்றது இவ்வாறு இணுவில் மண்ணின் பெருமைக்கு நாடகக்கலையும் ஒரு காரணமாக விளங்குவதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்விடுதலை நோக்கி....

**உடுவிலூர் கலா**

பெண் அழகானவள், அன்பானவள் –உறவுகளைத் தக்க வைப்பவள், புகுந்த வீட்டினதும், பிறந்த வீட்டினதும் உரிமையானவள். ஒவ்வொரு மனிதனதும் பெறுமதி மிக்க வளம் அவள். காவியங்களின் கருப் பொருளவள், மனித வளத்தின் முதற் படியவள், ஆணின் நுகர்வுப் பொருளவள், மானிட சக்தியைப் பெருக்குகி றவள் அவள். உலகினுக்கு உயிரைக் கொண்டு வருபவள் ஏன்? இவ்வழகிய உலகினை ஒவ்வொரு உயிருக்கும் சுட்டிக் காட்டுபவளும் பெண்ணே.

இவ்வாறு பெண்ணைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம். ஆனால், இத்தனை சிறப்புக்களும் வலிமைகளும் பொருந்திய பெண்ணினது அன்றைய இன்றைய நிலை பற்றி நாம் சிந்திக் வேண்டும். பெண் அன்றும், இன்றும் அடிமையாக, இரண்டாம் பட்சமாக, முடி வெடுக்க முடியாதவளாக, கண்ணீர் சிந்துபவளாக, மாடாக உழைப்பவளாக, ஆணின் உணர்வுகளுக்கு தீனி போடுபவளாகவே உள்ளாள். ஆதியில் தாய் வழிச்சமூக அமைப்பு நடைமுறையில் இருந்தது. . இதனால் குடும்ப நிர்வாகங்கள் பொறுப்புகள் யாவையும் பெண்ணே செவ்வனே செய்து வந்தாள். காலமாற்றத்தில் தாய்வழி மரபானது தந்தை வழியாக மாற்றமடைந்து பெண்ணை அடிமைப்படுத்தும் நிலையைத் தோற்றுவித்து. ஆணாதிக்கம் உயிர்ப் படைந்து தன் வக்கிர உணர்வுகளை பெண்ணின் மேல் திணித்தது. எழுதப்படாத விதி ஒன்று பெண்ணை நோக்கி விரைந்தது.

எமது பண்பாடு அழகிய ஒழுக்க விழுமியங்களையும், கட்டுப்பாடுகளையும் கொண்டது. இறுக்கமான அடிக்கட்டுமானங் களைக் கொண்ட எம் கலாசாரம் தமது விதிமுறைகளைக் காக்கும் பாரிய பொறுப் புக்களை பெண்களிடமே கொடுத்துள்ளது. பெண் என்பவள் கலாசாரத்தை பறைசாற்றுபவளாகவே உள்ளாள். இங்கு பெண்ணின் ஒழுக்கம் மேம்படுவது உண்மையே. அதே வேளை பல நிலைகளிலும் அவள் வன் முறைகளைச் சந்திக்கத் தவறவில்லை. பெண் என்றால் என்ன? பெண் எப்படி வாழ வேண்டும் என்னவெல்லாம் அழகாக எமது பண்பாடும் கலாசாரமும் இடித்துரைப்பதைக் காணலாம். தமிழிலக்கியங்ளைப் புரட்டினால் பெண்களுக்கெதிரான வன் முறைகள் விதவிதமான மிடுக்கோடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைக் காண முடியும். கணவன் இறந்த பின்னரான கைம்மை நோன்பின் அவலம் புற நானூறிலே

**அணில் வரிக் கொடுங்காய் வாள் போழ்ந் திட்ட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காழ்போனல் விளர் நறுநெய் தீண்டாது
அடைமிடைக் கிடந்த கைபிடி பிண்டம்
வெள்ளெட் சாந்தோடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சியாக நீ பாந்பெய்
பள்ளிப்பாய் இன்று வதியும்

(புறம் 246)

எனப் பேசப்படுகிறது. அதாவது கடுமையான கைம்மை நோற்க வேண்டும். அதை விட ஈமத்தீயில் இறப்பது மேல் என பெருங்கோல் கொண்டு பாடுகின்றாள். இவ்வாறு பெண் கருவில் தொடங்கி கல்லறை வரை வன்முறைகளை அனுபவிக்கிறாள். ஓரங்கட்டப்படுதல், ஒடுக்கப்படுதல், அடக்கப்படுதல், அடிமைப்படுத்தப்படல், அவமானப்படுத்தப்படல் எனப் பெண்களின் வன்முறைகள் நாளாந்தம் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. சமூக தனித்துவ வாதங்களின் தன்னாதிக்கமானது பெண்கள் தமக்கென கொண்டிருக்கும் தனித்துவ அடையாளங்களை மறுக்கிறது. சமூகக் கோட்பாடுகள் மட்டுமன்றி தந்தைவழி மரபின் ஆணாதிக்க வாதங்களும் பின்னிப் பிணைந்திருப்பதால் நிர்ப்பந்திக்கப்படும் வரையறுக்கப்பட்ட அடையாளங்களை ஏற்குமாறு பெண்கள் நிர்ப்பந்திக்கப் படுகிறனர். இதன் விளைவானது பெண்களின் தனித்துவத்திற்கான, சுயவாழ்வுக்கான, சுய கௌரவத்திற்கான, விருப்பையும், அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான ஆர்வத்தையும் மறுக்கிறது. பெண் தனக்குரிய தனித்துவத்தையும், சுயவிருப்பு வெறுக்கும் நிலையையும் உருவாகின்றது.

இத்தனித்துவ அடையாள வாதங்களை முன்வைப்போர் அதிகாரத்துடன் வன்முறைகளை செயற்படுத்துவதால் பெண்கள் தமது ஆற்றல்கள், விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்துவதில் வெறுப்படைந்து உயிரைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு அடிமை வாழ்வு வாழ்கின்றனர்.

இன்னும் வன்முறையின் அதியுச்ச கொடூரமாக வன்புணர்வு இடம்பெறுகிறது. இவ்வன்புணர்வானது தனி வன்புணர்வு, கூட்டு வன்புணர்வு என வகைப்படுத்தப்பட்டு பெண்களின் உடலிலும், உள்ளத்திலும் நெறியாள்கை செய்யப்படுகின்றது. குடும்பத்தவரின நீடியபகை, பழிவாங்கும் உணர்வு, அழகு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வன்புணர்வுகள் இடம் பெற்றுப் படுகொலைகள் இடம் பெறுகின்றன. வன்புணர்வுகள் வகைவகையாக இடம்பெற்று அப்பாவிப் பெண்கள் படுகொலை செய்யப்பட்ட போதும் கைது ஒன்றே தண்டனை என்கிற நிலை இன்னும் தொடர்கின்றது. சட்டத்தின் தூசு இன்னும் தட்டுப்படவில்லை என்பதே உண்மை.

மதங்களில் கூட பெண்ணினம் கோலோச்சுவதைக் காணலாம். மரியாளை பரிசுத்த அன்னையாக வணங்கும் கத்தோலிக்க மதத்தில் பெண்குருமார் இதுவரை தோற்றம் பெறவில்லை. புனித குர்ஆனில் பெண்கள் சட்ட உரித்துடையோர் என்பதை உறுதியாக எடுத்துரைக்கின்றது. ஆனாலும் முகமது நபியின் மறைவுக்குப் பின்னர் இஸ்லாமிய சமூகநிலப்புரபுத்துவ சமூகமாக மாறி பெண்கள் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இஸ்லாம் நடைமுறைகள் பண்பாடுகள் சட்டங்களுடன் கைகோர்த்து இஸ்லாமிய என்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவரியோடு பெண்களை அடக்கி யாள் கிறது. வரலாறுகளில் மதங்களில், சமூகப் பணிகளில், அரசியலில் பெண்களின் பங்களிப்பு அபரிமிதமானது. இக்கட்டுகள், வன்முறைகள், பிரிவுகள் போன்றவற்றைத் தாங்கி சமூகத்திற்கும், தனி மனிதனுக்கும் தன் சேவையை தாராளமாக வழங்கும் பரோபகாரி பெண். மரியாள், சீதை, கண்ணகி, அகலிகை, சாவித்திரி, ஜான்சி ராணி, சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஹிலாரி கிளின்டன், இந்திராகாந்தி, விஜய லக்சுமி பண்டிட், பிரதீபாபட்டேல், ராதிகா குமாரசாமி, ஜெயலலிதா போன்ற பெண் கள் தமது ஆற்றலை, சேவைகளை முழுமையாக சமூகத்திற்கும் நாட்டிற்கும் வழங்கி வரலாறு படைத்துள்ளனர்.

பெண்கள் உரிமையானது மனித உரிமையே. இலங்கை அரசியல் யாப்பின் அடிப்படை உரிமையின் 12ம் உறுப்புரை சமத்துவத்தை எடுத்துரைக்கின்றது. ஆனா லும் சகல இடங்களிலும் சகல விடயங்களி லும் பெண் ஓரங்கட்டப்பட்டு, அடக்கப் பட்டு, ஒடுக்கப்பட்டு வாழ்வதைப் பார்க்கும் போது வேதனையாக உள்ளது. பெண்களுக் கான வன்முறையில் இருந்து பெண்களை மீட்டெடுக்க தந்தை வழி மரபு வலிமை இழக்க வேண்டும். பெண்களின் சக்தியை முழுமையாக உறிஞ்சுகின்ற சமுதாயம் பெண் சமத்துவத்தை வலியுறுத்த வேண் டும். பெண்ணை அடக்குவதும், அடிமைப் படுத்து வதும் எங்கு நடக்கின்றதோ அங்கு மனித நேயம் பேசப்பட வேண் டும். எட்டாக் கனிக ளாகப் போய்க் கொண்டிருக்கும் பெண் சுதந்திரம், பாதுகாப்பு, சமத்துவம் போன்றவற்றுக்கான உரிமைக் குரல் கள் சமுதாயத்தில் பலமாக ஒலிக்க வேண்டும். ஒவ்வொரு வீடுகளிலும் பெண் சமத்துவத் துக்கான விதைகள் விழ வேண்டும். பெண்ணின் வலிகள் பிறப்பெடுத்த ஒவ் வொரு உயிர் மூலமும் உணரப்பட வேண் டும். ஆண்களால் பெண் பலவீனமாக் கப்படுகிறாள். வன்முறைக்குள்ளாக்கப் படுகிறாள் என்கிற யதார்த்தம் புரிந்த சமுதா யமாக எம் சமுதாயம் மாற வேண்டும். பெண்களை அடக்கி ஒடுக்கி சந்தோசத்தைத் தேடுவது பாதத்திற்குப் பாதம் ஆணி அறை வதற்குச் சமமானது என்பதை ஒவ்வொரு ஆண்மகனும் சிந்திக்க வேண்டும் ஆணா திக்கப் போர்வையை தீயில் கொழுத்தி மகிழ் கொண்டாட ஒவ்வொரு பெண்ணும் இந் நிமிடமே தயாராக வேண்டும்.

அன்பான, அழகான, சமூகத்தைக், நாட்டைக் கட்டியெழுப்ப மனித இனச் சமன் பாடு மிக மிக முக்கியமானது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து வாழ வேண் டும். பெண் சமத்துவம் ஒன்றே தேச விடுதலை.

வலிகளை உணர்ந்தும் உணராத வர்கள் போல வாழும் பெண்களே! ஆணாதி க்கப் போர்வைக்குள் குளிர் காய்பவர்களே, குடும்ப வன்முறைகளைச் சந்தித்து நடைப் பிணமாக வாழும் பெண்களே, மனம் இடம் கொடுக்கவில்லையெனத் தினம் தினம் மரணித்து வாழும் அப்பாவிகளே, ஆண்க ளின் வக்கிர உணர்வால் வரட்டுக்காரரின் பிடியில் சிக்கித் தவிப்பவர்களே, இளகிய மனதோடு ஆண்களை சிரமேற் கொண்டு வாழும் உத்தமிகளே, சமுதாயக் கோட்பாடு களை செவிசாய்த்து இரசித்து வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதைகளே, ஒரு வினாடி சிந்தியுங்கள், தப்புக்களை தட்டிக் கேளுங்கள், நியாயத்திற் காகக் குரல் கொடுங்கள், சமுதாய ஓரங் கட்டலையும், அடிமைவாதக் கருத்துத் திணிப்புக்களையும் தகர்த்தெறியுங்கள்.

உங்கள் அன்பால் அகிலம் நனைகி றது என்ற உண்மையைப் புரிந்து கொள் ளுங்கள். வரையறை செய்வதும் வாழ்வை மகிழ்வாக்குவதும் உங்கள் கடமை என்ப தையுணர்ந்து இல்லத்திலும் சரி, சமூகத் திலும் சரி வன்முறைகளை வன்முறை செய்யப் பெண்களே கிளர்ந்தெழுங்கள். அர்ப்பணிப்புடன் கூடிய தவ வாழ்க்கையை விடுத்து உங்களுக்காக ஒரு விநாடியேனும் வாழுங்கள். உங்கள் அர்ப்பணிப்புக்கள் வன்முறைகளுக்கான படிக்கல் என்பதை உணர மறவாதீர்கள். வன்முறைகளற்ற சமுதாயத்தை, குடும்பத்தை உருவாக்க வன்முறைகளை வன்முறை செய்யுங்கள். சக்தியை, சேவையை முழுமையாக வழங்கி அடிமை வாழ்வு வாழ்வதா? இது கொடுமை யல்லவா? சிந்தியுங்கள் எதிர்கால பெண் சந்ததியினரின் விடிவுக்காக, மகிழ்வுக்காக, சுயமான வாழ்வுக்காகப் பெண்களே இன்றே விழிப்படையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களது வாழ்வில் புருடார்த்தங்கள் செலுத்திய செல்வாக்கு

**அ.வியாசன்**

இந்துமதம் கூறும் கோட்பாடுகளில் ஒன்றாகிய புருடார்த்த கோட்பாட்டில் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருடார்த்தங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது வடமொழியில் முறையே தர்மம் , அர்த்தம், காமம், மோட்ஷம் என குறிப்பிடப் பட்டுள்ளது.

புருடார்த்தங்கள் என்பதனூடாக நாம் விளங்கிக் கொள்வது யாதெனில் பண்டைய அறிஞர்கள் மனித வாழ்வு சிறப்புற அமைவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள், பயன்கள் என்பவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு வகைகளாக வகைப்படுத்தியிருந்தனர். இவையே நான்கு புருடார்த்தங்கள் எனவும் உறுதிப் பொருட்கள் எனவும் இந்துக்களின் உயர் இலட்சியங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. புருடார்த்தங்கள் என்றால் என்ன என்பதனை நாம் அறிந்து கொள்வதற்கு வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள், பகவத்கீதைகள், திருக்குறள், ஔவையார் பாடல்கள் மற்றும் நாயன்மார்கள் பாடங்கள், ஆழ்வார்களது பாசுரங்கள் போன்ற பல துணை புரிகின்றன. இதற்குச் சான்றாக ஔவைப் பிராட்டியார்

**"ஈதல்அறம் தீவினை விட்டு ஈட்டலே பொருள் காதலர் இருவரும் கருத்தொருமித்து ஆதரவுப் பட்டதே இன்பம், பரனை நினைத்து இம்மூன்றையும் விட்டகலுதலே பேரின்ப வீடு என்றார்."**

இந்து ஒருவர் தனது வாழ்வின் இலட்சியமாகிய ஆன்மிக விடுதலையினைப் பெற்றுக் கொள்வதற்குத் துறவு மட்டுமல்ல இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டே இல்லற இன்பத்தை அனுபவித்துக் கொண்டே வீடுபேறு அடைய லாம் என வலியுறுத்துகின்றமையும் புருடார்த்தங்களின் நோக்கமாக அமைகின்றது.

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருடார்த்தங்களும் இந்துக்களின் வாழ்வில் எத்தகைய செல்வாக்கினை வகுத்திருந்தன என்பதனை நோக்குவோம்.

புருடார்த்தங்களில் தர்மம் என அழைக்கப்படுகின்ற அறம் இந்துக்களது வாழ்விலே மிகுந்த செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது. இது ஒழுக்கம், ஜீவ காருண்யம், கடமை, அகிம்சை எனப் பல் வகைப்படும். மனிதனானவன் தனியாகவோ அல்லது கூட்டாகவோ வாழுமிடத்து கடைப்பிடிக்கப்படும் மேலான ஒழுக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே அறம் எனப்படும். மனுஸ்மிருதி விதித்தன செய்தலும் விலக்கின ஒழித்தலுமே அறம் என்கிறது.

தர்மமானது இராஜதர்மம், பிரஜா தர்மம், ஸ்திரி தர்மம், புருஷதர்மம், வர்ண தர்மம் , ஆச்சிரதர்மம் எனப் பல்வகைப் படும்.

இக்கோட்பாட்டின் படி அறம் என்பது மனிதனது செயற்கைக்கும் நிலைமைக்கும் ஏற்ப வேறுபடும். இவை பற்றி விரிவாகக் கூறும் நூல்கள் சாஸ்திரங்கள் எனப்படும். இவற்றிலே நீதிநெறி, சமுதாய நெறி, ஒழுக்க நெறி என்பவை எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. அறம் என்பது இல்லறம், துறவறம் என இருவகைப்படும். இங்கு இல்லற நிலையில் நிற்கும் ஒருவன் இல்லத்திற்குரிய கடமையினை ஆற்றினாலும் துறவு நிலையில் நிற்கும் ஒருவன் துறவுக்குரிய கடமையை ஆற்றினாலும் இவ்விருவரும் அறவழியில் வாழ்ந்தவர்களாகவே கருதப்படுவர். இல்லற நிலையில் நிற்கும் ஒருவனே பஞ்சமகா ஜக்ஜம் எனும் ஐம்பெரும் வேள்விகளை ஆற்றுபவராக விளங்குகின்றார் அவையாவன பிரம்ம ஜக்ஞும், தேவ ஜக்ஞும், மானுடஜக்ஞும், பிதிர் ஜக்ஞும், பூத ஜக்ஞும் என்பனவாகும்.

இக்கோட்பாட்டின்படி ஒருவர் அறவழியில் வாழ்வதனால் அதனூடாக வரும் இன்பமே நிலையானது, நிஜமானது, மறவழியினூடாகக் கிடைக்கும் இன்பம் ஆரம்பத்திலே இன்பமாக இருந்தாலும் இறுதியிலே அது துன்பத்தையும், அவமானத்தையும் தரும். எனவே நாம் வாழும் வரை மரணித்த பின்பு கூட எம்முடன் கூட வருவது நாம் செய்த அறன்களேயாகும்.

புருடார்த்தங்களில் இரண்டாவதாக வைத்துச் சொல்லப்படுவது பொருளாகும். **"அர்த்தம்"** என் று சொல்லப்படும் பொருள் இந்துக்களது வாழ்வில் மிகுந்த செல்வாக்கினைச் செலுத்தி இருந்தது இதனையே வள்ளுவர் **"பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை"** என்றார். மனிதன் தன் வாழ்வினை மேம்படுத்துவதற்கு அறவழியிலே பொருளினை ஈட்டிக் கொள்ள வேண்டும். இங்கு பொருள் என்பது உணவு, உடை, அணிகலன்கள், வீடு, நிலம் போன்றன உடமைகளைக் குறித்து நிற்கின்றன.

மனித வாழ்விலே பிறப்பு முதல் இறப்பு வரைக்கும் பொருள் அவசியமாகின்றது. மேலும் பொருள் உள்ளோரைப் போற்றிப் புகழ்வது பொருள் இல்லாதோரை இழிவுபடுத்துவதும் எமது சமுதாயத்தில் நிஜமான நிகழ்வாகும். பொருள் படைத்தவன் தான் எண்ணிய கருமத்தைத் தங்கு தடையின்றி ஆற்றுகின்றான். பொருள் ஆற்றலினால் அவ்வாறு செய்ய முடியாது இவ்வாறு விளங்கும் பொருள் பின்வருமாறு இருவகைப்படுத்தப்படு கின்றது.

1) லௌகீக பொருள்
2) மெய்ப்பொருள்

இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்கள் லௌகீகப் பொருட்கள் எனவும் மறுமையில் கிடைக்கும் பாவம் புண்ணியம் என்பவை மெய்ப்பொருளாக விளங்குகின்றன. பொருள் படைத்தவனைப் பொருளானது கனிமரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்த்து அனைத்து ஜீவராசிகளுக்கும் உணவாக இருப்பது போல அனைவருக்கும் பண்பாடு உடையதாக இருக்க வேண்டும். ஈயாத உலோபியின் பொருளானது நச்சு மரம் காய்த்துப் பயனற்று இருப்பது போல அமையும் எனவும் கூறப்படுகின்றது புருடார்த்த கோட்பாட்டின் படி நாம் அற வழியிலே ஈட்டிய பொருளைக் கொண்டு நாமும் வாழ்ந்து நம் சுற்றும் சூழ துய்த்து இனிய வாழ்வு வாழ்வதுடன் மறவர்களது வாழ்விற்கும் உதவிக்கொள்ளுதல் வேண்டும்.

புருடார்த்தங்களில் மூன்றாவதாகச் சொல்லப்படும் காமம் எனும் இன்பமானது இந்துக்களது வாழ்விலே மிகுந்த செல்வாக்கினைச் லுெத்தியிருந்தது. இங்கு இன்பம் என்பது ஆண், பெண்உறவு முறை பற்றிக் கூறுவதாகும். இக்கோட்பாட்டின் படி ஒவ்வொரு மனிதனும் பருவம் அடைந்த காலப்பகுதியில் இல்லறம் நடாத்துவது மரபு. அந்நிலையில் அனுபவிப்பதே இன்பமாகும். தமிழ்மொழியிலே அகப் பொருட் துறை சார்ந்த நூல்களிலே இன்பம் பற்றிய செய்திகள் கூடுதலாக உள்ளன. ஆனால் வடமொழியில் இவ்வாறான நூல்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. ஆயினும் வடமொழியில் வாத்சல்ராகஜனது காமசூத்திரம் போன்ற நூல்கள் இன்ப உணர்வுகளையும் அனுபவங்களையும் மறைவின்றி எடுத்துக் கூறுகின்றன.

இன்பம் என்பது சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும். இங்கு பேரின்பம் என்பது வீடு பேற்றுடன் வைத்து எண்ணப்படுவதால் சிற்றின்பமே இன்பமாகக் கருதப்படுகின்றது. சிற்றின்பம் என்பது ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒன்றுபட்டு வரும் இன்பமாகும். உடலும் உள்ளமும் ஒருங்கிசைவுடன் நுகரும் போது சிற்றின்பம் ஏற்படுகிறது. இவ்வாறான சிற்றின்பத்தை ஒருவன் பெண்ணோடு கூடி வாழ்கின்ற போதே கிடைக்கின்றது. காமம் எனப்படும் இவ்வின்பத்தைக் கணவனும், மனைவியும் கூடி வாழ்ந்து தர்மம் காத்து ஆன்மா ஈடேற்றத்திற்காகவும், பிதிர் தர்மத்தை ஆற்றவும் புத்திரர்களைப் பெற்றுக் கொள்வதற்கே இவ்வின்பத்தை அனுபவிக்கின்றனர். எனவே வாழ்விலே பிரதானமான இலட்சியமாகிய வீடுபேற்றினை அடைவதற்கு சிற்றின்பம் ஓர் சாதனமாக அமைகின்றது.

புருடார்த்தங்களில் நான்காவதாகச் சொல்லப்படும் வீடு என்பது பிறவியின் முடிவிலே கிடைக்கும் நற்கதி பற்றியதாகும். இந்து மதமானது இந்நிலைக்கு முத்தி, மோட்சம், சாயுச்சியம், பிரம்மஞானம், ஆத்மஞானம் எனப் பல பெயர்களினால் அழைத்திருந்த போதிலும் இக்கோட்பாடோ வீடு எனக் குறித்ததற்கான காரணம் யாதெனில் இவ்வுலக வாழ்க்கைக்கு நிலையில் நிற்கும் ஒருவருக்கு அவரது வீடு எந்த அளவிற்கு நிம்மதியினையும், ஆறுதலையும் வழங்குகின்றதோ அவ்வாறே மோட்ச நிலைக்கு வரும் ஆன்மாவும் சகல பந்தங்களிலிருந்தும் விடுபட்டு நிம்மதியினையும் ஆறுதலினையும் அடைவதனால் இந்நிலைக்கு வீடு எனும் பெயர் வழங்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய நூல்கள் பெரும்பாலும் அறம், பொருள், இன்பம், எகும் திரிவர்க்கம் பற்றியே பேசுகின்றன இதற்குக் காரணம் யாதெனில் ஒருவர் அறவழியிலே வாழ்ந்து அறவழியிலே பொருளினை ஈட்டி அறத்துடன் கூடிய இன்பத்தை அனுபவிப் பார். ஆனால் அவருக்கு வீடுபேறு தானா கவே கிடைக்கும் என்பதனாலாகும். இதற்குச் சான்றாக வள்ளுவர் திருக்குறளிலே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் எனும் முப்பாலினூடாக திரி வர்க்கத் தினை மட்டுமே கூறியிருந்ததனை குறிப்பிட லாம்.

இக்கோட்பாட்டின் படி பிறவியின் முடிவிலே பெறப்படும் நற்கதியாகிய வீடு பேற்றினை ஒருவர் அடைவதற்கு பற்றற்ற வனாகிய இறைவனை பற்றுதல் வேண்டும். இதனையே வள்ளுவர்

"பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப் பற்றுக பற்றி விடற்கு.... "

என்றார்.

ஒருவர் அற வழியில் வாழ்ந்து அற வழியிலே பொருளினை ஈட்டி அறத்துடன் கூடிய இன்பத்தை அனுபவிப்பாரானால் வீடு பேற்றினை அடைந்து வானுறையும் தெய் வத்துள் ஒருவராகக் கருதப்படுவார் இதனையே வள்ளுவர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

எனக் கூறியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரியத்தில் சில பதிவு...

## குடாநாட்டுக் கேணிகளும் ஆவுரோஞ்சு கற்களும்

**கலாபூசணம் சு.துரைசிங்கம்**
சுன்னாகம்.

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்ற பிரதேசம் யாழ்.குடாநாடா கும். தமது முன்னோர்கள் குளம் கண்ட இடத்தில் வளங்கண்டவர்கள். குடாநாட்டில் ஏராளம் குளங்கள் இருந்திருக்கின்றன. இன்றும் இங்கு ஆங்காங்கே குளங்கள் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின் றது. இப்பகுதிகளில் முன்பு வாழ்ந்தவர் களின் தொழில் விவசாயமாகவே இருந் தது.

அக்காலத்தில் மனிதன் அன்றாட வாழ்க்கைக்கும் ஏன் கால் நடைகளுக்கும் குளங்களும், வாய்க்கால்களும் உதவின. குளங்களையும், வாய்க்கால்களையும் அன்று பார்த்தால் வயலுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருப்பார்கள். அதேவேளை கால் நடைகள் அங்கு கூட்டங் கூட்டமாகவோ தனித்தே குளத்தில் நீரினைக் குடிப்பதைக் காணலாம். சிலர் மறுபுறத்தில் மேல் நீரைப் புறப்பாத்திரத்தால் தள்ளி விட்டு நீரினை அள்ளிக் கொண்டு செல்வதையும் காணலாம்.

குளத்தினை அண்டிய பகுதிகள் சில குடியிருப்புக்களாக மாறின. அவைகள் நாளடைவில் கிராமங்களாயின. இதே போன்று நீர் நிலைகளுக்கு வெகுதூரத்தில் இருந்த குடிசை மக்களுக்கு அண்மையில் நீர் நிலைகள் தேவைப்பட்டன. இந்த வேளையில் உருவாக்கப்பட்டவை தான் துரவுகள். இந்தத் துரவுகள் ஆழமானவை யாகவும் பல பக்கங்களிலிருந்து இறங்கி நீர் எடுக்கக் கூடியதாகவும் இருந்தது. இது போன்ற துரவுகள் தென்மராட்சிப் பகுதிகளிலும் தீவுப் பகுதிகளிலும் இருந்தன. கொடிகாமம், பளை போன்ற இடங்களில் இத்துரவுகளை இன்றும் காணலாம். தென்னை மற்றும் காய்கறிப் பயிர்கள் போன்றவற்றிற்கு இன்று இத்துரவுகள் மூலம் கோலுபட்டையால் நீர் ஊற்றுவதைக் காணலாம்.

துரவுகளாக இருந்தவற்றில் சில கல்லால் கட்டப்பட்டவை கேணிகளாயின. கேணிகளுக்கும் குளங்களுக்கும் அண்மித் ததாய்ப் பாதைகள் உருவாகின. இந்த நீர் நிலைகளுக்குள் நீர் குடித்த கால்நடைகள் இவைகளுக்குப் பக்கத்தில் நின்ற மரங்க ளில் முதுகை உரசின. இதன் காரணமா கத்தான் மனிதர்கள் குளக்கரைகளிலும் கேணி வாசல் கரையிலும் கற்றூண்களை நான்கு, ஐந்தடி உயமுடையதாக நாட்டி வைத்தனர். நீர் குடித்த மாடுகள் இந்தக் கற்களிலே முதுகைத் தேய்த்துச் செல்லும். இதனாலே ஆவுரோஞ்சு கற்களாயின. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவுரோஞ்சுக்கற்கள் பற்றி பண்டைத்தமிழ் நூல்களில் வருவதை அறியலாம்.

இன்றும் வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் தீவுப்பகுதிளிலும் அதுவும் வயல்களை அண்டிய பாதைகளில் அமைந்த குளங்களோ, கேணிகளோ இருந்தால் அங்கே ஆவுரோஞ்சு கற்கள் நாட்டியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றன. குறிப்பாக இன்னும் நாகர் கோயில், கரவெட்டி, தொண்டைமானாறு, மட்டுவில், மீசாலை, கந்தரோடை, சண்டி லிப்பாய் போன்ற இடங்களில் இவைகள் இருக்கின்றன. இவற்றில் சில நல்ல நிலையில் பேணப்பட்டு மனிதர்களுக் கும் கால்நடைகளுக்கும் பயன்பட்டு வருகின் றன. சில கேணிகள் இருந்த இடங்கள் தெரியாமல் மறைந்து விட்டன. சிலகே ணிகள் குப்பை கூழங்களால் நிறைந்து கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. முன்பு பெருந் தொகையான கோயில்களுக்கு அருகில் கேணிகள் இருந்தன. இன்று சிலகோயில் களில் மட்டும் காணப்படுகின்றன. வீதியோ ரங்களில் கிணறுகளும், நீர்த்தொட்டிகளும், ஆவுரோஞ்சுக் கற்களும் உருவாக்கப் பட்டன. மக்களும் கால்நடைகளும் பயன டைவதைப் பார்க்க முடிகிறது.

காலப்போக்கில் கால்நடைகள் வீட்டில் கட்டப்பட்டன. வாளியில் தண்ணீர் வைக்கப்பட்டது. மனிதர்கள் வைக்கோலால் கால்நடைகளின் (அரிப்பை) அலுப்பைத் தீர்த்து வைக்கின்றனர். என்ன தான் நவீன முறைகள் வந்தாலும் பண்டைய மக்களின் வாழ்க்கை முறைகளை அறியக் கேணி களும் ஆவுரோஞ்சுக் கற்களும் பேணப்பட வேண்டும் என்பது புலனாகின் றது.

**வடபுலக் கால்நடைகளின் அன்றைய நிலை**

சங்க காலத்தில் ஆண்ட அரசர்க ளின் பெரும் செல்வம் கால்நடை களே. ஓர் அரசன் எவ்வளவு நன்செய் நிலங்களையும் கால்நடைகளையும் வைத்திருக்கின்றா னோ அவனே பெரும் செல்வமுடையவன் என்று கருதப்பட்டான். ஒரு பெயர் செல்வம் ஓர் அரசன் இன்னோர் அரசனுடன் போர் செய்ய முன் ஆநிரைகளைக் கவர்வது இடம் பெறும். இது நடைபெறுவதற்குக் காரணம் மாடு செல்வம் பெருக்கும் ஒன்றாகும். மற்றைய விடயம் வாய் பேசாப் பிராணி யாவதுமாகும்.

கால்நடைகளையே மந்தைகள் என்று அழைப்பர். மாடு, ஆடு, எருமை போன்றவற்றை மந்தைகள் என்று அழைப் பர். இலங்கையை எடுத்துக் கொண்டால் இது ஒரு விவசாய நாடாகவே அன்றும் இன்றும் இருந்து வருகின்றது. அந்நியர் ஆட்சி இங்கு நடைபெற்று சுதந்திர நிலையுள்ள இன்றும் கூட விவசாய நாடாகவே இருந்து வருகின்றது. இந்த விவசாயத்திற்கு அன்று தொடக்கம் இன்று வரை கால்நடைகளே உறு துணையாக இருந்து வருகின்றன.

இலங்கையின் வட பிரதேசமாக மதவாச்சி தொடக்கம் யாழ்ப்பாணம் வரை இருந்து வந்துள்ளமை யாவரும் அறிந்த ஒன்றாகும். அதாவது வவுனியா, மன்னார், நெடுங்கேணி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் அடங்கலாக தமிழ் விவசா யப் பிரதேசங்களாக இன்றும் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. அனுராதபுரம் வரை வடபகுதி நீண்டிருந்ததாகவும் தமிழ்க்குடி மக்கள் வாழ்ந்ததாகவும் சான்றுகள் கூறுகின்றன. மதவாச்சிப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் மற்றைய இனங்களுடன் சங்கமித்த நிலையை இன்றும் காணலாம்.

வட மாகாணத்தில் குறிப்பாகக் காடுகள் சார்ந்த குடியிருப்புப் பிரதேசங்களில் எருமைகள், மாடுகள், ஆடுகள் என்பன பேணப்பட்டன. இந்த வகைக் கால்நடைகள் மனிதனின் விவசாய முயற்சிக்கு உதவி வந்தன. வடபகுதி கரையோரப் பிரதேசங்கள் தவிர ஏனைய பகுதிகள் விவசாய நிலப்பரப்புகளாகவே இருந்தன. இங்கு கால்நடைகளும் பெருமளவில் இருந்தமை குறிப்பிடத் தக்கது.

கால்நடைகளில் முதலில் ஆடுகளை எடுத்துக் கொள்வோம். ஆடுகள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், என இரு பெரும் பிரிவினதாக இருக்கின்றது. வெள்ளாடுகளிலும் பல பிரிவுகள் உள்ளன. ஊர்ஆடு, சேலம்ஆடு, ஜமுனாரி ஆடு, செவியன் ஆடு எனப் பல பிரிவுகள் இருக்கின்றன. வெள்ளாடுகளை வீட்டிலும் பட்டியிலும் வளர்ப்பதுண்டு. பட்டியில் வளர்ப்பவர்கள் வயல்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொர் இடத்தில் பட்டிகள் அடைத்து வைப்பார்கள். பகலில் மேய்ச்சலுக்கு விடுவார்கள். இரவில் வயலிலோ தோட்டத்திலோ பட்டியிலோ அடைப்பார்கள். இதன் வாயிலாக வயலுக்கு நேரடியாக பசளையும் சலமும் கிடைக்கின்றது. இதே வேளை வெள்ளாட்டுப் பால் மனிதருக்கு மிகவும் சத்துள்ளதாகக் கருதப்படுகின்றது. வீடுகளிலும் இவற்றைக் கட்டி வளர்ப்பதுண்டு. வெள்ளாட்டுக் கடாவினை இறைச்சிக்காவும் பயன்படுத்துகிறார்கள்.

செம்மறியாடுகள் இவ்வாடுகள் ஆதியில் வட பிரதேசத்தில் இருந்ததாகச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இவைகள் பெரும்பாலும் இந்தியாவின் சில பகுதிகளிலிருந்து கொண்டு வரப் பட்டிருக்கலாம். இந்த செம்மறி ஆடுகள் கூடுதலாக யாழ். குடாநாட்டுப் பகுதியில் மாத்திரம் வளர்க்கப் படுகின்றன. இவைகள் பயிர் செய் நிலங்களில் பட்டிகளில் வளர்க்கிறார். பகல் வேளைகளில் புற்றரைகளில் மேய்த்துத் திரிவார்கள். இரவில் பட்டிகளில் அடைப்பார்கள். நிலங்களுக்கு நல்ல பசளை சேர்க்கும்.

இனி நாம் கால்நடைகளில் எருமைகளைக் கவனிப்போம். இவைகளே வடபகுதியின் ஆதிக் கால்நடைகளில் ஒன்றாகும். வடபகுதியில் யாழ்.குடாநாடு வன்னிப்பிரதேசம் போன்றவற்றில் இன்று வளர்க்கப்படுகின்றன. வடபகுதியில் தென்மராட்சி வடமராட்சி பேர்ற பகுதிகளில் இன்றும் சில எருமைகளைக் காணலாம். வன்னிப் பிரதேசங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா, நெடுங்கேணி, ஒதியமலை, மன்னார் போன்ற பகுதிகளில் பரவலாகக் காணலாம். எருமைகளை குறிசுட்டு பட்டி போட்டு வளர்க்கிறார்கள். பல எருமைகள் கட்டாக் காலியாகக் காடுகளில் உள்ள குளங்களில் புரண்டு திரிவதும் காணலாம்.

எருமைகளை மிகவும் கெட்டியானது. கூடவே கிரந்தியும் இருக்குமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வார்கள். எருமைத்தயிர் சோற்றுக்கு விட்டு உண்பார்கள். நெய்யும் விசேடமானது. எருமைத்தயிருக்குச் சில இடங்களில் சீனி போட்டும் பருகுவார்கள். விருந்தினருக்கும் கூடக் கொடுப்பார்கள். வட பகுதியில் சில இடங்களில் மணப்பெண்களுக்கு சீதனமாக பத்து எருமைகளோ 50 எருமைகளோ கொடுப்பதும் உண்டு. இவ் வழக்கம் வன்னிப் பிரதேசங்களில் இன்றும் இருப்பதைக் காணலாம்.

மாடுகள் வட பிரதேசத்தில் எருமைகளின் வளர்ப்புக் குறைய மாடுகளின் வளர்ப்பு பெருகத் தொடங்கியதில் வியப்பு ஒன்றுமில்லை. குளங்கள், குட்டைகள் அருகி பட்டனமாக்கல் வரவே எருமைகள் காடுகளை நோக்கி நகர்ந்தன. மாடுகளின் பெருக்கம் கூடியது. மாடுகளை மக்கள் தங்கள் விவசாய நண்பனாக்கினார்கள்.

ஏற்கனவே சொல்லியதற்கிணங்க மாடுகள் செல்வம் தான். மாடுகள் ஆரம்பத்தில் கட்டாக்காலியாகத் திரிந்த போதும் நாளடைவில் விவசாயி அதைத் தன் வழிக்குக் கொண்டு வந்தான். பசுக்கள் பால் தந்தன. எருதுகள் வயல் உழுதன. வண்டியிழுத்தன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் வளரும் மாடுகளும் குணநலங்களில் மாறுபடுவதைக் காணலாம். வன்னிப் பிரதேசத்தில் வளரும் மாடுகளைத் தெற்கு வன்னி மாடு, கிழக்கு வன்னி மாடு, வடக்கு வன்னி மாடு என்று அழைப்பர். தெற்கு வன்னி மாடுகள் சவாரிக்கும், வண்டிலுக்கும் சிறந்தவை. வடக்கு வன்னி மாடுகள் உழவுக்குச் சிறந்தவை. மேற்குப் பகுதி மாந்தை, பேசாலை, தலைமன்னார் போன்ற இடங்க ளைச் சேர்ந்த மாடுகள் அனேகமாக கடுகன், செங்காரி போன்ற நிறங்களில் இருக்கின்றன. இவைகள் அலுப்பேறாமல் நீண்ட நேரம் உழக் கூடியவை. பார வண்டில்களும் இழுக்கும் வல்லமை உடையன.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக சரசாலை, கொடிகாமம், கந்தரோடை, அளவெட்டி போன்ற இடங்களில் மாட்டு வியாபாரிகள் அன்று இருந்தார்கள். இவர் கள் மதவாச்சி, மன்னார், நெடுங்கேணி போன்ற இடங்களுக்கு மாடுகள் வாங்கச் செல்வார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்தி லிருந்து மூன்று நான்கு பேர் கால்நடையாகக் வன்னிக்குச் செல்வார்கள். செல்லும் பொழுது தேவையான அவசர உணவு வகைகளை எடுத்துமுத்துச் செல்வார்கள். பெரும்பாலும் கண்டி வீதி வழியாகவே (ஏ9) செல்வார்கள். இரவு நேரங்களில் குறிப்பிட்ட இடங்களில் தங்கிச் செல்வார்கள். செல்லும் வழிகளில் யானை, புலி, கரடி போன்ற மிருகங்களையும் சந்திப்பதுண்டு. ஒரு வாரம் அல்லது இரு வாரங்களின் பின் ஆங்காங்கே கொள்வனவு செய்த மாடுகளை சோடிகளாக இணைத்துக் கொண்டு திரும்பவும் கண்டி வீதி வழியாக ஊர் திரும்புவார்கள்.

வன்னிப்பிரதேசத்திற்கு மாடுகளை வாங்கச் சென்றவர்கள் ஆனையிறவு தாண்டி வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி யாழ் குடா பல பகுதிகளுக்கும் பரவி விடும். இதனால் முக்கிய ஊர்களுக்கு மாடுகள் வரும் என்பதற்காக அந்தந்த ஊரினை நாடி மாடுகளை வாங்கச் செல்வார்கள். சிலர் தெற்கு வன்னி மாடுகளை விரும்புவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட சில இடங்களில் மாடுகளைக் கொண்டு வேலை வாங்கலாம். சில இடங்களில் மாடுகள் துடியாட்டமானவை. சவாரி ஓடக்கூடியவை என்று வாங்குவதற்கு வருவார்கள்.

வன்னி மாடுகள் காடுகளில் ஓடித் திரிபவை. நல்ல மேய்ச்சலால் முறுக் கேறியவை என்று தெரிந்து வாங்குவார்கள். உள்ளூர் மாடுகளைச் சுணைக்கெட்டதுகள் என்று கூறுவார்கள். மாடுகளுக்கு சில குணங்குறிகளைச் சொன்னால் நாலுகால் சிலம்பன், கொடிச்சுவாலன் , பட்டி பார்த்த கொம்பன், தலைச்சுற்றி என்றெல்லாம் சொல்வார்கள்.

இனி வடக்கன் மாடுகள் பற்றிய செய்திகளைப் பார்ப்போம் இந்த இன மாடுகள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டவை. இவை யாவும் வெள்ளை நிறமுடையவை, நீண்டு உயர்ந்த உடற் பருமனைக் கொண்டவை, கொம்புகளால் மிகவும் நீண்டு உயரமாகவிருக்கும். இவைகள் பெரும்பாலும் பார வண்டில்களுக்காகவும், உழவுக்காகவும் கொண்டு வரப் பட்டன. இந்த வடக்கன் இனப்பசுக்களில் அதிகம் பால் கறக்க முடியாது என்று சொல்வார்கள்.

கரவெட்டி, கந்தரோடை, சாவகச் சேரி, மாதகல் போன்ற இடங்களில் வாழ்ந்த மாட்டு வியாபாரிகளே வாங்கி வந்து விற்பதுண்டு. இலங்கை சுதந்திரம் அடையும் வரை இந்த வடக்கன் மாட்டு வியாபாரமும் பிற வியாபாரங்களும் சுமூகமாக நடந்தன. இந்தியாவிலிருந்து வடபகுதிக்கு வந்து வியாபாரம் மரமேநல் போன்ற தொழில் களை செய்ததைக் கண்டுள்ளோம்.

இந்த வடக்கன் மாட்டு வியாபாரிகள் பருத்தித்துறையிலிருந்து வள்ளம் மூலமாகவோ, பாய்க்கப்பல் மூலமாகவோ இந்தியாவிற்குச் செல்வார்கள். தமிழ் நாட்டில் மாட்டுச்சந்தைகள் கூடும். அங்கு தங்களுக்குத் தேவையான ஐந்து, ஆறு சோடி வடக்கன் மாடுகளைக் கொள்வனவு செய் வார்கள். கொள்வனவு செய்த மாடுகளை தூத்துக்குடித் துறைமுகத்திற்கு நடத்திக் கொண்டு வருவார்கள். பின் தோணிகளில் ஏற்றி மீண்டும் பருத்தித்துறைமுகத்தை வந்தடைவார்கள். தோணியில் மாடுகள் வருகிறது என்று அறிந்ததுமே மக்கள் கொள்வனவு செய்ய முந்தியடிப்பர்.

இந்த வடக்கன் மாடுகள் ஒவ் வொரு கிராமத்திலும் ஒன்று இரண்டு சோடிகள் மாத்திரம் நின்றன. இக்காலத்தில் வடக்கன் மாடுகளைக் காண்பது அரிதாகி விட்டது. ஏன் வன்னி மாடுகளும் கொண்டு வருபவர் களுமில்லை. வாங்கித் தொழில் செய்பவர்களும் குறைந்து விட்டன. ஆனால் வட பகுதி மக்கள் பசுக்களை நிறைய வளர்க்கி றார்கள் மாட்டுப்பண்ணைகளும் ஆங்காங்கே இருக்கின்றன. பால் சபைகள் இருந்து பசுக்களை வளர்ப்பதற்கு ஊக்கம் கொடுக் கின்றன. வடபகுதி மக்கள் பசு வளர்ப்பதற்கு ஊக்கம் கொடுக்கின்றன. வடபகுதி மக்கள் பசுவளர்ப்பில் முக்கிய கவனம் செலுத்தினால் பால் பொருட்களில் தன்னிறைவு காண்பதுடன் தொழிலில்லாப் பிரச்சினைகளும் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிகொடுக்கும் தேசத்தை உருவாக்குவோம்

**ப.தனுஸ்ரிகா**
**தரம் 11**
**யா/இணுவில் இந்துக்கல்லூரி**

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பார்கள். ஆனால் பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்ற நிலைக்கு மனித சமுதாயம் சென்று கொண்டிருக்கின்றது. தினம் தினம் படு கொலைகளும், அதிகரித்த வீதி விபத்துக்களும், அதிகரித்துள்ள போதைவஸ்துப் பாவனையும் நமது இருப்புக்களைக் கேள்விக்குறியாக்கி உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் நமது வாழ்வு தளர்வுற்றுள்ள நிலையில்,

இனியவை இருக்க இன்னாது கூறுதல் கனியிருப்ப காய் கவந்தற்று என்ற பொய்யாமொழிப் புலவரின் வார்த்தைகள் பொய்க்காமை இன்று மனித சமுதாயம் கனியிருக்கக் காயை உண்பது போன்று வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் நல் வாழ்வினை மறந்து சமூகப்பிறழ்வுகள் இன்று யாழ் மண்ணில் தலைவிரித்தாடு கின்றது.

இந்நிலையில் இளைய சமுதாயத்தினர் பரிசுத்த வாழ்வை நோக்கிச் செல்ல வேண்டிய காலகட்டத்தில் பின்வரும் கனிகளைக் கொடுக்க வேண்டிய காலச் சூழ்நிலை உருவாகியுள்ளது. கொலை, கொள்கை, களவு, போதைவஸ்து போன்றவற்றில் இருந்து விடுபட்டு அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, நம்பிக்கை, சாந்தம், இச்சையடக்கம் என்பவற்றைப் பேணி வாழ வேண்டும்.

பாவவாழ்வில் இருந்து விடுபட்டுப் பரிசுத்த வாழ்வை நோக்கிச் செல்லப் பரிசுத்தக் கனிகளை . சூரியனில் இருந்து ஒளிவருகின்றது அதில் உள்ள நிறங்கள் எம் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அரியத்தினூடாகச் செல்லுகின்றபோது ஏழு நிறங்களாகப் பிரிகின்றது. அதே போல எமது வாழ்வை பகுத்து நோக்குகின்ற போது நம் வாழ்வு வெறுமை நிலையில் இருந்து வெற்றி நிலையை அடைகின்றது. நல்ல மரமாக சமூகத்திற்கு நற்பயனைக் கொடுப்பவராக மாறுவதற்கு நாம் அன்புடைய சமூகமாக மாற வேண்டும். இன்றைய பிறனிடத்தில் அன்புகூருவாயாக. எனவே நாம் இறைவனிடத்தில் அன்புடையவராக மட்டுமல்ல சக மனிதர்களிடத்திலும் அன்புடையவராக இருக்க வேண்டும். அன்பு சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் விஸ்வசிக்கும் சகலத்தையும் சகிக்கும். இத்தகைய அன்பை மறந்து வெறும் என்பு தோல் போர்த்திய மனிதனாக வாழ்கின்றோம். இதனால் நாம் அடையப் போகும் பயன் என்ன? எனச் சிந்திப்போம்.

வாழ்க்கையின் போராட்டங்களில் துவண்டு விடாமல் முன்னேறிச் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி மிக அவசியம். அத்திமரம் துளிர் விடாமல் போனாலும், திராட்சைச் செடி பயனற்றுப் போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பேன். எனப் பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே இறை பற்றினால் நாமும் இன்புற்று சமூகமும் இன்புற முடியும். நீடித்த சந்தோசம் என்பது கிடைக்குமா என்று ஏங்கும் நிலையில் நாம் ஓடுகின்ற ஓட்டம் உலக ஓட்டத்துக்காக இல்லை உள்ளத்தின் மகிழ்ச்சிக்காக ஓடும் போதும் மகிழ்ச்சியைப் பெறலாம். நமது ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போல மாற வேண்டும். நாம் என்னத்தைக் குடிப் போம் என்னத்தை உண்போம் என்று ஏங்கா மல் படைத்தவர் படியளப்பார் என்ற நம்பிக் கையோடு வாழ வேண்டும். ஒரு முறை யேசு பிசாசினால் சோதிக்கப்பட்ட போது மனிதன் அப்பத்தினால் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப் பான் என கூறினார்.

வீட்டிலும், நாட்டிலும், சமூகத்திலும் சமாதானம் இழக்கப்பட்ட நிலையில் சமாதானப்பிரபு ஆகிய இயேசுகிறிஸ்து என் சமாதானத்தை உங்களுக்குத் தருகின்றேன் என்றார். அருமையான தேவஜனமே சமா தான வாழ்வை நோக்கிப் பயணிக்க ஆயத் தமாவோம். கர்த்தர்மேல் பாரத்தை வைத்து விடு. அவரே உன்னைப் பாதுகாப்பார். அதிச யம் செய்வார் என்று நம்பு. உன் வாழ்வு வெற்றியாக மாறும்.

நீடிய சகிப்புத் தன்மையுடன் தன்ன டக்கமாகவும், நிதானத்துடனும் எப் போதும் நம்பிக்கையுடன் இருப்பதே பொறுமை யாகும். எனவே இளையோகளே பொ றுமை உடைய தெய்வீகத் தன்மையுடைய வராக மாறுங்கள்.

இளையோர்களே ஒரு கணம் சிந்தி யுங்கள் உங்கள் வாழ்க்கை எங்கு செல்கி ன்றது என்று இச்சையடக்கி இறை பற்றுடன் யானைக்கு பலம் தும்பிக்கை மனிதனுக்குப் பலம் நம்பிக்கை என்ற சிந்தனையுடன் வாழ்ந்து வெற்றி கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருக்கு ஆக்கம் அளிப்பது சமயம்

**திருமதி செல்வலட்சுமி புவனேந்திரராசா**
**முன்னாள் உத்தியோகத்தர்**

நாம் எச்சமயத்தைப் பின்பற்றியும் ஆக்கம் பெறமுடியும் அதற்காக எல்லா மதங்களையும் ஒரே விருப்புடன் பின்பற்ற முடியாது. நாம் வீட்டின் மேல் மாடிக்கு ஏற வேண்டுமானால் படிக்கட்டுகளின் மூலம் ஏறலாம். அல்லாவிடின் ஏணியான மூலமோ அல்லது கயிற்றை பிடித்துக் கொண்டோ அல்லது வேறு வழிகளிலோ அவ்விடத்தை அடைய முடியும். இவ்வாறே ஒவ்வொருவரும் தமக்கு விருப்பமான மதத்தைப் பின்பற்றி உயிருக்கு ஆக்கம் பெறமுடியும்.

சிலர் கடவளாவது சாமியாவது என்ற எதிர்த்துப் பேசுகின்றனர். இது அவர்களின் அறியாமையே ஆகும். நாம் வாழும் இவ் உலகமும் ஏனைய கிரகங்களும் சூரியனைச் சுற்றி ஒரே சீரான வேகத்தில் வலம் வருகின்றன. ஒரு பொருளில் இருந்து இன்னொரு புதிய பொருள் தோன்றுகின்றது. எல்லாம் உலகநிதிப்படியே ஒழுங்காக நடைபெறுகின்றது. இது தானாக நடக்க முடியாத செயல் சூனியத்தில் இருந்த ஒரு பொருளுக்கு வேகமாகவோ நியதியோ உண்டாகாது. இது இயற்கையின் நியதி என்று சொல்லி சமயம் வேண்டாம் கடவுள் வழிபாட தேவையில்லை என்று கூறமுடியாது.

இன்னும் சிலர் கண்ணால் காண முடியாத கடவுளைப்பற்றி நாம் ஏன் சிந்திக்க வேண்டும் என்கின்றனர். கண்ணுக்குத் தெரியாத எல்லாவற்றையும் நாம் விட்டு விட முடியுமா? பகலிலே நட்சத்திரங்கள் தெரிவது இல்லை. எல்லா எழுத்துக்களும் அகரமுதலாகவும் கலந்து இருப்பது போல கடவுளும் உலகம் முதலாகவும் கலந்து இருக்கின்றார் என்கின்றார் திருவள்ளுவர். இது கண்ணால் காணப் படாத காதல் மட்டுமே கேட்கக் கூடிய ஒலியாகவே இருக்கின்றது. இவ்வாறு இறைவனும் கண்ணுக்குத் தெரியாத மறைபொருளாக இருந்து எமக்கு அருள்புரிகின்றார்.

"மாறி நின்றன்னை மயக்கிடும்
வஞ்சப் புலன் ஐந்தும்"

என்கிறார் மாணிக்கவாசகர் மெய், வாய், கண், செவி என ஐந்து பொறிகளும் எமக்கு வஞ்சகம் செய்கின்றன. ஒன்றின் வேலையை மற்றொன்று செய்ய முடியாது. உதாரணமாக கண்ணின் வேலையை காதால் செய்ய முடியாது. காதின் வேலையை வாயால் செய்ய முடியாது. இப்படியே ஐந்து பொறியும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நாம் காதினால் இனிய சங்கீத ஒலியையும் கேட்கலாம். அதே வேளை அடுத்தவன் நம்மைக் கண்டிக்கும் போது அவனுடன் சண்டை செய்யவும் தோன்றும். அவ்வாறே ஏனைய பொறிகளும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக் கோப்பில் நில்லாமல் அலைந்து திரிகின்றன. இவைகள் ஐந்தும் நமக்கு இடையறா துன்பம் செய்கின்றன. நமது மனம் எல்லா வழிகளுக்கும் இழுத்துச் செல்லப்படுகின்ற மனதை ஒரு வழிப்படுத்த முடியாது சதா வருந்திக் கொண்டிருக்கின் றது.

புலன்களை அடக்கி ஆளப்பழக வேண்டும். புலனடக்கம் என்பது புலன்க ளுக்கு வேலை கொடுக்காது இருப்பது என்பது பொருள் அல்ல. புலன்களை தவறான வழிக்குச் செல்ல விடாது தடுத்த லேயாகும். ஒரு குட்டையில் துள்ளியும் பருகலாம். இவ்வாறு மனம் தெளிந்த நிலையில் கடவுளைநாக்கி பிரார்த்தன செய்ய முடியும். பிரார்த்தனை செய்யச் செய்ய நான் என்ற கர்வம் அடங்கும். இந்த நிலையில் கடவுளை அகக் கண்ணால் காண முடியும். அவன் அருளைப் பெறமுடியும். ஒரு நாளும் நமக்கு அறிமுகம் இல்லாம காக்கை வேறு எங்கோ பழத்தைச் சாப்பிட்டு விட்டு நமது வீட்டுத் தோட்டத்தில் விதையைப் போடுகின்றது. அது வளர்ந்து பெரிய மரமாகின்றது. நாய் வீட்டைக் காக்கின்றது. பசு பால் தருகின்றது. இவ்வாறு எத்தனையோ ஜீவராசிகள் நமக்குத் தொண்டு செய்கின்றன. நாக்கிலே சுவை இல்லை என்றால் நாம் உண்ணமாட்டோம் நாக்கில் சுவை இருப்பதால் தான் உணவை உட்கொண்டு உடலை வளர்க்கின்றோம். உடலை வளர்த்துத் தான் நமது கர்வத்தைப் போக்க முடியும். குழந்தைக்குத் தாயை மயக்கும் சக்தி இருக்கின்றது. அதனால் தாய் குழந்தையைப் பிரிய கடன் வளர்த்து பெரியவன் ஆக்குகின்றான். இவ்வாறு இறைவன் நமக்கு எத்தனையோ வழிகளில் உதவுகின்றான். அத்தகைய கடவுளை மறப்பது நன்றன்று.

ஓர் உணவு விடுதியில் உணவுகளில் ஒவ்வொருவரும் தத்தமக்கு விருப்பமான உணவை உண்ண முடியும். இந்த ஒவ்வோர் உணவுக்கும் ஒவ்வோர் வடிவம் ஒவ்வோர் குணம் உண்டு. இது அவரவர் நாவில் ஏற்படும் சுவையின் பிரதிபலிப்பே. எல்லோ ரும் ஒரே வகையான உணவை உண்ண விரும்புவதில்லை என்றால் அவர்களின் உடல் சற்று ஆரோக்கியக் குறைவாக உள்ளது என்பதே பொருளாகும். அவ்வாறே ஒருவருக்கு ஒரு சமயத்திலும் நாட்டம் இல்லை என்றால் இவனுக்கு ஆன்ம வேட்கை இல்லை என்பதே பொருளாகும். இதற்காக நாம் கடவுளைக் குறைகூற முடியாது. எல்லா மதங்களுக்கும் அச்சாணி போல் பொதுவாக இருப்பது நம்பிக்கை. அத்தகைய நம்பிக்கையை முழு மனதுடன் ஆண்டவன் மேல் வைக்க வேண் டும். இந்த நம்பிக்கை வளர வாழ்க்கையில் வெற்றியையும், முன்னேற்றத்தையும் காணலாம். எல்லா மதங்களுக்கும் பொது வான பரம்பொருள் ஒன்றே பரம் பொருளை நாம் எல்லோரும் முழுநம்பிக் கையுடன் வணங்குவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய ஆயுளுடன் வாழுவோம் வாரீர்...

**டாக்டர் திருமதி சி.ஹரிகரன் (உபஅதிபர், விரிவுரையாளர்)**
**லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி,**
**மின்சாரநிலையவீதி, சுன்னாகம்.**

வானத்தில் பறக்கும் ஐந்தறிவு படைத்த பறவைகளைப் பாருங்கள். காட்டில் வசிக்கும் மிருகங்களைப் பாருங்கள். அவைகளுக்கு எல்லாம் பாடங்கள் கற்பித்தா கொடுத்தார்கள்?!!! தத்தமக்குத் தேவையான போஷணைத்திரவியங்களை (உணவுகளை) எவ்வளவு கவனமாகப் பெற்று ஆரோக்கியமாக சீவியங்களை நடத்துகிறார்கள்.

ஆனால் மனிதன் எனும் மாபெரும் தத்துவப் பெயரையுடைய (6அறிவு பெற்ற) மனிதனுக்குப் பாரம்பரியம் கொண்டு வாழ்வதற்குத் தடையாக இருப்பது யாது?....

பழமையில் வாழ்ந்த மனிதன் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்திருப்பது யாவரும் அறிந்த உண்மையே!

பாரம்பரிய மட்பானைகளில் சமைப்பதும், மூங்கில் குழலில் பிட்டு அவிப்பதும், பனை, தென்னை குருத்து, ஈர்க்கு நார்களில் இடியப்பத் தட்டுகள் பயன்படுத்துவதும் சுளகுகளில் பயன்படுத்துவதும், வாழையிலை போன்ற பாரம்பரியங்களில் உணவு உட்கொள்வதும், மரஉரல்கள், முருகைக்கற்களில் அம்மி, குழவி, ஆட்டுக் கல் போன்றவற்றில் உணவு தயாரிப்பதும், இயற்கை விறகுகள் பயன்படுத்தி அடுப்பு (மண்)களில் இயல்பாக கைகளினால் குற்றி, இடித்து, வறுத்து, துவைத்து உட் கொள்ளும் உணவு வாழ்க்கை முறைகள் எவ்வளவு சிறப்பு??! தற்போது பாரம்பரிய வாழ்க்கை முறை களில் இருந்து தவறிய வாழ்க்கை முறையே பெரும்பாலாகக் காணப் படுகின்றது.

காலையில் 6.20-6.40 மணியளவில் உதிக்கும் சூரியனின் மென்மையான கதிர்கள் பச்சை மரங்களில் பட்டு தெறிப்பதை கண்களில் பெற்று உடம்பில் படுவது இயல்பான போஷணை திரவியங்களை எமக்கு அளிக்கின்றது. விற்றமின் A,D கிடைக்கின்றன. கண்கள் கண்ணாடி அணியாது வாழமுடியும். வயது சென்றாலும் கண்ஒளி பார்வை திறம்பட இருக்கும். "கற்றாக்ட்" (Cattract) சத்திர சிகிச்சையின்றி வாழ முடியும்.

ஆரோக்கிய உணவு என மனிதன் சிந்திப்பதை விட இயல்பாகவே கை எல்லைக்குள் கிடைப்பனவற்றையும் இயல்பாகவே குசினிக்குள் இருக்கும் சாதாரண நற்சீரகம், உள்ளி, வெந்தயம், மிளகு, பெருஞ்சீரகம், வெங்காயம் என இவற்றிலும் நிறைய மகிமைகள் அடங்கிய உணவுகள் தயாரிக்க முடியும்.

பண்டைய காலங்களில் பப்பாய்க் காய்களில், பலாக்காய் பிஞ்சுகளிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீர்க்கங்காய் அதன் தோல் மற்றும் மாங் காய்களில் எவ்வளவு உணவு வகைகள் தயாரித்து உட்கொண்ட காலங்கள் தற் பொழுது அருகிவந்த நிகழ்வுகளே.

தொடர்ந்து கத்தரிக்காய், வாழைக் காய், தக்காளிக்காய், பூசணிக்காய், முருங் கைக்காய் என்று சகல மரக்கறி வகைகளும் ஏனைய ஜீவ உணவு வகைகளும் எதுவா னாலும் நன்கு முற்றிய பின் சமைத்து உட் கொள்வது தவிர்க்கப்படுதல் வேண்டும். சகல உணவு மரக்கறி வகைகளும் பூவா கவோ, பிஞ்சாகவோ, மாமிச உணவு வகைகளிலும் சிறிய சிறிய இனங்களே சிறந்தவையாகும்.

நாட்டுஅரிசி, ஊர் அரிசி, விறாத்துக் கோழிக்குஞ்சு, ஊர் முட்டை, நாட்டுக்கோழி எனவும் இயற்கைப்பசளையில் ஆட்டெரு, மாட்டெரு, குப்பைகூழங்களில் விளைந்த அரிசி மற்றும் காய் கறி பிஞ்சுகளையே மனிதன் உட்கொண்டு வருவார்கள். ஆயின் நீண்ட ஆயுளுடன் நரை, திரை மூப்பு இன்றிய வாழ்வுடன் மனிதன் வாழ முடியும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**"காலையில் இஞ்சியும்**
**கடும்பகல் சுக்கும்**
**மாலையில் கடுக்காயும்..........**
**கோலையூன்றி குலாவி திரிவான்"**

பாரம்பரியமான இயல்பு செயற் பாடுகளையும் மனிதன் கடைப்பிடித்தல் வேண்டும். உதாரணமாக கைகளினால் எவ்வளவு அழகாக சாப்பிடுவதும், தண் ணீரை உறிஞ்சி வாய் வைத்துக் குடிப்பதும் சப்பி அழகாக மென்று விழுங்குவதும், ஒவ்வொரு உணவையும், ஒவ்வொரு அழகுடன் உட்கொள்ளுதல் வேண்டும். சப்புவதை சப்பியும், உமிவதை உமிஞ்சும் உட்கொள்ளுவதில் தவறில்லை.

இவை தவிர நாட்டுச் சிவத்த அரிசியின் தவிடு மற்றும் பயறு வறுத்த அதன் தோல், இவ்வாறாக ஏனைய கடலை வகைகளையும் அவித்த தண்ணீர் அத்துடன் இளம் அவியலுடன் உட்கொள்வது சிறந்ததாகும்.

பாரம்பரிய கூழ் எனப்படும் உணவு வகைகள் மற்றும் பனம்பழப் பாணிகள், கருப்பணிக் கஞ்சிகள், உழுத்தம்மாவு உருண்டைகள், ஒடியல் மா(வறுத்தது) உருண்டைகள் அருகிப் போய் விடாது மக்கள் இயல்பாக நுகர்வு கவனங்கள் செயல் படுதல் இயல்பானதாகும்.

மக்கள் யாவருக்குமே யாவும் தெரிந்தனவே. ஆனால் மக்கள் மத்தியில் அசமந்தப் போக்கும் பஞ்சி எனும் சோம்ப லும் அசட்டை எனும் சோம்பலினாலும் மக்கள் இன்று சகல பாரம்பரிய பண்புகளை உள்வாங்கிக் கொள்வது அகலக்கால்களை வைத்து அவை இன்று அருகிப் போகும் நிலையில் காணப்படுகின்றது.

நன்கு முன்னேற்ற துரித உணவு முறைகளினாலும் (Fact Food) துரித வாழ்வியல் முறைமையினாலும் (Fast Life) இன்று பதட்டமான பாரிய நோய்கள் ஆட்கொண்டு வருகின்றன. வெள்ளை நிற மான உணவு வகைகளை இயன்ற வரை யில் தவிர்க்கவும். நற்சீரகம் இரத்தத்தைத் துப்பரவு செய்யும். உள் உறுப்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பரவு செய்யும். இதனை வயது எல்லையின்றி யாவரும் உட்கொண்டு வரலாம். இதனை மண்சட்டியில் (இள நெருப்பில்) மெதுவாக வறுத்து தண்ணீர் விட்டு சிறிது வற்ற விட்டு (ஆட்களுக்கு ஏற்ப 1/2 தேக்கரண்டி அல்லது ஒரு தேக்கரண்டி வீதம்) கணக்கான சூட்டிர் பனம் கற்கண்டு அல்லது ஒன்றுமில்லாமல் பருகி வரலாம். இதனால் சரீரபலம், உற்சாகம் காணலாம். இதனை இரவில் அவித்து காலையில் குடிக்க தலை சுற்று, பித்தகுணங்கள் தணியும். வயிற்று கோளாறுகள் தணியும். இதனை கூட்டு முறையாகவும் குடிக்கலாம். கொத்தமல்லி, மிளகு, வேர்க்கொம்பு.......... இன்னும் பல இலைகளுடன் துளசி, தூதுவளை, இக்கிரி போன்றவற்றினையும் சேர்த்துக் கொள்ளலாம். இதற்கு சரீர மாச்சல்கள் தணியும். தடிமன், காய்ச்சல் தணியும்.

மேலே குறிப்பிட்டவற்றினை தனித் தூளாக தயாரித்து (வெயிலில் காய வைத்தும் அல்லது மெதுவாக வறுத்தும்) நெய் அல்லது பசுப்பால் அல்லது செவ்விளநீர் அல்லது தேன், மாதுளம்பழச்சாறு, அல்லது தோடம்பழச்சாறு எனப் பற்பல அனுபானங்களில் எடுக்க அவை இயல்பாகவே சரீர நோய் அணுகாத உடம்பாக வாழவைக்கும்.

பெருஞ்சீரகத்தினை மேற்கூறியது போலத் தயாரித்து உட் கொண்டு வர மேற்கூறிய பலாபலன்கள் இரட்டிப்பாகக் காணப்படும்.

கருஞ்சீரகத்தினை மேற் சொன்னவாறு பயன்படுத்தலாம். இரவில் பசுப் பாலுடன் எடுத்துவர கண் ஒளி பிரகாசித்துக் காணப்படும்.

தலைமுடி, நரையின்றிக் கருத்து வளரும். தலைக்கு வைக்கும் எண்ணெயினுள் தயாரித்துப் பயன்படுத்தலாம். கொவ்வையிலை, அறுகம்புல், செவ்வரத்தம் துளிர் இலை, முள்முருக்குத் துளிர், பூவரசுத் துளிர், குப்பைமேனி,வட்டத்துத்தி, கறிவேம்பு இலை, பொன்னாவரசு, மொசுமொசுக்கை, முசுட்டை மேற்கூறியவற்றில் அறுகு தவிர யாவற்றையும் கறியாகவும், வறை அல்லது சுண்டலாகவும் வதக்கி சம்பலாகவும், சொதியாகவும், குழம்பாகவும் சமைத்து உட்கொண்டு வர சரீரத்திற்கான இரும்புச்சத்துடன் பூரணபலன் கிடைக்கும்.

கருக்கு பீர்க்கு சரீரத்திற்கு நல்ல பலாபலன்களைக் கொடுக்கும். தேவையற்ற சரீர ஊளைச்சதைகளை வளர்க்க விடாது. இதில் தாமிரச்சத்து விசேடமாகக் காணப்படுகின்றது. தேவையற்ற கழிவுகளை அகற்றும். சரீரபாரத்தை இலகுவாக்கும்.

இதன் தோலில் கறிகள், சுண்டல்கள் தயாரித்து சாப்பிடலாம். நார்ச்சத்து நிறைய இருப்பதில்லை. மலச்சிக்கல் தவிர்க்கப் படுகின்றது.

அவரை இனமாகிய மஞ்சள் போஞ்சி, பச்சை போஞ்சி, முருங்கை போஞ்சி, கராம்பு அவரை, பிறைஅவரை, கத்தி அவரை அல்லது கோழி அவரை முதலியவற்றினை உண்டு வர மனிதனுக்கு நோய் எதுவுமே ஏற்படாது வாழமுடியும்.

பருப்பு வகைகளில் துவரம் பருப்பே சிறந்தனவாகும். தேவையற்ற கிருமிகள் வளரமாட்டாது. சரீரத்தில் வாயுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை உருவாகாது. வழுவழுப்பான உணவுகளாகிய எண்ணெய்வகைகள், சவ்வரிசி, வெண்டிக்காய், சாதாரண கஞ்சி வகைகள், ஜெலி உணவுகள், முட்டை வெண்கரு, பசளி வகைகள், சரீர அழகைக் கூட்டுவதுடன் மூட்டுக்களுக்கும் பயன் படுகின்றன.

இன்றைய கால ஓட்டத்தில் மக்கள் தொற்றா நோய்கள் என வர்ணிக்கப்படும் அறிகுறி அமுக்கம், நீரிழிவுநோய், கொலஸ்திரோல், ஈழைநோய்கள், இதய நோய்கள், வாதநோய்கள், இன்னும் பலவாகும். இவ்வகை நோய்களுள் ஆட் கொள்ளாமல் மேற்கூறிய நல்ல எளிமை யான சாதாரண இயல்பான உணவு வகை களை தேர்ந்தெடுத்து (எண்ணெய் வகைக ளில் அதிகளவில் தயாரிக்காது) உட் கொண்டு வந்தால் அருகாது பாரம்பரிய மும் மெருகாது நோய்களில் இருந்து விடு பட்டு நீண்ட ஆயுளுடன் மக்கள் திகழ்வர் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் வெற்றிப்படி...

**அனுசாந்தினி தங்கராசா**
உளவியற்துறை,
மூன்றாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

**"நல்லமரம் நச்சு மரங்களிடையே வளர்ந்தால் நல்ல மரமும் நச்சுத்தன்மை அடைய வாய்ப்புண்டு"** என்பார்கள். இவை ஒரு தனிமனிதன் வாழ்வுக்கும் பொருந்தும் என்பதனை உளவியல் ஆய்வுகள் நிரூபித்துள்ளன. சூழல்வாதியான ஜே.பி. வாட்சன் இது தொடர்பான ஆய்வு ஒன்றினை செய்து நிரூபித்துள்ளார். மனிதனின் தனித் தன்மையை அவனது சூழலும் பரம்பரைத்தனமும் அதிக செல்வாக்கு செலுத்த வல்லன என்பதனையே குறிப்பிடுகிறார்கள். இதற்கான ஆய்வுகளில் மனித வாழ்வின் சூழல்களை ஆராய்ந்து அச்சுழலின் தாக்கம் சிறு பருவத்தில் செல்வாக்குச் செலுத்துவதால் அதன் வெளிப்பாடுகள் ஆழ்மனப்பதிவை ஏற்படுத்தி விடுகின்றது. அவை அவனது வாழ்வை பிற இடங்கள் சென்றாலும் தன் சூழலின் தாக்கத்தில் இருந்து மாற்றம் பெறும்போது சிரமத்தை எதிர்கொள்கிறான்.

இதிலும் தம்மை மாற்றக்கூடிய சக்தி சிலருக்கு இல்லாமல் இல்லை. நல்ல ஆளுமை உள்ளவர்களின் சாதனைகள் எல்லாம் சவால் நிறைந்த சூழலில் இருந்து தான் வெளிப்பட்டு இருக்கின்றது. அதற்கு அவர்கள் தமது வாழ்வில் சுய ஆளுமையை சீர் செய்யும் வகையில் சூழலையும், பரம்பரைத் தனத்தையும் வென்று முறியடிக்கும் வகையில் தம்மிடம் உள்ள திறன் விருத்தியாலும், தன்னம்பிக்கையாலும் சவால்களை சாதகமாக்கி வாழ்வில் வெற்றிகளை சந்தித்தார்கள். வெறும் கனவு, கற்பனையுடன் அடைந்து விடலாம் என தூங்கிக் கொண்டு முயற்சி அற்றவராக இருப்போரது கோழைத்தனம் இலக்கினை அடைய முடியாது எல்லாவற்றுக்கும் வசதி, வாய்ப்புக்கள், சூழல், உதவி கிட்டவில்லை என்பதைச் சொல்லியே வாழ்வைத் தொலைத்து விடுகிறார்கள். சாதனைகள் புரிவதற்கு சந்தர்ப்பங்கள் தானாக அமையாது நாம் தான் சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும்.

வாழ்வில் உயர்வு என்பது நாம் மனிதனாகப் பிறந்ததே சிறப்பு. அதன் மனிதத் தன்மை எந்த நிலையும் முயற்சியால் மட்டுமே முன்னேற முடியும் என்ற மனவுறுதி முயற்சியாளரை சிறந்த மனிதர்களாக சமூகத்தில் வெளிப்படுத்துகின்றது. கவலைகள் வந்து கொண்டு தான் இருக்கும். அதனை நிரந்தரமாக்குவதும், தற்காலிகமாக்குவதும் உன்னைப் பொறுத்தது. நீ அதை நிரந்தரமாக்கினால் நோயாளி, தற்காலிகமாக்கினால் நீ புத்திசாலி...

என்ன வாழ்க்கை இது இருந்தென்ன வாழ்ந்தென்ன இது முடியாதவர்களின் முணுமுணுப்புகள் பிறரில் தங்கி வாழ்ந்து மகிழ்வதின் எதிர்பார்ப்புகள் இவை ஏமாறும் போது தவறை செய்ய தவறுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் சொல்லித் தப்பிக்க முயல்வர் **சாகத் துணிபவன் வீரனல்ல துணிவுடன் துன்பத்தை எதிர்கொள்பவனே வீரன்** என பிலிப் மேஸ்ஸிங்கர் என்ற அறிஞர் கூறியுள்ளார். சிங்கத்தின் இரைக்காக மட்டும் மான் கூட்டத்தை இறைவன் படைத்திருந்தால் அதற்கு **வேகமாக ஓடும் கால்களைப் படைத்திருக்கவே மாட்டான்.** வறுமையாலும் வாழ்வோம் வழமையிலும் வாழ்வோம் என்ற மனப்பக்குவம் சகல தரப்பினர் மத்தியிலும் வெளிப்பட வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள், ஆகியோர் வளர்கின்ற இளம் சமூகத்திற்கு நம்பிக்கைகளை ஊட்ட வேண்டும். வெற்றி மட்டுமே வாழ்க்கை என்பதை விட தோல்விகளில் இருந்து படிப்பினை பெற்று முயற்சிக்கின்ற ஆற்றலை வளர்க்க வேண்டும்.

குடையானால் மழையை ஒரு போதும் தடுத்து நிறுத்த இயலாது. ஆனால் நம்மை மழையின் போது நனையாமல் கம்பீரமாக நிற்க வைக்கும் அதுபோலவே நம்பிக்கை சில நேரங்களில் வெற்றியைத் தராமல் இருக்கலாம். ஆனால் வாழ்வில் பெரிய சவால்களை எதிர்கொள்ள சக்தியைத் தரும். தப்பான சிந்தனை சொல், செயல்களால் எம்மை சிதைத்து விடாது ஒவ்வொரு செயலாலும், பேச்சாலும் எமக்குள் நாம் மாற்றம் பெற முயற்சிக்க வேண்டும்.

வாழ்வில் உயர்வு நிலையை அடைவதற்குச் சிறந்த தேடல் இருக்க வேண்டும். தனது பாதையைத் தானே தேடிக்கொள்ளும் தண்ணீராக இருக்க வேண்டும் அடுத்தவர் பாதையைத் தடுக்கும் பாறாங்கல்லாக இருந்து விடக்கூடாது. பல நெருக்கீடுகள் மத்தியிலும் நமது இலட்சியங்களை இடைகின்ற வழியை நோக்கி உறுதியுடன் பயணிக்க வேண்டும். நமது கனவுகள் பெரியதாக இருக்கும் போது உழைப்பு அதை விட பெரியதாக இருக்க வேண்டும். வாழ்வில் துன்பம் ஏற்படும்போது துவண்டு போகாது துணிவுடன் எதிர் கொள்ள வேண்டும். நமது கடமைகளை ஒழுங்கு முறையாகவும், அறத்துடனும் செய்து முடிக்கும் போது உயர்வு தானாக அமைந்து விடும். நமது மனம் எப்போதும் அமைதியாக இருக்க வேண்டும். அன்பால், ஆத்மீகத்தால் அதை நாம் அலங்கரிக்கும் போது ஆரோக்கியமான எண்ணங்கள் உதயமாகும். அவ் எண்ணங்களே நம்மை சாதிக்கத் தூண்டிவிடும்.

வாழ்வில் அதிஸ்டத்தை நம்பியவர்களும், விதியை விசுவாசிப்பவர்களும், தெரியாது, முடியாது, என்று கூறுவோரும், சோம்பலுக்கு அடிமையானோரும் வாழ்வில் சாதனை படைத்ததில்லை. சந்தர்ப்பக் கதவுகளின் சாவிகள் உங்கள் கையிலேயே உண்டு திறந்து விடுங்கள் உயர்வினைப் பெற்று விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணப் பொருத்தத்தில் செவ்வாய் தோஷம்

**கலாபூஷணம் பொ.பசுபதி**
ஓய்வு பெற்ற தபாலதிபர்,
ஓவியர், சோதிடர்

திருமணகாலம் பிள்ளைகளுக்கு வரும்போது பிள்ளைகளின் சாதகத்தில் செவ்வாய் தோஷம் இருக்கிறதா? என அதற்குப் பயப்படுவதும் சோதிடரை நாடிய லைவதும் நம் மத்தியில் காணக்கூடிய ஒன்றாக அமைந்து விட்டதை அவதானிக்க லாம்.

ஏக இறைவன் இப்பிரபஞ்சத்தில் நட்சத்திரங்களையும் கோள்களையும் படைத்த போது பூமி என்ற உருண்டையை யும் அதிக உயிரினங்கள் வாழ ஏற்ற வகை யில் ஐந்து பூதங்களையும் படைத்துள்ளான்.

பூமியில் மனித உயிர்கள் வாழத் தொடங்கிய காலம் தொட்டு எத்தனையோ மகான்கள், ரிஷிகள் வாயிலாக ஒவ்வொரு மனிதனும் இடர்கள், துன்பங்கள் இன்றி வாழ்வதற்கான நெறிமுறைச் சட்டங்களை யும் வழங்கியுள்ளான். அவற்றுள் மருத்து வம், மாந்திரீகம், சோதிடம் என்பனவும் அடங்கும் எனலாம்.

சோதிடம், புவியியல், வானியல், கணிதம், மெய்ஞ்ஞானம் என்பன இணை ந்த விஞ்ஞான தெய்வீகக் கலையாகும். இவை என்றும் ஆராய்ச்சிக்கும், அனுபவத் திற்கும் உட்பட்ட புதிர்களாகவே நம்பப்படுகி ன்றது. இவற்றில் முழுமையான உண்மை களைக் காண முயலும்போது வழியில் பல சந்தேகங்களும், தவறுகளும் ஆங்காங்கே குறிக்கிடத்தான் செய்கின்றது. எதிலும் உண்மை இல்லையெனில் அவை நீடித்திருப் பதில் வாய்ப்பில்லை. அது இன்றும் சமுதாய த்தோடு நீடித்திருக்கிறதெனில் அது தெய்வீ கக் கலை என்பதும் உண்மை உண்டென் பதும் புலனாகும். மெய்ஞ்ஞானம் முன் செல்ல ஒரே இடைவெளியில் விஞ்ஞானம் பயணிக்கின்றது.

இதற்கமைய இப்பிரபஞ்சம் சங்கி லித் தொடராக இயங்குவதற்கும் பிறப்பு, இறப்பு, முத்தி என்பதை அத்தியாவசியப் படுத்திய இறைவன் ஆண்-பெண் என்ற பாலுணர்ப் பருவகால முதிர்ச்சி அடிப் படையில் ஏற்படுத்தினான். ஜீவராசிகள், தாவரங்கள் உட்பட இவ்வுணர்வுக்குட் படுவது இயற்கையின் நியதியாயிற்று.

இவ்வுணர்வானது கட்டுப்பாடாக வும், வரம்பிற்குட் பட்டதாகவும் இருக்க வேண்டும் என்பதையுணர்ந்த மனிதன் திருமணம் என்னும் புனிதமான குடும்ப வாழ்வை ஒருசில வரையறைக்குள் கொண்டு வந்தான். விவாகம் என்பது சந்தோஷமான வாழ்க்கை-ஆண்-பெண் சினேகபூர்வமான பரஸ்பர உறவும் சந்தான விருத்தியும் என்றே சாஸ்திரங்களும் தர்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களும் விளம்புகின்றன. திருமணத் தின் பின் இருவேறான பாலியரின் பரஸ்பர சந்தோஷ வாழ்வில் குறைவராவண்ணம் இருப்பதற்காக அவன் நட்சத்திர, ஜாதக, தசா பொருத்தங்களைச் சோதிடப் பொறிமுறை களைக் கொண்டு ஆராய்ந்து கையாண் டான்.

அச்சோதிடப் பொறிமுறையில் திருமணப் பொருத்தத்திற்குச் சிறந்ததாக அமையும் கிரகப் பொருத்தங்களில் சந்திரன், சுக்கிரன், பாபிகள் பங்கெடுக்கின்ற னர். இதில் செவ்வாயும் அடங்கும். இம் மூவரும் பங்கெடுப்பது ஏன்? என்ற சாதார ணங்களை அறியாது அட்டவணை போட்டுக் கணித்துப் பார்ப்பதில் ஆங்காங்கே எதிர் பாரா நிகழ்வுகள் நடக்கின்றன.

செவ்வாய்க்குக் குரூரம், வீரியம், துணிவு, சோரத்துவம் என்பனவற்றிற்குக் காரகனாகவும்,

சுக்கிரன் களத்திர, காமபோக சுகங் களுக்குக் காரகனாகவும்,

சந்திரன் மனோகரனாகவும் உள்ள னர். இம் மனோகாரகனான சந்திரனையும், சுக்கிரனையும் செவ்வாய் பார்க்கும் பொழு தும், சேரும் பொழுதும் செவ்வாய் சுக்கிரன் நட்சத்திரங்களில் மற்றவர் சஞ்சாரம் செய்யும் போதும் பிறந்த ஜாதகர்களுக்கு உணர்வுகள் அதிகமாகவும்– லக்கினத்தை அல்லது சந்திரனைச் செவ்வாய் பார்க்கும் போது ஜாதகர் உணர்வுகளற்ற ஜடமாகவும் இருப்பர். இவற்றிலிருந்து செவ்வாய் முக்கிய பங்கை வகிக்கின்றது என்பதால் திருமணம் நிச்சயமாகும்போது அதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். இது மட்டுமன்றி இரத்தத்தில்செஞ்சீவணுக்கள் உற்பத்தி – அதன் குறைவு என்பனவும் இருப்பின் இதனடிப்படையில் ஏற்படக் கூடியதாக இருப்பதால் (மருத்துவரீதியில் கூட BloodGroup சேர்க்கை பார்க்கப் படுவது போல்) செவ்வாயின் பொருத்தமும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

உணர்வுகளில் இரு முனைகளாக இருக்கும் இரு ஜாதகர்கள் ஒன்றிணைவ தால் ஏற்படும் விபரீத பலன்களைப் பகுத் தறிவால் நாம் விளங்கிக் கொள்ளலாம். இதனால் இதற்குச் செவ்வாய்தோஷம் என்று பெயரிட்டு தோஷம் எந்தளவு என்று கணித்துப் பார்க்கிறோம்.

இதன் நிமித்தம் விவாக வயது எய்தியவுடன் மக்களுக்குச் செவ்வாய் பிரச்சனை தருபவராகக் கருதப்படுகிறார். இவரது தீய செயல்களை விகாரமாகவும், விபரித்துக் கூறுவதால் திருமணத்தின் பின் கஷ்டம், துயர் தருபவராகி விட்டார்.

செவ்வாய் தோஷம் என்பது களத்திரவினாச என்றதற்கு அர்த்தம் – களத்திர நாசம் என்றே பொருள் எடுக்கின்ற னர். சேத்திரத்தால் செவ்வாய் தோஷமுறு வதற்குப் பதில் அதன் நிலை ஆதிபத்தியம் இருக்கும் வீடு – அதன் அதிபதி அவர் ஏறிய நட்சத்திரம் என்பவர்களைக் கொண்டே அவர் சுபரா–பாவியா எனக் கருதப்பட வேண்டும். திருமணத்தின் பின் குடும்ப வாழ்வைப் பற்றி நிச்சயிப்பதற்குக் களத்திர பாவத்தை மட்டும் வைத்து முடிவெடுப்பது தவறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறமான குடும்ப வாழ்வுக்குத் தேவையான இருவரின் ஆயுள் ஆராக்கிய நிலை– குடும்ப சந்தோஷம் – சந்தான விருத்தி, பரஸ்பர உறவு, கஷ்டநஷ்டம் என்பவற்றையும் கருதி இல்லற வாழ்வு அமைவதை நிர்ணயிப்பதற்கு லக்கினத்தில் இருந்து 1,2,4,7,8,12 என்ற வீடுகளைப் பரிசீலனை செய்தல் வேண்டும். இப்பாவங்களைக் கொண்டு நிரணயிக்கப்பட வேண்டியவை எவை எனக் கூறின் லக்கினம் 2ம்,4ம்,7ம், 8ம், 12ம் பாவமாகும். இச் சஷ்டாஸ்டத் தானங்களில் பாவங்கள் அமரும்போது தோஷமுறும். இத்தோஷத்தின் அளவை பாபசங்கியை என்று கூறிக் கணிக்கப்படும். ஆனால் இத் தோஷத்தில் செவ்வாய்க்குண்டாகும் தோஷம் சூரியனுக்கு உண்டாகும் தோஷத்தை விட மூன்று மடங்கும், சனி, ராகு, கேது என்பவற்றிற்கு சூரியனை விட இரண்டு மடங்கும் உண்டாகும் என்பதையும் கணித நூல்களிலிருந்து அவதானிக்கலாம்.

பாவியர்களுள் செவ்வாயின் தோஷம் அதிகம் என்பதால் அந்த ஸ்தானங்களில் செவ்வாய் அமரும்போது அவ் வீட்டின் தன்மைக்கேற்ப வேறுபட்ட பலனைத் தருகிறார்.

இவற்றின் பிரகாரம் செவ்வாய் 7ம் பாவத்தில் மாத்திரம் இருக்கும் பொழுது களத்திர இழப்புக்குக் காரணமாக அமைகிறார் என்பதனால் மற்றைய பாவங் களில் இருக்கும் செவ்வாய் தோஷத்தைப் பற்றி அவ்வளவு பயப்படத் தேவையில்லை – சில தருணங்கள் நடந்த வாரங்களில் களத்திர இழப்பு ஏற்பட்டவர்களும் உண்டு– இதற்கு ஆயுள் குறைவும் இருவரின் தசைகளும் கஷ்டமான ஓர் தசையாகவோ அன்றி மாரக தசா காலமாகவோ அமைவது காரணங்களாகும். ஜாதக அலங்காரத்தில் களத்திரநாசம் என்றும் அதற்கு இறப்பு என்பதையும் பொருள்படுத்தியிருக்கிறார்கள். உண்மையில் அது விசை என்றே சொல்லேயாகும். நிரந்தரமாகப் பிரிந்தாலும் களத்திர இழப்பாகும்.

இலக்கினத்திலிருந்து பார்ப்பதை விட சந்திரன் நின்ற இடத்திலுருந்து பார்க்கும் தோஷம் அதிகமாகவும் அதைவிடச் சுக்கிரனிலிருந்து பார்க்கும் தோஷம் அதிகமாகும். கணித ரீதியாகப் பார்க்கப்படும் செவ்வாயின் தோஷம் 3 மடங்கு சூரி தோஷத்தை விட உண்டு. மற்றைய பாபியர் பெறும் தோஷம் சூரியனை விட இருமடங்காகும் என்பதும் கருதுதல் வேண்டும். அத்துடன் தோஷம் ஒழுங்காக –12–4–7–8–1 என்ற ஸ்தானங் களில் 2ல் ஆரம்பித்து 1ல் உயர்வதையும் நாம் கருதுதல் வேண்டும்.

இலக்கினம், சந்திரன், சுக்கிரனின் ஸ்தானங்களிலிருந்து செவ்வாயின் தோஷம் 1–2–4–7–8–12 ஆகும்போது செவ்வாயின் நிலைகளிலும், ஆதிபத்தியத்தினாலும் குரூர பாவித்தனம் மாறுபடும் இப்பாவித்தனம் மாறுபடும்போது அச் செவ்வாயும் தோஷத்தினில் நின்று பரகாரம் அடைந்தவராகின்றார். இதனால் குரூர செயல்களை எதிர்பார்க்க முடியாது.

தோஷமுறும் செவ்வாய் எப்பொழுது பரிகாரம் அடைகிறதென்பதை நோக்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) செவ்வாய் தன் சொந்த வீடான மேடம்–விருச்சிக ராசிகளில் அமரும் பொழுது

(2) உச்ச நீச ராசிகளான மகர–கடகத்தில் அமரும்பொழுது

(3) இவ் உச்ச நீச வீடுகள் 4–7ம் வீடுகளாக அமையும் பொழுது மிகவும் குறைந்து விடும்.

(4) சரராசிகளான மேட, கடக, துலா, மகர ராசிகளில் செவ்வாய் அமர்ந்து அவை 1–2–8–12 வீடுகளாக அமையும் பொழுது

(5) 1–2–4–8–12 ம் வீடுகளிலிருக்கும் செவ்வாயும் குரு புதன் சேர்வதால் அல்லது அவை நோக்குவதால்

(6) செவ்வாயைச் சனி 3ம்பார்வையா கப் பார்க்கப்படும்

(7) புதனின் வீடுகள் இரண்டாம் 12ம் பாவமாகி அதில் செவ்வாய் அமரும் போது

(8) சுக்கிரனின் வீடுகள் 4ம் பாவமாகி அதில் செவ்வாய் அமரும்போது

(9) குருவின் வீடுகளும் 8ம் பாவமாகி செவ்வாயின் உச்சநீச வீடுகளும் 8ம் பாவமாக அமைந்து அமரும்போது

(10) குருவும் செவ்வாயும் 8% வித்தியாச த்திற்குள்ளும் செவ்வாய் – சனி–ராகு கேதுக்களுடன் சேரும்பொழுது தோஷபரிகாரமுறும்

(X என்னும் அடையாளமிடப்பட்ட ராசி களில் செவ்வாயில் அமர்ந்து அவை இலக்கின, சந்திரன், சுக்கிரனின் ஸ்தானங்களிலிருந்து சக்கரத்தின் தரப்பட்ட இலக்கங்கள் பாவமாக அமைவதைக் குறிக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரதரிசனம் கோடி புண்ணியம்

**திருமதி தர்ப்பணா சுதர்சன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர் B.A(Hons), M.A
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
பிரதேச செயலகம்,
உடுவில்.

மனிதனாய் பிறக்கும் ஒவ்வொரு வரும் வாழ்க்கையில் இன்பத்தைத் தேடி ஓடுகிறார்கள். வேண்டிய அளவு, பொன், பொருள், புகழ் என்று பலவற்றைத் தேடுவ தோடு மட்டுமல்லாமல் அவற்றைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் பாடுபடுகின்ற னர். ஆனால் இவையாவும் மனிதனுக்கு முழு நிறைவைத் தருவதில்லை. மேலும் தன் வாழ்க்கையில் பல பிரச்சனைகள், துன்பங் கள் ஆகிய எல்லாவற்றையும் சந்திக்கும் மனிதன் மனம் துவண்டு போகிறான் இவற்றிலிருந்து விடுபட்டு மன நிம்மதியைப் பெற மனிதன் ஆலயத்திற்குச் செல்கிறான். இறைவழிபாட்டில் ஈடுபடுகின்றான். அவன் விரும்பிய மன நிம்மதியோடு துன்பங்களை வெல்ல வேண்டிய இறையருளும் ஒரு சேரக் கிடைத்து விடுகிறது. மனிதனுக்கு வேண்டிய ஆத்ம சக்தியைத் தரும் நிலைக்களனாக விளங்குகிறது கோவில். அதனால் தான் கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழியும் வந்தது போலும். இத்தகைய சிறப்பு வாய்ந்த கோவிலை ஆன்றோர்கள் சாதாரணமாக கட்டி வைக்கவில்லை மனிதன் எங்கிருந்து பார்த்தாலும் அவன் கண்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவும், அவனுக்கு நினைவு படுத்தும் விதமாகவும் அமைய வேண்டும் என்பதற்காகவுமே வானுயர்ந்த கோவில் கோபுரங்களைக் கட்டினர்.

எந்த ஊராயினும் மனிதன் கோவி லைத் தேடிச் செல்கையில் கோவிலை நெருங்கும் முன்னே கோபுரம் அவன் கண்ணில் பட்டு விடும். ஏனெனில் இறைவன் அங்கு குடி கொண்டுள்ளான் என்பதைக் கோபுரங்கள் எப்போதும் அறிவித்துக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமில்லாமல் உலகில் எல்லா ஜீவராசிகளுக்கும் இடம் உண்டு என்பதையும் எல்லா உயிரினங்க ளிலும் இறைவன் இருக்கின்றான் என்பதை நமக்கு உணர்த்தும் விதமாகக் கோவில் கோபுரங்களில் எல்லா வகையான ஜீவராசி களின் உருவங்களும் அடங்கியிருக்கும். பல கோவில்களில் கோபுரத்தின் மேலே உள்ள மாடங்கள் ஐந்து என்ற ஒற்றைப்படை எண்ணில் அமைந்திருக்கும். இதிலே தான் மானுடப்பிறப்பின் அறிவுத்தத்துவம் அடங்கி யிருக்கிறது படைப்பில் உயர்ந்தவனாக விளங்குபவன் ஆறறிவு படைத்த மனிதனே. எவ்வளவோ பிறப்புகளில் செய்த புண்ணி யம் தான் நமக்கு இந்த மானுட உடல் கிடைத்திருக்கிறது. இந்தக் கருத்தை

**"நாலுவகையோனியிலும் எழுவகைத்**
**தோற்றத்திலுமீஈளினமாக**
**மேலுகந்த மானிடந்தானெடுப்பவே அருமை**
**யாய் மெய்யனாகிப்**
**பாலுபோல் மனமுடைத்தாய்ப் புண்ணியமே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிகுந்து பவங்கீழாய்த்தள்ளி**
**நூலிணர்வதருமை நெஞ்சே! இருவினையி**
**லொரு வினையை நொறுக்கித் தானே"**
என்ற ஞானசரநூலின் வரிகள் அழகாக எடுத்துரைக்கின்றது.

மனிதன் ஆறறிவு படைத்தவன். இந்த ஆறாவது அறிவின் துணை கொண்டே அவன் இறைவனை உணர்ந்து கொள்ள முடியும். ஆனால் ஐந்து அறிவு என்ற நிலையைத் தாண்டித் தான் 6ம் அறிவு வருகிறது இதில். ஓரறிவையுடையவை என்ற பட்டியலில் புல், மரம், செடி இவையடங்கும். அடுத்து வரும் ஈரறிவுடையவை என்ற பிரிவில் சிப்பி, சங்கு, நத்தை முதலியவை உள்ளன. மூவறிவில் கறையான், எறும்பு இவையும், நாலறிவில் தும்பி, வண்டு, ஆகியவையும், ஐந்தறிவு என்ற பட்டியலில் பறவை, மிருகங்களும் அடங்கும். இந்த ஐந்தறிவின் பிரதிபலிப்பாகத்தான் கோபுரத்தில் 5 மாடங்கள் உள்ளன. ஒவ்வொரு மாடமும் தாண்டி வரும் போது இறைவனுக்கும் நமக்கும் உள்ள நெருக்கம் அதிகரிக்கின்றது. அறிவின் நிலை அதிகரிக்க அதிகரிக்க மாடத்தின் அளவும் பெரிதாகின்றது. ஆறாம் அறிவின் துணை கொண்டு மனிதன் இறைவனை அடைய முயற்சிக்க வேண்டும். ஆறாம் அறிவு உள்ள மனிதனாகப் பிறந்திருப்பது எவ்வளவு பெருமை? எவ்வளவு புண்ணியம்? இதை மனிதன் ஒவ்வொரு தடவையும் நினைவில் வைக்க வேண்டும் என்பதற்காகத் தான் நம் முன்னோர்கள் உயர்வான கோவில் கோபுரத்தையும் அதன் மாடங்களையும் இணைத்து வைத்துள்ளனர்.

கோபுரதரிசனத்தில் மற்றொரு ரகசியமும் அடங்கியிருக்கிறது. கோபுரத்தின் மேல் புறத்தில் தங்கம் அல்லது செம்பினால் ஆன கலசங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஆகம விதிப்படி அபிஷேகம், ஆராதனை மற்றும் கும்பாபிஷேகம் ஆகியவை செய்யப்படும் கோவில்களில் உள்ள கலசங்கள் ஆகாயத்தில் உள்ள பிராண சக்தியைப் ஈர்த்து அதனை வெளிவிடுவதோடு அந்த சக்தியை கலசத்தின் கீழ் உள்ள இறைபீடத்திற்கும் அனுப்பி வைத்துக் கொண்டேயிருக்கிறது. நாம் கோவிலுக்குச் செல்லும் போது இந்த சக்தியைப் பெறுகிறோம் அதனால் தான் இறைவனைத் தினமும் தரிசனம் செய்ய வேண்டும் என்பதை ஒரு நியதியாகவேல்லா மதங்களும் வலியுறுத்தி வருகின்றன. கோபுரம் வழியாக இந்த சக்தி வருகிறது கோபுரதரிசனம் கோடி புண்ணி யம் எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தை

எனவே வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுங்கள் உங்கள் ஆன்ம பலம் பெருகும்! கோபுரதரிசனம் கோடி நன்மை. இக்கோபுர கலசத்தில் ஒன்பது வகை தான்யங்களும் வைக்கப்படும். இவ்வுலகம் அழிந்தாலும் மீண்டும் இவ்வுலகத்தைத் தோற்றுவிக்கும் விதையாகக் கோபுரம் திகழ்கிறது. கோவிலுக்குச் செல்ல முடியாமல் வேலையாக உள்ளவர்களும் உடல் நிலை சரியில்லாதவர்களும் கோபுர தரிசனமாவது செய்து பலன் பெறலாம். இக்கோபுர தரிசனத்தைப் பார்க்கும் நேரத்தைப் பொறுத்துப் பலன்களும் அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் கோபுரதரிசனம் நோய் நீக்கும்
மதியம் கோபுரதரிசனம் செல்வவளம் பெருகும்
மாலையில் கோபுரதரிசனம் பாவம் போக்கும்
இரவு கோபுரதரிசனம் வீடுபேறு கிடைக்கும்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது பழமொழி என்பதை விட அதை ஒரு வாழ்வியல் தத்துவமாய்க் கருதிட வேண்டும். ஆலய வழிபாட்டுக்குச் செல்ல இயலாதவர்கள் கூட தூரத்தே இருந்து கோபுரத்தை வணங்கிச் செல்வதை இன்றைக்கும் காணமுடியும்.

கோபுரங்களை ஸ்தூல லிங்கமாகவும், இறைவனின் பாதங்களாகவும் பாவித்தனர். கோபுரவழிபாடு முழுமையான ஆலய வழிபாட்டுக்கு இணையானது என்ற நம்பிக்கை காலங்காலமாக இருந்து வருகிறது. சிற்ப சாஸ்திரத்தின் படி கோவில்களின் அமைப்பானது மனித உடலின் வடிவத்தில் அமைய வேண்டுமென வரையறுத்திருக்கின்றான். இதனை ஷேத்தி ரம் சரீரபிரஸ்தாரம் என்பர். ஞானிகள், முனிவர்கள், சித்தர்கள் சிறந்த கோயில்க ளையும் அதில் தெய்வத் திருவுருவச் சிலை களையும் ஏற்படுத்தும் முறைகளை வகுத்துக் கொடுத்து கோயில் திசை நான் கிலும் விண்ணை முட்டும் பெரிய கோபுரங் களை நிர்மாணித்து அவற்றின் சக்தியால் உயிர்கள் நல்ல முறையில் வாழும் அமைப்பை ஏற்படுத்திக் கொடுத் தார்கள்.

ஆகம விதிப்படி கோயில் நிர்மாணித்து அபிஷேகிக்கப் பட்டு காலந் தவறாது கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வழிபாடு நடந்து கொண்டிருக்கின்ற கோயில்களில் உள்ள கோபுரங்களின் மேல் தங்கத்தாலும், செம்பினாலும் செய்யப்பட்ட கலசங்கள் தனது கூர் முனை வழியாக ஆகாயத்தில் உள்ள உயிர்சக்தி என்று அழைக்கிப்படும் பிராண சக்தியை கிரகித்து வெளிவிடுகிறது. அந்த சக்தியை நம் உடல் பெறவதால் புத்துணர்ச்சி, புது உணர்வு, உள்ளத்தூய்மை, ஆன்மீக ஈர்ப்பு, நோயின்மை, நோய் எதிர்ப்பு சக்தியை அடைகிறோம். இதனால் தான் கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்று முன்னோர்கள் கூறினார்கள்.

கர்ப்பக் கிரகக் கோபுரத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள கலசங்கள் அதே போல் பிராண சக்தியை கிரகித்து கலசத்தின் நேர் கீழேயுள்ள இறைபீடத்திற்க இடையறாது அனுப்பிக் கொண்டிருக்கிறது. இந்த சக்தி பீடத்தின் அடியில் உள்ள தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட மந்திர சக்கரங்கள், யந்திரங்கள் தன்பால் இழுத்து தான் அமையப் பெற்றிருக்கும் தன்மைக் கேற்ப பீடத்தின் மேல் தன் சக்தியை வெளிப் படுத்துகின்றது. சில குறியீடுகளும், யந்திரதகடுகளும் இந்த சக்தியை முழுவதும் ஈர்த்து விடுகின்றன.

இந்தப் பிராணசக்தியின் அளவை மேலை நாட்டு விஞ்ஞானி போவிஸ் கண்டு பிடித்துள்ளார். இதிலிருந்து வெளிப்படும் சக்தியை (14 000 போவிஸ் ) நம்முடலில் உள்ள உயிரணுக்கள் தாங்க இயலாது. எனவே தான் பீடத்தின் மேல் அமைக்கப் பட்டுள்ள திருவுருவச் சிலை அந்தச் சக்தியைப் பிரித்து ஒன்பது முனைகள் வழியாக வெளியேறச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சக்தி கர்ப்பக் கிரகத்தின் வாயில் வழியாக வெளியே வருகின்றது. அங்கு இறைவனை வணங்கிக் கொண்டுள்ள நம்மீது படுகின்றது. அப்போது தீபாராதனை காட்டப்படும் பொழுது அந்தச் சக்தி தூண்டப்பட்டு கைகளை இணைத்து மேலே உயர்த்தி வணங்கும் போது கைவிரல்கள் வழியே அந்த சக்தி நம்முடம்புக்குள் ஊடுருவுகின்றது.

இதனால் ஆன்மீக உணர்வு சக்தி நம்மீது பரவி மனதில் உள்ள கவலைகள், குடும்பத்தில் உள்ள பிரச்சனைகள், உடல் நோய்கள் அனைத்தையும் போக்கி ஆனந்தத்தைக் கொடுக்கின்றது. கர்ப்பக் கிரகத்தில் கிழக்கு அல்லது வடக்குத் திசைகளில் நீர் செல்லும் பொருட்டு ஓர் துவாரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் துவாரத்தின் வழியே செல்கின்ற நீரிலும் கலந்து பிராணசக்தி வெளிப்படுகின்றது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சதுர வடிவத் தொட்டியில் விழும் நீரைக் கோயிலை வலம் வரும் நாம் அந்த இடத்தில் வந்தவுடன் எடுத்துக் கண்ணிலும் , சிரசிலும் ஒற்றிக் கொள்கிறோம். அந்த சில நிமிடங்களில் நம்மீது பிராணசக்தி பரவுகிறது. இந்தப் பிராணசக்தி வெளிப்பட்டுக் கொண்டிருப்பதால் தான் சிலையின் குறுக்கே செல்லக் கூடாது.

சிலையின் பக்க வாட்டில் தான் செல்ல வேண்டும். சிலையை விட்டு விலகி நிற்பதுடன் அபிஷேகம் செய்யும் போது கைகள் சிலைக்கு மேல் செல்லக்கூடாது. ஒரு காலை வெளியிலும் மறுகாலை கர்ப்பக்கிரகத்தின் வாயிலிலும் வைக்கக் கூடாது. கர்ப்பக் கிரகத்திற்குள் இரும்பாலான எந்தப் பொருளையும் பயன்படுத்தக் கூடாது என முன்னோர்கள் விஞ்ஞானத்தின் அடிப்படையில் தான் கூறியுள்ளார்கள்.

நாம் பல நல்லதீய கதிர்வீச்சுக்கள் நிறைந்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மூலகங்களில் சக்தி மாற்றம் ஏற்படும்போது கதிர்வீச்சு தோன்றுகின்றது. இதனை நாம் கண்ணால் காண முடியாது. ஆனால் அதன் தாக்கங்களை எம்மால் உணர முடியும். நல்ல கதிர்வீச்சின் சக்திகளை வெளிப்படுத்தும் வகையிலே ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோயிலின் உள்ளே இருக்கக்கூடிய இறைவனின் பிரதிபிம்பம் தான் கோபுரங்கள். உதாரணமாக ஒரு கோயிலுக்குள் கணபதி, முருகன், பெருமாள், அம்மன், கிருஷ்ணர், இராமர் போன்ற தெய்வங்களின் விக்ரஹங்கள் உண்டு என்பது நாம் அறிந்த ஒன்றே! கோயிலுக்குச் செல்ல முடியாதவர்கள் உடல் ஊனமுற்றோர் போன்றோர் கோபுரத்தைத் தரிசித்தாலே போதும். உள்ளே இருக்கக் கூடிய எல்லா தெய்வங்களின் பிரதிவிம்பம் தான் கோபுரம். நாம் தூரத்தில் இருந்து பார்க்கும் போது கோபுரங்களும், கோபுரக் கலசங்களும் நம் கண்ணுக்குத் தெரியும். மேலும் கோபுரத்தின் உள்ளேயிருந்து வரக்கூடிய காற்று நம் உடலை அழகாக வருடியும் மருத்துவக் குணம் மிக்கதுமாக இருப்பது சிறப்பு. ஆகவே கோபுரத்தைத் தரிசித்துக் கோடி புண்ணியம் பெறுவோம்.

ஊரில் கோயில் கோபுரத்தை விட உயரமாக எந்தக் கட்டிடமும் இருக்கக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது என்று ஒரு எழுதாத சட்டமும் ∃ • >>VD . **என்ன காரணம்?** கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செப்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும் இக்கலசங்களிலும் அதில் இடம் பெற்றுள்ள தானயங்களும் உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை கலசங்களுக்குக் கொடுக்கின்றன.

(நெல், கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சோளம், மக்காசோளம், சாமை, எள்) ஆகியவற்றைக் கலசங்களினுள் வைத்துள்ளார்கள். குறிப்பாக வரகு தானியத்தை அதிகமாக வைத்திருக்கிறார்கள். காரணம் ஆச்சரியமாக இருக்கிறது. வரகு மின்னலைத் தாங்கும் அதீத ஆற்றலைப் பெற்றுள்ளது என இப்போதைய அறிவியல் கூறுகின்றது.

ஒரு இடத்தில் எது மிக உயரமாக உள்ளதோ அதுவே அந்த இடத்தின் இடிதாங்கி. அது தான் முதலில் மின்னலின் தாக்கத்தை ஏர்த் தாக்கும். எனவே ஊரில் உயர்ந்த கட்டிடமாகத் திகழும் இக் கோபுரம் மின்னல் தாக்கத்திலிருந்து ஊரைப் பாதுகாத்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தை விதைத்தவன்

**ஜே.லோஜினி (மாணவி)**
யா/ இராமநாதன் கல்லூரி

சத்தியநாதன் பயிற்றப்பட்ட கணித ஆசிரியர். இவர் ஆசிரியர் என்ற சொல்லுக்கு இலக்கணமாய் வாழ்பவர். கடமையில் ஒரு கண்ணியவான். மாணவர்களை அன்பினால் ஆள்பவர். இவர் பகல்பொழுது முழுவதையும் கல்லூரியில் மாணவர்களுடனே கழிப்பார். இவரது குடும்பம் மிகவும் சிறியது. முதுயைடைந்த தாயார்.அவரது மனைவி அர்களுடைய பெண்குழந்தை மொத்தம் நான்கு பேர் தான் அந்தக் குடும்ப அங்கத்தவர்கள். சத்தியநாதனின் வேதனத்தில் அரைவாசி தான் வீடு வந்து சேரும். மிகுதிப்பணம் அவரது சேவை மனப்பான்மையில் கரைந்து விடும். வகுப்பில் கற்றல் உபகரணங்களைச் சரியானமுறையில் வாங்கிக் கொள்ளாமல் கற்றலில் சிக்கல் படும் மாணவர்களை இனங்கண்டு வைத்திருக்கும் இவர் அவர்களது வறுமையைப் போக்க எதுவும் செய்யமுடியாது போனாலும் முக்கியமான கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொள்ளவாவது மனந்தாங்காது உதவி செய்து விடுவார். பாடசாலை தராத கற்பித்தல் உபகரணங்களைத் தானே தயாரிப்பதற்காகவும் சிறிது பணத்தைச் செலவு செய்து விடுவார். இதனால் சில நாட்களில் இவரின் அடுப்படியில் பூனை தான் படுத்திருக்கும். அது பற்றி இவர் அதிகமாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இவரது மனைவி ஒரு பதிவிரதை. கணவருடன் தலைநிமிர்ந்து கதைக்க மாட்டார். மிகவும் சிக்கனமாகச் செலவுகளைக் குறைத்து ஏதோ விதத்தில் அவர் கொடுக்கும் பணத்தில் குடும்பத் தேவைகளின் முக்கியமானவற்றைப் பூர்த்தி செய்து கொள்வர். சத்தியநாதனின் தாயார் அவருக்கு புத்திமதி கூறுவார். பெண் பிள்ளை ஒன்று இருக்கிறது. இப்பிள்ளைக்கு ஏதும் தேடி வைக்க வேண்டாமா? நீ வேறு வேலை ஏதும் செய்து மேலும் பணம் சம்பாதிக்கா விட்டாலும் எடுக்கிற சம்பத்தையாவது முழுசாக உன் மனைவியின் கைகளில் கொடுக்கலாமல்லவா? என்று. நீண்ட காலத்துக்குப் பிறகு மீண்டும் ஒரு குழந்தைக்கு தந்தையாகும் பாக்கியம் கிட்டுகிறது சத்தியநாதனுக்கு ஆம் அவரது மனைவி நிறைமாதக் கர்ப்பிணி அவரது தாயார் இப்பொழுதும் வழமைபோல் தனது மகனுக்குப் புத்திமதி கூறுகிறார். இவரோ **''பிறர் பிள்ளையை தடவி வளர்க்க தன் பிள்ளை தானே வளரும்''** என்று ஒரு பழமொழி உண்டம்மா சத்தியம் ஒரு போதும் செத்து விடாது எல்லாம் நல்லதாகவே நடக்கும். என்று தாய்க்கு ஆறுதல் கூறி விட்டு பாடசாலைக்குச் சென்று விடுவார். நாட்கள் ஒன்று இரண்டாக நகர்ந்தன. பிள்ளைப்பேற்றுச் செலவுக்கு எனத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலிருந்த மோதிரத்தைக் குறி வைத்திருந்தார். சத்தியநாதன் முன் னமே அதைக் காசாக்கினால் செலவாகி விடும். வைத்திய சாலைக்குச் செல்லவிருக்கும் நாள் கிட்டு கையில் அதை விற்கவோ அல்லது அடகு வைக்கவோ எண்ணியிருந் தார்.

இவர் பாடசாலையில் நிற்கையில் தாயிடம் இருந்து அழைப்புக் கிடைக்கிறது. அவனது மனைவிக்குப் பிரசவவலி தொடங்கி விட்டது உடனே வரும்படி. இவரோ தாயாரிடம் "**நீங்கள் ஓட்டோவைப் பிடித்துக் கொண்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள் நான் அங்கு வந்து விடுகிறேன்.**" என்றார். பாடசாலைக்கு சோட் லீவு எழுதிக் கொடுத்து விட்டு இவர் நகைக் கடைக்குச் செல்கிறார். மோதிரத்தை விற்றுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு திரும்புகையில் இவரிடம் கற்ற மாணவன் கண்ணன் சந்திக்கிறான்.

"**கண்ணா நீ பல்கலைக்கழகத்தில் என்று நான் நினைத்தேன் நீ என்ன இங்கே நிற்கிறாய் ..... உனக்கு என்ன நடந்தது.... ஏன் இன்னும் அங்கு செல்லவில்லை**" என்று கேட்க

"**இல்லை சேர்.... கொஸ்ரல் செலவுகள் பயணச் செலவுகளுக்கு தயார் பண்ணிக் கொண்டிருக்கிறன்... கையில பணம் கிடைச்சவுடன் புறப்படுவேன் ....**"

"**இதையெல்லாம் முதல்லையே தயார் பண்ணியிருக்க வேணும் .... இந்தா ...... இதல ஒரு பத்தாயிரம் இருக்குது இதையும் சேர்த்துக் கொண்டு புறப்படு காலத்தை வீணாக்காதே**" என்று கூறி அவனிடம் பணத்தைக் கொடுத்தார் சத்திய நாதன்.

"**காலத்தே செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது**" என்பது வள்ளுவன் வாக்கு கண்ணன் மிகவும் நன்றியறிதலுடன் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஆசிரியரிட மிருந்து விடை பெற்று ஏகிவிட்டான். மீதிப் பணத்துடன் வைத்தியசாலைக்குச் சென்றார் சத்தியநாதன். அங்கே காத்திருந்த செய்தியோ .... அவனை அடியற்ற மரம் போல் வீழ்த்துவதாக இருந்தது. அவரது மனைவி ஆண் குழந்தையைத் தந்து விட்டு விண்ணேகிவிட்டாள். பச்சைப் பாலகனுடன் அவரது தாயார் மனைவியின் உடலைப் பொறுப்பேற்க வேண்டிய சூழலில் அவர் தாயற்ற குழந்தையாகையால் சில நாட்கள் வைத்தியசாலையில் வைத்துக் கவனித்துத் தேற்றி விட்டுத்தான் பக்குவங்கள் சொல்லிப் பிள்ளையை வீட்டுக்கு விட முடியும். தாயாரோ தலையில் அடித்து அரற்றுகிறார்.

"**நான் படித்துப் படித்துச் சொன்னேன் குடும்பத்துக்காகவும் பணத்தை மீதம் பிடியென்று .... என்ரை மருமகளுக்கு இரத்தம் போதாதாமே .... முட்டும் இளைப்பும் என்ரை மருமகளுக்கு இயமனாக வந்திட்டுதே**"

மகனைக் கண்டதும் அவரது கையைப் பிடித்து குளறுகிறார். '**சத்தியம்.. சத்தியம்.... சத்தியம் சாகாது என்றாயே .... உன்ரை சத்தியம் உன் மனைவியைக் காப்பாற்றவில்லையே**" என்று கதறினாள். சத்தியநாதனோ தாயின் கரங்களைப் பிடித்தவாறு வாயை மூடிக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்மிக் கொண்டிருந்தார். மகளோ இறந்து விட்ட தாயை எழுந்திருக்கக் கோரி தாயின் உடலை உலுக்கி உலுக்கி அழுது கொண்டிருந்தாள். .. ஏதோ விதமாக அதன் பின் ஆக வேண்டிய காரியங்களையெல்லாம் செய்து முடித்தார் சத்தியநாதன். மூத்த பெண் பிள்ளை கவலையைச் சுமந்து கொண்டு இளைய சிசுவுக்கு அம்மாவாகவும், அக்காவாகவும் இருந்து குழந்தையை நன்கு போசித்து வளர்ந்து வருகிறது. பேர்த்தியாரின் உதவியுடன், சில வருடங்கள் சென்றன. ஆசிரியரும் ஓய்வு பெற்றார். அவரின் தாயாரும் வயோதிபம் காரணமாக மண்ணுலகை விட்ஸி நீங்கினார். பேர்த்தியாரின் இழப்பு பேரப்பிள்ளைகளை மிகவும் பாதித்தது. குறிப்பாக மூத்த பெண்பிள்ளை தாயுமின்றி பேர்த்தியாருமின்றி தன் வாழ்க்கை இப்படியானதே என்று பெரிதும் மனமுடைந்து வருந்தினாள். ஓய்வு பெற்று விட்ட சத்தியநாதன் தன் கவனிப்பில் குடும்பத்தை வைத்திருந்தாராகிலும் அவருக்கு வயதாகிக் கொண்டிருந்தது. அவர் இப்போ இறந்தவர்களைப் பற்றி கவலைப்படவில்லை இருக்கின்ற தன் இருபிள்ளைகளும் தனக்குப் பிறகு நிர்க்கதியாகி விடக் கூடாது என்பது தான் அவரது கவலை.

தாயார் இறக்கும் தறுவாயில் ஒன்பது வயதாக இருந்த பிள்ளைக்கு இப்போ வயது பதினெட்டு தாயாரைப் பரலோகம் அனுப்பிவிட்டு அவரது கையில் வந்து வீழ்ந்த ஆண் குழந்தைக்கோ வயது ஒன்பது. அவன் வளர்ந்து தமக்கைக்கு சீதன பாதனம் கொடுத்து ஒப்பேற்றுவதற்குள் தமக்கையாருக்கு வயதாகிவிடும். ஓய்வூதியம் குடும்பச் செலவுடன் போய் விடுகிறது. சாப்பாடு, படிப்பு, உடுப்பு என்று செலவான தும் கையறு நிலைக்கு வந்து விடுவார். என்ன இல்லையாயினும் பையனுக்கும், பொண்ணுக்கும் நல்ல உணவு வகைகளை வாங்கினார். வீட்டில் ஆக்கி உண்டார்கள். கடைத்தெருவென்று செலவு செய்வதில்லை. "**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**" அல்லவா?

இவ்வாறு தள்ளாடும் வயதில் குடும்பப் பாரத்தை தனியாக சுமந்து ஆற்ற முடியாக் கவலைகளுடன் வாழ்க்கை வண்டியை ஓட்டிக் கொண்டு இருக்கையில் ஒரு நாள் காலை மகள் முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். மகன் முற்றத்தில் பட்டத்துடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவர்களது படலையில் புதுக்கார் ஒன்று வந்து நிற்கிறது. அதிலி ருந்து ஒரு வாலிபன் இறங்கி வந்தான். அவன் நல்ல நவநாகரீக உடைகளை அணிந்திருந்தான். மகன் ஓடிச் சென்று தந்தையிடம் கூறுகிறான்.

"**யாரோ காரில் வந்திருக்கிறார்கள்..... அப்பா...!**" சத்தியநாதன் எண்ணுகிறார். "**யாரோ தங்களுக்கு வேண்டியவரின் முகவரி தெரியாமல் முகவரியைச் சரியாகத் தெரிந்து கொள்ள வருகிறார்கள் போலும்**" அப்படியே சற்றுத் தடுமாறிக் கொண்டு முற்றத்திற்கு வருகிறார். அங்கு வந்த வாலிபன் ஆசிரியரின் தோற்றத்தைக் கண்டு அதிர்ச்சியடைகிறான். இருந்தாலும் "**சேர் என்னை ஆசீர்வதியுங்கள்**" என்று சொல்லி பாதம் தொடுவதற்காய்ப் பணிகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் புரியாமல் அவனது தலையைத் தொட்டு " நல்லாயிரப்பா" என்று வாழ்த்திய சத்தியநாதன் "யாரப்பா நீ உன்னை எனக்கு அடையாளம் தெரியவில்லை" "சேர்! உங்கள் உதவி கிடைத்த பல பேரில் நானும் ஒருவன் சேர் நான் கண்ணன் என்ரை பல்கலைக்கழகப் படிப்பைத் தொடங்குவதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் நீங்கள் சேர்! என்ர படிப்பு முடிஞ்சதும் நேரே வெளிநாடு சென்று விட்டேன். என் பெற்றோர் எனக்காகப் பட்ட கடனை எல்லாம் அடைத்து விட்டேன். ஆனால் உங்களிடம் நான் பட்ட கடனை அடைக்க முடியாது சேர்! அந்தளவுக்குப் பெரியவர் நீங்கள் " கண்ணீர் மல்கக் கூறினான். உங்களைப் போலொருவர் இனிப் பிறந்து தான் வரவேணும். உங்கட கஷ்டத்தைப் பொருட்டா நினைக்காமல் எங்கடை கஷ்டத்தை பெருசா நினைச்சவர் சேர் நீங்கள் ...!

நீங்கள் என்ன கோரினாலும் அதைச் சிரம் மேற் கொண்டு செய்யக் காத்திருக்கிறன். உங்கள் குடும்பத்தில் ஒருத்தனாக என்னை எண்ணிக் கொள்ளுங்கள் சேர்! அப்போதாவது நான் பட்ட கடன் தீருமா தெரியவில்லை. சத்தியநாதனின் கண்களிலும் ஈரம் கசிந்தது. இந்தக் காலத்தில் இப்படியொரு பிள்ளையா? அவர் கடைப்பிடித்த சத்தியவெறி தக்க தருணத்தில் அவரைக் காத்ததால் அவர் இப்பொழுது உணர்ச்சிப் பெருக்கில் திளைத்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொழுதொன்று புலராதோ (சிறுகதை)

**திருமதி கிருஸ்ணவேணி சிங்கராஜன்**
ஆசிரியை,
திடற்புலம்,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு.

" அம்மா போட்டுவாறன் ...." என்றவாறு பதிலுக்குக் காத்திராது வெளியே வந்தாள் இலக்கியா. முற்றத்தில் பூனைக்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு வயது நிரம்பிய மகன் சேரன், **"அம்மா"** என்ற படி ஓடி வந்தான். அவனை அணைத்து அன்பு முத்தம் கொடுத்து விட்டு **"செல்லக்குட்டி குழப்படி செய்யாமல் அம்மம்மாவோட இருங்கோ"** என்றவாறு அவசர அவசரமாக உந்துருளிக்கு உயிர் கொடுத்தாள்.

இலக்கியா சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றுகின்றாள். இன்று அவள், வறிய மாணவர்கள் கற்கின்ற பாடசாலையொன்றைத் தரிசிக்க வேண்டும். அவள் தான் தரிசிக்கின்ற பாடசாலையில் காலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்வது வழக்கம். எனவே தான் கடுகதிப் புகையிரதமானாள்.

இலக்கியா பெயருக்கேற்றாற் போல் இலக்கிய இரசனை மிகுந்தவள். கற்றல், கற்பித்தலில் ஏற்படுகின்ற இடர்பாடு களைக் கண்டறிந்து மாணவர்கள், ஆசிரியர் களின் சுமைகளைப் போக்குபவள்.

தான் தரிசிக்க வேண்டிய பாடசா லையை நெருங்கியவள் அக்கிராமத்தின் அழகை இரசித்தபடி சென்று கொண்டிருந் தாள். யாழ்.மாவட்டத்தின் உயிர் நாடியாய் விளங்கும் பிரதான வீதியின் இரு மருங்கி லும் தோட்டங்கள் பச்சைப் பசேலென அணி செய்தன. செம்மண் படர்ந்த அப்பிரதேசம் முழுவதும் புன்முறுவலோடு அவளை வரவேற்பது போலக் காட்சியளித்தது.

பாடசாலைக்கு அருகிலே வீற்றி ருந்து அருளாட்சி செய்யும் விநாயகப் பெரு மானை ஒரு கணம் மனதினில் இருத் திய படி நுழைவாயிலின் அருகில் சிறிது நேரம் நின்றிருந்தாள். பாடசாலை அமைந்திருந்த சூழல் அவளுக்கு மிகவும் பிடித்தமானது. ஓங்கியுயர்ந்த மரங்களும் பச்சைப் பசேலென்ற தோட்டங்களும் பார்ப்பவர் மனதைக் கவரக்கூடியன. இவைகளிடம் கதை கேட்டால் எங்கள் மண்ணின் வீரம் செறிந்த வரலாறுகளைப் பக்குவமாய்ப் பறை சாற்றும்.

வெண்புறாக்களாய் மாணவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். நுழைவாயில ருகே நிற்பவர் இடமாற்றம் பெற்று வந்திருக் கும் ஆசிரியை என நினைத்து **"குட்மோர் னிங் ரீச்சர்"** என்ற படி சிட்டாய்ப் பறந்தார் கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்துருளியை மெதுவாக உருட்டிச் சென்று உரிய இடத்தில் நிறுத்தி விட்டு அலுவலகம் நோக்கிச் சென்றாள். தனது வருகையை உறுதிப்படுத்திக் கொண்டு காலப் பிரார்த்தனை நடைபெறும் இடத் திற்குச் சென்றாள். அங்கே மாணவர்கள் கள்ளமில்லா நெஞ்சத்தவராய் கரங்களைக் கூப்பி இறைவணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். மாணவிகளின் இனிய குரலிலே திருமுறைப் பாடல்கள் உயிர் பெற்று நர்த்தனமாடின. நற்சிந்தனையும், உடற்பயிற்சியும் நிறைவு பெற்று எல்லோ ரும் வகுப்பறைகளுக்குச் சென்றனர்.

இலக்கியா தான் தரிசிக்க வேண்டிய தரம் 6 வகுப்பறைக்குச் சென்றாள். அது தமிழ்ப் பாடவேளை. ஆசிரியரும், மாணவ ரும் உற்சாகமாய் வரவேற்றனர். ஒரு கணம் அவர்களுடைய கள்ளங் கபடமற்ற வதனத் தில் தோன்றியமலர்ச்சியும், உற்சா கமும் அவர்களின் அடிமையாய் அவளை ஆக்கி விட்டது. ஆசிரியர் தாயாய், தந்தையாய், நல்லாசானாய், வைத்தியனாய், நண்ப னாய், சகோதரனாய், மந்திரியாய், தலைவ னாய், வழிகாட்டியாய்.... பல நடி பங்குகளை ஏற்க வேண்டியதன் அவசியத்தை அவள் உணர்ந்து கொண்டாள்.

ஆசிரியர் அன்றைய நாளுக்கான அலகைக் கற்பிக்கத் தொடங்கினார். பெரும் பாலான மாணவர்கள் கற்றலில் ஆர்வமு டையவர்களாக விளங்கினார்கள். வறிய மாணவர்களாக இருந்தாலும் உற்சாகம் மிக்கவர்களாக அவர்களுடைய செயற்பாடு கள் இடம்பெறுவதைக் கண்டு இலக்கியா மகிழ்ச்சியடைந்தாள். ஆனாலும் அந்தப் பட்டாம்பூச்சிக் கூட்டத்திலேயிருந்து ஒரு சிறுவன் ஒதுங்கி இருப்பதைக் கண்டாள். இலக்கியாவுடன் மாணவர்கள் அன்பாக உரையாடினார்கள், ஒருவனைத் தவிர

**"இப்ப உங்கட கொப்பியள நான் பாக்கப்போறன் என்ன.... ? பார்க்கலாம் தானே?"** என்ற இலக்கியாவுக்கு **" ஓம் ரீச்சர் பாக்கலாம் "** என்று கூறியபடி முண்டியடித் துக் கொண்டு கொப்பிகளைக் காட்டும் ஆர்வத்துடன் எழுந்தோடி வந்தார்கள். **"நீங்கள் எல்லாரும் உங்கடை இடத்திலை இருங்கோ... நான் வந்து கொப்பியளப் பாக்கிறன் "** என்றவாறு அவர்களை அமரச் செய்தாள்.

ஆர்வத்தோடு தங்களுடைய அப்பியாசக் கொப்பிகளை நீட்டினார்கள். அவள் தான் பார்த்தமைக்கான ஒப்பத்தை யிட்டாள்.

வகுப்பறையின் ஒரு ஓரத்திலே எழிலன் உட்கார்ந்திருந்தான். எழிலன் .... ஆம் அவன் தான் எங்கள் கதாநாயகன். பெயருக்கிசைவாக எழிலாகத்தான் இருந்தான். ஆனால் .... அவன் கண்களிலே ஏதோவொரு கொடூரம் குடி கொண்டி ருந்தது. அவன் இருந்த இடத்தை விட்டு அசைந்ததாகத் தெரியவில்லை. நீ யாராக இருந்தால் எனக்கென்ன? என்பது போல அவனது பார்வை இருந்தது.

**"அச்சாப்பிள்ளை ........ கொப்பியைத் தாங்கோ"** மீண்டும் மீண்டும் கேட்டதற்கி ணங்க வேண்டா வெறுப்பாக எட்டி நின்று கொப்பியை நீட்டினாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே பல பக்கங்கள் வெறுவான வெளியாய்க் காட்சியளித்தன. இடையி டையே தோன்றும் கருமுகிற் கூட்டங்களாய் எப்பொழுதாவது எழுதப்பட்டிருந்தது. "ஏன் எழுதாமல் விட்டிருக்கிறியள்...." இலக்கியாவின் கேள்வி எழிலனுக்கு வெறுப்பூட்டியதென்பது அவனுடைய முகத் தில் தெரிந்தது. பதினொரு வயதுச் சிறுவ னின் கண்களில் இருபத்தியொரு வயது இளைஞனின் குரூரம் தென்பட்டது. அவனுக்குள் ஏதோவொரு வேதனை குடி கொண்டிருப்பதை அவள் தெரிந்து கொண் டாள். தனது நிலையிலிருந்து இறங்கி சக பாடியாய் மாறி அவனது கையைப் பற்றி உரையாடத் தலைப்பட்டாள்.

மிகவும் அன்பாக உரையாடி, மீண்டும் பயிற்சிக் கொப்பியைப் பார்வை யிட்டாள். இப்பொழுது எழிலனின் முகத்தில் இருந்த இறுக்கம் சிறிது தளர்ந்திருந்தது. இலக்கியாவின் அருகில் வந்து நின்றான்.

அவனுடைய சீருடை பழுப்பேறி அழுக்காகக் காணப்பட்டது. **"ஏன் உடுப்புத் தோய்க்கேல்லை? அப்பா சவுக்காரம் வாங்கித் தரேல்லையோ?"** என்று மெதுவாகக் கேட்டவளுக்கு அவன் அளித்த பதில் அவளைச் சிந்திக்க வைத்தது. **"அப்பா எங்களை விட்டிட்டு வேற ஆரோடையோ போட்டார்"** என்று அடித்தாற் போலக் கூறினான்.

மேற்கொண்டு அவனைப்பற்றி, தாயைப்பற்றி விசாரிப்பதா? வேண்டாமா? என்று இலக்கியா சிந்தனையிலாழ்ந்தாள். ஆனாலும் அவனின் குடும்ப நிலையைப் பற்றி அறிய வேண்டுமென்ற ஆவல் உந்த **"உங்களிலை எத்தனை பேர்? இப்ப ஆரோடை இருக்கிறியள்? என்றாள் "**

**"நானும் தங்கச்சியும் தான் ரீச்சர் .... நாங்கள் அம்மம்மாவோடை தான் இருக்கிறம்"**

**"தங்கச்சிக்கு எத்தினை வயது? ஆரைப்போல இருப்பா?"**

**"தங்கச்சிக்கு ரண்டு வயது தான். நல்ல வடிவான தங்கச்சி. எனக்கு தங்கச்சியிலை விருப்பம் "**

தங்கையைப் பற்றி கூறுகின்ற வேளையில் அவனது முகத்தில் தோன்றிய பிரகாசத்தினூ டாக அவனுடைய சகோதர வாஞ்சை புலப்பட்டது.

**"எங்கடை வீட்டை வாறியளே?"** சற்றும் எதிர்பாராத வகையிலே எழிலன் சொன் னான். **"ஓம்...... வாறன் இண்டைக்கு நேரமில்லை. நான் அடுத்த முறை வரேக்கை வாறன்." நீங்கள் நல்லாப் படிக்க வேணும் என்று கூறினாள்"** அவனும் தலையசைத் தான்.

**"நீங்கள் ஏன் எங்கடை அம்மாவைப் பற்றிக் கேட்கேல்லை"** பதில் கூற முடியாமல் தத் தளித்தாள் இலக்கியா. அவனே தொடர்ந் தான். **"அம்மா வருத்தம் வந்து செத்திட்டா எண்டு தானே நினைக்கிறியள்?"** என்றான். **"ஓம் அப்படித்தான் நினைச்சனான்"** என்ற வளை இடைமறித்து **"அம்மா ரெலிபோனிலே கதைச்சுக் கதைச்சு ஆரோடையோ ஓடிப் போட்டா இப்ப வவுனியாவில இருக்கிறாவாம்"** என்றான் பிஞ்சுக் கண்களில் குரூரம் கொப்பளிக்க .

இலக்கியா அதிர்ந்து போய்விட் டாள். உலகெங்கும் தாய்மையைப் போற்றி, மேன்மைப்படுத்துகின்ற இவ்வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாயே பிள்ளைகளை உதறியெறிந்து விட்டு வேறொரு ஆடவனுடன் சென்று விட்டாள் என்பதைக் கேட்ட இலக்கியாவின் உள்ளம் இரத்தக் கண்ணீர் வடித்தது. இந்தச் செய்தியை அவளால் ஜீரணிக்க முடிய வில்லை.

**"நீங்கள் ஒரு அதிகாரி தானே,"** பெரிய மனிதத் தோரணையில் எழிலன் கேட்டான். ஆடிப் போய்விட்டாள். உயர் வகுப்புக்க ளிலே கற்கின்றவர்கள் கூட ஆசிரிய ஆலோ சகர்களை அதிகாரிகளாக நினைப்பதில்லை. ஆனால் இவனோ ......எங்கோ போய் விட்டான்.

**"ஓம் அதிகாரி தான்" ரீச்சர் அப்பிடியெண்டால் எங்களைத் தவிக்க விட்டிட்டு ஓடிப் போன அந்தப் பிசாசைக் கட்டாயம் பொலிசிலை பிடிச்சுக் குடுங்கோ .... ரெலிபோன் நம்பர் தாறன்"** எழிலனின் பேச்சு மல்ரி பரல்களாய் இலக்கியாவின் நெஞ்சைத் துளைத்தது.

**"ரீச்சர் அவள் என்னை விட்டுட்டுப் போனாலும் பரவாயில்லை தங்கச்சியை விட்டிட்டுப் போட்டாள். அந்தப் பிசாசின்ரை நம்பரை எழுதுங்கோ"** கூறியவன் மளமளவென்று தாயின் தொலைபேசி இலக்கத்தைக் கூறத் தொடங்கினான். இலக்கியாவின் கை தன்னையறியாமலே இந்த இலக்கங்களைப் பதிவு செய்தது.

எழிலன் அமைதியானான். இலக்கி யாவின் உள்ளம் அலை பாய்ந்தது. அந்தப் பிஞ்சுச் சூரியன் சுமந்த வேதனையின் ஆழம் புரிந்தது.

அடுத்த பாடத்திற்கான மணி அடித்து விட்டது. கவலையும் வேதனையும் பாறாங் கல்லாய் அழுத்த வகுப்பிலிருந்து வெளி யேறினாள்.

சில நாட்களின் பின் இலக்கியா எழிலனின் வீட்டிற்குச் சென்றாள். சிறு குடிசையில் அம்மம்மாவுடன் வாழ்ந்து வரும் அவர்களைப் பார்ப்பதற்கென்றே அடிக்கடி செல்வதுண்டு. அவனில் நடத்தை மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறான நிலை இவர்களுக்கு மட்டுமல்ல பலர் இந்நிலைக்கு ஆளாகி யிருக்கிறார்கள். இவ்வாறான மனவடுக் களைச் சுமந்து வாழும் சிறுவர்கள் எவ்வாறு நாளைய சமூகத்தில் நற்பிரஜை களாக வாழமுடியும்?

எழிலனின் பெற்றோரைப் போன்று பிள்ளைகளுக்குத்துரோகமிழைக் கின்ற பெற்றோர்களைச் சட்டம் கடுமையா கத் தண்டிக்க வேண்டும். சமூகமும் அவர்க ளைத் தண்டிக்கத் தவறக் கூடாது.

இதுவோர் கற்பனைக் கதையல்ல. எனது மனதைத் தொட்ட சின்னஞ் சிறிசுகளின் கதை.நல்மனம் படைத்த செம்மல்களே! பெரியோர்களே! அதிகாரி களே! எங்கள் மண்ணில் இவ்வாறான தொரு தலைமுறை உருவாகலாமா? இவர் கள் வாழ்வில் பொழுதொன்று புலர்ந்தி டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.



புனித அந்தோனியார் ஆலயம், சுன்னாகம்.




யா/இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்



ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம், மருதனார்மடம்



சுன்னாகம் மத்திய சந்தை



உடுவில் மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கே செல்கிறோம்

**கவியாக்கம்:**
**இணுவை இனியவன்**

---

விருந்தோம்பி மகிழ்ந்திருந்தோம்
விழுதுகளாய் மகிழ்ந்திருந்தோம்
அன்புத் தோள் அகம் மறைக்க
நல் என்புகளைக் கொண்டிருந்தோம்

ஆனால் இன்று
விருந்தோம்பல் போதையிலே
கூடுகிறோம் போதைக்காக
வன்முறை தோள் கொண்டு
வரம்பு மீறி நடக்கலாமா?

பட்டுடுத்தி பாவையவள்
பட்டு வேட்டி பாங்குடனே
பாரில் நிதம், தர்மம் செய்து
பாலகரைக் காத்திருந்தோம்
ஆனால் இன்று

பட்டுமில்லை பாங்குமில்லை
பார்வையெங்கும் போதையாக
பேதமைக்குள் வாழ்பவரே
போதை விட்டு வெளியே வாடா!

பலிகள் கண்டோம்
வலிகள் கண்டோம்
பாதையிலே பயந்து சென்றோம்
பயணங்கள் மறக்கலாமா?

எம்மவரே கேளீரே
ஏன் இந்த வாள்வெட்டு
எத்திக்கும் வன்முறைகள்
அகிலமெங்கும் வலி பொறிகள்

மாற்றம் வேண்டும்மாற்றம் வேண்டும்
போதையற்ற தேசம் வேண்டும்
அழிவுப் புகைகளற்ற தேசம் வேண்டும்
அன்புறவு பெருக வேண்டும்

மானிடமே! மானிடமே!
மரித்தது ஏன் தானோ?
மானிடமே மானிடமே
மலர்வாயா போதை விட்டு

நன்மை விழையும் பூமிதனில்
கஞ்சா விளைய விடலாமா?
உயர்ந்தவர்கள் நாமெல்லாம்
உயர்வினை இழக்கலாமா?

இழையோரே இழையோரே!
இத்தேசம் உமக்காக
இயலாமை எதற்காக
தவறாக எதற்காக

நாளைய தேசத்தின் தலைவர்களே!
நாட்டின் அறிவுச் சிகரங்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நய நயவஞ்சகத்தில் சிக்கலாமா?
நற்பண்பை இழக்கலாமா?

வடபுலத்தின் இளையோரே!
வலிமை கொண்ட மறவோரே!
தரணி தன்னைக் காப்போரே
தன் மானம் இழக்கலாமா?

மாவலி பாய்ந்திட
மருதுகள் செழித்திட
விழுதுகள் மேலும் துளிர் விட
விந்தையான தேசம் வேண்டும்

தென்றல் எம்மை வருடிச் செல்ல
தேசம் எம்மைத் தாங்கி நிற்க
விழுமியங்கள் விஞ்சிட
போதையற்ற தேசம் வேண்டும்

ஒரு கணம் சிந்திப்போம்
ஒவ்வொருவரும் சிந்திப்போம்
ஒருமித்து எழுந்திடுவோம்
ஓலமற்ற தேசத்துக்காய்!

மலிந்திட்ட போதை வேண்டாம்
தன் மானமற்ற வாழ்வு வேண்டாம்
மகிழ்ச்சியற்ற தேசம் வேண்டாம்
மனிதம் செத்த மண்ணும் வேண்டாம்

புனிதமான பூமி வேண்டும்
பூக்கள் கூட சிரிக்க வேண்டும்
புதுமை மிகு எண்ணம் வேண்டும்
புதிய பாதை வகுக்க வேண்டும்
போதையற்ற நாடு வேண்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைகள் களைக

வயவையூர் வத்சலா

பிஞ்சு நெஞ்சில் என்றும் வஞ்சமில்லையே
பேசும் மழலை மொழியில் குதர்க்கமில்லையே
அஞ்சி நடக்கும் நடையில் அச்சம் தெரியுதே
வஞ்சக நெஞ்சுடையோரைப் பார்த்து பதைப்படையுதே
மழலை மொழியில் என்றும் மகிழ்வு தெரியட்டும்
சிறுவர் சிறுமியர் ஐயமின்றி எங்கும் நடக்கட்டும்
பெண்கள் வாழும் வாழ்வில் தற்துணிவு இல்லையே
வழியில் வெளியில் என்றும் விழியில் தெளிவு இல்லையே
எந்தக் கண்கள் எந்த வடிவமென ஏங்கி நடக்குதே
ஆடவரெல்லாம் மங்கையரை மதித்து நடக்கட்டும்
அச்சமின்றி பெண்கள் வாழும் வாழ்வு நிலைக்கட்டும்
இரவில் பகலில் எங்கும் செல்லும் துணிவு பிறக்கட்டும்
கள்வர் காமுகர் கொலைஞரை இனங்காண வழி பிறக்கட்டும்
இந்த நிலை என்றும் எங்கும் உதயமாகட்டும்
எந்தப் பயமுமின்றி எங்கும் நிமிர்ந்து நடக்கட்டும்

மது, மாது, போதை என்னும் மயக்கம் ஒழியட்டும்
சூது, வாது, வஞ்சகங்கள் போயகலட்டும்
நீர்க்குமிழி போன்ற வாழ்வை நன்கு உணரட்டும்
சீர் பெற்ற சமுதாயம் சிறந்து வாழட்டும்
கல்விதனைக் கண்களெனப் போற்றி நடக்கட்டும்
நிலத்தின் தன்மை பயிர்க்குதாகுமாம்
கலைநிலத்தின் தன்மை
மானிட வர்க்கத்தை மாண்புறச் செய்யட்டும்
மண்ணின் மைந்தரெல்லாம்
மனிதநேயமுள்ளவராகட்டும்
அமிழ்தின் இனிய எம் அன்னைக்குப் பெருமை சேர்க்கட்டும்
நடை, உடை, பாவனையில் தமிழராகட்டும்
காரணகாரியங்கள் எதுவாயினும்
கலைநிலக்களைகள் யாவும்
களைந்தெறியட்டும்
கலைநிலம்
செழித்தோங்கி வளம் கொழிக்கட்டும்
கலைநிலந்தரும் கலாசார
விழுமியங்களால்
மனிதன் மனிதனாக வாழட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்பால் குழம்பும் வாழ்வு!

**இரா.ஜெயக்குமார்**
**அதிபர், யா/உடுவில் மான்ஸ்அ.த.க.பாடசாலை**

மரணங்கள் மலிந்த மண்ணில்
மழைக்காலம் வந்தது
நுளம்புகளின் நல்லாட்சி
நூதனமாய் நுழைந்தது

ஊசிகளாய் உடம்பெல்லாம்..........
உயிரெல்லாம் உள்ளூறிஞ்ச.............
வேப்பமிலை யெரித்தும்
வேகத்திரி யெரித்தும்
சீன எசமானின் நுளம்புத் துடுப்பெடுத்து
சீற்றமொடு மின்தாக்குதல் தொடுத்தும்
பின்னால் கடிக்கும் நுளம்புகளே!

டெங்கு வருமென்று டொக்டர் முன்மொழிய.........
சுகாதார அலுவலரும் சுற்றிச் சுற்றி வர......
வருமான அரசாங்கம் வகுத்த சட்டங்கள்
வந்தெம்மைத் துயிலெழுப்ப...........!
பற்றைகளைப் பற்ற வைத்தும்
பட்ட கடி தீரவில்லை
பாலகரைப் பலியெடுக்கும்
பாதகநோய் தன்னை
பாரெங்கும் களையெடுக்க
படை திரண்டு பணி செய்வோம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2017ம் ஆண்டு கலாசாரவிழா பதிவுகள் சில



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவொரு பாடம்

**ம.ரவிசங்கர்**
**பிரதேச செயலகம்,**
**கரவெட்டி.**

காலைக்கதிரவன்
கண்விழிக்கு முன் எழுந்து
வேலைக்குச் செல்வேனென்று
வேண்டி நானும் படுக்கையிட்டேன்
மாலையிலே மகிழ்ச்சியிலே
மது வினையே குடித்து விட்டு
மாரடைபுள்ளதென்று
மயக்கத்திலே மறந்து விட்டேன்
இராக்கோழி விடிந்ததென்று
கீழ்க்குரலால் கொக்கரிக்க
கீழ்வானம் சிவந்ததென்று
கிளைகளிலே கிளிகள் பாட
சீனியில்லாத் தேநீர் கொண்டு
என்னவளும் எனையெழுப்ப
என்னுயிரோ பிரிந்ததென்று
என்மேனி விழுந்தழுதாள்
காதலின் கதறல்குரல்
காதோரம் சிரசில் படப்
புரிந்து கொண்டேன் – நான்
மரித்து விட்டேனென்று
பெற்றவள் பெருங்குரல்
உற்றவர் கேட்டு – கூடினர்
என் வீட்டு முற்றத்து மணலில்
ஓலமிட்ட நாயிரைச்சல்
ஊரையே உறைய வைக்க
கூடிய சொந்தத்தின்
கூக்குரல் சத்தத்தில்
எல்லோரும் அழுது
விடிந்தது பொழுது
பாடையில் நான் படுத்திருந்து பார்க்கிறேன்
என்வீட்டு ஓடையில் சிலர்
உட்கார்ந்து உரைக்கின்றார்
கல்யாணம் இவன் பண்ணி
காலாண்டாகவில்லை
காலனவன் கண்பட்டு
காரியம் முடிந்ததென்று
மனையாளாய் வந்தவள்
மாங்கல்யம் பொருந்தாத மாதென்று
என் மரணத்தால் சிலர்
மங்கையை குறை கூற
இல்லவே இல்லை – இவன்
குடியாத நாளில்லை
குடிகாரன் இவன் குடியாலே மாண்டான்
பெரியவர் சிலரின்
பெருமூச்சில் கண்டேன்
நண்பர்கள் பலர் கூடி
நல்லுதவி செய்கையிலே
வம்பர்கள் சிலர் நின்று – என்
வடிவான மனைவியை
வாசிகம் செய்திட
வார்த்தைகள் பேசினர்
என்ன பிழை நான் செய்தேன்
ஏன் இந்த தண்டனையோ.........
என் இறைவா என் இறைவா
என்னுயிரை ஏன் எடுத்தாய்
எண்றெண்ணி ஏங்கையிலே...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன்னே தோன்றியவன்
உன்னுயிரை நானெடுக்கும்
என் விருப்பம் ஏதுமில்லை
நல்லவனாய் நானுன்னை
நலமுடனே படைத்து விட
கள்ளாலும் கசிப்பாலும்
காலனை நீ அழைத்தாய்
குடிகாரப் பயலாகி – உன்
குலமகளை நீ இழந்தாய்
மதுவின் மேல் காதல் கொண்டு
மரணத்தை நீ அடைந்தாய்
காலனவன் கதை கேட்டு
காரணத்தை அறிந்து கொண்டேன்
மன்னிப்பெனக் கழித்து மறுவாழ்வு தா
மதுவினை நான் வெறுத்து
புதுவாழ்வு வாழ்வேன்
காலனின் காலிலே விழுந்து
கைகூப்பியழுதேன்
இரங்கிய காலன் – ஓடிப்போ
ஒன்று ஒரு குரலிட்டான்
ஆவியாய் அலைந்தோடியே வந்தேன்
அடியேனின் உடலினை
அடக்கம் செய்திட
ஆயத்தமாகியே
பாடையைத் தூக்குகின்றார்
ஐயோ வேண்டாம்
அப்பனே வேண்டாம்
அலறினேன் நானும்
அடியொன்று விழுந்தது
திடுக்கிட்டு எழுந்தேன்
நித்திரை கலைந்தது
கண்டது கனவென்று
காரணம் புரிந்தது
ஆனாலும் என் வாழ்வில்
**அக் கனவொரு பாடம்**
அன்று முதல் என்றும் நான்
மதுவினை நாடேன்
என்று நான் எண்ணி
எடுத்த முடிவோடு – இன்றுவரை
வாழ்கின்றேன் ஏதும் குறையில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி தெற்கு பிரதேச சபை

# பொதுசன நூலகம்

இப்புத்தகம் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுக்கப்படாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு குற்றப்பணமாக ரூபா 1.00 அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| 14/2 (475) | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| பகுப்பு எண் | சேர்வு இல |
|---|---|
| | D 1114 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறின்டேர்ஸ், சுன்னாகம். 077 8038629

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org